MANGAYAR MALAR
வம்பர் '94 ரூ. 8/-

மங்கையர் மலர்



தீபாவளிச் சிறப்பிதழ்

இணைப்புப் புத்தகம்
கேட்டு வாங்குங்கள்







மங்கையர் மலர்
&
ராகா ஹெர்பல் பவுடர்

இணைந்து வழங்கும்

மதுரையில் மகளிர் விழா

ரொம்ப நாளாக மதுரையில் இருந்து ஏகப்பட்ட கடிதங்கள் 'எங்க ஊர்லே மகளிர் விழா இல்லையாக்கும்!' எனக் கண்டனங்கள். எனவே, தீர்மானித்துவிட்டோம், டிசம்பரில் நடத்தி விடுவதென்று! அதற்கு முன்னோட்டமாகத்தான் இந்த அறிவிப்பு!

டிசம்பர் 9, 10 தேதிகளில் மகளிர் விழாவினை மதுரையில் நடத்தத் தீர்மானித்துள்ளோம். இதில் மதுரை, திண்டுக்கல், காமராஜர், பசும்பொன் மாவட்ட வாசகிகள் கலந்து கொள்ளலாம். அதற்கான விரிவான அறிவிப்பினை அடுத்த இதழில் நீங்கள் காணலாம்...

இந்த விழாவில் வழக்கமான அம்சங்களுடன் சில புதிய திட்டங்களையும் செய்திருக்கிறோம். எனவே, இவ்வறிவிப்பினைக் கவனமாகப் படியுங்கள்.

♠♠ **கோலப் போட்டியை 9.12.94** அன்று நடத்துகிறோம். இது ரங்கோலி கோலப் போட்டி. இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் **தபால் கார்டில்** (மட்டுமே) தெளிவாக உங்கள் பெயர், முகவரியை எழுதி, 'நான் மதுரையில் நடக்கவிருக்கும் மகளிர் விழா ரங்கோலி கோலப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புகிறேன்' என எழுதி கையொப்பமிட்டு அனுப்பி வையுங்கள். இப்படி வரும் கார்டுகளில் குலுக்கல் முறையில் **நூறு பேரைத்** தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கிறோம். அவர்கள் 9 - ந்தேதி நடக்கும் கோலப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

♠♠ ***கார்டு அலுவலகம் வந்துசேரக் கடைசி தேதி : 10.11.94.***

♠♠ ***10.12.'94*** அன்று வழக்கமாக நடக்கும் போட்டிகளுடன் இந்த முறை மூன்று புதிய நிகழ்ச்சிகளையும் நடத்தப் போகிறோம். அழகு, கூந்தல், உடை பராமரிப்புப் பற்றி அழகுக்கலை நிபுணர் உங்களுடன் பேசவிருக்கிறார். அதேபோல உடல்நலம் பேணுதல் பற்றி சித்த,

ஆயுர்வேத, ஆங்கில மருத்துவர்கள் உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்க இருக்கிறார்கள்.

♠♠ மற்றொன்று - 'என் பெண் மாதிரி இல்லையாக்கும்!'

'எங்கம்மான்னா எங்கம்மாதான்!'

இப்படித் தன் பெண் எந்தெந்த விதத்தில் சிறந்தவள் எனத் தாயும், அம்மாவைப் பற்றிப் பெண்ணும் பேசலாம். எனவே, இளம்பெண்கள் இவ்விழாவில் திரளாகக் கலந்து கொள்ளலாம். சிறப்பான பேச்சாளர்களுக்கு நிச்சயம் பரிசு உண்டு.

♠♠ பேச விரும்புபவர்கள் ஒரு கார்டில் தங்கள் பெயர், முகவரியை எழுதித் தாங்கள் பேசப் போவதன் சுருக்கத்தை எழுதி அனுப்புங்கள். அவற்றிலிருந்து மங்கையர் மலர் ஆசிரியர் குழு தேர்ந்தெடுக்கும் பத்து இளம் பெண்களும், பத்துப் பேர் தாய்மார்களும் பேச அழைக் கப்படுவார்கள். மேடையில் உங்கள் திறமையைக் காட்டி ஜமாய்க்க லாம். மேடையில் பேசுபவர்களில் சிறந்தவர்களை பேச்சுப் போட்டி நடுவர் குழு தேர்ந்தெடுக்கும்.

♠♠ கார்டின் மேலேயே நீங்கள் கலந்து கொள்ளப் போகும் போட்டியின் தலைப்பைக் கொட்டை எழுத்தில் எழுதுங்கள். கார்டு அலுவலகம் வந்து சேரக் கடைசி தேதி : ***10.11.'94.***

♠♠ யாருக்குப் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று ***10.12.'94*** விழாவிற்கு வந்து தெரிந்து கொள்ளுங்களேன்!

♠♠ விழா பற்றிய முழு விவரங்களும், நடக்கப் போகும் இடத்தையும் அடுத்த இதழில் தெரிந்து கொள்ளுங்கள்.

♠♠ மதுரை மற்றும் திண்டுக்கல், காமராஜர், பசும்பொன் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் சங்கங்கள் எங்களுடன் கடிதம் மூலம் உடனடியாகத் தொடர்பு கொண்டால் மங்கையர் மலர் அலுவலர்கள் முன் ஏற்பாடுகளுக் காக மதுரை வரும் போது உங்களை நேரில் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கும்.

♠♠ மதுரை மீனாட்சியர்களே, அடுத்த மாதம்....

கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

சவுத் ஈஸ்ட் பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 'நிதி' நிறுவனம் துவக்கம் - 1989.

கார்த்திக் அப்பார்ட்மெண்ட்ஸ், அடித்தளம், 6, செயிண்ட் மேரீஸ் சாலை, மந்தைவெளி,

சென்னை - 28. போன்: 49 40 255.

(தொடர்புகள் பங்குதாரர்களுடன் மட்டும்)

பிக்சட் டிபாசிட் திட்டம் (மாதங்கள்)					'உதவும் கரங்கள்' டிபாசிட் திட்டம் (மாதங்கள்)				இத்திட்டம் முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவையர் ஆகியோருக்கு மட்டும். ஆண்டுக்கு ஒரு முறை வட்டி வாங்கினால் **21%**
12	24	36	48	60	12	24	36	60	
17%	18%	19%	19.5%	20%	19.5%	20%	20.5%	21.0%	

'குத்து விளக்கு' மறு முதலீட்டுத் திட்டம் - 1			'குத்து விளக்கு' மறு முதலீட்டுத் திட்டம்-2		
36 மாதங்கள்	1. **Rs. 2,925/-**	**Rs. 5,000/-**	252 மாதங்கள் (21 வருடங்கள்)	1. **Rs. 295/-**	**Rs. 20,000/-**
	2. மற்றும் அதன் பெருக்கில்			2. மற்றும் அதன் பெருக்கில்	
	3. **Rs. 14,625/-**	**Rs. 25,000/-**		3. **Rs. 1,475/-**	**Rs. 1,00,000/-**

'கலங்கரை விளக்கம்' மறு முதலீட்டுத் திட்டம் - 1 (மாதங்கள்)						'கலங்கரை விளக்கம்' மறுமுதலீட்டுத்திட்டம் - 2		
டிபாசிட்	12	24	36	45	60	டிபாசிட்	120 மாதங்கள்	180 மாதங்கள்
1,000/-	1,184/-	1,430/	1,735/	2,000/	2,535/	2,500/	16,500/	45,500/

'கல்பதரு' மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு முடிவில் பெறும் தொகை	10-ம் ஆண்டு முடிவில் பெறும் தொகை	15-ம் ஆண்டு முடிவில் பெறும் தொகை
Rs. 6,320/-	Rs. 6,000/-	Rs.6,000/-	Rs.56,300/-

'காமதேனு' மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 30 ஆண்டுகள்	10-ம் ஆண்டு முடிவில் நீங்கள் பெறும் தொகை	மேலும் 20 ஆண்டுகள் கழித்து நீங்கள் பெறும் தொகை
Rs. 12,500/-	Rs. 12,500/-	இருபத்தைந்து லட்சம்
Rs. 25,000/-	Rs. 25,000/-	ஐம்பது லட்சம்
Rs.50,000/-	Rs.50,000/-	ஒரு கோடி

ரெக்கரிங்டிபாசிட்திட்டம் மாதாந்திரவட்டி 19%

தங்க நகைக் கடன்
ஒரு கிராமுக்கு
ரூ. 300/ -
பரிசீலிப்புக்கட்டணம் இல்லை
ஆர்.டி.தேவையில்லை.
உச்சவரம்பு இல்லை.
வட்டி வரி இல்லை.

ஏ.வி. இராமநாதன்	எம்.பி. பாண்டுரங்கம்	பி.கே. சாமிநாதன், தலைவர்
இயக்குநர் ஆடிட்டர்	துணைத் தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி	ஓய்வு பெற்ற மாநில அரசு துணைச்செயலாளர்


நேரம்: 9-12.30 & 3 - 5.30 — பங்குத் தொகை ரூ.1/-தான் — மாதத்தின் கடைசி நாள் வேலை நாளாகும்.

இது ஒரு ஆன்மீகக் கலாச்சார விழா!



திருபுவனம் பட்டுக் கூட்டுறவு சங்கம் Z-322 உடன் இணைந்து நடத்திய பட்டுப் புடவை பரிசுத் திட்டம் இனிய பல அனுபவங்களைக் கொடுத்தது. நம்முடைய அன்பு வாசகிகளை நேரில் போய் வீட்டில் சந்தித்து உரையாடி மகிழ்ந்தது நினைவில் என்றும் நிற்கும்.

போன மாதம் 'ட்ரையத்லான்' அமுதா பட்டுப் புடவை பெறும் அதிர்ஷ்டசாலிகள் பத்துப் பேரைத் தேர்ந்தெடுத்தார் இல்லையா? நாங்களும், கூட்டுறவு சங்கச் சிறப்பு அதி



பெங்களூர்.....



• கோபி வாசகி மகளுக்குப் பரிசுப் புடவை எப்படி இருக்கிறது எனப் பார்க்கிறார்....



• தஞ்சாவூரில்.....



• சென்னை பரிசளிப்பு விழாவில்....

காரி மேலாளர் நடராஜனும் உட்கார்ந்து கொண்டு எப்படி எப்படி எந்தெந்த ஊருக்குப் போவது எனத் திட்டம் போட்டுக் கொண்டோம்.

இந்த இடத்தில் ஒன்றைச் சொல்லியே ஆகவேண்டும். இந்தப் பரிசுத் திட்டம் நிறைய பேரைக் கவர்ந்திருக்கிறது. பல்வேறு விதமான கடிதங்கள். திருபுவனம் கூட்டுறவு சங்கத்தினர் முதலிலேயே சொல்லி விட்டார்கள், ''இது உங்கள் வாசகிகளுக்கு நாங்கள் தரும் நவராத்திரி பரிசு. நவராத்திரி என்பது சக்தியை வழிபடும் கலை கலாசார விழா. இந்தச் சமயத்தில் வெற்றிலை பாக்குக் குங்குமத்தோடு புடைவை கொடுப்பது சிறப்பு. அந்த வகையில் பெண்கள் பத்திரிகையாகிய மங்கையர் மலர் மூலமாக பத்துப் பெண்களுக்குப் பட்டுப் புடைவை அளிக்க விரும்புகிறோம்'' என்று.

அதேபோல மங்கையர் மலரும் நம் வாசகிகளுக்குப் பட்டுப் புடைவை கிடைப்பது மங்களகரமான விஷயம் என்றுதான் சந்தோஷமாகச் சம்மதித்தோம். இது முழுக்க முழுக்க இருதரப்பினரும் பண்டிகையைக் கொண்டாட நடத்திய விழாவே தவிர வேறொன்றுமில்லை.

அதனால்தான் புடைவை என்று அறிவித் தால் கூட ஒவ்வொருவர் வீட்டுக்குப் போகும் போதும் புடைவையோடு ரவிக்கைத் துணி, பழம், பூ, வெற்றிலை, குங்குமம், மஞ்சள் என அனைத்தையும் எடுத்துக் கொண்டு நவராத் திரி தாம்பூலமாக அளித்தோம்.

முதலில் பெங்களூர் கிளம்பினோம். சகக்காரா நகர் (தமிழில் சஹாரா ஆகிவிட்டது!) டெலிபோன் ஸில் வேலை பார்க்கும் ராஜம்மாள் வீட்டிற்குப் போன போது அவருக்கு ஏக மகிழ்ச்சி. கணவர், இரு மகன்கள், மட்டுமல்லாமல் திருச்சியிலிருந்து அவருடைய உறவினர் மகனும் வந்திருந்தார்.

''எங்களோட வெள்ளிவிழா கல்யாண நாள் அக்டோபர் கடைசியில் வருகிறது. இப்பதான் வீடு கட்டி முடிச்சோம். பட்டுப் புடைவை வாங்க ஆசைப் பட்டாலும் முடியாதேன்னு இருந்தப்ப உங்க புடைவை வருகிறது. ரொம்ப சந்தோஷம்!'' என்றார். இருபத்தைந்து வருடங்களாக இவர்கள் பெங்களூர் வாசிகளாம்.

• சென்னை விழாவில் பரிசு பெற்றவர்களுடன்...

• வைதேகி • சித்ரா • சாந்தலட்சுமி • சீதா



பெண்களுக்கேற்ற சிறுதொழில் நூல்கள்



வீட்டிலுள்ள பெண்களுக்கு ஏற்ற தொழில்கள் 14.00; சிறுதொழில் செய்யுங்கள் 34.00; காலத்திற்கு ஏற்ற தொழிலும் கைநிறைய வருமானமும் 34.00; பல பொருள்களின் தயாரிப்பு இரகசியங்கள் 12.00; உயர்வுடைய உன்னதத் தொழில்கள் 15.00; ஓய்வு நேரத்தில் சம்பாதிப்பது எப்படி? 15.00; பனைப் பொருள்களும் பயன்களும் 5.50; இலாபம் தரும் இறால் வளர்ப்பு 15.00; பல்வகைப் பற்பொடிகளும், வாசனைப் பொருள்களும் செய்யும் முறைகள் 15.00; கலப்புக் காளான் வளர்ப்பு முறைகள் 11.00; சிறிய அளவில் மீன் பண்ணைகள் நடத்துவது எப்படி? 18.00; வீட்டில் வண்ண மீன்களை வளர்ப்பது எப்படி? 19.00; சுயமாகத் தொழில் தொடங்க வழிகள் 20.00; சுயவேலை வாய்ப்பும், கலப்புத் தொழில்களும் 20.00; பல்வேறு கமிஷன் தொழில்கள் மூலம் சம்பாதிப்பது எப்படி? 12.00; பல்வேறு பிளாஸ்டிக் பொருள்களைத் தயாரிப்பது எப்படி? 16.50; கலப்புத் தவணைத் தொழில்களும், சுய சம்பாத்தியமும் 14.00; நீங்களே குழாய் ரிப்பேர்களைச் சரிசெய்வது எப்படி? 13.50; வீட்டு ஒயரிங் செய்வது எப்படி? 34.00; பல்வேறு வட்டித் தொழில் செய்து சம்பாதிப்பது எப்படி? 13.00; சைக்கிளை ரிப்பேர் செய்வது எப்படி? 14.00; சுயமாகச் செங்கல் தயாரிப்பது எப்படி? 7.50; கோழி வளர்த்துப் பணம் சம்பாதிப்பது எப்படி? 13.50; பட்டுப் பூச்சி வளர்த்துப் பணம் சம்பாதிப்பது எப்படி? 13.00; இலாபகரமாய் முயல் வளர்ப்பது எப்படி? 15.00.

தமிழ்வாணனின் வாழ்வு முன்னேற்ற நூல்கள்



துன்பமே, போ 6.50; தந்தை மகனுக்குச் சொல்ல வேண்டிய விஷயங்கள் 18.00; துன்பங்களையும் வீண் பழிகளையும் சமாளிப்பது எப்படி? 13.00; அனைவரும் பாராட்டும்படி நல்ல காரியங்களைச் செய்வது எப்படி? 20..00; தோல்விகளைத் தவிர்க்கச் சில யோசனைகள் 9.50; டீன் ஏஜ் வயதினரின் பிரச்னைகளும் தீர்வுகளும் 13.00; வெற்றி நம் கையில் 17.00; சாதனைகள் படைப்பது எப்படி? 8.50; திறமையை வளர்த்துக் கொள்வது எப்படி? 10.00; வெற்றி உங்களைத் தேடி வரச் செய்வது எப்படி? 12.00; நம் காரியத்தை நாம் சாதித்துக் கொள்வது எப்படி? 11.00; சாதிக்க முடியாததைச் சாதிப்பது எப்படி? 12.00; உங்கள் வளர்ச்சிக்குத் திட்டமிடுவது எப்படி? 16.00; எண்ணுவதை அடைவது எப்படி? 14.50; செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வது எப்படி? 15.00; துணிவே துணை 9.00; வீண் பயங்கள் வேண்டாம் 10.50; பயப்படாதீர்கள், தைரியமாய் இருங்கள் 20.00; தற்கொலை மனநிலையும், தவிர்க்கும் முறைகளும் 19.00; உங்களுக்கு நீங்களே எதிரி 13.50; நம் சக்தியை நாம் வீணாக்கலாமா? 8.00; சோம்பலை வெல்லும் வழிகள் 21.00; உங்கள் பிரச்னைகளை நீங்களே தீர்த்துக் கொள்வது எப்படி? 5.75; எதையும் தாங்கும் இதயம் வேண்டும் 11.00; தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்தெறிவது எப்படி? 9.00.

லேனா தமிழ்வாணனின் பயணக் கட்டுரைகள்



ஒரு பத்திரிகையாளரின் மேலை நாட்டுப் பயண அனுபவங்கள் (தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் ரூ. 5000 பரிசு பெற்ற நூல்) 28.00; ஒரு பத்திரிகையாளரின் கீழைநாட்டுப் பயண அனுபவங்கள் 36.00; கண்ணுக்குள் நிற்கும் கங்காரு நாடு 32.00; துபாய் அழைக்கிறது 16.00; இதர நூல்கள் : லேனா தமிழ்வாணனின் ஒரு பக்கக் கட்டுரைகள் பாகம் 1 17.00; பாகம் - 2 16.00; பாகம் - 3 16.50; பாகம் - 4 16.00; பாகம் - 5 19.00; பாகம் - 6 15.00; பாகம் - 7 16.00; பாகம் - 8 17.00; பாகம் - 9 19.00; பாகம்- 10 20.00; பாகம் - 11 16.00; பாகம் - 12 19..00; நினைவில் நின்ற அமெரிக்கப் பயணம் 15.50; நினைவில் நின்ற ஜப்பான் பயணம் 10.50; கோபத்தைக் குறைத்துக் கொள்வது எப்படி? 16.00; நேரத்தை மிச்சப்படுத்துவது எப்படி? 23.00; பிழையில்லாமல் தமிழ் எழுதுவது எப்படி? 21.00; எளிமைத் தமிழ் இலக்கணம் 12.00; தமிழில் ஏற்படும் தவறுகளும் தவிர்க்கும் முறைகளும் 17.00; மேற்கொண்டு என்ன படிக்கலாம் பாகம் 1 30.00; பாகம் - 2 25.00; சிக்கனமாக இருக்கச் சில வழிகள் 15.00; மன வளமும் மனவலிமையும் பெறுவது எப்படி? 26.50; எதிர்ப்புகளைச் சமாளிப்பது எப்படி? 19.00; குற்ற உணர்வும், விடுபடும் முறைகளும் 17.00; துணிவைத் தூண்டும் சம்பவங்கள் 15.50.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும். (தபால் செலவு தனி) சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக் கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம் : காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை. கடிதம் எழுத வேண்டிய முகவரி :

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் 1447, 4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலை பேசி : 4342926 தொலை நகல் : 044 - 4346082



• கோவை வாசகி

அடுத்த வாரம் மீண்டும் சுற்றுப்பயணம் கிளம்பினோம். முதலில் வடலூர். பரிசு பெற்ற சி. சுந்தராம்பாள் பாபா பக்தை. மகளிர் மன்ற உறுப்பினர். வீட்டிலும் சில பேரைச் சேர்த்து வைத்திருந்தார்.

''என் வாழ்க்கையில் பாபா நிகழ்த்திய அற்புதங்கள் நிறைய. எத்தனையோ சோதனைகளில் இருந்து காப்பாற்றி இருக்கிறார். இந்த மகிழ்ச்சியும் அவர் தந்த பிரசாதம்'' என்றார்.

''உங்களோடு நிறைய பேசணும். அதுவும் இப்ப சமீபமா இளைய தலைமுறை பற்றி எழுதிக்கிட்டு வர்றீங்களே...'' என ஆரம்பித்து வாசல் வரை நிறைய ஆர்வத்தோடு பேசிக் கொண்டு வந்தார்.

அங்கிருந்து கும்பகோணம் வழியே தஞ்சாவூர் போனோம். ராத்திரி ஒன்பதேகால். கஸ்தூரியின் கணவர் டாக்டர் நடராஜன் தன் கிளினிக்கிற்கும் போகாமல் குடும்பத்தினர் அத்தனை பேரோடும் காத்திருந்தார். இவ்வளவு பெரிய கூட்டுக் குடும்பத்தை அங்கு பார்த்த போது ரொம்பச் சந்தோஷமாக இருந்தது. ஏற்கெனவே கடிதத்தில் எச்சரித்திருந்தும் விடாமல் இரவு உணவு சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் என்று அடம். நான்கு சகோதரர்கள், அவர்களின் மனைவிமார்கள், குழந்தைகள் என அன்போ அன்பு. கஸ்தூரி கொலு வைக்கா விட்டாலும் அவருடைய மைத்துனர் மனைவி கொலு வைத்திருந்தார். அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தார்கள்.

''நாங்கள் அனைவரும் மங்கையர் மலர் ரசிகைகள் போலவே திருபுவனம் புடவை ரசிகைகளும் கூட. ரொம்ப வருடமாக அந்தப் புடவைதான் கட்டுகிறோம். குழந்தைகள் பாவாடையிலிருந்து எல்லோரும் அதுதான்'' என ஹார்லிக்ஸ் பாணியில் பேசியவர்கள், ''ஆமாம். நீங்க ஏன் காஞ்சீபுரம் கட்டி இருக்கிறீர்கள்?'' என எதிர்பாராமல் என்மேல் அன்பு அம்பு' எய்தார்கள்!

அங்கே கிளம்பி மதுரை வந்து சேர்ந்த போது இரவு இரண்டு மணி! காலையில் எழுந்து திருநகர் ஜெயலட்சுமியைப் பார்க்கப் போனோம். அவருடைய மாமியார் அத்யந்த மங்கையர் மலர் வாசகி.

''கூப்பனைப் போடுன்னா கேட்டாதானே? 'ஆமா, இவளுக்குத்தான் விழப் போறதாக்கும்' என்றான் பிள்ளை. விடாம நச்சரிச்சு போடச் சொன்னேன். இப்ப பாருங்கோ, நீங்க இத்தனை பேர் வீடு தேடி வந்தது எவ்வளவு சந்தோஷமா இருக்கு. நவராத்திரியும் அதுவுமா நீங்கள்ளாம் வர நாங்க கொடுத்து வச்சிருக்கணும்'' என்றார்! அதிகம் பேசாத ஜெயலட்சுமி புன்னகை சிந்த, கணவர் சந்தோஷமாக உபசாரங்கள் செய்தார்.

அன்று இன்னொரு பொதுஜன சேவையாக ஒரு நிகழ்ச்சியை திருபுவனம் கூட்டுறவு சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். அவர்களுடைய மதுரை கிளை ஷோரூம் அருகே கடிகாரத் தூண் அமைத்து எம்.எல்.ஏ., எம்.பிக்களைத் திறந்து வைக்க அழைத்திருந்தனர். அந்த விழாவிற்கு கணேசனும், நடராஜனும் ஜெயலட்சுமியை அந்தப் புடைவையைக் கட்டிக் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார்கள். திருபுவனம் பட்டுப் புடைவை கட்டிப் பளீரென வந்த ஜெயலட்சுமிதான் அன்றைய சிறப்பு விருந்தினர்.

சரி, அன்று இரவு சென்னை வந்த நாங்கள் மீண்டும் மறுநாளே புறப்பட்டு கோயம்புத்தூர் போனோம். வயதான ராதா அம்மாளும், அவருடைய ரிடையர்ட் கணவரும், அவருடைய தாயாருமாக அழகிய குடும்பம். வீட்டைச் சுற்றிலும் தோட்டம். உபயோகமான காய்கறிகளையும், மருத்துவ குணம் கொண்ட கற்பூர வள்ளி, துளசி, வாதநாராயண இலை, ஆகியவைகளையும் பயிரிட்டு இருக்கிறார்கள். ராதா கொலு வைத்திருந்தார்.

''இவருக்கு ஊர் ஊராகப் போகும் வேலை. இந்தக் கொலு பொம்மைகளைக் காப்பாற்றி எடுத்துக்கிட்டு போவதே பெரிய வேலையாக இருக்கும். ஒரு வழியா இப்போ இங்கு வந்து செட்டில் ஆயிட்டோம்'' என்றார்கள் கேரள மணம் வீசும் தமிழில்.

அங்கிருந்து கிளம்பி கோபிசெட்டிப் பாளையம் போகும் வழியில் மழையான மழை பேய் மழை! ரோடே தெரியவில்லை. டிரைவர் 'குன்சா'கத்தான் ஓட்டிக் கொண்டு போனார். சென்னைவாசியான நமக்கு மழையைத் திட்டவும் மனசில்லை. தெய்வங்களை வேண்டிக் கொண்டே போய்ச் சேர்ந்தோம்.

கோபியில் ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் சரோஜா தங்கத்தின் இரண்டு பெண்களும் கோவை கல்லூரியில்தான் படிக்கிறார்கள். அம்மா பரிசு வாங்கப் போவதைப் பார்க்கவே அவர்களும் மழையில் கிளம்பி வந்திருக்கிறார்கள். இரண்டு பெண்களும் விரும்பி மங்கையர் மலர் படிப்பார்களாம். லாரி பிசினஸ் செய்யும் கணவரும், இவர்களும்



• கூளமேட்டில்....



சிறப்பம்சங்கள்: 3 ஜார்கள் * மாற்றுவதற்கேற்ற 4 பிளேடுகள் • சிறப்பான கார்ட் வைண்டர் • கூடுதல் பாதுகாப்பிற்கு ரீசெட் ஸ்விட்ச் கொண்ட ஓவர்லோடு மோட்டார் புரொட்டெக்டர் • இண்டிகேட்டர் லேம்ப்

உணவில் ‘மிக்ஸி சுவை’ இனி இல்லை!

அசர வைக்கும் அசல் சுவை மீண்டும் பெறுங்கள்.

ஃபோர்ப்ஸ் மிக்ஸர் கிரைண்டர்.

மிக்ஸியில் தயாரித்த உணவின் சுவை ஏதோ ஒரு மாதிரி இருக்கிறதே. அது ஏன்?

காரணம், மிகச்சாதாரணமான அதன் மோட்டார்தான். இதன் விளைவாக மிக்ஸியின் வேகம் குறைகிறது. அரைப்பதற்கு அதிக நேரமாகிறது. அதிகப்படியான சூடு உண்டாகிறது. இந்த சூடு உங்கள் உணவின் சுவையைக் குறைத்துவிடுகின்றது.

இதோ ஃபோர்ப்ஸ் மிக்ஸர் கிரைண்டர். இத்துறையில் வல்லுனர்களால் உருவாக்கப்பட்ட அதன் 'ஹை-காப்' மோட்டாரில் சரியான அளவு காப்பர் வைண்டிங் உள்ளது. எனவே, மிக்ஸி அதிக சூடாவதில்லை. உணவு மிகவும் சுவையாக இருக்கிறது. மிக்ஸியின் வேகமும் குறையாது. ஆகவே அதிகளவு பொருட்களை விரைவாகவும் மிருதுவாகவும் அரைக்க முடிகிறது.

ஹை-காப் மோட்டார் சமநிலையுடன் பொருத்தப்பட்டிருப்பதால், மிக்ஸியில் அதிர்வோ அல்லது ஆட்டமோ ஏற்படுவதில்லை... இத்தனை சிறப்பம்சங்கள். எத்தனை குறைந்த விலையில்.

இப்போது நீங்களும் ஃபோர்ப்ஸ் வாங்கிப் பார்க்கலாமே. உணவின் சுவையும் மணமும் அதன் பெருமையை உங்களுக்கு உடனே உணர்த்திவிடும்.

ஃபோர்ப்ஸ்

மிக்ஸர் கிரைண்டர்

தயாரிப்பாளர்: FAL இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

விற்பனை செய்வோர்: லேஹம் இண்டியா லிமிடெட்,

ஆர்த்தி சேம்பர்ஸ், மூன்றாம் மாடி, 189, அண்ணா சாலை, சென்னை-600 006.

Ph: 8524303, 8524222, 8524661, Tlx: 41-5247 Fax: 044-8522012

விநியோகஸ்தர்கள்/டீலர்கள் விண்ணப்பிக்கவும்

HansaVision LIL 12339 TAM



* நங்கநல்லூரில்....

பேசும்போது கொங்குதமிழ் கொஞ்சியது காதுக்கு இனிமைதான். சரோஜா செய்த கைவினைப் பொருட்கள் எல்லாம் ஷோகேஸில் 'கொலு'வாக இருந்தது.

"ஆமாம், இத்தனை பேர் வீட்டுக்கும் போனீங்க. எங்க வீட்டுக்கு எல்லாம் வராம விழாவா வச்சுட்டீங்களே'' என ஏகப்பட்ட வருத்தம் சென்னையைச் சேர்ந்த சாந்தலட்சுமி, சீதா சுப்ர மணியன், வைதேகி ரகுநாதன், செங்கற்பட்டு சித்ராவுக்கும்.

அந்தக் குறைதானே தவிர மற்றபடி நிறைவு விழா சென்னை தி. நகர் சரோஜினி தெருவிலுள்ள திருபுவனம் பட்டுக் கூட்டுறவு சங்கக் கிளை ஷோரூமில் அற்புதமாக நடந்தது.' (அப்புறம் மறுநாள் போய் கொலு வைத்திருந்த இருவர் வீட்டிலும் புகைப்படம் எடுத்து வந்தோம்.)

உலகப் புகழ்பெற்ற ட்ரையத்லான் அமுதா கூப்பன்களைத் தேர்ந்தெடுக்க வந்தது போல பரிசளிக்க உலகப் புகழ்பெற்ற நாட்டிய தாரகை செல்வி பத்மா சுப்ரமணியம் வந்திருந்தது ரொம்பப் பொருத்தம். மற்றும் கைத்தறித் துறை இணைச் செயலர் ராமச்சந்திரனும், பதினெண் சித்தர் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் சிநேகலதாவும் வந்திருந்தார்கள்.

விழாவைக் காண ஆர்வத்தோடு சைதாப் பேட்டை மாதர் சங்க உறுப்பினர்களை சாந்தாராமானுஜமும், ஜோதி ஐஸ்வர்யா மாதர் சங்க உறுப்பினர்களை ஜெயலட்சுமியும் அழைத்து வந்திருந்தனர்.

பத்மா பேசும்போது, ''இந்தப் பரிசுத் திட்டம் அற்புதமான ஒன்று. ஏதோ பேட்டி அறிவித்துப் பரிசு தருகிறோம் என்று இல்லாமல் நவராத்திரியை ஒட்டி பத்துப் பேருக்குப் பட்டுப் புடைவை தாம்பூலம் தருவது என்பது சிறப்பானது. இது ஓர் ஆன்மீகக் கலைவிழாவாக எனக்குப் படுகிறது.

பட்டுப் புடைவை என்பது நம் தமிழக நெசவாளர்களின் அற்புதமான தொழில் நுட்பத் திறனை உலகுக்குக் கூறுவது. நம்மிடையே ஒரு தவறான மோகம் இருக்கிறது. சிங்கப்பூர், துபாய் புடைவைகளைக் கட்டிக் கொள்வதில் பெருமைப் படுகிறார்கள். ஆனால் நம் நாட்டு நெசவாளர்களின் வேலைத் திறன், சிறப்புப் போல உலகில் எங்கேயும் இடையாது.

அதனால்தான் நான் சமீபத்தில் விருதுபெற ஜப்பான் சென்றபோது, திருபுவனம் பட்டுப் புடைவையைப் பரிசு வாங்கும்போது கட்டிக் கொண்டேன். பத்திரிகையாளர்கள் கூட்டத்திலும் பெருமையோடு இப்புடைவையின் சிறப்பை அறிவித்தேன்.

இத்தனை சிறப்புமிக்க கலாசாரம் கொண்ட புடைவைகளை நீங்கள் அணிப்பதால் இது நம் தமிழகக் கலாசாரத்தை ஊக்குவிக்கும் வகையில் இருக்கிறது. சக்தி வழிபாடு எனும் அற்புதமான நேரமான நவராத்திரியில் இதை மங்களகரமாக அளிப்பதால் இது உண்மையிலேயே ஆன்மீகக் கலாசார விழா.''

என அருமையாகப் பேசியவர்,


''இந்த நேரத்தில் மங்கையர் மலர் மூலமாக உங்களுக்கெல்லாம் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உலகமெல்லாம் நம் புடைவையின் அழகை, பெண்கள் அதைக் கட்டிக் கொள்ளும் அழகைப் பார்த்து வியக்கிறார்கள். ஆனால் நம் பெண்களோ வேறு உடைகளுக்கு மாறி வருகிறார்கள். தயவு செய்து நம் புடைவையை மறந்து விடாதீர்கள்'' என்றார். சுடிதார் போட்டுக் கொண்டு வந்திருந்த இளம்பெண்கள் வெட்கமாகச் சிரித்த போது ரசமாக இருந்தது.

வந்திருந்த அத்தனை பெண்களுக்கும் ரவிக்கைத் துணி தாம்பூலமாக அளித்தார்கள். ஏதோ பரிசு கொடுத்தோம் என இல்லாமல் இத்தனை சிரத்தையோடு இதையெல்லாம் ஏற்பாடு செய்தது மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுக்க எங்களோடு அலைந்து பரிசு பெற்றவர்களுக்கு 'நவராத்திரி தாம்பூலம்' கொடுத்து மகிழ்ந்த திருபுவனம் கூட்டுறவு சங்கச் சிறப்பு அலுவலர் கணேசனையும், மேலாளர் நடராஜனையும் மனமார பாராட்டத்தான் வேண்டும்.

— மஞ்சுளா ரமேஷ்


புகைப்படங்கள் : ராஜு

ஒரு
தனிச்சிறப்பான
உதாரணம்,
எவ்வாறு
சோர்வு
தரும்
வேலைகள் ...



The Thapar Group

கிராம்டன் கிரீவ்ஸ் லிமிடெட்
ஃபேன்ஸ் அண்டு அப்ளையன்ஸஸ் டிவிஷன்,
கான்ஜூர் மார்க், பாண்டுப், பம்பாய் - 400 042.
ஃபோன்: 578 4129/578 4211/578 2451 ஃபேக்ஸ்: 578 3468



... மாபெரும் வீட்டு உபயோக சாதனங்களை கிராம்டன் கிரீவ்ஸ் உருவாக்க ஊக்குவித்தன என்பது !

கிராம்டன் கிரீவ்ஸ் வழங்குகிறது உங்களுக்கு முதல்தரமான வீட்டு உபயோக சாதனங்கள் வரிசை. அன்றாட பணிச்சோர்வுகளை திறமையாக நீங்கள் சமாளிக்க வேண்டிய தேவைகளை கருத்தில் கொண்டு ஒவ்வொன்றும் ஊக்குவிக்கப்பட்டவை.



கிராம்டன் கிரீவ்ஸ் ஃபுட் பிராஸஸ்ஸர்: அமைதியான இண்டக்ஷன் மோட்டார் கொண்டுள்ள ஒரே சாதனம். சிறு துண்டுகளாக சீவுவது, நறுக்குவது, அரைப்பது, உரிப்பது, பிழிவது போன்ற பல்வேறு பணிகளை நீங்கள் திறமையாக செய்வதற்கு ஏற்றவகையில் இதன் பலதிறன் கொண்ட கத்திகள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராம்டன் கிரீவ்ஸ் மிக்சர் கிரைண்டர்: உங்கள் மிகக் கடினமான அரைக்கும் வேலைகளை சுலபமாக சமாளிக்க ஹெவி-டியூட்டி மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு ஒப்பற்ற இணைப்புக்கார்டு வைக்க வசதி.



கிராம்டன் கிரீவ்ஸ் மினி கிரைண்டர்: எல்லா விதமான ஈரப்பசையற்ற அரவைகளுக்கு... ...பருப்பு வகைகள், மசாலாக்கள், சர்க்கரை... காஃபிக்கொட்டை வரை. உங்கள் சிறிய அரவைத் தேவைகளையும் மனதில் கொண்டு சிறப்பாக உருவாக்கப்பட்டது.

கிராம்டன் கிரீவ்ஸ் ஆட்டோமெட்டிக் எலக்ட்ரிக் குக்கர்: நவீன தொழில் நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட இதன் மூலம் ஆவியில் வேக வைத்தல், கொதிக்க விடுதல், மற்றும் வகைவகையான சுவைமிக்க மகிழ்வூட்டும் உணவு வகைகள். சூப்-வகைகள், புலவு, உப்புமா, பருப்பு வகைகள், (சாம்பார், ரசம்), தோக்ளாஸ், இட்லி போன்ற இன்னும் பல தயாரிக்கலாம். இது தேவையான சமயத்தில் ஆட்டோமெட்டிக்காக வெதுவெதுப்பான நிலைக்கு மாற்றி உணவுகள் மிதமான சூட்டில் பல மணிநேரம் குறைந்த மின் செலவில் வைக்க உதவுகிறது. மேலும் இது முற்றிலும் பாதுகாப்பானது.



உண்மையாகவே ஊக்குவிக்கப்பட்ட ஒரு உன்னத அணிவரிசை — ஓவன் டோஸ்டர் கிரில்லர், பாப் அப் டோஸ்டர், சான்ட்விச் டோஸ்டர், காஃபி-டீ மேக்கர், மேலும் பல.

கிராம்டன் கிரீவ்ஸ் வீட்டு உபயோகச் சாதனங்கள், உங்கள் வாழ்க்கை அமைப்பை மேலும் மேன்மையாக மாற்றிடவே !

கிராம்டன் கிரீவ்ஸ்
லிமிடெட்

அப்ளையன்ஸஸ்

உங்களால் ஊக்குவிக்கப்பட்டது. எங்களால் உருவாக்கப்பட்டது.

நீங்களே உபயோகித்துப் பாருங்கள்!

ஃபிலிப்ஸ் உலகப் புகழ்பெற்ற நிறுவனம். இதன் ரேடியோவும், மற்ற மின்னணுச் சாதனங்களும் அனைவரும் அறிந்தது தான். இவர்கள் இப்போது பெண்களின் சமையலறைச் சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கும் முன்வந்திருக்கிறார்கள். 'ஃபிலிப்ஸ் லைஃப் ஸ்டைலர்ஸ்' என்ற பெயரில் ஒன்பதிற்கும் மேற்பட்ட வீட்டு உபயோகச் சாதனங்களை ஒவ்வொன்றாகக் கொண்டுவரப் போகிறார்களாம்.

மார்க்கெட்டிங் & சேல்ஸ், டொமெஸ்டிக் அப்ளையன்ஸின் ஜெனரல் மானேஜர் ராகேஷ் சர்மா இதைப் பற்றியெல்லாம் விளக்கிச் சொன்னபோது நிறைய சந்தேகங்கள் -

இவர்கள் சொல்லும் இதே மிக்ஸி கிரைண்டர், அயர்ன் பாக்ஸ், ஹேர்-டிரையர் எல்லாவற்றையும் நிறைய பேரும் தயாரிக்கிறார்கள். இவர்களுடையதில் என்ன தனிச் சிறப்பு இருக்க முடியும்?

''அப்படிக் கேளுங்கள். நாங்கள் முதலில் பெருமைமிக்க உலகப் புகழ்பெற்ற ஃபிலிப்ஸ் நிறுவனம். நாங்கள் ஒரு பொருளை அறிமுகப்படுத்து கிறோம் என்றால் நிச்சயம் உலகத் தரம் வாய்ந்ததாக இருக்கும், இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். எனவே, இந்த உணர்வை, நம்பிக்கையை நாங்கள் காப்பாற்றி ஆக வேண்டும்.

எனவேதான் எங்கள் சாதனங்களை வடிவமைக்கும்போது தரம் என்பதை முதலில் கவனிக்கிறோம். எங்கள் மிக்ஸர் கிரைண்டரின் மோட்டார், அரைக்கும் டும்கள், ஸ்விட்ச் இவையெல்லாம் உலக அளவிலான மற்ற மிக்ஸிகளுக்கு இணையாக இன்னும் சிறப்பாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுகிறோம். அதேபோலத் தோற்றம். இன்றைய நவீன பெண்கள் தங்கள் சமையலறையை அழகிய நேர்த்தியான நவீன பாணியில் வைத்திருப்பார்கள். அவர்களுக்கு நாங்களும் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட தோற்றமுள்ள மிக்ஸர் கிரைண்டரைத் தந்தால்தான் அவர்களின் 'மாடர்ன் கிச்சனுக்'குப் பொருத்தமாக இருக்கும்...

மிக்ஸி மட்டுமேயல்ல, மற்ற பிரெட் டோஸ்டர், ஹேர்-டிரையர் எல்லாமே எங்களுடைய பொருட்கள் நவீன இல்லத்தில் எடுப்பாகத் தோற்றமளிக்கும். அதே சமயம் மாடாக உழைக்கும்!''

என்று நகைச்சுவையாகச் சிரிப்புடன் சொன்னார் ராகேஷ் சர்மா.

இதுவரை லைட் அயர்ன், ஸ்டீம் அயர்ன், ஹேர்-டிரையர் இவை விற்பனைக்கு வந்திருக்கின்றனவாம். ஓவன், வேக்குவம் க்ளீனர், ஆண்கள் பெண்களுக்கான ஹேர் ரிமூவர் இவை வந்து கொண்டிருக்கின்றனவாம். இன்னும் வரப் போவது கியூ வரிசையில்.....

''இந்தியப் பெண்களின் சமையலறை, கலாசார முறையில் மற்றவர்களிடமிருந்து மாறுபட் டது. நவீன பெண்கள் இதுவரை வசதிக்காக வெளிநாட்டு வீட்டு உபயோக உபகரணங்களை வாங்கியிருக்கலாம். இவை சிறிது ரிப்பேரானாலோ, சர்வீஸ் செய்ய வேண்டுமென்றாலோ கஷ்டம். இப்போது நம் ஃபிலிப்ஸ் அந்தப் பிரச்னையைப் போக்கிவிடுகிறது. இதுவரை 140 - ற்கும் மேற்பட்ட நாடுகளில் வீட்டு உபயோகப் பொருட்களை விற்று வந்தவர்கள் இந்தியாவிற்கும் வருகிறோம். அதேசமயம் வெளிநாட்டுச் சமையலறைக்கும், நம் சமையலறைக்கும் வித்தியாசம் உண்டு. அதைக் கருத்தில் கொண்டு சில நுண்ணிய மாற்றங்களைச் செய்திருக்கிறோம்...''

''நீங்களே தனியாக ஃபேக்டரி வைத்து இல்லையே. மற்றவர்களைத் தயாரிக்கச் சொல்லித்தானே செய்கிறீர்கள்...?''

''ஆனால் டிசைன் எனப்படும் வடிவமைப்பும், தொழில் நுட்பத் திறனும் எங்களுடையது. எங்களுடைய அளவிற்குத் தரமான உபகரணங்களை மற்றவர்களால் பொருத்தி இந்த விலைக்குத் தரமுடியாது. சில நுண்ணிய டிசைன்களையும் தருகிறோம். இதனால் 'டூப்ளிகேட்' வரவோ, ஏமாற்றவோ முடியவே முடியாது!'' என்றார்.

''அதேபோல எங்கள் மின்சாரம் வருகின்ற பவர் கார்டு உலகத் தரம் வாய்ந்தது. அதனுள் இருக்கும் செப்புக் கம்பிகள் தரச் சோதனைக்கு உட்பட்டவை. எனவே

பெண்கள் நிச்சயம் இதனைப் பயமில்லாமல் பயன்படுத்தலாம். ஹேண்ட் மிக்ஸரும் நம் வீட்டுப் பெண்களுக்கானது. முட்டை அடிக்க, தயிர் கடைய உபயோகப்படுவதுடன் சப்பாத்தி மாவு பிசைய ரொம்ப உபயோகப்படும்'' என்றார்.

சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்தவர் திடீரென்று, ''ஆமாம், எங்களுடைய பொருட்களின் தனிச் சிறப்பைத் துருவித் துருவிக் கேட்கிறீர்களே, உங்கள் வாசகிகளுக்கு அவற்றினை நாங்கள் பரிசாக அளிக்கிறோம். அவர்களே உபயோகித்து இதன் தனிச் சிறப்பினைப் புரிந்து கொள்ளட்டுமே!'' என்றார்.

நம் வாசகர்களுக்குப் பரிசு வருகிறது என்றால் இரட்டிப்புச் சந்தோஷம்தானே! நம் மங்கையர் மலரில் புகழ்பெற்ற சமையல் போட்டியைப் பற்றி விளக்கினோம்.

அவர்களை இம்மாத இல்லத்தரசியாகத் தேர்ந்தெடுத்துக் கௌரவிப்பதையும் சொன்னோம்.

''உங்களுடைய இம்மாத இல்லத்தரசியில் பரிசு பெறுபவர்களுக்கு எங்களுடைய ஃபிலிப்ஸ் நிறுவன உபகரணங்களை ஆறு மாதத்திற்கு நாங்கள் தருகிறோம்...'' என ஒத்துக் கொண்டனர்.

எனவே, இம்மாத இல்லத்தரசி போட்டியில் வழக்கமாக அனுப்பும் பரிசுத் தொகை தவிர ஆறு மாதங்களுக்கு ஃபிலிப்ஸ் நிறுவனம் தரும் அன்பளிப்புகள் வழங்கப்படும்.

இம்மாதம் ஃபிலிப்ஸ் அளிக்கும் பரிசுகள் : —

முதல் பரிசு - மிக்ஸர் கிரைண்டர் (ரூ. 2175/- பெறுமானமுள்ளது)
இரண்டாம் பரிசு - ஹேண்ட் மிக்ஸர் (with revolving bowl) (ரூ. 1700/- பெறுமானமுள்ளது)
மூன்றாம் பரிசு - பழச்சாறு பிழியும் உபகரணம் (ஒரு லிட்டர்) (ரூ. 800/- பெறுமானமுள்ளது)
மூன்று ஆறுதல் பரிசுகள் - பழச்சாறு பிழியும் உபகரணம் (அரை லிட்டர்)
(ஒவ்வொன்றும் ரூ. 650/- பெறுமானமுள்ளது.)

சமையல் போட்டிக்கான பொருள் : மிக்ஸர்கிரைண்டர் உபயோகித்துச் செய்யும் உணவு.

(நீங்கள் செய்து பார்த்து அனுப்பும் சமையல் குறிப்பில் குறைந்தபட்சம் ஒருமுறையேனும் மிக்ஸர் கிரைண்டரைப் பயன்படுத்தி இருத்தல் வேண்டும்.)

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சமையல் கூப்பனையோ, அல்லது அதை ஜெராக்ஸ் எடுத்தோ அல்லது அந்த மாடலில் கூப்பனையோ வைத்து அனுப்பவும்.

இம்மாத இல்லத்தரசி சிறப்புச் சமையல் போட்டி

சமையல் கூப்பன்

பொருள் : மிக்ஸர் கிரைண்டர் உபயோகித்துச் செய்யும் உணவு. கடைசி தேதி : 10.11.'94

என்ற தலைப்பில் இத்துடன் சமையல் குறிப்பை அனுப்பியுள்ளேன். இதுவரை இந்தச் சமையல் குறிப்பு எந்தப் பத்திரிகையிலும் வெளியானதில்லை என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

முதல் பரிசு



இரண்டாம் பரிசு



மூன்றாம் பரிசு



ஆறுதல் பரிசு (3)




பழைய நண்பர்களைச் சந்தித்து கிளுகிளுக்கிறீர்கள்.

...ங்கெட்ட பொண்ணு மனசு



ஆரஞ்சு வில்லையைத் தின்னதில இனிப்பு எச்சியா ஒழுகி புள்ளய்க சட்டை பூரா ஈ மொச்சக்கிட்டு கெணத்து மேட்ல ஒரு மோளி துணிமணி கெடக்கு துவைக்க. திருகையில பாதி திரிச்சும் திரிக்காமயுமாகக் கெடக்கு வரகரிசி. கொட்டத்துலேர்ந்து செல்ல, தண்ணி கூளம் வைக்கச் சொல்லி ரெண்டு மட்டம் கூப்பாடு போட்டுட்டுது.

வீட்ல இப்போதைக்கு ஒருத்தருமில்லாத சுதந்திரத்தில இதிலயெல்லாம் மனசச் செலுத்தாம, தன் பிறந்த வீடான கிருஷ்ணம நாயக்கன் பட்டிக்கு அனுப்பிச்சிட்டா தம் மனசெ மஹா. வேற வழியில்ல. அவ தன்னோட மனசை மட்டும் தான் அனுப்ப முடியும். உடம்பும் உயிருமா அங்க போக முடியாது. அவ கல்யாணத்தன்னிக்கு சாயங்காலமே பெரிய தீயா மூண்டு முடிஞ்சுட்டுது சண்டை. உப்புப் பெறாததுதான் விஷயம். ஆனா வீறாப்பு ரெண்டு பக்கமும் 'டக்கப் வாரா'ல்ல இழுத்துக்கிட்டு நின்னுது!

கடசியா அவளப் பெத்தவரும் பெறந்ததுகளுமாச் சேர்ந்து,

"இந்த நாசமாப் போற செவலூருக்கு நம்ம மஹாவப் பலி குடுத்துட்டம்னு நெனச்சுப் பொறப்டுங்க. இன்னமே இந்த செங்காட்டுப் புழுதிகூட எங்க கால்ல ஒட்டாது"ன்னு துண்ட ஒதறித் தோள்ல போட்டுக்கிட்டு. இந்த உறவை முறிச்சிக்கிட்டுப் போனவுகதான். அதுக்குப் பெறகு ஒரு தீவாளி கெடையாது, பொங்க கிடையாது, ஆடி கிடையாது, கார்த்தியல் கிடையாது, ஒரு நன்மை தீமையும் கிடையாது.

மஹா மட்டும் செவலூர் மனுஷியா அழகருக்குப் பெண்டாட்டியா துரைச்சாமிக்கு மருமகளாத் தேங்கிப் போனா.

ஒரு வேளை கிருஷ்ணம நாயக்கன் பட்டியில மஹாவ நெனைக்க பெத்தவன்னு ஒருத்தி இருந்திருந்தா கதை வேற விதமா போயிருந்திருக்குமோ என்னமோ! அதில்லாததுனால இவளச் சேர்ந்த சுடுகுஞ்சு திரும்பிப் பார்க்கல இதுவரைக்கும் செவலூரெ.

மஹா, தம் பேருக்கேத்த மாதிரி மஹாலட்சுமி மாதிரித்தான் முகக்களையும் பெருந்தன்மையான வாரிக் குடுக்கிற புத்தியும். ஆனா அவ மாமியாருக்கு லட்சணம்னா என்னன்னு தெரியாதோ இல்ல மாமியார்ங்கிற ஆணவமோ ஒரு நாளைக்கு நாலு தரமாவது சொல்லாம இருக்க மாட்டா.

"பேரப்பாரு மஹாலச்சுமியாம் மஹா.. லச்சுமி! மூதேவி! அட்டத் தரித்திரம் புடிச்சது."

தன்னோட பிறந்த வீட்லயிருந்து சீர் வரலையிங்கறது மஹா செய்த குத்தமா? இதக் காரணமா வச்சு அவ மாமியார் மஹா செய்யாத எல்லா குத்தத்தையும் பழியா சுமத்தி வார்த்தையாலயே குத்தி, வெட்டி, வேல் பாய்ச்சி கொடூரம் பண்ணும் போதெல்லாம், 'பதில் பேசி ஆகப் போறதென்ன, என்னத்தையோ அந்தம்மா மனசு திருப்தியடையிற வரைக்கும் பேசிட்டுப் போகட்டும்'னு பேசாம விட்ருவா மகா.

அதுவும் பொறுக்காது கெழவிக்கு.

"மானங்கெட்டவ. என்னத்தச் சொல்லு எரும மாட்டுமேல மழை



பெஞ்சாப்பில தான்," அப்டீன்னு கொமட்ல ஒரு இடி இடிப்பா.

இந்த லச்சணத்தில ரொம்ப நாளா மாப்பிள்ளை அமையாம கல்யாணமே தெகயலைன்னு மஹறாவுக்கு அதிர்ஷ்டங் கெட்டவள்னு வேற ஒரு தூஷணையிருந்தது. அப்புறம் யாரோ சொன்னாங்கன்னு சந்தோஷி மாதா விரதம், துர்க்கையம்மனுக்கு ராகு காலத்தில விளக்குப் போட்றதுன்னு எழுபத் தெட்டு சவரச்சனைக்கு அப்புறம் நடந்தது இந்தக் கல்யாண வைபோகம். அத னால கிருஷ்ணம நாயக்கன் பட்டியில போய் வாழாவெட்டின்னு கேவலப் பட்றதைக் காட்டிலும் இங்க புருஷன் கிட்டயும் மாமியா கிட்டயும் மிதிபட்றது தேவலாம்ங்கிறது மஹறாவோட முடிவு. அதிலதான் மௌன மாவே ரெண்டு குழந்தைகளுக்குத் தாயாவும் ஆயாச்சு அவ.

கிருஷ்ணம நாயக்கன் பட்டிக்காரவுக இந்த எட்டு வருசமா எட்டிப் பாக்காத விரதம் காத்துக்கிட்டு வந்தாலும் மஹறா அண்ணாடம் மனசால ஒவ்வொரு பொழுதும் அங்க எட்டிப் பாக்காம இருந்ததில்ல.

சித்த முந்தி- பாதி திரிச்சாப்ல கிடக் கில்ல வரகரிசி – அதைத் திரிக்கும் போது கூட, 'வரகரிசிச் சோறுன்னா நெய் போட்டுப் பெசஞ்சாப்ல இருக்குன்னு ஆசையாச் சாப்புடுவான் பெரிய தம்பி சிங்காரம். இதில ஒரு அஞ்சு படி கொண்டு போயி குடுத்துட்டு வந்தா எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக் கும்'னு நெனச்சுக்கிட்டே ரெண்டு கையிலயும் வரகரிசிய அள்ளி வச்சுக்கிட்டா. அவ மனசு அந்த வரகரிசிய அள்ளிக் கிட்டுப் போயி ஆசையாப் பொங்கி சிங்காரத்துக்குப் போட்டு அவன் சாப்பிட ஆசையாப் பாத் துட்டு வந்துது.

இங்க அதுக்குப் பதிலா அவ கண்ணில கண்ணீரு வழிஞ்சு ஓடுச்சு.

உள்ளூரு சந்தன மாரியம்மனுக்கு பூச் சொரிதல் அன்னிக்குக் குடலை குடலையாப் பூ வீட்ல. அவமாமனார் துரைச் சாமிக்குப் பெரிய மனுசர்ங்கிற மதிப்பு ஊருக்குள்ள. அதில கோயில்லயிருந்து இப்பிடி சில வருமானமெல்லாம் மரியாதைக்கு வரும்.

அதில ஒத்தப் பூ தலையில வைக்கல மஹறா.

ஆனா முழங்கால் வரைக்கும் விழுகிற பின்னல் உள்ள அவ தங்கச்சி ரங்கத்துக்கு அவ மனசு அம்புட்டுப் பூவையும் அள்ளிக் கிட்டுப் போயி ஜடைபில்லை வச்சுப் பின்னி, குஞ்சலம் வச்சு, பூத்தைச்சு அழகு பாத்தது.

'ம்..ரங்கம் இந்நேரம் வயசுக்கு வந்த பொண்ணா கல்யாணத்துக்குக் காத்துக் கிட்டிருப்பா... இல்லே கல்யாணம் ஆயிட்டு தோ என்னமோ!'

குபுக்கன்னு கண்ல தண்ணி.

"பாழாப் போற பொம்பள! வீடு, குடும்பம்னு நெனவு இருக்கா அவளுக்கு! வீடு கிடக்கிற கிடையப்பாரு... இன்னும் அடுப்பில ஒலை வைக்கல."

மாமியார் குரல் தான்.

மஹறா, பதறியடித்து கிருஷ்ணம நாயக் கன் பட்டியிலிருந்து மீண்டு, செவலூர் வந்தாள்.

'கீ' கொடுத்த பொம்மை மாதிரி மாமியார் பேசிக் கொண்டேயிருக்க, 'கீ' கொடுத்த பொம்மை மாதிரி மஹறாவும் வீடு வேலை பூராவையும் பம்பரமாய்ச் செய்வதில் ஆழ்ந்து போனாள்.

விவசாயக் குடும்பத்தில வேலை ஓயுறதேது தீருறதேது? மத்தியானப் பாடு முடிஞ்சு ராத்திரிக்கு ஒல வச்சிருக்கு. துவரங் காட்டுக்குள்ளயிருந்து பறிச்சுக்கிட்டு வந்த புளிச்சக் கீரையை மத்துப் போட்டுக் கடஞ் சுக் கிட்டிருக்கா மஹறா.

"மஹறாக்கா! மஹறாக்கா! யாரோ ஒங்க வீட்டுக்கு விருந்தாளி வாராங்க. ஒங்க பேரச் சொல்லிக் கேட்டாங்க. நா வீட்டக் காட் றேன்னு கூட்டிட்டு வந்தேன்."

ஓடி வந்ததில மூச்சிறைக்க சொல்றான்



வரலட்சுமி நோன்பு பூஜை மற்றும் வெள்ளிக் கிழமைகளில் கொடுத்த வெற்றிலைப்பாக்கு, பூ, பழத்துடன் தேங்காய்களையும் பிளாஸ்டிக் பையில் போட்டதனால் கனிந்து 'கொள,கொள' வென்றாகி விட்டது. பூஜையில் கொடுத்த பழமாயிற்றே. தூக்கி எறிய முடியாது. கொழக்கட்டைக்கு அரிசி மாவு அரைத்துச் சலித்தபின் கப்பி மீதி இருந்தது. வாணலியை அடுப்பில் வைத்துக் காய்ந்தபின் 3 டீஸ்பூன் நெய் விட்டுக் கப்பியை லேசாக வறுத்து, பால் ஊற்றி 2 ஏலக்காய் பொடி செய்து போட்டு, வாழைப் பழங்களையும் தோலுரித்து மிக்ஸியில் அரைத்துப் போட்டுக் கிளறினேன். ஒரு மூடி தேங்காய்த் துருவலையும் போட்டு, மறுபடி நன்கு கிளறி இறக்கினேன். குழந்தைகள் பள்ளியிலிருந்து வந்தபின் இந்தாருங்கள் 'பூஜா அல்வா' என்று தட்டில் போட்டு மேலாக ஐந்து பாதாம் பருப்புகளையும் தூவினேன். சாப்பிட்டபின், 'பூஜா அல்வா ரொம்ப ஜோர்' என்றனர் குழந்தைகள்.

- எஸ்.கஜலட்சுமி.



குழந்தைகளுக்கு பிஸ்கட் லன்ச்சிற்கு தினம் ஏதாவது தேவையாய் இருக்கும். 2 டம்ளர் புழுங்கல் அரிசியை ஊற வைத்து நைசாய் (தோசைக்கு அரைப்பது போல்) அரைத்து மாவை சிறிது நேரம் வெள்ளை துணியை மடித்து அதில் கருட்டி வைத்தால் ஈரம் கெட்டியாய் இருக்கும். 2 மேஜைக் கரண்டி உளுத்தம் பொடி (உ.பருப்பை லேசாய் வறுத்து மிக்ஸியில் பொடித்துச் சலிக்கவும்.) உப்பு, பெ.பொடி, துளி ஜீரகப் பொடி போட்டு பிசைந்து கண்டைக்காய் அளவு சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வெள்ளை துணியில் ஒட்டாமல் போடவும். 10 நிமிஷம் கழித்து சீடை மூழ்கும் அளவு எண்ணெய் வைத்து பொரித்து சப்தம் அடங்கியபின் எடுக்கவும். எண்ணெய் நிறைய வைத்தால் தான் வெடிக்கும். கொஞ்சமாய் வைத்தால் வெடிக்காது. சீஸ் பால் ரெடி. குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும்.

– பத்மா ரெங்கசாமி.

பக்கத்துத் தெரு பன்னீரு.

'அதாரு விருந்தாளி இந்நேரத்தில?'

மஹா யோசனையோட வாசலுக்கு வந்தவ கண்ணு ரெண்டுக்கும் ஏன் ஒடம்புக்குமே ஒரே அதிர்ச்சி. கை கால் புத்தி, வாய் எதுவுமே செயல்படாம ஒரு செகண்ட் ஸ்தம்பிச்சுப் போச்சு மஹாவுக்கு.

வாயும் மனசும் பூப்போல மகிழ்ந்து விரிய வாசல்ல ஒரு மூட்டை மாதிரி பொட்டலத்தோட நின்னவ மஹாவோட அம்மாவப் பெத்த பாட்டி.

எத்தன வருஷம்? எட்டு வருஷத்துக்கு மேலேயே ஆச்சு ரத்த பந்தங்களப் பாத்து.

அதெப்படி கிருஷ்ணம நாயக்கன் பட்டிக் காத்து செவலூருக்கு அடிச்சுத் தள்ளிக்கிட்டு வந்தாப்பில?

"அது யாருடி?"

மாமியாரோட அதட்டல் உள் வீட்லயிருந்து.

பொங்கின சந்தோஷ ஊத்துக்கு இடையே லேசான கிலியின் ரேகையோட உள்ளிருந்து வந்த குரல் கேட்காத பாவனையை தனக்குள்ள செலுத்திக்கிட்டு தன்னை மீறிய குரல் வெடிப்போட,

"பாட்டி..."ன்னு ஆவி சேர்த்து இறுகக் கட்டிக்கிட்டா மஹா.

கிழவியோட கைகள் தன் பொட்டலத்த ஷணத்தில நழுவ விட்டு மஹாவோட முதுகில எதிரெதிரா பிணைந்ததன. உள்ளடக்கிய வேதனைகளோட வெளிப்பாடா ரெண்டு பேர் கண்ணுலயும் கரகரன்னு கண்ணீரு.

"உள்ளவா பாட்டி உள்ளவா"

பாட்டியோட கையப் புடிச்சு உள்ள இழுக்கிறா மஹா. வெளிய வந்த மாமியாக் கிழவிக்கு, 'அட இவ வூட்டு சனமில்ல' ன்னு பொசுக்குன்னு ஆச்சரியம்.

"அடேயப்பா! கிருஷ்ணம நாயக்கன் பட்டிக் காரவுகளா? வாரதுக்கு வழி தெரிஞ்சுதா?"

கிழவி, துடைக்காத கண்ணீர் தேங்கலோட மஹா கைய விட்டு அவ மாமியாரைப் பார்த்து ஸ்நேக பாவமா பொக்கை வாயில புன்னகையக் காமிச்சா.

'என்னா விசயம் இவ்ள காலத்துக்குப் பெறகு கெழடு வந்திருக்குது?' மனசுக்குள்ள கேள்வி மாமியாரம்மாவுக்கு.

சம்பந்த காரவுகள வரத்துப் போக்கில்லாம அடிச்சுப் புட்ட ராச்சசின்னு ஊர்க் காரிக அரசல் புரசலா ஜாடை பேசறது ஒரு ஓரமா உறுத்தல்தான் இந்த மாமியாக் கெழவி அன்னபூரணத்துக்கு. இதுல இப்ப இம்புட்டு நாளைக்குப் பெறவு வந்த கெளவிய 'வா'ன்னு கேக்கலையின்னா இன்னூரந் தூத்துவாளுக அக்கம் பக்கத்து சிறுக்கிகன்னு மனசுக்குள்ள கணக்குப் போட்டு 'வா அத்தே' ன்னு ஒப்புக்குக் கூப்புட்டுப் புட்டு மஹாவப் பார்த்து முகத்த ஒரு திருப்பு திருப்பிட்டுப் போனா உள்ள.

அன்ன பூரணத்தோட தலை மறைஞ்சது தான் தாமதம், பாட்டி யோட குச்சிகுச்சியாப் போன விரல்களைத் தன் விரல்களோட இறுக்கிக் கிட்டா மஹா.

"ஒனக்காவது இம்புட்டு நாளைக்கப்புறம் என்னைப் பாக்கணும்னு நெனவு வந்திச்சே பாட்டி" ன்னு சொல்லிட்டு பாட்டியோட குச்சி விரல்களைத் தன் முகத்தில வச்சு மூடிக்கிட்டிருந்துட்டு அழுகை கலந்து அந்த விரல்கள்ல முத்தம் தந்தா.

தன்னோட கண்களைத் துடைக்க மறந்த கிழவி அந்தக் குச்சிக் கைகளால மஹாவோட கண்ணுல வழிஞ்ச கண்ணீரை ஆதரவா துடைச்சு விட்டா.

கிருஷ்ணம நாயக்கன் பட்டியிலிருந்து தன்னைப் பாக்கணும்னு ஒரு ஜீவன் வந்ததில,

அதுவும் தன்னைப் பெத்த ரத்தத் தோட மூத்த ரத்தம் வந்ததில தலைகால் புரியல மஹாவுக்கு. பாட்டி தரையில நடக்கறது மனசு சம்மதிக்கல. அழகரு கூட, "என்னாடி அதிசயமாப் பாட்டி வந்துட்டான்னு பொல்லா நாடகம் நடிக்கிறே"ன்னு கண்ணா லயே ஒரு உறுமு உறுமினான்.

எப்பவும் வாங்குற வசவு இருக்கவே இருக்கு. அதெப் பெறகு பாத்துக்கிடலாம்னு அபூர்வமா வந்த பாட்டிக்குக் கீரையப் போட்டு சோறு வைக்க வேண்டாம்னு பொடு பொடுன்னு நல்லதா ஒரு கொழம்பு காய் அப்பளம்னு சமையல் செய்றா மஹா. அவ சமைக்கயில பக்கத்திலயே ஒரு மணையப் போட்டு உக்காந்து கிட்டுப் பேசுறா பாட்டி.

"நா சாகப் போற கட்டை மஹா. வயசு எம்பத்தஞ்சோ என்னமோ ஆகுது. ஏதோ அந்த நாளைய ஊட்டம் கண்ணு காது பழு தாகாம நடமாடிக் கிட்டிருக்கேன். ஆனாலும் எத்தன நாளக்கி ஓடும் இந்த ஓட்டம்? அங்க எல்லாருக்கும் மானரோசம் வீருப்புதான் முன்னால நிக்கிது. ஒருவகையில அதுவுஞ் சரிதான். மனுசச் சென்மம் வறுமை தாங்கும். நோய் நொடி தாங்கும். அவமானம் தாங்காது. ஆனா பாழாப் போற பொம்பளைச் சென்மம் இருக்கே அது ரத்தமும் சதையுமா பெத்துப் போட்டு பெத்துப் போட்டு பாசத்திலயே முழுகிப் போனதுல மான ரோசத்தக் கூட ரெண்டாம் பட்சமாத் தான் வச்சுப் பழகி ருச்சு. அதான் யாருகிட்டவும் சொல்லாமல் பெரும ஓங்கண்ணன் சங்கரனுக்கு மட்டும் தான் தெரியும் - மத்தவுகளுக்கு வயல்ல அறுப்புன்னு வெளிய அசர முடியல. பக்கத்தூர்ல அவன் பெண்டாட்டி வழி உறவு ரொம்ப முடியாமக் கெடக்குன்னு அவனும் நானுமாத்தான் வந்தோம். சங்கரன்கிட்ட கெஞ்சிக் கேட்டுக்கிட்டேன். 'எனக்கென்னடா கிழவிக்கு மான ரோசம்? அநாத மாதிரி கிடக்கிற மஹாவ நாஞ் சாக றதுக்குள்ள ஒருவாட்டி பாத்துட்டு வந்துர் றேன்; என்னைப் பஸ்ல ஏத்திவிடு. ஒரு பொழுது பாத்ததும் ஓடியாந்துர்றேன்' ன்னேன்."

மஹா மனசுக்குள்ள சங்கரனுக்கு நன்றி சொல்லி வணங்கினாள்.


ராப்பூரா பாட்டியும் பேத்தியுமா பேச்சு பேச்சு பேச்சுத்தான். இருக்கே எட்டு வருசத்துக் கதை! ஒரு ராப் பொழுதில தீருமா? விடியப் போகயில தன்னை மீறி கண்ணசந்தா கிழவி. ஆனா மஹாவுக்குத் தூக்கம் புடிக்கல.

பொதுவா மனுச சென்மமே இப்படித் தானே, ரொம்பத் துக்கமும் சரி ரொம்ப சந்தோஷமும் சரி தூக்கத்த விரட்டிப் புடும்.

'பொழுது விடிஞ்சா பாட்டி புறப்பட் டுவா' போகும் போது பாட்டிக்கு அவ மனசு சந்தோஷப் படும்படியா ஏதாவது குடுக்கணும்னு ஆசை தோணுது மஹாவுக்கு. அழகரோ அவனோட அம்மாவோ மஹா வோட கையில ஒத்தப் பைசா புழக்கத்துக்கு விட்டதில்லை. சதா ஓய்வு ஒழிச்சல் இல்லாம மாடுகன்னுகளப் பாத்து வீட்டு வேலையப் பார்க்கிற, அப்பப்போ மாமியாரும் புருஷனும் சுமத்துற குற்றச்சாட்டுகளைத் தாங்கிக்கிற வெறும் சுமைதாங்கிக் கல்லு மாதிரி தான் அவளோட இருப்பு இந்த வீட்ல. மனசுல இருக்கிற எந்த ஆசையையும் திரும்ப ஒருக்க நினைச்சுப் பார்க்கக் கூட நேரமில்லாத மஹா, இவ்வளவு நாள் கழிச்சு பாசம் மேலோங்கினதில யாருக்கும் தெரியாம தன்னைப் பார்க்க வந்த பாட்டிக்கு ஏதாவது தரணும்னு ஆசைப்பட்டறது நியாயம்னாலும் அது முடியுற காரியமா?

ஆனா மஹாவால அந்த ஆசைய மத்தது களைப் போல ஒதுக்கித் தள்ளிர முடியல. அலையடிச்சு அலையடிச்சு கரை ஒதுங்கிற மாதிரி அதே ஆசை மனசுல முன்ன வருது.

'என்னத்த வாங்கிக் குடுக்க? தங்கமும் வயிரமும் நகையும் நட்டுமா பாட்டிக்கு வேணும்? ஒரு சேலை! அதை எடுத்துக்




4 டம்ளர் ப.அரிசி 1 டம்ளர் உ.பருப்பு சேர்த்து மிஷினில் அரைத்து வைத்துக் கொண்டு மாவுடன் தேவையான உப்பு. ஜீரகம். பெருங்காயப் பொடி கலந்து பிசைந்து தேன்குழல் அச்சில் பிழிந்தால் வெள்ளை வெளேர் என்று இருக்கும். குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும்.

—பத்மா ரெங்காச்சாரி

தீபாவளி யோசனை

தீபாவளிக்கு அதிரசம் செய்ய மாவு தயார் செய்யும்போது அதில் அரைத்த பேரிச்சம்பழ விழுதையும் சேர்த்தால் சுவை கூடுதலாக இருக்கும்.

ஆர்.ஜெயலெட்சுமி



குடுத்தாலே பாட்டிக்கு மனசு தாங்காத பூரிப்பாயிடும். எனக்கு ஏழேழு ஜன்மத்துக்குத் தேவையான ஆசிர்வாதத்தக் கடவுள வேண்டித் தருவா. பாட்டி சந்தோஷப் பட்றதில எனக்கும் மனசு திருப்தியா சந்தோஷப்படும். ரொம்ப இல்ல. பாட்டி கட்றது விலை உசந்த பூப்போட்ட கலர்ச்சேலையா? ம்ஹூம். தாத்தா இல்லாததால சுத்த வெள்ளைச் சேலைதான். அதுக்கு ரொம்பக் காசு கூட ஆகாது: ஆனா ஆகக் கூடிய கொஞ்சக் காசுக்கும்தான் எங்க போவேன்?' மஹூாவுக்குத் தூக்கம் பிடிக்காமல் இதே யோசனை.

புது இடமானதால பாட்டிக்கு நல்ல தூக்கமில்லாம கோழி கூவுறதுக்கு முன்னாலயே முழிப்பு தட்டிருச்சு. பக்கத்தில படுத்திருக்கிற மஹூாவப் பாத்தா மனசுக்குள்ள ஆத்தாமை தாங்கல. 'மாட்டைப் புடிச்சுக் குடுக்கறப்போ ஒரு தொழுவிலேர்ந்து அடுத்த தொழுவத்துக்கு மாறினாப்ல பாவிமக ஒரு தரம் கூட பொறந்த வீட்டுக்கு வராம பொறந்த வீட்டு மனுசரெப் பாக்காம... மனசுக்குள்ள எம்புட்டு எம்புட்டுக் கஷ்டம் அனுபவிச்சாளோ'ன்னு வேதனை. இது போக இன்னொரு ஆத்தாமையும் பாட்டிக்கு.

வயசுல வீடும் வெள்ளாமையும் பாட்டியோட நிர்வாகத்தில இருக்கையில காசு பணப் புழக்கம் ஏக தேசமாயிருந்தது அவ கையில. இப்போ வயசாகி எல்லாம் கை மாறிப் போனதில எப்பவாவது பொகயில வாங்கணும்னாக் கூட காசில்லாமத் தட்டுப்பாடு. எல்லாருக்குமே 'கிழவிக்கு என்னத்துக்குக் காசு! மூணு நேரமும் போட்டதத் தின்னுட்டு மூங்கிக் கிடக்க வேண்டியது தானே!'ங்கிற மெத்தனம்.

'இம்புட்டு நாள் கழிச்சு பாக்க வந்தமே, இந்த மஹூாகையில குடுக்கன்னு ஏதாவது வாங்கிட்டு வர முடிஞ்சுதா? பஸ்ஸுக்கு அளவாகத்தான் சில்லர குடுத்திருக்கான் சங்கரன்!' பாட்டிக்கு நெஞ்சுக்குள்ள சங்கடம். ஏன்னா தாராளமா செஞ்சு பழகின கை அது.

விடிஞ்சுது. மஹூா, பாட்டிக்கு வெந்நீர் காய வச்சுக் குடுத்து அவ உடுத்தியிருந்த புடவையத் தவைச்சுக் குடுத்து தன்னோட சந்தோஷத்தத் தெரியப் படுத்திக்கிட்டிருந்தா. அன்ன பூரணம் முணுமணுத்தத சட்டை பண்ணல பாட்டியும் பேத்தியும்.

மத்தியான சாப்பாடு முடிஞ்ச கையோட, 'இனிமே தாங்கமாட்டான் சங்கரன்'னு புறப்பட்டுட்டா பாட்டி.

"மஹூா! இனிமே என்னோட ஜீவன் ரொம்ப நாள் தாங்காதுடி தங்கம். ஒடம்பு மனசு எல்லாமே தளண்டு போச்சு. என்னமோ மனசுக்குள்ள பேயாசை ஒன்னெப் பாக்கணும்னு. அம்புட்டுப் பேர்லயும் சங்கரனுக்குக் கொஞ்சம் பொம்பளைசு மனசு புரியும். ஏதோ அவன் தயவில மனசு குளிர ஒன்னையும் பாத்துட்டேன். புள்ள என்னை எதிர்பார்த்து பஸ் ஸ்டாண்டுல காத்துக் கிட்டிருப்பான். அதுனால புறப்பட்டுட்டேன். அடுத்த வாட்டி ஒன்னைப் பாக்க இருப்பனோ இல்லையோ."

"பாட்டீ...! அப்படிச் சொல்லாதயேன் சங்கடமா இருக்கு" சொல்லிக் கிட்டே ஏறக்குறையா பாட்டிவாயப் பொத்திட்டா. பரிவோட அவ கையை விலக்கின பாட்டி, அந்தக் கைய முழுசுமாப் பிரிச்சு ஏதோ ஒரு பொருளை வச்சு திரும்பவும் விரல்களாலயே மூடினா. தன் கைய விடுவிச்சுத் திறந்து பார்த்த மஹூாவுக்கு ஆச்சரியம். அவ கையில இருந்தது பாட்டியோட பழைய சிகப்புங்கிற மொழுமொழுன்னு பட்டை தீட்டாத கல் வச்ச மோதிரம்.

"இதெதுக்குப் பாட்டி?"

"வச்சுக்கோ. ஒண்ணுமே உனக்குன்னு கொண்டு வராம வந்துட்டேன். இது, எனக்கு நாலு பையன்களுக்குப் பிறகு உங்கம்மாவப் பெத்ததுக்கு உங்க தாத்தா செஞ்சு குடுத்தது. அவருக்குப் பொம்பளப் புள்ளய்னா உசுரு."

"ம்?... தாத்தா செஞ்சு போட்டதா! அப்டீன்னா உங்கிட்ட தான் இருக்கணும் பாட்டி. எனக்கு நீ வந்ததே போதும்னு மனசு முட்ட சந்தோஷமா இருக்கே, நீ ஏதாவது தரணும்னு நினைப்பேனா?"

இரும்பவும் அதைப் பாட்டி கையிலயே

போட்டுவிட யத்தனிக்கிறா மஹா.

"இல்ல மஹா! இதைப் பிரியமா இவ்வளவு காலம் வச்சிருந்த சந்தோஷத்த விட இப்போ இதை உங்கிட்ட உனக்குன்னு கொடுக்கறது தான் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. அதனால மறுப்புச் சொல்லாம வாங்கிக்கோ."

பாட்டி சொல்றதில அன்பு, கட்டாயமா ஏற்றுக் கொள்ளச் சொல்லி இறைஞ்சுதலா வற்புறுத்துச்சு.

மஹா அந்த மோதிரத்த ரெண்டு விரல்ல வச்சு திருப்பிப் பார்த்தா. அவ கண்ணில இளமையான தன் தாத்தா நாலுக்குப் பிறகு அஞ்சாவதா தனக்குப் பிடிச்சதா பெத்துத் தந்த இந்தப் பாட்டி கையில முகம் பூரா சந்தோஷத்தோட இதைப் போட்டு விட்ற மாதிரியும் பாட்டி வெக்கத்தோட ஏத்துக் கறதும் மாதிரியான காட்சி விரிந்தது.

அது மறுபடியும் பிரியத்தின் சாட்சியா இறதை மஹா ஏத்துக் கிட்டு தன் விரல்ல போட்டுக் கிட்டா. மோதிர விரலுக்குச் சரியா இருந்துது அது.

"சரி, அங்கே வீட்ல யாராவது மோதிரம் எங்கேன்னு கேட்டா என்ன சொல்லுவே பாட்டி?"

"அது என்னமோ சொல்லீட்டுப் போறேன் போ!"

"சரி இந்தா இதைப் பைக்குள்ள வச்சுக்கோ."

இப்போ பேத்தி பாட்டிக்குக் குடுக்கறா. காக்கிப் பேப்பர் சுத்தின பொட்டலம் அது.

"என்னது?"

"சேலெ."

"எனக்கெதுக்கு மஹா?...எப்படி வாங்கினே? மாமியாளுக்குத் தெரியாமலா?" பதறுகிறா பாட்டி கீழ் ஸ்தாயியில்.

தீபாவளிக்கு பர்பி செய்யும் போது பர்பி இறுகி தட்டில் கொட்டியவுடன் அதன் மேலே நெய்யில் வறுத்த வேர்க்கடலையைப் போட்டால் மிகவும் சுவையாக இருப்பதுடன் புதுமையாகவும் இருக்கும்.

\- ஆர்.மீனாட்சி



"எப்பிடியோ வாங்கினேன் உனக்கென்ன? மாமியாருக்குத் தெரியாதுதான். ஆனா இது கூட உனக்கு நான் செய்யலைன்னா நீ போனதுக்கப்புறம் எனக்கு வேதனையா என்னெப் பார்க்க வந்த ஒன்னெ வெறுங்கையா ஒண்ணும் குடுக்காம அனுப்பிட்டமேன்னு தாங்க முடியாது. அதுனால சீக்கிரமா யாரும் வாரதுக்குள்ள பைக்குள்ள எடுத்து வச்சுக்கோ." வேற வழியில்லாம பாட்டி கீழ்ப் படிஞ்சா. இல்லாட்ட மஹா மனசு எந்த அளவு வேதனைப்படும்னு அவளுக்குத் தெரியும்.

பாட்டி புறப்பட்டுப் போய நாலஞ்சு மணி நேரமாகுது.

அன்னபூர்ணம் தங் தங்குன்னு குதிச்சிக்கிட்டு மகன் அழகர் கிட்ட ரிப்போர்ட் சொல்றா.

"அதென்னமா ஒரு பொம்பளைக்குக் கால்ல போட்ருந்த கொலுசு கழண்டு விழுந்தது தெரியாமப் போயிரும்ங்கிறேன்? எவ்வளவு திமிரா ஆத்துல குளிக்கயில காணாமப் போயிருச்சுன்னு சொல்றா பாரு அழகரு."

"அவளுக்கு அவ அப்பன் வீட்ல போட்ட கொலுசுங்கிற திமிரும்மா. அவ அப்பன் வீட்லயிருந்து சீதனமா அவ கொண்டு வந்திருக்கிறதே இந்தத் திமிரு தானே?" அழகர் அம்மாவோட சேந்துக்கிட்டு கன்னாபின்னான்னு திட்றான்.

ஆனா தன்மேல பரிவுள்ள தயிர்க்காரி தாயம்மா கிட்ட விடிய காலம் தயிர் வாங்கின கையோட தன்னோட ஒத்தக் கால் கொலுசைக் கழட்டிக் குடுத்து, 'எப்பிடியாவது பாட்டி ஊருக்குப் புறப்பட்றதுக்குள்ள இதை வித்துட்டு ஒரு சேலை எடுத்துட்டு வந்து குடு தாயம்மா'ன்னு கெஞ்சிக் கேட்டுக் கிட்ட மஹாவுக்கு அழகர் திட்றதும் அவன் அம்மா திட்றதும் தம் மேல பூவை அள்ளி கொட்ற மாதிரி சந்தோஷத்தத் தருது.

கிருஷ்ணம நாயக்கன் பட்டியில பாட்டிய கையிலிருந்த மோதிரத்தத் தொலைச்சதுக்கு மொலு மொலுன்னு புடிச்சுக்கிட்டுப் பேசுற மருமகளுக கிட்ட கிழவி அலாக்ட்டா சொல்றா,

"அட! ஆத்துல குளிக்கயில காணாமப் போயிட்டுதுங்கிறேன்- எம்புருசன் எனக்கு செஞ்சு போட்டது, அதைக் காணம்ங்கிறதில எனக்கில்ல வருத்தம் இருக்கணும். ஓங்களுக்கென்ன ஆளாளுக்குப் பேசுறீங்க?"

"அதென்னமா ஒரு பொம்பளைக்கு கையிலிருக்கிற மோதிரம் கழண்டு விழுகிறது தெரியாமப் போயிடும்கிறேன்! எல்லாம் திமிரு." என்று முணுமுணுக்கிறார்கள் மருமகள்கள்.

க்ஷேத்ரம்

கிழக்குக் கோட்டையிலிருக்கும் பத்மநாபசுவாமி கோயிலிலிருந்து தென் கிழக்காக சுமார் 2 கி. மீ. தூரத்தில் ஒரு தேவி ஆலயம்.

கோயில் இருக்கும் இடத்துக்குப் பெயர் ஆட்டுக்கால்.

என்ன இது? ஆடாவது? காலாவது? ஆட்டுக்கால் என்றால் என்ன அர்த்தம்? ஒன்றும் புரியவில்லை. விளக்கம் கேட்ட போது "ஆட்டுக்கால் என்று ஓர் இடம். அவ்வளவுதான்" என்றார்கள். திருப்திப்படவில்லை.

கிளறிய போது அர்த்தம் கிடைத்தது 'ஆற்றுக்கால்' ஆற்று வழியாகக் கிடைத்த தேவி குடி கொண்டுள்ள இடம் 'ஆற்றுக்கால்' மருவி 'ஆட்டுக் கால்' ஆயிற்று.

பெரிய கடை வீதி. தேவி திரு உருவப் படங்கள் இத்யாதி. அபார முகப்பு வாயில் நான்கு தூண்களிலும் ஒருமித்து தேவியின் உக்கிரத் தோற்றங்கள். எதிரே ஒரு திறந்த திடல். சிறு மேடை. ஒருவர் இடை விடாமல் பட்டாசு வெடித்துக் கொண்டிருக்கிறார். ஆம். நாம் தீபாவளி யில் வெடிக்கும் பட்டாசு! அங்கு காலையும் மாலையும் தேவியின் மகிழ்ச் சிக்காக பக்தர்கள் நேர்ந்து கொண்டு வெடி வெடிக்கிறார்கள்.

சதா அதிர்வேட்டுச் சத்தம். தினந்தோறும் தீபாவளியா? என்ன இது? தினமும் வெடி உண்டாம். சாயங்காலம் மட்டுமா? இல்லை. காலையிலும் உண்டு. ஏன்? அது 'வெடி வழிபாடு' என்பதாம். ஒரு முதிய பெண்மணி சொன்னார். 'அம்மைக்கு அது இஷ்டமாணு'.

என்னது? பெரிய சத்தம் வந்தால், தீப்பற்றி எரிந்தால் அது இஷ்டமா?

யார் அந்தத் தேவி?

அதுமட்டுமா? கோயில் கர்ப்பக்கிருக நிலையை வளைத்து மூன்று அடுக்குத் தீப வரிசை, பிரகாரம் முழுக்கவும் பித்தளைக் கட்டைகளில் நீட்டிய உலோக அகல்களில் பொன் பொன்னாக தீபங்கள், சரம் சரமாக, இன்னும் பெரிய கிளைத் தீபம் சுமார் 1000 முகங்களோடு அத்தனையிலும் தீபச்சுடர்கள். முழுக்க ஜெகஜ்ஜோதி. காண ஆயிரம் கண்கள் வேண்டும். அவ்வளவு தீப மும் அத்தனை வெப்பமும் அவளுக்கு விருப்பமா? யார் அவள்?

ராஜ கோபுரத்தின் மேற் குக் கிழக்குப் பக்கங்களின் சிற்பங்கள் சிலப்பதிகாரக்





காட்சிகளைத் தந்து விடை சொல்கின்றன!

உள்ளே வீற்றிருப்பவள் பத்தினித் தெய்வம் கற்புக்கரசி கண்ணகி.

எங்கோ பிறந்தவளுக்கு எங்கேயோ அநியாயம் அழித்து அறம் நிலைநாட்டியவளுக்கு இங்கே கோயில்.

அவளுக்கு வெடி வெடித்தால் ஆனந்தமாயிருப்பதில் ஆச்சரியமென்ன?

தீபங்கள் கணக்கில்லாமல் எரிந்தால் உவகைப்படுவதில் ஆச்சரியமென்ன? தன் பெயர் தெரியாத இடத்தில் போய் ஏன் குடி கொண்டாள் இந்தத் தேவி?

தனக்கு அநீதி செய்த பாண்டி நாட்டில் வெறுப்புற்று மலையாள தேசம் புகுந்தாளோ?

இவள் நுழைந்த மாசி மாதத்துப் பௌர்ணமி நாளில் இவள் ஆவேசம் தீர்க்க நிறைய பெண்கள் அவளுக்குப் பொங்கலிட்டு அன்பு காட்டியதில் கரைந்து போய் நின்று விட்டாளோ?

முகத்தில் அப்படி ஓர்அழகுச் சிரிப்பு. கண்ணகியா? கண்ணகி தானா? என்று இன்னும் சந்தேகமிருந்தால் தீர்த்து வைக்க வருடம் ஒரு விழா கொண்டாடுகிறார்கள். 'பொங்கால் விழா' (பொங்கல்தான்) பிரும்மாண்டமான விழா எடுக்கிறார்கள் ஐந்து லட்சம் பெண்கள். கண்ணகி நுழைந்த அன்று பெண்கள் குரவைக் கூத்தாடி பொங்கலிட்ட நாளை வருடா வருடம் நினைத்துக் கொண்டு மாசிப் பௌர்ணமியில் அதிகாலை பந்தலிட்டு, காப்புக் கட்டி தேவியைக் குடி வைத்துக் 'கண்ணகி வரலாற்று நாட்டுப் பாடல்களைப் பாடி தேவியை எழுந்தருளச் செய்து 'பாண்டிய வதம்' என்ற சடங்கு நடத்துகிறார்கள்! பின் வாய்க் குரவை ஒலிக்கிறார்கள். சிலப்பதிகாரத்தில் அமைந்தபடி சாக்கியக் கூத்து நடத்துகிறார்கள்.

இதெல்லாம் எப்படித் தொடர்பில்லாத விஷயங்களாகும்?

இத்தனைக்கும் மேலே அங்கே யாருக்கும் கண்ணகி பெயர் தெரிந்திருக்கவில்லை. அன்புடன் பக்திப் பெருக்குடன் வழிபடுகிறார்கள். அவ்வளவுதான்.

அவர்கள்சொல்கிற வரலாறு இது

ரொம்ப அழகான பதின்மூன்று வயதுச் சிறுமி உருவில் தேவி காந்தளூர்ச் சாலை அருகில் கிள்ளியாற்றங்கரையில் வந்து நின்றாள். தன்னை அக்கரை சேர்க்கும்படி முல்லு வீட்டு நாயரிடம் உதவி பெற்று மாயமாய் மறைந்தாள். தேவியைக் காணாது மனமுடைந்த அவரின் கனவில் தோன்றி அவர் தோப்பின் மேற்குக் கோடியில் மூன்று கோடுகள் இழுக்கப்பட்ட இடத்தில் தனக்குக் கோயில் கட்டி வழிபாடு செய்யப் பணித்தாள். 'முல்லு' இல்லத் தலைவர் வேய்ந்து கொடுத்த ஓலை வீடு திரு விதாங்கூர் ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜா காலத்தில் 1899 இல் கொல்லமாண்டு 1072 இல் கேரள பாணிக் கோயிலாக வடிவு பெற்றது.

ஆரியக் கலையும் திராவிடக் கலையும் சேர்ந்த அபூர்வச் சேர்க்கையில் தமிழ் நாட்டுக் கோபுரச் சிற்பங்களும் கேரள பூஜை முறையும் கலந்த கிளி கொஞ்சும் ஆலயம்.

பிராகாரங்களில் புராணக் காட்சிகள்





உக்கிர வடிவங்கள். வேதாளத்தின் மீது காளி. காவல் பூதகணங்கள், நான்கு பேர் - இரு பெண்கள், இரு ஆண்கள், கர்ண பாலன், மேகவர்ணி, கருங்கண்ணி, செங்கண்ணன் இவ்வளவும் தேவிக்கு.

இந்தக் கோயில் பெண்களின் 'சபரி மலை' யாம். 'பொங்கால்' விழாவுக்கு ஐந்து லட்சம் பெண்கள் ஜாதிமத பேதங்களின்றி ஏழை பணக்கார வித்தியாசமின்றி அருகருகே அமர்ந்து அடுப்பு மூட்டிப் பொங்கல் பொங்கி தேவிக்கு ஒரே நேரம் அர்ப்பணித்துப் பிரசாதத்தை வீட்டுக்கு எடுத்துப் போகிறார்கள். நோய் தீர்ந்து போகுமாம். திருமணம் கைகூடுமாம். பிள்ளைப் பேறு கிட்டுமாம். கேட்டது கேட்டபடி வேண்டியது வேண்டியபடி பக்தர்களை ஏமாற்றாமல் அருள் வழங்குகிறாளாம் அம்பிகை.

ஆயிரம் ஆயிரமாகக் கூட்டங்களில் புதுப் பானை, அரிசி, பருப்பு, வெல்லம், விறகு மற்றும் சாமான்கள் ஏந்திப் பெண்கள் ஒரு நாள் முன்னதாகவே தகுந்த இடம் தேடிக் கொள்ள வந்துவிடுகிறார்கள். ஜில்லாவே விழாக் கோலம் பூணுகிறது. ஸ்பெஷல் ரயில்களும் பஸ்களும் ஆட்டுக்காலை நோக்கி விடப்படுகின்றன. பொது விடுமுறை அனுஷ்டிக்கப்படுகிறது. அரசாங்க அலுவலகங்களும் சமூக சேவை நிறுவனங்களும் கைகோர்த்து ஜனசேவை செய்கின்றன.

மாசி மாதத்துப் பௌர்ணமியும் பூரமும் சேர்ந்த நாள் 'பொங்கால்' நாளின் அதிகாலையிலேயே கோயிலைச் சுற்றி மூன்று கிலோமீட்டர் பரப்பளவில் வீடுகள், வீதிகள், முற்றங்கள் முழுவதையும் பக்தர்கள் (பெண்கள்) ஆக்கிரமித்து லட்சக்கணக்கான பானைகளில் பொங்கல் சமைக்கிறார்கள், குளித்துப் புத்தாடை அணிந்து தூய்மையே உருவாக. அன்று மாவட்டத்துக்கே விடுமுறை. முக்கிய அரசு அலுவலகங்களைப் பொதுமக்கள் உதவிக்காக வேலை செய்யத் தூண்டுகிறார்கள். அத்தனை சமூக சேவை, பொது சேவை நிறுவனங்களும் கைகோர்த்துப் பொதுமக்களுக்கு உதவி செய்கின்றன.

சில பெண்கள் 101 பானை, 1001 பானை என்று நேர்ந்து கொண்டு அவ்வளவிலும் பொங்கல் வைப்பதும் உண்டு.

முன்னே சொன்னபடி பாண்டிய வதம் முடிந்து குரவை பாடியதும் கோயிலுக்குள் முதலில் பண்டார அடுப்பில் தீ மூட்டப்பட்டு பொங்கல் பானை ஏற்றப்படும். அடையாளமாக வாண வெடிகளும் முழங்கும். செண்டை மேளம் கொட்டும். உடன் அத்தனை பானைகளும் அடுப்பேறும். ஒரே சமயம் பொங்கல் தயாராகும். திரும்பும் திசையெல்லாம் பொங்கல் பானைகளுடன் பெண்கள். பெண்கள் மட்டுமே! ஓர் ஆண் கிடையாது!



பொங்கல் பொங்கி வழிந்தபின் பிற்பகல் கோயிலில் அடையாள வெடிச் சத்தம் எழ, கோயில் அர்ச்சகர்கள் புனித நீர் எடுத்து எல்லாப் பானைகளிலும் தெளித்து தேவிக்கு அர்ப்பணமாக்க, பின் பொங்கல் பானை இறக்கப்பட்டுத் தத்தம் வீடுகளுக்குப் பயணிக்கும்.

பொங்கால் விழா வழிபாடு துவங்குவது மாசி மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தில், முடிவது பௌர்ணமி கூடிய பூரம் நாளில். மொத்தம் 9 நாட்கள்.

உள்ளே குத்தியோட்டச் சிறுவர்கள் தவிர்த்து ஓர் ஆண் கூட அனுமதிக்கப்பட மாட்டான். அந்தச் சிறுவர்களும் பதின்மூன்று வயதுக்குட்பட்டவர்கள். மூன்றாவது நாளிலிருந்து குத்தியோட்ட வழிபாட்டுக்காகத் தொடர்ந்து ஏழு நாள் விரதம் காப்பார்கள். இந்தக் குத்தியோட்டச் சிறுவர்கள் ஆயிரக்கணக்கில் தேவி பக்கத்திலுள்ள சாஸ்தா கோயிலுக்கு எழுந்தருளும்போது உடன் அணிவகுப்பார்கள். புத்தாடை அலங்காரத்தில், இடுப்பின் இருபுறம் குத்தியிருக்கும் உலோக அலகுகளுடன் பண்டைய நரபலியை நினைவூட்டும் 'சூரன் குத்து' நடக்கும்.

பலா மரத்தால் திருப்பணிச் செய்யப்பட்ட ஆற்றுக்கால் தேவியின் நான்கு கைகளில் சூலாயுதம், வாள், கங்காளம் (எலும்புக் கூடு), கேடயம். கீழே நாக்கு நீட்டிய பூத கணம்.

'தாலப் பொலி' என்ற சடங்கில்

சிறுமியரும் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப் பிருக்கிறது. 'தாலம்' என்றால் தட்டு. 'பொலி' என்றால் கதிர். சின்னப் பெண்கள் அரச குமாரிகள் போல் கிரீடமணிந்து தட்டுக் களில் சிறு விளக்கும் புதுக் கதிரும் (நெற் கதிர் அல்லது கமுகம் குலை) ஏந்தி, புத்தம் புது மலர்களாக ஊர்வலம் போகிறார்கள், ஆயிரக்கணக்கில்.

இவ்வாறு ஆற்றுக்கால் தேவிக்குத் திரு விழா கோலாகலமாக நடக்கிறது.

நித்தியமும் வெடி வழிபாடு தங்கு தடை யின்றி நடக்கிறது. 21, 51, 101, 1001 என்று வெடி வைப்பதாகப் பெண்கள் வேண்டிக் கொண்டு பிரார்த்தனை செலுத்தியவாறே இருக்கிறார்கள்.

விலாசம் : ஆட்டுக்கால் பகவதி டெம்பிள் டிரஸ்ட், PB No. 5803, ஆட்டுக்கால், திருவனந்தபுரம், Pin 695 009. Phone : 4633130, 71422, 75897.

தகவல்கள் கொடுத்து உதவிய டிரஸ்டி சேர்மன் பிரபாகரனுக்கும், முன்னாள் சேர்மன் மாதவன் நாயருக்கும், ராஜனுக்கும் நன்றி.

- மாலதி

ஹேர் பின்.... ஜாக்கிரதை

சிறு வயதிலேயே பெற்றோர்களும் பெரியவர்களும் காதிற்குள் கண்டதை யும் போட்டுக் குடையக் கூடாது என்று தங்கள் குழந்தைகளை அடிக்கடி எச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

என் நண்பர் வீட்டில் நிகழ்ந்த ஒரு சோகச் சம்பவம். நண்பரின் இரண்டாவது மகள் பி.எஸ்ஸி இறுதி ஆண்டுத் தேர்வுகளுக்குப் படித்துக் கொண்டிருந்தாள். மொட்டை மாடியில் போய் உட்கார்ந்து கொண்டு படித்துக் கொண்டிருந்த அவள் தன் தலையிலிருந்த ஒரு ஹேர் பின்னை எடுத்துக் காதிற்குள் சுவாரசியமாகக் குடைந்து கொண்டிருந்தாள். அவள் அருகே இரண்டு வாண்டுகள் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

விளையாடிய வேகத்தில் ஒரு சிறுவன் தடாலென்று படித்துக் கொண்டிருந்த அப்பெண்ணின் மேலே விழுந்தான். ஹேர் பின் பிடித்திருந்த கையின் மேல் அவன் விழுந்த வேகத்தில் செவிப்பறையைக் கிழித்துக் கொண்டு அது உள்ளே சென்றுவிட்டது. அந்தப் பெண்ணிற்கு என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளும் முன்பே மயக்கம் ஏற்பட்டுக் கீழே சாய்ந்தாள். சுயநினைவு ஏற்பட்டு அவள் நிற்க முனைந்தாலும் அவளால் எழுந்து நிற்க முடியவில்லை.

நாம் நன்றாக நின்று நடமாடுவதற்கு மிக அத்தியாவசியமான ஓர் உறுப்பு காதிற்குள் இருக்கிறது. அரைவட்ட நாளங்கள் (semi circular canals) எனப்படும் இந்த மூன்று குழாய்களில் உள்ள ஒரு திரவம்தான் நம்முடைய சமநிலையை நிர்ணயிக்கிறது. அதில் பழுது ஏற்பட்டால் நம்மால் சரியாக நிற்கக் கூட முடியாது.

அந்தப் பெண்ணைப் பலரும் மாடியிலிருந்து கீழே இறக்கி வந்து மருத்துவமனையில் சேர்த்துத் தொடர்ந்து இரண்டு அறுவை சிகிச்சைகளும் முடிந்துவிட்டன. அந்தப் பெண்ணுக்குக் காது நன்கு கேட்குமா என்பது இப்போது கேள்விக் குறியாக இருக்கிறது.

நம்முடைய குழந்தைகள் எதையாவது காதிற்குள் விட்டுக் குடைவதைக் கண்டால் பலமாகக் கண்டியுங்கள்!

— விஜயா சுப்ரமணியம்

நீங்களும் கேட்கலாம்

எனக்குத் தெரிந்த சில பெண்மணிகள் இப்படிச் செய்கிறார்களே, இவர்கள் செய்வது சரிதானா? என வாசகி திருமதி. பி. ராணி கேட்டிருந்தார். அவருடைய சந்தேகங்கள் போல நீங்களும் இந்தப் பகுதியில் கேட்கலாமே!



• சுகுமார்



• வரதராஜன்



• வசந்தகுமார்

இப்படிச் செய்வது சரியா?

சில பெண்மணி கள் வைரம் உடம்பில் எப்போதும் இருப்பது நல்லது என்று மஞ்சள் பூசும் போதும் எண்ணெய்க் குளியலின் போதும் கூட கழற்றுவ தில்லை. எண்ணெய் தண்ணீர் படப்பட வைரம் ஒளி ரும் என்கின்றனர். சிலர் வைரத் தோடை குக்கரில் வரும் ஆவியில் பிடித்துக் காட்டி. சுத்தம் செய்கின் றனர். இது சரியா?

நாகரீக நகைகளை நாளுக் கொன்றாக விதம்விதமாக அறி முகப்படுத்தும் சென்னை லலிதா ஜுவல்லரி உரிமையாளர் சுகுமார் சொல் கிறார் -

வைரம் உடம்பில் இருப்பது நல்லது. அதிர்ஷ்டம் என்பதுண்டு. வைர நகைகள் மூடுகட்டிடங்களால் (Closed setting) முறையாக, கவனமான தொழில் நுட்பத்தோடு செய்யப்பட்டிருந்தால் அவற்றைக் கழற்றி வைக்க வேண்டுமென்பதில்லை. சின்ன இடுக்கு நுணுக்கமான சந்து இருந்தாலும் அழுக்கு எண்ணெய் போக வாய்ப்பு உண்டு. அதே போல தண்ணீர், எண்ணெய் பட்டால் வைர நகைகள் ஒளிரும் என்பதற்கு விஞ்ஞான ஆதாரம் இல்லை. மாறாக அழுக்கடையும். வைரத் தோடை குக்கரில் வைத்து ஆவி பிடித்தலும் நல்லதல்ல. அதற்கென்றே நகைக் கடைகளில் வைரம் வாங்கும் போது தோல் கிடைக்கும். அதைக் கொண்டு வைர நகை களை துடைத்தால் அழுக்கு மற்றும் எண் ணெய்ப் பிசுக்கு போய் விடும். (Open set) இடுக்குகள் வைத்துச் செய்யப்படும் நகை களை போட்டுக் கொண்டு தூங்குவதால் விரைவில் உதிர்ந்து கீழே விழ வாய்ப்பு உண்டு.

சில பெண்கள் மிக்ஸிகளை இயக்கும் போது அருகில் இருந்து ஜாரைப் பிடித்துக் கொள்வது கிடையாது. மிக்ஸி ஓடிக் கொண் டிருக்கும் போது அவர்கள் வேறொரு வேலை யைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது சரியா?

வசந்த் அண்ட் கோ நிறுவனத்தின் உரிமை யாளர் வசந்தகுமார் சொல்கிறார் :

ஓடிக் கொண்டிருக்கும் மிக்ஸிக்கு அருகில் நின்று அரையும் வரை கவனமாக பார்ப்பதே நல்லது. ஆனாலும் இது அவசர யுகம். பல பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். போக வில்லையென்றாலும் எல்லோருக்கும் அவசர கதியாக வேலைகளை முடித்தாக வேண்டும்.

இடைஇடையே இயங்கிக் கொண்டிருக்கும் மிக்ஸிக்கு முன்னால் நிற்பதற்குக் கூட முடியாமல் போய் விடுவது சகஜம்தான். மிக்ஸி மின்சார சக்தியில் இயங்குவதால் ஜாரில் அரைக்கும் பொருளின் அளவு - ஊற்றும் நீர் அளவு குறிப்பிட்ட அளவு இருக்கும்படி வைக்க வேண்டும். நீர் அதிகமானால் மூடி வழியாக நீர் வெளியில் ததும்பி வழியும். வைத்திருக்கும் மிக்ஸி தரமானதாக இல்லையென்றால் எலக்டிரிக் ஷாக் ஏற்படவும் வாய்ப்புண்டு. அது தவிர நாம் மிக்ஸியை உட்கார வைக்கும் இடம் சமதளமாக இருக்க வேண்டும். மேடுபள்ளமாக - சாய்வாக இருக்கும் இடத்தில் வைத்தால் மிக்ஸி இயங்கும் போது தடதடவென அதிர்ந்து மூடி திறந்து உள்ளிருக்கும் அரவைப் பொருட்கள் வெளியில் சிதறவும் வாய்ப்புண்டு. இப்போது உருவாகும் ஜார்களில் Locking system உண்டு. நாம் அருகிலிருந்து மிக்ஸி இயங்கும் போது கவனிப்பதால் சரியாக அரைபட்டவுடன் உடனே நிறுத்தி விடலாம். இதனால் குறைவான நேரம் மின்சாரம் செலவாகும். அதனுடைய தேய்மானமும் குறைந்து விடும். மிகச் சிறப்பாகப் பராமரித்தால் மிக்ஸியை பழுது உண்டாகாமல் பல காலத்துக்கு சர்வீஸ் பிரச்னை இல்லாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.


சில பெண்மணிகள் அம்மிக்கு அம்மி (பொள்ளுபவர்) கொத்துபவர்களை விட்டு பொளுவை போடுவது போல கிரைண்டருக்கும் கொத்துகிறார்கள். கிரைண்டர் கல்லுக்கோ அல்லது குழவிக்கோ இந்த முறை சரியா?

இது சரியே இல்லை என்கிறார் கிரைண்டர் விற்பனையில் முதலிடத்தில் இருக்கும் சௌபாக்யா வெட்கிரைண்டர் நிறுவனத்தின் உரிமையாளர் வரதராஜன்.

"நெடுங்காலமாகவே கைகளில் ஆட்டும் உரலுக்குப் பொளுவை போடுவது வழி வழி பழக்கம். கொத்துவதால் ஆட்டுவதும் அரைப்பதும் மிகச் சுலபமாக இருந்தது. அதே வரிசையில் சில பெண்கள் கிரைண்டர் கல்லையும் சென்டிமென்டலாக கொத்துகிறார்கள். இது தேவையில்லை. ஆட்டும் கல்லும் நிற்கும் குழவியும் தேர்ந்த தொழில்நுட்பத்தோடு தயாரிக்கும் தரமான நிறுவனங்களின் கிரைண்டர்கள் உள் வைக்கப்பட்டிருக்கும் கல் மிகக் கடினமானது. லேசில் தேயாது. ஆண்டாண்டு காலம் உழைக்க வல்லது. கிரைண்டர் கைகள் அல்லாமல் முழுக்க முழுக்க மின்சார மோட்டார் சக்தியில் இயங்குகிறது. உள்ளே இருக்கும் பேரிங் அளவு, ஐ.எஸ்.ஐ. முத்திரை கொண்ட மோட்டார், மற்றும் உஷ்ணம் வெளிப்படும் வழி இவையெல்லாம் சிறப்பாக இருக்கும் வெட்கிரைண்டரைத் தேர்ந்தெடுப்பது நல்லது. பயன்படுத்துபவர்கள் ஒழுங்காக பராமரித்தால் பத்து - இருபது வருடங்கள் வரை பயன்படுத்தலாம்.

தொகுப்பு : **ஜே. மலர்விழி**

பாயஸம் மணக்க....



ப. பருப்பு, மற்றும் அரிசி பாயஸம் செய்யும்பொழுது, தேங்காயைத் துருவி முதல் பால் எடுத்து வைத்துக் கொண்டு, மறுபடியும் எடுக்கும் பாலில் சாதாரண பாலும் சிறிது கலந்து வேக வைத்து எடுத்து பின் வெல்லம், சேர்த்து, முந்திரி, திராட்சை, ஏலம் இவற்றுடன் 3 கிராம்பையும் நெய்யில் பொரித்துப் போட்டு, கெட்டியான முதல் பாலையும் விட்டுக் கிளறி இறக்கினால் பாயஸம் மணமாக இருக்கும். (இந்தப் பாயஸத்திற்குச் சாதாரண பால் மற்றும் தேங்காய்ப் பாலில்தான் வேகவிட வேண்டும். சிறிது கூட தண்ணீர் கலக்கக் கூடாது.)

– பாலா

அன்றும் இன்றும் அதே தூய்மை... அதே சிக்கனம்...


சுப்ரீம்



7 வருடங்களுக்கு முன்பு, சுப்ரீம் சமையல் எண்ணெய் அறிமுகப்படுத்தப்பட்டது. அது பிசுக்கற்றதாகவும், மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடியதாகவும், மிகமிகச் சிக்கனமாகவும் இருந்தது. வைட்டமின் E மற்றும் புரோட்டீன் ஆகியவற்றை அதிக அளவில் கொண்டிருந்த இந்த எண்ணெயில் கொலஸ்ட்ரால் இல்லை. எனவே அது ஆரோக்கியமான எண்ணெயாகவும் திகழ்ந்தது.

இன்று, மிக உன்னதமான சமையல் எண்ணெயாகத் திகழ்கிறது சுப்ரீம் - புதிது புதிதாகப் பலப்பல சமையல் எண்ணெய்கள் தோன்றினாலும், என்றென்றும் சிறந்த தரத்தையும் மாறாத தூய்மையையும் அதிக சிக்கனத்தையும் தொடர்ந்து வாங்கி வருகிறது... சுப்ரீம்

அதிக சேமிப்பு, அரோக்கியம்... அள்ளித் தரும் எண்ணெய் - சுப்ரீம்.



சுப்ரீம்
இருமுறை சுத்திகரிக்கப்பட்ட
சுத்தமான தாவர எண்ணெய்

ARTIG / 1519

இது ஒரு எஸ். எஸ். டி. ஆயில் மில்ஸின் தரமான தயாரிப்பு

ஏந்த நடிகையும் இந்த அளவிற்கு சினிமா இண்டஸ்ட்ரியைக் கலக்கியதில்லை. யாருக்கும் இவர் பெயரைச் சொன்னால் ஒரு சிறிய புன்னகையாவது முகத்தில் மலரும். இவர் பெயரையே புடவைக்கு, ரவிக்கைக்கு, ஹேர்-கிளிப்பிற்கு, கைக்குட்டைக்கு என எல்லாவற்றிற்கும் வைத்து மகிழ்ந்தார்கள். ஏன், ரசிகர்கள் இவருக்குக் கோயிலையே கட்டினார்கள்!

இது ஒரு பக்கம்...

'அந்தப் பெண்ணா? ஷி இஸ் எ வெரி நைஸ் கேர்ள்! தங்கமான பொண்ணு. ஒரு பந்தாவோ, மரியாதை இல்லாமயோ எப்பவும் நடந்துகிட்டது கிடையாது...'

'எத்தனை பேருக்கு எவ்வளவு உதவி செய்திருக்கார் தெரியுமா? டெக்னிஷியன்களுக்கும், தன்னோட வேலை செய்யறவங்களுக்கும் வலது கை கொடுப்பது இடதுகைக்கும் தெரியாமல் கொடுத்திருக்கிறார்' இது இவரின் மறுபக்கம்...

நான் யாரைப் பற்றிச் சொல்கிறேன் என நீங்கள் தெரிந்து கொண்டுதான் படித்துக் கொண்டு இருக்கிறீர்கள், இல்லையா? ஒரு காலத்தில் இவர் பெயரை உச்சரிக்காதவர்கள் கிடையாது எனும் அளவிற்கு உயர்ந்த, 'கூடையிலே என்ன பூ குஷ்பூ' என ரஜினி பாடிய குஷ்பூதான்.

நடிகைகளில் மிகவும் வித்தியாசமானவர், நல்ல மனசு கொண்டவர் எனச் சொல்லச்

கூடையிலே என்ன



படம்: யோகா

சொல்ல இவரிடம் பேசணும் என்று தோன்றியது. கேட்டவுடன் மறுநாளே சந்திக்கிறேன் என்றதுதான் ஆச்சரியம். போனேன்.

இவர் உயர்ந்த அளவையும், நிறைய பேருக்கு உதவி செய்ததைக் கேள்விப்பட்டதையும் சொன்ன போது முகத்தில் எந்த எக்ஸ்பிரஷனும் இல்லை, 'இதெல்லாம் ரொம்ப சகஜம்' என்பது போல.

"நான் பம்பாய்ப் பெண்தான். ஹேமமாலினி அவர்கள் தாயார் எங்கள் குடும்ப நண்பர். என்னை ஹேமமாலினி பார்த்து விட்டு சினிமாவில் சிபாரிசு செய்து குட்டி நடிகையாக்கினார். சிறுமியாக இருந்த போது நான் நடித்த படங்கள் ஹிட்டாச்சு. பெரியவளாகி நடித்த பல படங்கள் சூப்பர் தோல்வி.

அப்புறம் தெலுங்கு, கன்னடம் என வந்தேன். ஒன்றுமில்லை.

தமிழில் 87-ல் ஆரம்பித்தேன். ஒன்றும் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. 91ல் சின்னதம்பி வெளியாகி 'சூப்பர்ஹிட்'டாகும் வரை நான் சாதாரணமானவள்தான். இந்தப் படம் என்னைத் தூக்கி உயர்த்தும் வரை நான் பட்ட சிரமங்கள் கொஞ்ச நஞ்சமில்லை.

இதே சென்னையில் நானும் என் அம்மாவும் வெறும் தண்ணீரைக் குடித்து விட்டு வாழ்ந்து இருக்கிறோம். என் தாயாருக்கு உடம்பு சரியில்லாமல் போன போது யாரும் எங்களோடு இருக்கவில்லை. கண்ணீரும் இரத்தமும் என் இதயத்தில் வடிந்த நாட்கள் அவை. அதனால கஷ்டம் என்றால் என்ன என்பதை மேக்ஸிமம் உணர்ந்தவள் நான். அதுவும் கஷ்டப்படுகிறோம் என்று தெரிந்தால் மற்றவர்கள் எப்படியெல்லாம் நடத்துவார்கள் என்பதையும் நான் அறிவேன்.



இங்கு ஆரம்ப நாட்களில் சாதாரணமாக நான் இருந்த போது, ஒரு பிரபல நடிகையின் பழைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு விட்டேன். ஏனென்றால் அவரை ரொம்ப நன்றாகத் தெரியும் எனக்கு. கையைச் சொடக்கி என்னைப் பார்த்து 'இனிமே என்னை அப்படிக் கூப்பிடாதே!' என முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு போனார். இவரே நான் நெம்பர் ஒன்னாக இருந்த போது வந்து குழையக் குழைய பேசினார்...

அதனால மனித சுபாவம் என்ன என்பதை நான் புரிந்து கொண்டேன். அதனால தான் கஷ்டங்கள் வரும் போது என்னென்ன மாதிரி நடந்து கொள்வார்கள் என்பது தெரிந்திருப்பதால்தான் நான் தேவையானவர்களுக்கு என்னால் இயன்றதைச் செய்கிறேன், அவ்வளவுதான். இதை நான் பப்ளிசிட்டிக்காகவோ, ஆத்மதிருப்திக்காகவோ செய்கிறேன் என்பதெல்லாம் இல்லை. அம்மா என்னை அப்படி வளர்த்தார்கள், அவ்வளவு தான். இதிலே பெரிசா சொல்லும்படி ஒன்றும் இல்லை..."

'இந்தக் காலத்தில் இப்படியும் ஒருத்தரா' என்று விந்தையாகத்தான் இருந்தது. இவருடைய சினிமா அனுபவங்கள் எப்படி? அதுவும் 'கவர்ச்சிக் கன்னி' யாகத் திகழ்ந்தவராயிற்றே... அதுவும் இவரை ஓடி வர விட்டு படம் எடுத்துப் பார்ப்பவர்களை 'மகிழச் செய்த' புண்ணியவான்கள் உள்ள நாடாயிற்றே?

"பூ மீன் இன்று நடந்து கொண்டிருக்கும் 'சினிமாவில் ஆபாசத்தை எதிர்க்கும் போராட்டம்' பற்றியது இல்லையா?" 'பட்'டென்று கேட்டார்.

"சரி, நாங்கள் கவர்ச்சியாகவோ, ஆபாசமாகவோ நடிக்காமல் அருமையான கதை, நடிப்பு என எடுக்கிறோம். யார் பார்க்கிறார்கள்? தரமான படங்களை யார் பார்க்கிறார்கள்? கவர்ச்சியும், வன்முறையும் நிறைந்த படங்கள் வசூலை அள்ளிக் குவிக்கின்றன. தரமான படங்கள் ஓடியதா? பார்த்திபன் எடுத்த அற்புதமான படங்கள் ஓடலை. ஆனா 'உள்ளே வெளியே'வில் அவருக்கு நல்ல வருமானம். நாயகன், குணாவெல்லாம் என்ன ஆச்சு? ஏன் இந்த மக்கள்



ஆதரிக்க மாட்டேன் என்கிறார்கள்?"

"ஏன் ரோஜா ஓடவில்லையா?"

"அப்புறம்... அப்புறம் எந்தப் படம் ஓடியது? ரோஜாவும் மணிரத்னம் தவிர வேறு யாராவது எடுத்திருந்தால் ஓடியிருக்காது. செக்ஸ், வயலன்ஸ் கொண்ட மிகச் சில படங்கள் ஓடுவதில்லை. ஆனால் அதிலும் தயாரிப்புச் செலவை எடுத்து விடுகிறார்கள். ஆனால் பெரும்பாலான படங்களில் லாபம். தரமான படங்களில் ஏதோ ஒன்று வெற்றி பெறுகிறது. இதனால்தான் மனம் வெறுத்துப் போய் நல்ல படம் எடுப்பவர்கள் கூட இப்படி மாறி விடுகிறார்கள். கோடி கோடியாக செலவு செய்பவர்கள் ஆயிற்றே! நஷ்டத்திற்கா வேலை செய்ய முடியும், நீங்களே சொல்லுங்கள்...

ஏன் இந்த மக்கள் கெட்டதை ஆதரிக்கிறார்கள்? சில அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். அவர்கள் நல்லதை ஆதரிக்கிறார்களா? சொல்லட்டுமே, ஆபாசமான படங்களை நாங்கள் பார்க்க மாட்டோம் என்று. இல்லையே... ஆபாசமாக எடுத்தால் படம் ஓடாது என்ற நிலை வரட்டும். யார் எடுப்பார்கள்? இப்படி ஒரு நிலைமை இருக்கும் போது திரைப்படத் துறையில் இருப்பவர்கள் மட்டும் என்ன செய்ய முடியும்?"

படபடவென்று முகம் சிவக்கப் பொரிந்து தள்ளினார். அது மட்டுமேயில்லை. புள்ளி விவரங்களோடு பல படங்களை எடுத்துச் சொன்னார். அதிலே பல படங்களில் தோல்வி அடைந்ததற்குக் காரணங்களை நான் சொன்னேன். சரியாகக் கதை சொல்ல முடியாமல் போனது, சரியான நடிப்புத் திறமை இல்லாமல் போனது இப்படிப் பல காரணங்கள். அவர் வன்முறை ஆபாசம் கொண்ட படங்களை எடுத்து வைத்து வாதாடினார். இந்தப் பேச்சிற்கு ஒரு முடிவே இருக்காது... நாங்கள் அடுத்த விஷயத்திற்குப் போனோம்.

"ஆபாசம் உள்ள சினிமா வெற்றி பெறுகிறதா, இல்லையா என்பது இருக்கட்டும். நீங்கள் அணியும் உடைகள், மற்ற அலங்காரங்களைப் பார்க்கும் போது இளம்பெண்கள் குஷ்பூ போல நடந்து கொள்ள, டிரெஸ் செய்து கொள்ள ஆசைப்படுகிறார்களே! ரோடில் ஆபாசமாக உடை அணிந்து செல்லும் பெண்கள் கூட இருக்கிறார்கள். நீங்கள் என்றால் நான் சொல்வது உங்களை மட்டுமல்ல. சினிமாவால், சினிமா நடிகைகளால் நம்முடைய இளம் பெண்களின் மனம் கெடு கிறது இல்லையா?"

குஷ்பூ சிரிக்கிறார். "சினிமா என்பது ஒரு மாயை, கனவுலகம் என்பது எல்லோருக்கும் தெரியும். சினிமாவை எல்லோரும் எதற்குப் பார்க்கிறார்கள்? இன்றைய கவலைகள், கஷ்டங்கள், பிரச்னைகள் எல்லாவற்றையும் மறந்து கொஞ்ச நேரமாவது கேளிக்கையாக இருக்க வேண்டுமென்று. அதற்காக மக்களை மகிழ்விக்க நாங்கள் உடையணிகிறோம், சிரிக்கிறோம். இவையெல்லாம் வெறும் பொழுதுபோக்கு.

குஷ்பூ நடிகையாக உடையணிவது நடிப்பது எல்லாமே வேலைக்குச் செல்வது போலத்தான். நான் சினிமாவில் வேலை செய்கிறேன், அவ்வளவுதான். ஆனால் அதைத் தவிர மற்றவர்களைப் போல சாதாரணமாக இருக்கும்



போது எப்படி இருக்கிறேன்... பெரும்பாலும், புடவை அல்லது சல்வார் கமீஸ். கையில்லாத உடை கூட நான் அணிவது கிடையாது. எந்த வெளியுலக நிகழ்ச்சிக்கும் சினிமாவில் வருவது போல நான் வருவதில்லை. இதை இளம்பெண்கள் பார்க்கலாமே! சினிமா என்பது வெறும் நிழல் ஆட்டம்தான் என்பதை இளம்பெண் கள் தெரிந்து கொண்டும் அவர்கள் அதைப் பின்பற்ற முயல்வது சரியில்லை. சினிமாவில் வருவது போல உடையணிந்து ரோடில் நடக்க முடியுமா? இன்றைய இளம் பெண் கள் புத்திசாலிகள். இந்தப் பகுத்தறியும் திறன் அவர்களுக்கு வரவேண்டும், புரிந்து கொள்ள வேண்டும்."

"இளம்பெண்களைப் பற்றிப் பேசியதால் இங்கேயே இன்னொரு கேள்வி. குஷ்பூ உயர்ந்து நின்ற நிலை, அதனால் வந்த புகழ், பெருமை இதைப் பார்த்துப் பல பெண்கள் சினிமா மோகத்தால் அலையலாம். ஆனால் இந்த நிலையை நீங்கள் அடையபட்ட கஷ்டங்கள் நிறைய உண்டு இல்லையா?"

"உண்மைதான். சினிமாவுலகில் 'சொய்' யென்று வேகமாக விசுவரூபம் எடுப்பது கூட கொஞ்சம் தவறுதான். ஏனென்றால் வேகமான வளர்ச்சி வேகமாக கீழே போகவும் வழிவகுக்கலாம். 91-ல் நான் உயரத்துக்குப் போனவள் அந்த இரண்டு மூன்று வருடங்கள் அங்கேயே இருந்தேன். கிராஃபில் வேகமாகப் போனவள், கிராஃபையே தாண்டி கோடு மேலே போகு மளவு உயர்ந்தேன். எங்கே பார்த்தாலும் என்னைப் பற்றித்தான் பேச்சு..."

"குஷ்பூ கோயில்..."

"ஆமாம். நிறைய பேர் சொன்னார்கள், திருச்சிக்குப் பக்கத்துலே உங்களுக்குக் கோயில் கட்டியிருக்காங்க அப்படீன்னு. அந்த உயர்ச்சி கொஞ்ச நாளைக்குத்தான். ஆனா அதுக்காக அந்த உயர்வுக்காக நான் காத்திருந்தேன். எத்தனை வருடங்கள் போராடி இருக்கிறேன்? வறுமையும், கஷ்டங்களும் நிறைய பட்டிருக்கிறேன். அதற்கப்புறம் இப்போது சாதாரண நிலைக்கு வந்து விட்டேன். குஷ்பூவை நெம்பர் ஒன்னாகப் பார்ப்பதை விடுத்து இதையெல்லாம் கூட நினைத்துப் பார்க்க வேண்டும்!"

"இப்போ அம்மாவா நடிக்கிறீங்க போலிருக்கே! நீங்கள் உயரத்தில் இருந்த போது உங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய மரியாதை இப்போது கிடைக்காது இல்லையா? இதைப் பத்தி வருத்தமா இருந்திருக்கும் இல்லையா?"

"மொதல்லே நான் இப்ப அம்மாவா நடிக்கலை. அக்கா போன்ற பாத்திரங்கள்ள நடிக்கிறேன். அதுவும் கதையில முக்கியமான ரோல்லதான் பண்றேன். ஆனா இப்பவும், அப்பவும் எப்பவும் நான் சுயமரியாதை பார்க்கிறவள். எப்பவுமே நான் கர்வமாவும் நடந்து கொண்டதில்லை. என்னைத் தாழ்த்திக் கொண்டு இழிவாவும் போனது இல்லை. என்னை மரியாதை குறைவா நடத்த அனுமதித்ததும் இல்லை, மற்றவர்களை நான் அவமரியாதையாக நடத்தியதும் இல்லை.

சினிமா உலகைப் பற்றி அறிந்தவள் நான். எப்போதும் நெம்பர் ஒன் என்பது கிடையாது. அந்த நிலையை அடைந்து இப்போது நல்ல கதாபாத்திரங்களாக பார்த்து நடித்து வருகிறேன். அவ்வளவுதான்.

சுயமரியாதை, தன் மேல் நம்பிக்கை என்பது ஒவ்வொரு பெண்ணிற்கும் அவசியம் தேவை. தன்னைத்தானே குறைவாக, இழிவாக யார் நினைக்கிறார்களோ அவர்களைத்தான் மற்றவர்கள் குறைவாக நடத்த முடியும். தன் மேல் மரியாதை உள்ள எந்தப் பெண்ணையுமே யாரும் ஒன்றும் செய்து விட முடியாது. பெண்கள் இதை உணர்ந்து கொண்டால் அவர்களால் எந்தச் சூழ்நிலையிலும் மதிப்



பிரட்டிற்கு ஜாம் இல்லையென்றால் கவலை வேண்டாம். வீட்டிலிருக்கும் விழுது நெய் சிறிது தடவி அதன் மீது தேன் தடவிய பிரட்டை வைத்து மூடி சாப்பிட்டுப் பாருங்கள். சுவை ஏ ஒன்னாக இருக்கும். அதோடு தேன் உடம்புக்கு மிகவும் நல்லது. இந்த பிரட்டை ஃப்ரிஜில் வைத்து எடுத்துச் சாப்பிட இன்னும் நன்றாக இருக்கும். காலை நேர அவசரத்திற்கு இந்த பிரட்டை டிபன் டப்பாவில் வைத்து எடுத்துச் செல்லவும் உதவியாக இருக்கும்.

— பாலா

மேக்சிமா-குரூப் நிறுவனங்களின்

தீபாவளி வாழ்த்துக்கள்

MAXIMA

மேக்சிமா பெனிபிட் பண்ட் லிமிடெட்
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி
மேக்சிமா கிரெடிட் லிங்க்ஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா சிட்ஸ் மெட்ராஸ் (பி) லிமிடெட்



உங்கள் முதலீட்டிற்கு 25% வட்டி P.A. வழங்குகிறது.

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக முதலீடு செய்யும் பொழுதே வழங்கப்படும்.

உங்கள் வருங்காலக் கனவுகளை நனவாக்கும் வளமான சேமிப்புத்திட்டங்கள்.

பிக்சட் டெபாசிட்	ஒவ்வொரு மாதம், காலாண்டு, அரையாண்டுகளில் வட்டி வழங்கப்படும்.	குறைந்தபட்ச முதலீடு ரூ.5,000/-
குமுலேட்டிவ் டெபாசிட்	45.60% P.A அதிக பட்ச வட்டியாக பெறுவீர்	ரூ.5,000/-
கோல்டன் டெபாசிட்	முதலீடு 3 வருடங்களில் இருமடங்காகும்	ரூ. 7,500/-
டைமண்ட் டெபாசிட்	ஒரு முறை முதலீடு செய்து 20 ஆண்டுகளில் லட்சாதிபதியாகுங்கள்	ரூ. 2,550/-

காலம்	வட்டி
12 மாதங்கள்	26.80 %
24 மாதங்கள்	30.40 %
36 மாதங்கள்	32.66 %
48 மாதங்கள்	39.67 %
60 மாதங்கள்	45.60 %

மேக்சிமா - உங்கள் முதலீட்டிற்கு முழுப் பாதுகாப்பு அளிக்க கூடியது.

மேலும் விவரங்களுக்கு

மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி

பதிவு அலுவலகம் : 1, வேதாந்த தேசிகர் தெரு, R.K.மடம் சாலை, லஸ் பஜார் அருகில், மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 4941849 Fax : 044-4347655, தந்தி : MAXFIN

கிளை அலுவலகம் : 146, எல்டாம்ஸ் ரோடு, சென்னை - 600 018, தொலைபேசி : 456950.

கார்ப்பரேட் அலுவலகம் : ஜெயம் பில்டிங் AA-147, 3வது அவென்யூ, அண்ணாநகர் ரவுண்டானா அருகில் அண்ணா நகர், சென்னை - 600 040

மேக்சிமா - அதிகபட்ச நம்பிக்கைக்குரியது.

போடு வாழ முடியும்!"

"நீங்கள் சுயமதிப்பு, சுயமரியாதை என்கிறீர்கள். ஆனால் நடிகைகள் என்றாலே ஒன்றும் தெரியாதவள், வெறும் கவர்ச்சி பொம்மை என்றுதானே சாதாரணமாக நினைக்கிறார்கள்..."

"எனக்குத் தெரிந்து என் சம காலத்து நடிகைகள் பலரும் பல துறைகளிலும் அறிவாளிகள்தான். பொதுவாக புத்திசாலி கேரக்டரில் நடிக்கும் நடிகைகள் அறிவாளிகள், கவர்ச்சிக் கேரக்டரில் நடிக்கும் நடிகைகள் முட்டாள்கள் என்று நினைக்கிறார்கள். தலைகீழாக அது இருக்கவும் வாய்ப்பு உண்டு. இன்ஜினியரிங் படித்த கௌதமி, லா படிக்கும் கஸ்தூரி இல்லையா? ஹீரா சைகாலஜி ஸ்டுடண்ட். அவர்கள் சினிமாவில் செய்யும் கதாபாத்திரங்களுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமே இல்லை. அது அவர்கள் வேலை. கொடுத்த வேலையைச் சரியாகச் செய்கிறார்கள், அவ்வளவுதான். எங்களுக்குள் உள்ள கருத்துக்களை படப்பிடிப்பு இடைவெளியில் நாங்கள் பேசிக் கொள்வோம்..."

"நீங்கள் புத்திசாலிகள்தான். சென்ற தலைமுறை நடிகைகள் அவர்கள் இடத்திலிருந்து இறங்கிய பிறகு எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பதைப் பார்த்திருப்பீர்கள் இல்லையா?"

"உண்மைதான். எப்படி வாழ்ந்தவர்கள், எப்படி இருந்தவர்கள் எல்லாம் எப்படியோ போனார்கள். நான் முன்பே சொன்ன மாதிரி கஷ்டம் என்று வந்தால் யாருமே உதவ மாட்டார்கள். இதையெல்லாம் பார்த்துத்தான் நாங்கள் வரும் வருமானத்தைப் பிற்காலத்திற்கு உதவும்படி அமைத்துக் கொள்கிறோம்..."


இது ஒரு கனவுலகம். இங்கு கதாநாயகன், கதாநாயகிகளின் வாழ்வு சில வருடங்களே. விதிவிலக்காக ஓரிருவர் இருந்திருக்கலாம். இரவில் மலர்ந்து காலையில் மறைந்து போகும் நட்சத்திரங்களை இவர்களுக்கு உதாரணமாக்கியது எத்தனை பொருத்தம்? இந்த மின்மினிகளின் வாழ்க்கையில் ஏற்றங்கள் உண்டு, இறக்கங்கள் உண்டு. மகிழ்ச்சியால் ஆரவாரித்த நாட்களும் இருக்கும். கண்ணீரால் தன்னையே கரைத்துக் கொண்ட நாட்களும் இருக்கும். ஆனாலும் வெளியுலகத்திற்கு இவர்கள் கவர்ச்சியானவர்கள். மேக்-அப் போட்ட சில முகங்களை மக்கள் மறந்ததே இல்லை. அவர்களில் குஷ்பூவும் ஒருவர்தான்.

- மஞ்சுளாரமேஷ்

அட்டை வண்ணப்படம் : சித்ரா

மல்லிகைப் பூ போன்ற இட்டிலி


கோகுலாஷ்டமி சீடை முறுக்குக்கு பச்சரிசியை மிக்ஸியில் அரைத்து எடுத்ததில் நிறைய கப்பி வந்து விட்டது. என்ன செய்வது என்று யோசனை செய்ததில் ஒரு யுக்தி புலனாகியது. இங்கு கடையில் நல்ல அயனான உளுந்தமாவு கிடைக்கிறது. அதை வாங்கினேன். கப்பி இரண்டு டம்ளர் எடுத்து கொதிக்கும் வெந்நீர் விட்டு ஊறவைத்தேன். ஒரு மணி நேரம் கழித்து சூடு ஆறியவுடன் ஒரு டம்ளர் கடையில் வாங்கிய உளுந்துமாவு போட்டு உப்புப் போட்டு கரைத்து வைத்தேன். உளுந்தைப் போட்டு கரைக்கும் போது சிலுப்புவது போல் விரலால் செய்ய வேண்டும். அடுத்த நாள் ஆபீஸுக்கு என் கணவருக்குக் கையில் இட்டிலி டிபன்



கொடுத்தனுப்பினேன். வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி என்று வருவது போல் எத்தனை கஷ்டப்பட்டு செய்தாலும் ஒப்புக் கொள்ளாதவர் இந்த இட்டிலிக்கு சர்டிபிகேட் கொடுத்தார். அதற்குப் பச்சை மிளகாய் சாம்பாரும் வைத்தவுடன் ஹோட்டல் இட்டிலிசாம்பார் சாப்பிடுவது போல் இன்னம் இரண்டு கூட எல்லோருக்கும் உள்ளே போயிற்று.

– வஸந்தா வெங்கடசுப்ரமணியன்.

பொருள் : திடீர் உணவு


• சசிதேவி

முதல் பரிசு ரூ. 300/-
திடீர் பிஸ்கட் ஸ்வீட் கிட்

பள்ளி விட்டு வந்த குழந்தைகள் இனிப்பாக ஏதாவது செய்து தரும்படி கேட்டனர். பாயாசம் செய்யலாம் என்று பாசிப் பருப்பை வேகவைத்தால் வேறு ஏதாவது செய்து கொடுக்கச் சொன்னார்கள். அதனால் பிறந்ததுதான் இந்த திடீர் பிஸ்கட் ஸ்வீட் கிட்.


• சாந்தி


தேவையான பொருட்கள் :

பச்சரிசி மாவு - 4 கப்,
பாசிப் பருப்பு - 1 கப்,
தேங்காய் - 1 மூடி,
வெண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்,
முந்திரிப் பருப்பு - 50 கிராம்,
சர்க்கரை - 1½ கப்,
சாக்லேட் பவுடர் - 1 டேபிள் ஸ்பூன்,
டால்டா - பொரிக்கத் தேவையான அளவு.

செய்முறை :

பாசிப் பருப்பை வேகவைத்து மசித்துக் கொள்ளவும். அதில் பச்சரிசி மாவு, தேங்காய்த் துருவல், வெண்ணெய், கேசரிப் பவுடர், பொடித்த சர்க்கரை இவற்றைப் போட்டு நன்கு பிசையவும். பிசைந்த மாவை நெல்லிக் காயளவு உருட்டி வட்ட வடிவத்தில் பிஸ்கட் போல் தட்டிக் கொள்ளவும். அந்த பிஸ்கெட்டின் நடுவில் முந்திரிப் பருப்புத் துண்டுகளை விதவிதமான வடிவில் அழுத்தி ஒட்டவும்.

டால்டாவைப் பரந்த வாணலியில் விட்டு அது காய்ந்தவுடன், பிஸ்கட்டு களைப் போட்டுப் பொன் நிறமாகப்


• சுமதி


• ஸ்ரீவித்யா


• சுதா

இம்மாத இல்லத்தரசி

பொரித்து எடுக்கவும். பிஸ்கட் சூடாக இருக்கும் போதே அதன் மீது மேலும் சிறி தளவு சர்க்கரையைத் தூவி குலுக்கி வைக்க வும்.

இந்த பிஸ்கட்டுகளை வாயில் போட்டால் உடனே கரைந்து விடும்.

- சசிதேவி, சென்னை - 81.

இரண்டாம் பரிசு ரூ. 200/-

மிக்ஸ்டு ஃப்ரூட் மில்க் ஷேக்

தேவையான பொருட்கள் :

பால் - ½ லிட்டர்,
ஃபாரெக்ஸ் - 4 ஸ்பூன், (கோதுமை யுடன் கூடிய மா, வாழை, ஆப்பிள்)
பொடித்த சர்க்கரை - 150 கிராம்,
ஏலம், முந்திரி - சிறிது.

செய்முறை :

காய்ச்சிய பாலுடன், ஃபாரெக்ஸ், பொடித்த சர்க்கரை மூன்றையும் சேர்த்து மிக்ஸியில் நன்கு அடித்து முந்திரி (பொடித் தது), ஏலப் பவுடர் சிறிது சேர்த்து சூடாகவோ, ஃபிரிஜ்ஜில் வைத்தோ அல்லது ஐஸ் கட்டிகள் சேர்த்து 'ஜில்'லென்றோ பருகலாம். இது மிகவும் அருமையான, சுவை மிகுந்த, சத்தான ஒரு 'மில்க் ஷேக்'காகும்.

இது குழந்தைகள், திடீர் விருந்தினர், மற்றும் விருந்துகளுக்குப் பின்னும் பரிமாறக் கூடிய சிறந்த ஒரு 'மில்க் ஷேக்' ஆகும். செய்வது மிகவும் எளிது. உடம்பிற்கும் நல்லது.

குறிப்பு :

1. புதிதாக வாங்கிய பழங்கள் சேர்த்துச் செய்யும் மில்க்ஷேக்கை விட அதிக சுவை யுடன் இது இருக்கும்.

2. உணவு தயாரிக்கப் பயன்படும் (Food Colours) கலர்களை இந்த வகை 'மில்க் ஷேக்'கிற்குப் பயன்படுத்தினால் பார்ப்பதற் கும் பரிமாறுவதற்கும் அழகாகக் காட்சி அளிக்கும்.

3. மேலே குறிப்பிட்ட 'மில்க் ஷேக்'கிற்கு பயன்படுத்திய ஃபாரெக்ஸுக்குப் பதில் செரிலாக் (ஆரஞ்சு அல்லது ஆப்பிள்) பயன் படுத்தியும் தயார் செய்யலாம்.

- சாந்தி, சென்னை - 36.

மூன்றாம் பரிசு ரூ. 100/-

இனிப்புப் பழ அப்பம்

தேவையான பொருட்கள் :

மைதா மாவு - 1 ஆழாக்கு,
ரவை - ½ ஆழாக்கு,
வெல்லம் - ½ ஆழாக்கு,
ஏலக்காய் - 2,
நெய் - சிறிதளவு,
பால் - ½ டம்ளர் (விருப்பமானால்),
வாழைப்பழம் - 1.

செய்முறை :

ஒரு பாத்திரத்தில் வெல்லத் தூளைப் போட்டு சிறிது நீர் விட்டு அடுப்பில் வைத்து, வெல்லம் கரைந்தவுடன் இறக்கி வடிகட்ட வும். பின்பு ரவை, மைதா, பழம், ஏலப்பொடி, வெல்லப்பாகு ஆகியவற்றை நீர் சேர்த்து அடை மாவு பதத்திற்குக் கரைத்துக் கொள்ள வும். (பால் சேர்த்தால் நீரின் அளவை குறைக்க வும்) பத்து நிமிடங்கள் ஊறவிடவும். பின்னர் தோசைக் கல்லில் அடை போல சிறிது கன மாக ஊற்றி, சுற்றிலும் நெய் விட்டு அடுப்பை நிதானமாக எரிய விட்டு, சிறிது சிவந்தவுடன் எடுக்கவும். விருந்தினர் வந்தவுடன் மாவைக் கரைத்து வைத்தால், அவர்கள் காப்பி அருந்தியவுடன் பரிமாற சுவையான, சூடான டிபன் ரெடியாகி விடும்.


- எஸ். சுமதி, வேலூர்.



நம்மில் சிலர் எவ்வளவுதான் படித்து, நாகரிகமாக இருந்தாலும், சில விஷயங்களில் கவனக்குறைவாக நடந்து கொள்வது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். திருமண மாகிச் சிலருக்கு நான்கு அல்லது ஐந்து வருடங்கள் கழித்துக் கூட குழந்தை பிறக்க நேரிடலாம். இயற்கை அப்படி இருக்க, திருமணமாகி ஓராண்டு ஆகிவிட்டாலே, அந்தப் பெண்ணைப் பல பேருக்கு மத்தியில் "எப்ப விசேஷம்? ஏதேனும் செய்தி உண்டா?" என்று கேட்பது நல்லதல்ல. அந்தப் பெண்ணுக்கு மனதில் எத்தனை வேதனை உண்டாகும் என்பதையே மறந்து விடுகின்றனர்.


- லக்ஷ்மி

SAFETY INTEGRITY CREDIBILTY



2 மாருதி வேன் உள்பட
668 விலை மதிப்புள்ள
ஊக்கப்பரிசுகள்
நம்பிக்கையான, பாதுகாப்பான

S.I.C. சேமிப்புத் திட்டம்



செலுத்தும் தொகை	காலம்	திரும்பப் பெறும் தொகை
ரூ.500/– X 20 மாதங்கள் அல்லது ஒரே தவணையாக ரூ.8,250/- செலுத்தலாம்.	20 + 60 மாதங்கள்	ரூ.25,000/-

2999 நபர்கள் மட்டுமே இந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஊக்கப்பரிசுகள்

பரிசுப் பொருட்கள்	மொத்தப் பரிசுகள்
800 சி.சி. மாருதி வேன்	2
பஜாஜ் ஆட்டோ	1
பஜாஜ் 'சேதக்' ஸ்கூட்டர்	3
தங்கச்சங்கிலி (40 கிராம்)	11
பஜாஜ் எம்-80	2
தங்கச்சங்கிலி (32 கிராம்)	3
வெள்ளி கல்யாண செட் (1 கிலோ)	3
தங்கச்சங்கிலி (16 கிராம்)	17
ஒனிடா கலர் டி.வி.	17
காட்ரேஜ் ரிப்ரிஜிரேட்டர் (165 லிட்டர்)	17
வீடியோகான் சலவை இயந்திரம்	17
பட்டுப்புடவைகள் (ரூ. 2000/- பரிசுக்கூப்பன்)	30
டைட்டன் கைக்கடிகாரங்கள் (தலா ரூ. 1000/ -)	30
வெள்ளி காமாட்சியம்மன் விளக்கு	30
வெள்ளி தம்ளர்	60
'நிப்போ' ரைஸ் குக்கர்	85
பட்டுப் புடவை (ரூ. 1000/- பரிசுக்கூப்பன்)	170
பிரட் டோஸ்டர்	170
மொத்தம்	668

உங்கள் டெபாசிட்டுகளுக்கு

21% + 1%

வட்டி ஊக்கத் தொகை

S.I.C. நிர்வாகிகள் குழு:

திரு. பி.பாலசுப்ரமணியம் B.sc.
◎ முதன்மை அறங்காவலர் கந்தக் கோட்டம்,
◎ ஆலோசகர், பார்க்டவுன் பெனிபிட் பண்ட் லிட்.

திரு. ஆர்.விவேகானந்தன் B.Com.,
◎ சேர்மன், பார்க்டவுன் பெனிபிட் பண்ட் லிட்

திரு. கே.சுந்தரம் B.sc.,FCA.,A.I.C.W.A.B.L.
◎ இயக்குனர், பர்பெக்ட் பெனிபிட் பண்ட் லிட்

திருமதி.ஆர்.சூரியகுமாரி (பார்ட்னர்)
◎ சூர்யா இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன்

திரு. ஆர்.லட்சுமணசாமி B.A.,(c.s)
◎ இயக்குனர், ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி பர்மனெண்ட் பண்ட் லிட்

டாக்டர் எஸ்.பிரகாஷ் M.S.
◎ கன்சல்டன்ட்.

SIC group

விபரங்களும், விண்ணப்பங்களும் பெற:

S.I.C குரூப்

58, அருணாசலம் தெரு, கலைவாணர் அரங்கம் எதிரில்
சேப்பாக்கம், சென்னை-600005. (தொலைபேசி:842706, 840683)

ADVT

திருமணமாகாத பெண்களைப் பார்க்கும் போதெல் லாம் சிலர், ''என்ன சாப்பாடு போடப் போகிறாய்?'' அல்லது ''எப்ப கல்யாணம்?'' என்று கேட்டு அந்தப் பெண்களின் மனக்கசப்பை அதிகப்படுத்துகின்றனர். என்னவோ, அந்தப் பெண் தானே திருமணத்தை ஒத்திப் போடுவது போல ஒரு பேச்சு. இது நல்லதல்ல.

- லட்சுமி



ஆறுதல் பரிசு ரூ. 50/-

திடீர் டோக்ளா

திடீரென்று வந்த விருந்தினர்களுக்கு செய்து கொடுக்கக் கைவசம் ஒன்றும் இல்லை. கொஞ்சம் இட்லி மாவுதான் பாக்கி. யோசித்து, அதை வைத்து குறைந்த நேரத்தில் அருமை யான டோக்ளா செய்து வந்தவர்களின் பாராட்டைப் பெற்றேன்!

தேவையான பொருட்கள் :

இட்லி மாவு - 2 கப்,
கடலை மாவு - 1 கப்,
சமையல் எண்ணெய் - 2 மேஜைகரண்டி,
பச்சை மிளகாய் - 4,
இஞ்சி - சிறிது (துண்டுகளாக்கவும்),
சீரகம் - ½ தேக்கரண்டி,
கரம் மசாலா (தேவையானால்)
- ½ டீஸ்பூன்,
மிளகாய்த் தூள் - ½ டீஸ்பூன்,
சமையல் சோடா - ¼ டீஸ்பூன்,
உப்பு, பச்சை கொத்துமல்லி.

இந்த அளவிற்கு ஏறக்குறைய 20 பெரிய டோக்ளா துண்டுகள் கிடைக்கும். செய்யும் நேரம் : 15 நிமிடங்கள்.

செய்முறை :

கடலை மாவில் சிறிது எண்ணெய் சேர்த்துக் கலக்கவும். அழுத்தமாக பிசையக் கூடாது. இந்தக் கலவையில் நறுக்கிய ப. மிளகாய், கொத்துமல்லி, இஞ்சி, மிளகாய்த் தூள், சீரகம், கரம் மசாலா, உப்பு போன்ற எல்லாவற்றையும் சேர்த்துக் கலக்கவும். பிறகு இட்லி மாவை ஊற்றிக் கலந்து, கடைசியாக சமையல் சோடாவை சேர்க்கவும். ஒரு குழி வான தட்டிலோ, அல்லது சிறிது உயரம் கம்மி யான குக்கர் செபரேட்டரிலோ எண்ணெய் தடவி, கலவையை ஊற்றி (கெட்டியாக இருக்கும்), குக்கரில் வெயிட் போடாமல், இட்லி போல வேகவைத்து பத்து நிமிடங் களில் எடுத்து விடலாம்.

டோக்ளா பாத்திரத்தைத் தலைகீழாக ஒரு தட்டில் கவிழ்த்தால் கேக் போல விள் ளாமல், விரியாமல் வரும். எடுத்து, துண்டு போட்டு மேலே தேங்காய் எண்ணெயில் தாளித்த கடுகைப் போட்டுப் பரிமாறலாம். கைவசம் இருந்தால் தேங்காய்த் துருவல் மேலே தூவினால் அலங்காரமாக இருக்கும்.

- சுதா ஆத்மராஜ், சென்னை - 16.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

சாத பகோடா

தேவையான பொருட்கள் :

சாதம் - 1 கப்,
கடலை மாவு - 1½ கப்,
வெங்காயம் - 3 (பெரியது),
பச்சை மிளகாய் - 5,
கருவேப்பிலை - சிறிது.
பூண்டு - சிறியது (அ)
மசாலாப் பொடி - ½ தேக்கரண்டி,
உப்பு - தேவைக்கேற்ப,
எண்ணெய் பொரிக்க - 200 கிராம்,
(அதிகக் காரம் வேண்டுமென்றால் ½ டீஸ்பூன் மிளகாய்த் தூள் சேர்க்கலாம்.)

செய்முறை :

முதலில் வெங்காயம், பச்சை மிளகாய், கருவேப்பிலை, பூண்டு இவைகளை நன்கு பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பிறகு சாதம், கடலை மாவு, நறுக்கிய பொருட்கள் எல்லாவற்றையும், நன்றாகக் கலந்து பிசைய வேண்டும். உப்பையும் (தேவையானால் மிளகாய்த் தூளை) சேர்த்துப் பிசைந்து வைத்துக் கொள்ளுங்கள்.

வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்தவுடன் பகோடா போடுவது போல் சிறிது சிறிதாகக் கிள்ளிப் போட்டு சிவந்து நன்றாகப் பொரித்தவுடன் எடுக்கவும்.

இதைச் சூடாக அப்படியே சாப்பிடலாம். இல்லையெனில் சாஸ், சட்னி போன்றவற்றை வைத்துக் கொண்டும் சாப்பிடலாம்.

- ஜி. ஸ்ரீவித்யா, சென்னை - 4.

INTRODUCING

LEEMA

Electric Chimney



Just fix it in your kitchen and cook in complete comfort

- 'Leema' removes all. Oil vapour. Odour. Smoke. Fumes. And hot air. Right from the source. More efficiently than an exhaust fan. As it is fixed just above the gas stove.
- 'Leema' is easy to fix — no need to break the wall open. Just hang it on two nails and plug in.
- 'Leema' can recirculate air. Or extract it with a simple pipe connection that leads to a point outside.
- Stylish built with a powerful suction motor and washable filters. 'Leema' is available in different colours and models.
- 'Leema' is also fitted with two electric bulbs to illuminate the cooking area.

That's right. 'Leema' Electric Chimney is efficient, sleek and lets you cook in complete comfort.

Cook in complete comfort with 'LEEMA'

Sole Agent & Stockist
Home Collections
IInd Floor, Sun Plaza,
19, G.N. Chetty Road,
T.Nagar, Madras - 600 017.
✆ : 8250787 / 8252501

AUTHORISED DEALERS: MADRAS: M/s. LA-BOUTIQUE, Mookambika Complex, 4,C.P.Ramaswamy Iyer Road, Alwarpet, Madras - 600 018, Ph: 499 0080. **MADURAI:** M/s J.ENGINEERING, 327 North Masi Street, Madurai, Ph:25778. **PONDICHERRY:** M/s.EXCEL DECOR PVT LTD., Pondicherry, Ph:35200/38331 **BOMBAY:** Mr.RAMAKRISHNAN, M/s.R.K.ENTERPRISES, Bombay,Ph:4095480. ASIATIC ELECTRIC TRADING CO., Ph:2069948-2085966

நாய் குரைத்தால் நல்லதா?

— அகிலா கார்த்திகேயன்

அந்த வார இதழின் அட்டைப்படத்தைப் பார்த்ததும் கவிஞர் காசுமாலை அதிர்ந்தார். அவர் பயந்தது போலவே நடந்து விட்டது.

"நாய் குரைத்தால் நல்லதா?" திரைப்பட பாடலாசிரியர் காசுமாலையின் பாடல் வரியைப்பற்றி ஒரு அலசல் என்று அட்டைப் படத்தில் கொட்டையாக எழுதப்பட்டு, பிரமாதமான 'ஆக்ஷன்' போட்டோ வேறு போடப்பட்டிருந்தது. சரியாக மாட்டிக் கொண்டோமென்று நினைத்தார். ஏற்கெனவே டப்பா கவிஞர் என்று எல்லோராலும் முத்திரைக் குத்தப்பட்டவர் காசுமாலை. போதாக் குறைக்கு இந்த குறும்புக்கார வார இதழ் வேறு இப்படி ஒரு அலசலை கவர் ஸ்டோரியாக போட்டு அவருடைய கலை ஸ்டோரியை ஒரு வழியாக்கப் பார்க்கிறது போலும்.

வார இதழை பிரித்துப் பார்க்கவே காசுமாலைக்கு உதறியது.

இத்தனைக்கும் குறிப்பிட்ட அந்தப் பாடல் வரிகளை அவர் எழுதவேயில்லை. 'ஆத்தா தானே பெத்தா' படத்தின் கேஸட் வெளியீட்டு விழாவிற்கு போய்விட்டு வந்த கையோடு, அன்று ரிலீஸ் செய்யப்பட்ட 'கேஸட்டை' வீட்டிற்கு வந்து போட்டு பார்த்த போதுதான் அந்த விபரீதம் புரிந்தது.

'நா குறைஞ்சா நல்லது - இது
நாலு பேரு சொன்னது.'

என்று தான் எழுதிய வரிகளை அந்த வேற்றுமொழி பாடகர் சக்குமீ லகுதீ பிலி பாணி தமிழில் பாடியிருந்தார். அதனால் அவ்வரிகள்,

'நாய் குரைச்சா நல்லது - இது
நாலு பேரு சொன்னது.'


என்று உருக்குலைந்திருந்தது.

எப்பொழுதும் இவர் எழுதும் பாடல்களை தன் பேரிரைச்சல் இசையால் ஒரே அமுக்காக அமுக்கி பாடல்வரிகள் யாருக்கும் கேட்காமல் காப்பாற்றி வந்த 'இசை கொத்தனார்' நாராசநாதன், சோகம் மற்றும் தத்துவம் கலந்த இந்தப் பாடலுக்கு மட்டும் மிகவும் மெலிதாக இசைத்து வரிகளை வலுக்கட்டாயமாக எல்லோர் காதிலும் விழச் செய்திருந்தார்.

நாக்கை குறைத்தால் நல்லது என்ற அர்த்தத்தில் தான் எழுதிய வரிகள் நாய் குரைத்தால் நல்லது என்று மாறியதில் காசுமாலைக்கு ஏகப்பட்ட கோபம் வந்தது. உடனே தயாரிப்பாளர் ஏ.பி.ஸி. அவர்களை போனில் அழைத்தார்.

"என்ன சார் இப்படிப் பண்ணிட்டீங்க... அந்தத் தத்துவப் பாடலை அப்படிக் கொலை பண்ணிப் பாடியிருக்காரு... நீங்க கவனிக்கலையா...? 'நாய் குரைச்சா நல்லது'ன்னு உளறியிருக்காரு... அதை உடனே மாத்தி 'நா குறைஞ்சா நல்லது'ன்னு பாடணும்... இல்லேன்னா கேலிக் கூத்தாயிடும்" அழாக் குறையாக விண்ணப்பித்தார்.


"என்ன விளையாட நீங்களா? காஸட் ரிலீஸ் பண்ணியாச்சு படமும் இரண்டு மூணு வாரத்திலே வரப்போவுது... இப்ப வந்து பாட்டோட வரியை மாத்தணும்னு கலபமா சொல் நீங்களே... தெரிஞ்சுதான் பேசறீங்களா?" புரொட்யூஸ



ஏ.பி. சின்னப்பன் பிடிகொடுக்கவில்லை. "பாட்டை மாத்தினா திரும்பவும் அந்தக் காட்சியையும் எடுத்தாகணும் தெரியுமில்லே" என்றார்.


"என்ன சார்.. இது சோக பாட்டுதானே.. கதாநாயகன் தாடி மீசையோட மெதுவா நடந்துட்டே பாடப் போறான்... பாட்டோட வரியை மட்டும் மாத்தினா போதும்... வாய் அசைவு மாறாது" என்றார் காகமாலை.

"ரொம்ப தெரிஞ்சா மாதிரி பேசறீங்களே... 'நாய் குரைச்சா நல்லது'னு பாட்டிலே வருதுன்னு அந்த டைரக்டர் ஷாட்லே நாய் கட்டாயம் குரைச்சே ஆகணும்னு சொல்லிட்டாரு.. எத்தனை நாய்களை பிடிச்சிட்டு வந்தோம்னு உங்களுக்கு எங்கே தெரியப் போவுது. அத்தனை நாய்க்கும் வாய்ஸ் டெஸ்ட் பார்த்து ஒண்ணும் தேறாமல் போச்சு... அப்பால பெங்களூர் போய் ஒரு நாயை பிடிச்சுட்டு வந்தோம். அது மெட்ராஸ் கிளைமேட்டுக்கு குரைக்கவே மாட்டேன்னு அடம் பிடிச்சிது. ஒரு வழியா ஐம்பது டேக் எடுத்தப்புறம் ஒரு டேக்கிலே நாய் நல்லா குரைச்சுது. ஆனா கதாநாயகனோட தாயா நடிச்ச அம்மா, 'நாய்க்குக் கொடுக்கிற மதிப்பு கூட எனக்குக் கொடுக்கறதில்லே'ன்னு வள்ளுனு குரைச்சி அதை நாசமாக்கிட்டாங்க... ஒரு வழியா அந்த சோகக் காட்சியை படம் பண்றதுக்குள்ளே சிரிப்பா சிரிச்சுப் போச்சு... நீங்க என்னடான்னா ரொம்ப ஈஸியா திரும்பவும் எடுங்கறீங்க" சற்று கோபமாகக் கத்தினார் சின்னப்பன்.



"ஜனங்க அந்த வரிகளுக்கு அர்த்தம் என்னன்னு கேட்டாங்கன்னா யார் சார் பதில் சொல்றது?" காகமாலை விடவில்லை.

"அட போங்க சார் பொல்லாத அர்த்தம்.. 'டே காலேஜ் பஸ் ஸ்டாப், டீ போட்ட கீபுல் ஸ்டாப்'னு கூடதான் இன்னொரு பாட்டிலே






வருது அதுக்கு அர்த்தம் சொல்லுங்களேன் பார்ப்போம்... ரொம்பவும் அலட்டிக்காம பேசாம இருங்க ஆமாம்" ஓங்கி ஒரு போடு போட்டதில் காசுமாலை அச்சமயம் அடங்கிப் போனார்.


ஆனால் அவர் போதாத காலம் காஸெட் விற்பனை தூள் கிளப்பியது. குறிப்பிட்ட இந்தப் பாடல் சூப்பர் ஹிட் ஆகி முகா புலாவில் வேறு முதல் இடம் கண்டது.

காசுமாலைக்கு அப்போதே பக்பக்கென்று அடித்துக் கொண்டது. ஏதாவது ஒரு நக்கீரன் காதில் இந்த நாய் வரிகள் விழுந்தால் தான் தொலைந்தோமென பயந்து கொண்டேயிருந்தார். ஏற்கெனவே இதற்கு முன் இவர் இயற்றிய வரிகளான 'நீ ர்ராத்திரி வடிச்ச சோறு நான் ரசிக்க தெரிஞ்ச மோரு'க்காக இவரை மோரை விட்டுப் பிசைந்த பழைய சோறாய் ஜனங்கள் நொறுக்கியிருந்தார்கள். இப்பொழுது தான் எழுதாத வரிகளுக்கு வருந்த வேண்டிய நிலை காசுமாலைக்கு.






மாற்றான் எல்லைக்குள் நுழைந்து மாட்டிக் கொண்ட நாயின் மனநிலையில் காசுமாலை நடுக்கத்துடன் அந்த வார இதழ்களின் பக்கங்களை மேப்பமிட்டார். ஒவ்வொன்றாக திருப்பும் போது திக் திக்கென்றது. நாயிடம் சிக்கிய எலும்புத்துண்டாய் யார் யார் வாயில் பாடல் வரிகள் சிக்கி குதறப் பட்டிருக்கிறதோ என்று பயந்தார்.



நடுப்பக்கத்தில் அந்தப் பாடல் அலசலை காணும் வரை அவர் நாடி தளர்ந்து விட்டது. திகில் கதையை படிப்பது போல சஸ்பென்ஸாய் உணர்ந்தார். ஆனால் படிக்க ஆரம்பித்ததும் அவிழ்த்து விட்ட நாய்போல் அவர் மனம் துள்ளியது.

"'ஆத்தா தானே பெத்தா' படத்தின் ஒரு பாடலில் 'நாய் குரைச்சா நல்லது இது நாலு பேரு சொன்னது' என்று கவிஞர் காசுமாலை எழுதியிருக்கும் வரிகள் எல்லோர் சிந்தனையையும் கிளறிவிடுவதாய் அமைந்துள்ளது. கவிஞர் எந்த நோக்கத்தில் இதை எழுதியிருக்கக்கூடும், இதன் உண்மையான உட்பொருள் என்னவாயிருக்கும் என்று சிலரிடம் கேட்டோம்' என்ற முன்னுரையைப் படித்ததும் காசுமாலைக்கு மூச்சு வந்தது. தொடர்ந்து படிக்க ஆரம்பித்தார்.



திரு பைரவன் (தமிழ் இலக்கிய ஆய்வாளர்) :

முதலில் இப்படி ஒரு அபத்தமான வரிகளை கவிஞர் எழுதியுள்ளாரே என்று நான் வருந்தினேன். பிறகுதான் இதில் ஒரு உட்பொருள் இருக்கக்கூடுமென தோன்றியது. சங்க இலக்கியமான 'நாலடியாரை' புரட்டினேன். அதில் ஒரு பாடல்.

'நீர் இறைக்க வற்றாத கேணி
சேறு நிறைந்து செழிப்பான பூமி
நாய் குரைக்க ஓயாது விருந்து - இவை
நாடாது தீயோனின் ஆட்சி'

அதாவது வீட்டிற்கு விருந்தாளிகள் வந்தால் நாய் குரைக்கும். ஓயாமல் விருந்தாளிகள் வந்தால் நாயும் ஓயாமல் குரைக்க வேண்டியிருக்கும். நாம் வளமாக வாழ்ந்தால்தானே நம் வீட்டிற்கு விருந்தாளிகள் வரப் போகிறார்கள். அப்பொழுது நாடு செழிப்பாக




Sunline
சூரியகாந்தி
எண்ணெயின்
சிறப்புக்குக்
காரணம்,
டீ-வேக்ஸிங்.
சன்லைன், டீ - வேக்ஸ் செய்யப்பட்ட சூரியகாந்தி சமையல் எண்ணெய்
தெளிவானது மற்றும் இலேசானது. வைட்டமின் E நிறைந்தது,
கொலஸ்ட்ரால் இல்லாதது, உங்கள் உடல்நலத்தில் அக்கறை காட்டுவது
சன்லைன். சால்வெண்ட் எக்ஸ்ட்ராக்ஷன் எதுவும்
இன்றி இது மிகமிகத் தூய்மையான
எண்ணெயுங்கூட... இவற்றால் இது உன்னதமான
சமையல் எண்ணெயாகத் திகழ்கிறது.
Sunline
Sunline
நெஞ்சத்தைக் கொள்ளை
கொள்ளும் சுவை
சன்லைன்
சூரியகாந்தி சமையல் எண்ணெய்
Anti Cholesterol
இது ஒரு எஸ். எஸ். டி ஆயில் மில்ஸின் தரமான தயாரிப்பு
ARTIG / 1518

நீங்கள் சொந்தத்தில் தொழில் செய்ய விரும்பினால் மூன்று விஷயங்கள் தேவை.

குறிக்கோள்... புத்திசாலித்தனம்... மற்றும்...

...மார்கதர்சி!

உங்கள் மனைவியை இனிய ஆச்சரியத்தில் ஆழ்த்த மூன்று விஷயங்கள் கூடி வர வேண்டும்.

ஒரு நெக்லஸ்... அவர் பிறந்தநாள்... மற்றும்

...மார்கதர்சி!

ஒரு திருமணம் கச்சிதமாக முடிய மூன்று விஷயங்கள் தேவை

ஒரு மணமகள்... ஒரு மணமகன்... மற்றும்

...மார்கதர்சி!

மேல் நாட்டில் போய்ப் படிக்க வேண்டுமானால் மூன்று விஷயங்கள் தேவை

அட்மிஷன்... ஒரு விசா... மற்றும்...

...மார்கதர்சி!

ஒரு வீடு கட்டுவதற்கு மூன்று விஷயங்கள் தேவை

ஒரு மனை... ஒரு ஆர்கிடெக்ட்... மற்றும்...

...மார்கதர்சி!

உங்கள் கனவுகள் நனவாக மார்கதர்சி ஒரு வழி காட்ட முடியும் - சிட் ஃபண்ட் மூலமாக...

உங்களுக்குத் தேவையான தொகைகளைச் சுலபமாக அடையும் வழியை மார்கதர்சி காட்டுகிறது. இந்த வழியை பின்பற்றி கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாக ஆந்திராவில் லட்சக்கணக்கானோர் மார்கதர்சியின் உதவி பெற்றுப் பயனடைந்து வருகிறார்கள். இப்போது உங்கள் முறை!

உங்கள் செலவுகளுக்கேற்ப திட்டமிட்டுக் கொள்ள மார்கதர்சி சிட் ஃபண்ட் உங்களுக்கு உதவுகிறது. ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி வரலாம். உங்களுக்குத் தேவை ஏற்படும்போது, செலுத்திய தொகையைக் காட்டிலும் அதிகமான தொகையைக் கேட்டுப் பெறலாம். 'ஏன், எதற்கு' என்று யாருக்கும் நீங்கள் விளக்கமளிக்க அவசியம் இருக்காது. நீங்கள் பெறக் கூடிய தொகையின் அளவை மற்றவர்கள் தீர்மானிக்கப் போவதுமில்லை. நீங்கள் சேரும் சிட் ஃபண்ட் திட்டத்தையும், தொகையின் அளவையும், மற்றும் மாதாந்திர தவணைகள் குறித்தும், திரும்ப கட்டும் சக்தியைப் பொறுத்து நீங்களே முடிவெடுக்கலாம்.

மார்கதர்சி பற்றியும் அதன் சிட் ஃபண்ட் திட்டங்கள் பற்றியும் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள இன்றே எங்களை அணுகுங்கள்.

மார்கதர்சி சிட் ஃபண்ட்
(மெட்ராஸ்) லிமிடெட்,

ஏ 1 & 2, பார்சன் மானர்

602 அண்ணா சாலை, சென்னை – 600 006,

தொலைபேசி : 8266002

வாழ்க்கையைப் போல் உங்கள் தேவைகளும் நிஜமானவை!

32 வருடங்களாக ஆந்திராவில் முதன்மை பெற்று 27 கிளைகளுடன் விளங்கும் கம்பெனியின் சென்னை துணை நிறுவனம்.

இருக்கிறதென்று அர்த்தம்.... இது தீயோனின் ஆட்சியில் நடக்காத ஒன்று. ஆக நல்லோர் ஆட்சியில் நாய் குரைத்துக் கொண்டேயிருக்கும்.

இந்தக் கருத்தில்தான் காகமாலை தன் பாடல் வரிகளை கவிநயத்தோடு இயற்றியுள்ளார்.

திருமதி ஜிம்மி சுந்தரம் (குடும்பத் தலைவி) :

நாம ஏன் நாயை வளர்க்கிறோம்? ராத்திரி திருடன் வந்தா குரைக்கறதுக்குதான். அது பாட்டுக்கு நாம கொடுக்கற பாலையும் பிஸ்கட்டையும் தின்னுட்டு திருடன் வரும் போது குரைக்காம தூங்கிடுச்சின்னா நம்ப வீட்டை அவன் காலி பண்ணிடுவான். அதனாலதான் நாய் குரைச்சா நல்லதுன்னு எழுதியிருக்கார். இது நாய்க்கு மட்டுமில்லே... நாம எல்லோருமே விழிப்போட இருக்கனும்னு கவிஞர் எழுதியிருப்பார்னு நான் நினைக்கறேன்.

திரு அல்சேஷ கோபாலன் (விலங்கு வைத்தியர்):

பொதுவா நல்ல ஜாதி நாயா வாங்கனும்னா அதோட காதை பிடிச்சி தூக்கிப் பார்க்கனும்... அது மழலையாக 'கிங்கிங்'னு குரைக்கும். அப்போ அதுக்கு சொரணை இருக்குன்னு புரிஞ்சுக்கலாம்.

மேலும் நாய் அழறதை நாம பார்த்திருக்கிறோம். அது ஊளையிடறதை அழறதுன்னு சொல்லலாம். நாய் ஊளையிட்டா அப சகுனம். ஆகாது. ஆனா நாய் சிரிச்சா, அதாவது குரைச்சா நல்லதுன்னு எடுத்துக்கலாம்.

வொன்னுப்பேட்டை நாயகி (மேடைப் பேச்சாளர்):

குரைக்கிற நாய் கடிக்காதுன்னு சொல்லுவாங்க. அதனால நாய் குரைச்சாதான் நல்லது. இல்லைன்னா கடிச்சிடும். மனுஷங்களிலேயும் அதிகமா பேசறவன் ஆபத்தானவனில்லை. இந்த மென்மையான கருத்தைதான் கவிஞர் உணர்த்தியிருக்கார்னு நினைக்கிறேன்.

குமாரி ஜுஜுஸ்ரீ (பிரபல நடிகை) :

நாயை எல்லார் வீட்டிலேயும் வளர்க்க முடியாது. எங்களைப் போல வசதியானவங்கதான் வளர்க்கறோம். எங்க வீடுகளிலே மட்டும்தான் நாய் குரைக்குது. எல்லார் வீட்டிலேயும் நாய் குரைச்சா எல்லாரும் வசதியா இருக்கிறதா அர்த்தம். இதை மனசுலே வைச்சுட்டுதான் காகமாலை சார் இந்தப் பாட்டை எழுதியிருக்கனும்.

கல்லூரி மாணவர் ராம்குமார் :

எங்க அப்பா எப்பவும் என்னை திட்டற போது 'எத்தனை தரம் சொன்னாலும் இந்த நாய்க்கு உரைக்கவே உரைக்காது'ன்னு சொல்வாரு. அதைத்தான் கவிஞர் தன் பாட்டுலே 'நாய்க்கு உரைச்சா நல்லது'ங்கற 'மீனிங்'லே அழகா எடுத்துரைச்சிருக்கார். பொதுவா நாம எல்லாரும் ரோஷத்தோட வாழனும்னு இப்படிச் சொல்லியிருப்பாருன்னு நினைக்கறேன்.

கவிஞர் காகமாலை படித்து முடித்தபின் இன்ப அதிர்ச்சியால் திக்குமுக்காடிப் போனார். அபத்தமான வரிகளுக்கு இத்தனை அர்த்தங்களா? 'சும்மா சொல்லக் கூடாது நான் நன்றாகத்தான் எழுதியிருக்கேன்' என்று கூட அந்த நாய் வரிகளுக்குச் சொந்தம் கொண்டாடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார். ஒரிஜினல் வரிகள் அவருக்கு அபத்தமாகப் பட்டது. சுக்குமி லகுதி பிலி பாடகருக்கு மனதிற்குள் நன்றி சொன்னார்.

இன்னொரு விஷயம். இந்த வருடத் திரைப்படப் பாடலாசிரியருக்கான விருது காகமாலைக்குத்தானாம். அதுவும் இந்தப் பாடலுக்காம்!

விருது பெற்ற வித்யா



திருச்சிராப்பள்ளி படைக்கலத் தொழிலகத்தில் பணியாற்றும் கோபாலகிருஷ்ணன், வசந்தா தம்பதியரின் மகள் வித்யா கோபாலகிருஷ்ணன் 1993 க்கான தேசிய நல்லிணக்க விருதை வென்றுள்ளார்.

ரூபாய் பத்தாயிரத்திற்கான ரொக்கப் பரிசையும், தேசிய அங்கீகரிப்புச் சான்றிதழையும் உள்ளடக்கிய இவ்விருதை டெல்லி விஞ்ஞான பவனில் பிரதம மந்திரி திரு. பி.வி. நரசிம்மராவ் வழங்கினார்.

மூன்று சுற்றுகளைக் கொண்ட இப்போட்டியின் முதல் சுற்று, 'சுவாமி விவேகானந்தரும் இந்தியாவைப் பற்றிய அவரது கனவுகளும்' என்ற தலைப்பில் மாவட்ட அளவிலும், இரண்டாவது சுற்று, 'தேசிய ஒருமைப்பாட்டில் இளைஞர்களின் பங்கு' என்ற தலைப்பில் மாநில அளவிலும் கட்டுரைப் போட்டியாக நடத்தப்பட்டது. மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்ற 186 இளைஞர்கள் டெல்லியில் நடந்த தேசிய முகாம் ஒன்றில் பங்கேற்று, வினாடி-வினா எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டனர். ஆங்கிலம், இந்தி ஆகிய இருமொழிகளிலும் பங்கேற்றவர்களுள், இந்தி பேசாத மாநிலமான தமிழகத்தின் மாணவி செல்வி. வித்யா கோபாலகிருஷ்ணன், இந்தி மொழிக்கான விருதை வென்றது குறிப்பிடத்தக்கது.

- வசந்தா கோபாலகிருஷ்ணன்



பொறுமை, இன்முகம், மனோதிடம் தேவை!



• வீணா

எப்போது அந்த நகைக் கடைக்குப் போனாலும் அந்தப் பெண்மணி சிரித்த முகத்துடன் அமர்ந்திருப்பார். சன்னமான பேச்சு. இனிமையான சுபாவம். நகைகளைப் பற்றிக் கேட்டால் நுணுக்கமான செய்திகளைச் சொல்வார். 'அம்பிகா பேர்ள்ஸ்' எனும் நகைக்கடையை ஐந்து வருடங்களுக்கு முன் எழும்பூரிலுள்ள 'அல்சாமால்' காம்ப்ளக்ஸில் ஆரம்பித்த வீணா மல்ஹோத்ரா இன்று தன் வியாபாரத்தில் நன்கு காலூன்றி விட்டார். மாண்டியத் ரோடில் இருக்கும் அவருடைய கடையைப் பலரும் அறிந்திருக்கிறார்கள். இந்த வெற்றி சாதாரணமானதில்லைதான். இவர் எப்படி இதைச் சாதித்தார்?

"நானும் சாதாரண ஹவுஸ் ஒய்ஃப்தான். என் கணவர் ராணுவத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அஸ்ஸாம், பஞ்சாப் எனப் போய்க் கொண்டு இருந்தோம். ஆனால் இயற்கையிலேயே டிசைனிங் செய்வதில் ஆசையுண்டு. சிறு வயதில் இருந்தே துணிகளில் டிசைன் செய்வேன். நகைகளில் இப்படிச் செய்தால் நன்றாக இருக்குமே என நினைத்துக் கொள்வேன்.

ஹைதராபாத்தில் இவர் பணிபுரிந்த போது அங்கு இருந்த 'ஜகதாம்பா பேர்ள்ஸ்' நகைக் கடைக்குச் சென்றேன். இன்டீரியர்



டெகரேஷன் பொறுப்பை ஏற்றுக் கொண் டேன். வாரம் ஒருமுறை அவர்கள் நகைகளின் பொஸிஷனை மாற்றுவார்கள். அதற்கேற்றாற் போல வர்ணம், எந்த நகைக்குப் பக்கத்தில் எது இருந்தால் நன்றாக இருக்கும், எப்படி பர்னிச்சர்களைப் போடலாம் இவையெல் லாம்தான் என்னுடைய வேலை. உள் அலங் காரத்திற்குப் போனவள் நகைகளைக் கவ னிக்க ஆரம்பித்தேன்.

என் கணவர் ஆர்மியில் இருந்ததால், உடன் வேலை செய்பவர்களின் மனைவிமார் களிடம் பேசி இவர் களிடமிருந்து நகைகளை வாங்கி விற்றேன். இந்தப் பழக்கம் பஞ்சாப் போனாலும் தொடர்ந்தது. முத்துக்களை வாங்கி என் கற்பனைப்படி கோர்த்து டிசைன் செய்து விற்றேன். எனக்கு மெதுவாக வியா பாரம் தெரிய ஆரம்பித்தது.

சென்னைக்கு மாற்றலாகி வந்த போது இங்கே பல முத்துக் கண்காட்சிகளை நடத்தி னேன். நிறைய பேர் அறிமுகமானார்கள். அப்போதுதான் இங்கேயே ஒரு கடையும் திறந்து செட்டிலாகி விட்டால் என்ன என்று தோன்றியது. ஏதாவது ஒரு ஊருக்குப் போய் அங்கு நகைகளை அறிமுகப்படுத்தி செட்டில் ஆவதற்குள் அடுத்த ஊருக்கு மாற்றி விடுவார் கள். இப்படியே எத்தனை நாள் இருப்பது, எங்காவது ஓரிடத்தில் நிலையாக இருக்க வேண்டும் என்று விரும்பினேன்..."

"உங்கள் குழந்தைகளின் படிப்பும் இத னால் பாதிக்கும் இல்லையா?"

"ஆமாம். அந்தந்தச் சூழ்நிலைக்குத் திண் டாட வேண்டியதாக இருந்தது. அவர் சொன் னார், "நான் என் வேலையைத் தொடரு கிறேன். நீ உன் வியாபாரத்தைப் பார். அதில் நிலையாக முடியும் என்றால் நானும் வரு கிறேன்" என்றார். இந்த ஐந்து வருடங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. அவரும் இங்கேயே வந்து விட்டார்..."

"நீங்கள் பல மாநிலங்களில் இருந்திருக் கிறீர்கள். ஒவ்வொரு மாநில மக்களும் நகை விஷயத்தில் வித்தியாசப்பட்டு இருப்பார்கள் இல்லையா?"

"வட மாநில மக்கள் 'காடி'யாக நகை அணிய விரும்புவார்கள். 'பேன்ஸி ஜ்வல்ஸ்' அவர்களுக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால் தமிழக மக்கள் மரபு வழியில் வருகின்ற நகை களை அணிய விரும்புவார்கள். ஆனால் நான் அதிகமாக 'பேன்ஸி'யான நகைகளைத் தான் வைத்திருக்கிறேன்.

எனக்கு ஆரம்பத்தில் இருந்தே டிசைன் குறிப்பாக நகை டிசைனில் விருப்பம் என்ப தால் புதிய டிசைன்களில் நகைகளைக் கொண்டு வருகிறேன். எங்களுடைய ஷாப் 'அம்பிகா பேர்ள்ஸ்' என முத்துக்கு முக்கியத்து வம் அளித்தாலும், மற்ற பவழம் நவமணி களிலும் கவனம் செலுத்துகிறோம். நிறைய புதிய டிசைன்களை அறிமுகப்படுத்தி இருக் கிறேன்.

இப்போது மெதுவாக 'ட்ரெண்ட்' மாறி வருகிறது. இளம்பெண்களும், நடுத்தர வயது இல்லத்தரசிகளும் பேன்ஸி ஜ்வல்ஸ்லை வாங்க ஆரம்பித்து இருக்கிறார்கள்..." என்று அவர் நகைகளில் செய்துள்ள சில டிசைன் களைக் காண்பித்தார். மிக அழகாக இருந்தது. அதில் ஒன்று தாலி போன்ற டிசைனில் உள்ள தோடு!

"இது என்னது...?" என்ற போது சிரித்தார் அவர்.


"இதே மாதிரிதான் இந்த டிசைனைப் பார்த்துச் சிலர் திடுக்கிட்டார்கள். ஒவ்வொரு வர் ஒவ்வொரு விதமாகத் தாலி அணி கிறார்கள். அவற்றிலுள்ள அழகிய வடிவங் களை எடுத்துக் கொண்டு ஒரு அழகிய பதக்

தீபாவளி சமயத்தில் 'கொழுப்பு'களைக் குறைக்க வழி

தீபாவளி என்றாலே ஸ்வீட்தான். குறைந்தது பத்து நாட்கள் எங்கும் எப்போதும் இனிப்பு வகைகள்தான் வீட்டில் நடமாடும். அப்படி இருக்கும் அந்தப் பத்து நாட்களில் 'கொழுப்பு'ச் சத்தைக் குறைக்கச் சில வழிகள் :

- **காலை உணவின் போது ரொட்டியுடன் வெண்ணெயைத் தடவி உள்ளே தள்ளுவதைக் குறையுங்கள்.**
- **எந்தச்சமையலின்போதும்சாதாரணமாகஎடுத்துக்கொள்ளும்அளவைவிட கால்பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்கு குறைவான எண்ணெயைப் பயன்படுத்துங்கள்.**
- **உணவு வகைகளைப் பொரிப்பதற்குப் பதிலாக அவித்து உண்ணுங்கள்.**

- சிதா



பெண் குழந்தை பிறந்தது என்று கவலை வேண்டாம்!
அதனை கொண்டு சென்று அரசு தொட்டிலில் இட வேண்டாம்!

உங்கள் பெண், ஆண் குழந்தைகளை படிக்க வைக்க திருமணம் முடிக்க கவலை கொள்ள வேண்டாம். இதோ ஒரு அருமையான திட்டம்! சிறிய முதலீடு! பெரிய வருமானம்!!

திருமாங்கல்ய திருமண திட்டம்



வயது	தாங்கள் செலுத்தும் தொகை	டெப்பாசிட் செய்யும் மாதங்கள்	தங்களுக்கு கிடைக்கும் தொகை
1 வயது	ரூ. 1,000/-	240	64,000
1 வயது	ரூ. 2,500/-	240	1,60,000
1 வயது	ரூ. 5,000/-	240	3,20,000
5 வயது	ரூ. 15,000/-	180	3,60,000
10 வயது	ரூ. 45,000/-	120	3,60,000

* இவை தவிர இன்னும் பல டெப்பாசிட் திட்டங்களும், 6 மாத வட்டி 1 வருட வட்டி டெப்பாசிட் செய்தவுடனேயே பெறும் திட்டங்கள் உண்டு.

** தங்க நகை, இந்தியாவில் எங்கும் உள்ள சொத்துக்களுக்கும் பணம் கிடைக்கும்.

தொடர்பு கொள்க!

லேவா தேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் செவ்வாய் வார விடுமுறை

சசிநாத் சாஸ்வத நிதி லிமிட்டெட்

H.O. 36, ரங்கநாதன் தெரு,
சென்னை - 600 017. Ph : 4346786
கிளைகள் : 35, M.C. ரோடு சென்னை - 600 021.
34, C, ரயில்வே ரோடு, காஞ்சிபுரம் - 631 501.
56, கடப்பா டிரங் ரோடு, திருத்தணி - 631 209.

மக்கள் சேவையில் 17 ஆம் ஆண்டு

சசிநாத்துடன் இணைவோம்! சௌவுக்கியமாக வாழ்வோம்!

SOORYA ADVERTISINGS

மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்!

மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்!

மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்!



உங்கள் குழந்தை அ... ஆ... இ... ஈ..., A, B, C, D, ரைம்ஸ் சொல்ல மறுக்கின்றானா? கவலையே இல்லை. குழந்தை வீட்டில் இல்லாத சமயம் அ...., ஆ...., இ...., ஈ..., A..., B..., C..., D..., ரைம்ஸ், மாதங்களின் பெயர்கள் போன்றவற்றை டேப்ரெகார்டில் பதிவு செய்து குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும்போது பல தடவை போட்டு, கவனிக்கச் சொல்லுங்கள். நான்காவது நாள் குழந்தை தானாகவே சொல்ல ஆரம்பித்துவிடும்.

– ஆர். சீதா

கம் செய்தேன். பார்த்த அத்தனை பேரும் பிரமித்துப் போனார்கள். என்னுடைய கஸ்டமர்கள் ரெகுலராக வருபவர்கள். அவர்களில் சிலர் இந்தத் தாலி வடிவ தோடு வாங்க, அதைப் பார்த்த பலரும் கேட்டு வாங்க ஆரம்பித்து விட்டார்கள்!

அதே போல 'ஆன்டிக்' எனச் சொல்லப்படும் பழங்கால நகை வடிவிலும் செய்தேன். இங்கு வரும் ஒருவர் பார்த்துச் சொல்ல, இன்னொருவர் வர இப்படியே மெதுவாக எங்கள் ஷாப் புகழ்பெற ஆரம்பித்தது!"

"முத்து என்பது இங்கு அவ்வளவு பிரபல்யம் இல்லையே. தங்கம் அப்புறம் வைரம் என்றுதானே போகிறார்கள்?"

"நீங்கள் சொல்வதெல்லாம் ஐந்து பத்து வருடங்களுக்கு முன்பு. இப்போது நிறைய பேர் முத்து செட் வாங்கி பரிசளிக்கிறார்கள். இவர்களுக்காகவே நாங்கள் 4000 ரூபாய் செட், 5000 ரூபாய் செட் என்றே வைத்திருக்கிறோம். அவர்கள் சொல்லும் பட்ஜெட்டில் தருகிறோம்!"

"இப்படி வாங்க வரும் போது ஆண்கள் சீக்கிரம் திருப்தி அடைகிறார்களா, பெண்கள் திருப்தி அடைகிறார்களா?"

அருகே இருந்த மல்ஹோத்ரா சிரித்தார். "ஆண்கள் வருவார்கள். ஐந்தாறு செட் பார்ப்பார்கள். அதில் ஒன்றை 'பேக்' பண்ணச் சொல்லி போய்க் கொண்டே இருப்பார்கள். பெண்கள் அப்படியில்லை. முழுவதும் ஒரு முறை பார்த்து நிறைய டிசைன்களை ஆராய்ந்து பிறகுதான் தேர்ந்தெடுப்பார்கள். அதற்குக் காரணம் ஆண்கள் 'சரி, இது மனைவிக்குப் போட்டால் நல்லா இருக்கும்' என மேலோட்டமாக நினைக்கிறார். பெண்கள் அப்படியில்லை. தரம், டிசைன், விலை என ஒவ்வொன்றையும் நுணுக்கமாக ஆராய்கிறார்கள்."

மல்ஹோத்ரா நன்றாகவே பெண்களின் சைகாலஜியைத் தெரிந்து வைத்திருக்கிறார்.

"உங்களுடைய தொழில் முயற்சி வெற்றி அடைந்து இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என நினைக்கிறீர்கள்?" என்று வீணாவைக் கேட்ட போது,

"முதலில் என் திறமை மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நகைகளில் நான் தரும் டிசைன் சிறந்தது என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. அடுத்தது வரும் வாடிக்கையாளர்களை ஆத்மார்த்தமாகக் கவனித்துக் கொள்கிறேன். ஒருவர் நீள முத்து மாலை வேண்டும் என்பார். ஆனால் அவருக்கு நன்றாக இல்லாமல் கூட போகலாம். அதனால் உங்களுக்கு இது 'சூட்' ஆகாது. குட்டை மாலை அழகைத் தரும் என யோசனை சொல்வேன்..."

"நீங்கள் சொல்வது உடலுக்கேற்ற நகை என்ற அளவிலா? உடைகளுக்கேற்ற நகை என்ற அளவிலா?"

"இரண்டுமேதான். குள்ளமாக இருப்பவர்கள் ஒரே மாதிரி கலரில் புடவை அணிவது நல்லது."

"ஏன்...?"

அவர்கள் ஏற்கெனவே குள்ளம். அதிலே இரண்டு பார்ட்டாகக் கலர் இருந்தால் பிரித்து இன்னும் குட்டையாகக் காண்பிக்கும். எனவே புடவை ரவிக்கை இரண்டையுமே ஒரே வண்ணத்தில் அணிய வேண்டும். அவர்கள் நீண்ட மாலைகளைப் போடாமல் நெக்லஸ் போன்ற அளவில் கழுத்தில் குட்டையாக நகை அணிந்தால் எடுப்பாக இருக்கும்.

உயரமானவர்கள் கான்ட்ராஸ்ட் கலரில்



உங்கள் மழலைச் செல்வம் அவனது
மென்மையான மிருதுவான உலகம்.
Nestlé
NESTUM
Baby Cereal
Weaning Food
Rice
mix with milk
Refill Pack
லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.
அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல் திட உணவும் அவனைப் போலவே மிருதுவாக இருக்கட்டும்.
உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.
ஆம், நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.
பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு ஸ்பூனால் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சக்திகளும் கிடைக்கின்றன.
உங்கள் செல்வ மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை ருசியை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.
இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25.
புதுடில்லி-110016
நெஸ்டம்
எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.
முக்கிய அறிவிப்பு : உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்

உடை அணியலாம். அவர்கள் நீளமான முத்து மாலைகளை அணிந்தால் ஒன்றுக்கொன்று எடுப்பாக இருக்கும்.

அதேபோல, கல்யாண நேரங்களில் அகல ஜரிகை பார்டர் கொண்ட பட்டுப் புடைவை அணியும் போது நீளமான நகைகளைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் ஜரிகையோடு இவை சேரும்போது ஒன்றுக்கொன்று எடுப்பாக இருக்காது. அந்தச் சமயத்தில் ஜரிகைக்கு மேலே முடியுமாறு செயின் அல்லது மணி மாலைகளை அணியலாம்.

நாம் அணியும் உடைக்கும், நகைக்கும், தோற்றத்திற்கும் பொருந்துகிறதா எனப் பார்ப்பது நல்லது. ஒன்றுக்கொன்று பொருந்தி வரும் போது பார்க்க அழகாக பளிச்சென்று இருக்கலாம்!''

''ஸாரி; நீங்கள் உங்கள் கஸ்டமர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டு இருந்தீர்கள். பேச்சுத் திசை மாறி விட்டது. நீங்கள் கஸ்டமர்களுக்கு யோசனை சொல்வீர்கள் என்றீர்கள். உங்கள் வெற்றிக்கு வேறு காரணம்...?''

''வரும் வாடிக்கையாளர்கள் அனைவருடனும் கடிதத் தொடர்பு வைத்திருக்கிறேன். நாங்கள் 'கெட்-டு-கதர்' வருடத்திறகு ஒருமுறை வைப்பதுண்டு. ஒரு குடும்பம் போலச் செயல்படுவதால் அவர்களும் ரொம்ப வியாபாரமாக நினைப்பதில்லை. நிறைய 'பேர் என்னிடம் வந்து டிசைன் ஐடியா கேட்கும் போது நான் சொல்கிறேன். நானும் பெண், கடையில் வேலைக்கு இருப்பவர்களும் பெண்கள் என்பதால் 'ஹோம்லி'யாக பீல் பண்ணுகிறார்கள். இதனால் ஒருமுறை வந்தவர் தொடர்ந்து வாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்...''

''உங்களைப் போல ஒரு நகைக் கடையை ஒரு பெண்ணே ஆரம்பித்து முழுமையாக வெற்றிகரமாக நடத்துவது என்பது நீங்கள் ஒருவராகத்தான் இருக்க முடியும் என நினைக்கிறேன். இதைப் போல மற்றவர்களும் செய்ய முடியும் என நினைக்கிறீர்களா?''

''நிச்சயமாக முடியும். நான் ஒரு ஆர்மி ஆபீசரின் மனைவி. இப்படி ஏன் சொல்கிறேன் என்றால் எங்களுடையது மிகவும் பாதுகாக்கப்பட்ட வாழ்க்கை. வெளியுலகத் தொடர்பு அதிகம் இருக்காது. எங்களுக்குள்தான் பழகிக் கொள்வோம். அப்படி இருந்தவளே இன்று வெற்றிகரமாக வியாபாரம் செய்யும்போது ஏன் மற்ற பெண்கள் செய்ய முடியாது?''

''அதற்கு என்ன தேவை...?''

''ரொம்பப் பொறுமை தேவை. இன்முகம் தேவை. எந்தப் பிரச்னை வந்தாலும் பதறிப் போய் விடாமல் சமாளிக்கின்ற மனோபாவம் தேவை. இவை அநேகமாக எல்லா பெண்களுக்குமே உண்டு. அதை அவசியம் இல்லாத வழிகளில் பலர் வீணடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி இல்லாமல் சரியான பாதையைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு பெண்ணும் கவனமாகச் செயல்படுவாளேயானால் நிச்சயமாக வெற்றிகரமான தொழிலதிபராக ஒவ்வொரு பெண்ணுமே வர முடியும்!''

''நீங்கள் ஜகதாம்பா பேர்ள்ஸிலிருந்து வாங்கி உங்கள் வியாபாரத்தை ஆரம்பித்தீர்கள். அதே போல மற்ற பெண்கள் உங்களிடமிருந்து வாங்கி விற்க நினைத்தால் தருவீர்களா?''

''நிச்சயமாகத் தரலாம். கண்காட்சிகள் நடத்தலாம். அவரவர் ஊரில் எடுத்துச் சென்று விற்கலாம். விருப்பமுள்ள பெண்களுக்கு நான் நிச்சயமாக உதவக் காத்திருக்கின்றேன். அப்படிக் கொடுக்கும் போது டெபாசிட் தொகை கட்ட வேண்டியதாக இருக்கும். வரட்டுமே!'' என்கிறார் உற்சாகமாக வீணா மல்ஹோத்ரா.

— புவன்

படங்கள் : ராஜு

கத்திரிக்காயை ஃபிரிட்ஜில் வைக்கும் போது காகிதப் பையில் போட்டு வைக்கவும்.

பாகற்காயைச் சமைப்பதற்கு முன்னால் அரை மணி நேரம் உப்பு கலந்த நீரில் ஊற வைத்தால் அதன் கசப்பு குறையும்.

- கலா



தீசுட்டாமல் தீபாவளி கொண்டாடுவோம்

ஜனாதிபதி கௌரவ டாக்டர், திருச்சி தென்னூரில் உள்ள பிரபல சித்த வைத்திய நிபுணர், டாக்டர் ஆர். கண்ணன் அவர்களைச் சந்தித்து தீபாவளித் திகட்டல்களுக்கு மருத்துவ சிகிச்சை முறைகளைக் கேட்ட போது -

தீபாவளி அன்று எந்த வீட்டிற்குச் சென்றாலும் ஒரே அன்புத் தொல்லைதான். 'எங்கள் வீட்டில் இதை ரொம்ப ஸ்பெஷலாகச் செய்திருக்கிறேன்' என்று ஒவ்வொரு வீட்டிலும் இனிப்புகளைத் தருவார்கள். சாப்பிட்டே ஆக வேண்டிய கட்டாய நிலை. இவைகளைச் சாப்பிட்டு விட்டுப் படும் அவஸ்தை இருக்கிறதே. அது பெரிய அவஸ்தை!



தீபாவளி அன்று நாம் எல்லோரும் எண்ணெய் ஸ்நானம் செய்வது உண்டு. இதில் தீபாவளிக்குத் தீபாவளி மட்டும் ஒரேமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பவரும் உண்டு. இவர்கள் அரிதாக இப்படி எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் தும்மல் ஜலதோஷம், ஏன் சில சமயங்களில் காய்ச்சல் கூட வரலாம். இதைத் தவிர்க்க நல்லெண்ணெயில் மிளகாய் வற்றல், சிறிது மிளகு, சீரகம், சிறு துண்டு வசம்பு போட்டுக் காய்ச்சி மிதமான சூட்டில் தேய்த்து அதிக நேரம் ஊறாமல் பச்சைத் தண்ணீர் கலவாத ஒரே அளவான வெந்நீரில் குளித்தால் நோய்களைத் தவிர்க்கலாம்.

மேலும் குளித்த உடன் தலையை ஈரமில்லாமல் நன்றாகத் துவட்டிக் கொள்ள வேண்டும். பின்பு நல்ல சாம்பிராணிப் புகை போட்டுத் தலை முடியை ஆற்றிக் கொள்ள வேண்டும். இதையும் மீறி சளிபிடித்தால் மிளகு கஷாயம், ஆடாதோடைக் கஷாயம் இவைகளில் ஏதேனும் ஒன்றை அருந்தலாம். சித்த மருத்துவ முறையில் தயாரிக்கப்பட்ட நீர்க் கோவை மாத்திரையை வெந்நீரில் உரைத்து நெற்றியில் பற்றிட்டால் சளியும் குறையும். தலைவலியும் நீங்கும்.

தீபாவளி அன்று எண்ணெய் ஸ்நானம் செய்துவிட்டு வந்த உடன் புத்தாடை உடுத்துவார்கள். இந்த உடையின் காரணமாக ஒவ்வாமை ஏற்படுவதுண்டு. ஏனென்றால் மில்லிலிருந்து வருகின்ற உடைகள் கடைகளில் பல நாட்கள் இருந்துதான் விற்பனையாகின்றன. அதில் தூசுகள் மற்றும் கிருமிகள் இருக்கக் கூடும். இவைகளினாலும் ஒவ்வாமை ஏற்படக் கூடும். பிறகு துணியை டெய்லரிடம் கொடுத்துத் தைக்கும் போது அங்கேயும் தூசு, கிருமிகள் தொற்ற வாய்ப்பு உள்ளது. ஆகவே இந்தத் துணிமணிகளை நாம் புதிதுதானே என்று அப்படியே அணியாமல் அவைகளை வெயிலில் கொஞ்சம் காயப்போட்டு நன்றாக உதறிய பின்னரே அணிய வேண்டும். அப்படியும் அந்தத் துணியினால் ஒவ்வாமை ஏற்பட்டால் சம்பிரதாயத்திற்குச் சிறிது நேரம் அணிந்து விட்டுப் பின்னர் முறையாக துவைத்துக் காய வைத்தே அணிய வேண்டும்.

தீபாவளி அன்று நிறைய இனிப்பு மற்றும் எண்ணெய்ப் பலகாரங்களை உண்டவர்கள் அன்றைக்கு வேறு எதுவும் சாப்பிடாமல் இருப்பது நல்லது. அல்லது எளிய உணவை சிறிதளவே உண்பது சிறந்தது. இரண்டாவதாக நல்ல சூடான வெந்நீரை அடிக்கடி அருந்தினால் தீபாவளி அன்று அதிகமாகச் சாப்பிட்ட எண்ணெய்ப் பலகாரங்கள் ஜீரணமாகி வயிற்று உப்புசம் குறையும்.

இதைத் தவிர நம் முன்னோர்கள் கை கண்ட மருந்தாக நமக்கு அளித்த "தீபாவளி மருந்தையும்" அருந்தி வர வேண்டும். இதை நீங்களே வீட்டில் செய்து அருந்தலாமே!

இதை நீங்கள் தீபாவளிக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. சிலருக்குத் தினமும் "தீபாவளி"தானே? ஏனெனில் அவர்கள் தீபாவளியைப் போலவே தினமும் பல்வேறு பலகாரங்களை உண்டு அல்லலுறுவதைப் பார்த்திருக்கிறோம். ஆகவே எல்லோரும் இதைச் செய்து வைத்துக் கொண்டு தேவையான போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

செய்முறை :

சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, கண்டந் திப்பிலி, பறங்கிப்பட்டை, லவங்கப்பட்டை, அமுக்கராங்கிழங்கு, ஓமம், சிற்றரத்தை, சீரகம் இவை ஒவ்வொன்றும் 50 கிராம், ஏலரிசி 25 கிராம் இவைகளை எடுத்து வெயிலில் நன்கு காய வைத்து இடித்து நைசாக சலித்துக் கொள்ள வேண்டும்.

500 கிராம் வெல்லத்தைப் பொடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு அத்துடன் 500 மி.லி. தண்ணீர் ஊற்றி வெல்லம் நன்றாகக் கரைகின்ற வகையில் கொதிக்க வைக்க வேண்டும். அதன் பின் வெல்ல நீரை நல்ல தூய்மையான துணியில் வடிகட்டினால் அதிலுள்ள தூசிகள் நீங்கி விடும். அதன் பின் நல்லதொரு இருப்புச் சட்டியில் இந்த வெல்ல நீரை ஊற்றி, அடுப்பேற்றி சிறிய தீயாக எரித்து, சலித்து வைத்த பொடியை அத்துடன் சிறிது சிறிதாகக் கலந்து தண்ணீர் வற்றும் வரை கிளற வேண்டும். அதன் பின் 150 மி.லி. உருக்கிய நெய்யை ஊற்றி நன்றாகக் கலந்து கையில் ஒட்டாத பக்குவத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும். இதுதான் சரியான பக்குவம். இதனை காற்றுப் புகாத கண்ணாடி ஜாடியில் வைத்துக் கொண்டு கொட்டைப் பாக்களவு சாப்பிட்டால் தீபாவளி அன்று எந்த வித வயிற்றுத் தொல்லைகளும் வராது.

தீபாவளி அன்று குழந்தைகளுக்குப் புதிய துணிமணிகள், பலகாரங்கள், பட்டாசுகள் என்று கொண்டாட்டமாக இருந்தாலும் ஆபத்தும் காத்து இருக்கிறது. ஆம்! உற்சாகத்தில் பட்டாசைக் கொளுத்துகிறேன் என்று பல விபத்துக்களைச் சந்திக்க நேரிடுகிறது. பட்டாசுகளை கைகளில் வெடித்துக் கொள்வதும், உடையில் நெருப்பு பற்றிக் கொள்வதும், பட்டாசில் நெருப்பு இருக்கிறதா? எனப் பார்க்கும் போது கண்ணில் அடிபடுவதும் எனப் பல்வேறு விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவைகள் ஏற்பட்ட பிறகு சிகிச்சை அளிப்பதை விட இந்த விபத்துக்கள் ஏற்படாமல் வருமுன் காப்பதே புத்திசாலித்தனம்.

குழந்தைகள் பட்டாசு, மத்தாப்பு இவைகளைக் கொளுத்தும் போது நாமும் உடனிருந்து எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் அதிலுள்ள ஆபத்துக்களை

16 புள்ளி
4 வரிசை
4 இல் நிற்க.



- உமா மகேஸ்வரி

யும் உணர்த்த வேண்டும். தீப்பட்ட புண்களோ, காயங்களோ ஏற்பட்டால் சித்த மருத்துவ முறையில் தயாரிக்கப்பட்ட அருகன் தைலத்தைத் தடவி வரலாம். நல்ல குணம் தரும். தீவிரமான விபத்துக்களுக்கு உடனே நல்ல மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும். மேலும் தற்காலத்தில் பத்தாயிரம் சரம், இருபதாயிரம் சரம் என நீண்ட நேரமாக தொடர்ந்து வெடிக்கும் வெடி வகைகளால் பலருக்குக் காது கேட்கும் திறன் குறையவோ, இல்லாமல் போகவோ வாய்ப்பு இருக்கிறது. பட்டாசு கொளுத்தும் போது ஏற்படும் அதிகச் சத்தத்தால் பெரும்பாலும் ஒரு காது பாதிக்கப்படுகிறது. இந்தப் பாதிப்பு நிரந்தரமான செவிட்டுத் தன்மைக்கும் காரணமாக அமைகிறது.

இவை தவிர வீட்டிலோ, மருத்துவமனைகளிலோ மிக உடல் நலிவுடன் இருக்கின்ற நோயாளிகளுக்கும் குறிப்பாக இதய நோயாளிகளுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படக் கூடும். நம்மால் ஒருவரைக் காப்பாற்ற முடியாவிட்டாலும் ஒருவர் மரணமடைய நாம் காரணமாக இருக்கக் கூடாதல்லவா? ஆகவே இந்த வெடியினால் ஏற்படும் ஆபத்தை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறி அனைவருக்கும் உணர்த்த வேண்டும்.

தீபாவளி "திகட்டல் இல்லாத தீபாவளி"யாக திகழ வேண்டும். உணவில் மட்டும் திகட்டல் அல்ல, உடையில், மகிழ்ச்சியில் எல்லாவற்றிலுமே திகட்டல் இல்லாமல் என்றும் "தித்திக்கும் தீபாவளி"யாக ஆக்குவது நம் கையிலேயே இருக்கிறது.

பேட்டி, படம் : **விஜயா கண்ணன்**



OPERATION GOLDEN FLOW
என்டிடிபி வழங்கும்

உடலை கச்சிதமாக வைத்துக்கொள்ள தினமும் உடற்பயிற்சி தேவை. கூடவே ஆரோக்கியமான உணவையும் உண்ண வேண்டும். உதாரணமாகச் சொன்னால் தாரா சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய்யால் சமைக்கப்பட்ட உணவுகள். ஏனெனில், தாராவில் அடங்கியுள்ள போலியன் சாடுரேடட் பேட்டி ஆசிட் (PUFA) உங்களுடைய இதயத்தை ஆரோக்கியமானதாக வைக்கின்றது. மேலும் தாரா சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி, எண்ணெய் புத்தம் புதிதாகவும், சுத்தமானதாகவும் உள்ளது உணவின் உண்மையான சுவை இதனால் கிடைக்கின்றது. மேலும் இது உன்னதமான டேம்பர் ஃப்ரூப் பேக்கில் கச்சிதமாக சீல் செய்யப்பட்டுள்ளது.

தாரா சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய், உருவாக்கிக் கொள்ளுங்கள் உங்களுக்கு பிடித்த பேக்கின் விருப்பமாக.

தாரா இந்தியாவில் அதிக விற்பனையாகும் சமையல் எண்ணெய் பிராண்ட்



உணவில் குறைந்த எண்ணெய். உடலில் அதிக ஆரோக்கியம்.

Mudra NDDB:7552 Tam.

இது தீபாவளி நேரம். காதைப் பிளக்க வைக்கும் வெடி சத்தம் மனதையும் நடுங்க வைக்கும் காலம். அதிகமான சப்தத்துடன் வெடிக்கும் பட்டாசுகள் நம் மனதில் பாதிப்பை ஏற்படச் செய்யுமா? இதனால் உண்டாகும் விளைவுகள் இந்த மனபாதிப்பினால் மனநோய் ஏற்பட வழி உண்டா? ஏற்கெனவே மனநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இதுபோன்ற ஒலி களினால் மேலும் பாதிக்கப்படுவார்களா என்பன போன்ற பல சந்தேகங் களுடன் கீழ்ப்பாக்கத்திலுள்ள மனநல மருத்துவமனையில் இயக்குனர் டாக்டர். பாஷ்யம் அவர்களையும் நிலைய மருத்துவர் டாக்டர். விவேகானந்தன் அவர்களையும் சந்தித்த போது -

மனநலத்தைப் பட்டாசுகள் பாதிக்குமா?





* விவேகானந்தன்



* பாஷ்யம்

"பட்டாக வெடிகளினால் பலவகைகளில் மனப் பாதிப்பு ஏற்பட வழி உண்டு. இந்த வெடிகளினால் - அவை கள் ஏற்படுத்தும் ஒலிகளினால் ஒருவருக்கு நேரடியான மன நோய் ஏற்படுமா என்ற கேள்வி எழுமானால் 'இல்லை' என்பதுதான் நிச்சயமான பதில்.

ஆனால் இவைகளினால் ஒருவருக்கு ஏற்படும் மன பாதிப்பு மனநோய் வர ஒரு முக்கியமான காரணமாகும். பட்டாசுகளும், வாணவேடிக்கைகளும் நம் கலாசாரத்தின் ஒரு பகுதியாக எண்ணப்பட்ட காலம் மாறி மனிதர்களின் அந்தஸ்திற்கு ஒரு சான்றாக மாறியுள்ளது இன்று. கேளிக்கை களின் உச்சகட்டமாக இவைகளை எண்ணிக் கொண்டு மற்றவர்களைத் துன்புறுத்தும் வழியாகக் கொள்கின்றனர். மனிதர்கள் இயற்கையோடு ஒன்றி வாழாமல் இயற்கையை ஏமாற்றும் வழிகளில் இந்த வெடிகளும் முக்கிய இடம் பெறும்.

பட்டாசுகளினால் ஏற்படும் மனபாதிப்புகள் பல வகைப்படும்.

1. தன் நண்பர்களைவிட தாங்கள்தான் அதிகம் பட்டாசுகள் வெடித்தோம் - எனப் பெருமையுடன் சொல்லிக் கொள்ள எல்லா குழந்தைகளுக்கும்தானே விருப்பம்? எல்லா குழந்தைகளாலும் அது முடியுமா? இதனால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை,

தங்களால் பட்டாசுக்காக அதிகம் செலவழிக்க முடியவில்லையே என்ற ஏக்கம், வருத்தம், நண்பர் களுடன் மனம் விட்டுப் பழக முடியாதபடி ஒரு இறுக்கம் - இப்படி எத்தனைவித மன பாதிப்பு கள்?

2. சிலருக்குப் பட்டாசு வெடிக்கப் பயம். இன் னும் சிலருக்கோ அது வெடிப்பதைக் கேட்கக் கூட பயம். சிலருக்குக் குலை நடுக்கம், பதற்றம் கூட ஏற்படும். இப்படிப்பட்டவர்கள் தீபாவளி நெருங்கும்போதே வரப்போகும் வெடிச் சப்தங் களை எண்ணி மனதிற்குள்ளேயே பயப்பட ஆரம் பித்து விடுவார்கள். எந்த நேரம் பட்டாசு வெடிக் குமோ, என்ன ஆகுமோ? என்ற பயத்துடன் இருக்கும் நேரம் வெடிச்சப்தம் கேட்க நேரிட்டால் நிலைகுலைந்து மயக்கமடையவோ, எதன் மீதா வது மோதிக் கொண்டு கீழே விழவோ வாய்ப்புகள் மிக அதிகம்.

3. இப்படிப் பயந்த மனமுடையவர்கள் வாகனம் ஓட்டிச் செல்பவர்கள் என்றால் கேட்கவே வேண்டாம். வண்டி ஓட்டிச் செல்லும் போது வெடி ஒலி கேட்க நேர்ந்தால்....? அவர்களின் நிலை? ஐயோ! எண்ணியே பார்க்க முடியவில்லை. ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்றவை களில் சென்றால் விபத்தில் 3 அல்லது 4 பேர்தான் சிக்குவர். ஆனால் இப்படி ஒரு பயந்த மன முடையவர் பஸ் போன்ற பெரிய வாகனங்களை ஓட்டிச் செல்லும் போது வெடி ஒலி கேட்டு விட்டால்....!

4. தற்போது வரும் வெடிகளில் 1000 வெடி, 10,000 வெடி எனத் தொடர்ச்சியாக 30 நிமிடங்கள், 60 நிமிடங்கள் என வெடிக்கும் பட்டாசுகளை நடு வீதியில் வைத்து மகிழ்பவர்கள் அதனால் அடுத்த வர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

5. வலிப்பு நோய் உடையவர்கள் இது போன்ற வெடிச் சப்தங்களினால் மிகவும் மோசமாக பாதிக்கப்படுவார்கள். வலிப்பு மிகவும் அதிகமாக இருக்கும்.

6. ஏற்கெனவே மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள், இந்த வெடிச்சப்தங்களைக் கேட்டால் வெளியே வரவே அஞ்சுவார்கள். வீட்டின் ஒரு மூலையில் பதுங்கியிருப்பார்கள்.


7. இவ்வித பட்டாசு ஒலிகள் மனநோயாளி களை மிகவும் வெகுவாகப் பாதிக்கச் செய்யும். அவர்களுடைய கவலைகள் குழப்பங்கள், அசதி, பயம், போன்றவைகள் அதிகரித்து தூக்கமின்மை, அசதி, பதற்றம் போன்றவை பல நாட்களுக்குத் தொடர்ச்சியாகத் தொந்தரவு தரலாம்.

8. பட்டாசுகளினால் ஏற்படும் வெடி விபத் துக்களில் சிக்கி ஊனமானவர்கள், அல்லது அப்படி ஒரு கோரமான விபத்தை அதில் சிக்கி மரண மடைந்தவர்களைக் கண்டவர்களுக்கு 'நினைவுகளி னால் அலைகழிக்கப்படும் வியாதி' ஏற்படும். இதனால் ஒவ்வொரு தீபாவளியின் போதும் அந்தக் குறிப்பிட்ட வெடி விபத்தைப் பற்றிய எண்ணமே மனதில் தோன்றி அடிக்கடி பாதிப்பு ஏற்படச் செய்யும்.

9. முன்பு ஆண்டுக்கொரு முறைதான் தீபா வளி கொண்டாடி வெடிகளை வெடிப்பது வழக் கம். ஆனால் தற்போது நல்லது கெட்டது எதுவா னாலும், திருமண ஊர்வலம், சவ ஊர்வலம்,

வேக வைத்த சிறு பயறு, தேங்காய்த் துருவல், வெல்லம் அல்லது கறுப்புக்கட்டி இவைகளைக் கலந்து பூரணம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இட்லி அவிக்கும்பொழுது தட்டில் ஒரு கரண்டி மாவை விட்டு அதன்மேல் ஒரு சிறு உருண்டை பயறு பூரணத்தை வைத்து, வேக வைத்து எடுக்க இட்லி, சத்துள்ள இனிப்பு இட்லியாக அவதாரம் எடுக்கும்.

— ஏஞ்சல் பாப்டிஸ்ட்







தீபாவளிக்குச் செய்யும் எந்த வகை கார பட்சணங்களுக்கும் சிறிது மிளகு, சீரகத்தைப் பொடித்துச் சேர்த்து விடுங்கள். நல்ல கம கம மணம் கிடைப்பதுடன் வயிற்றுக் கோளாறு, வாயுக் கோளாறுத் தொல்லைகள் ஏற்படாது.

– ஜெயா

தேர்தல்களில் ஏற்படும் வெற்றி இப்படி எல்லாவற்றிலுமே வெடி வெடித்துத்தான் ஆக வேண்டும் என்ற வழக்கம் ஏற்பட்டு விட்டது. இன்று இன்னமும் ஒருபடி மேலே போய் வேண்டாதவர்களைத் தீர்க்கவும், இந்த வெடிகள் 'ஒரு வழி'யாகி விட்டன. 'வெடிகுண்டு' கலாசாரம் வந்த பின்பு வெடி வாங்கவே மக்களில் பலர் மனம் நடுங்கும் நிலைதான்.

10. வெடிச் சத்தங்களினால் நம் நரம்புகளில் வெகுவாகப் பாதிப்பு ஏற்படவும், நரம்புத் தளர்ச்சி நோய் உண்டாகவும் கூட வாய்ப்பு உண்டு.

11. சில சமயம் வெடிகளினால் ஏற்படும் பெரும் ஒலிகள் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவிக்கவும் கூடக் காரணமாகும்.

இவைகளிலிருந்து விடுபட என்ன வழி? கூடுமான வரை பயங்கரமான ஒலி எழுப்பாத பட்டாசுகளை மட்டுமே வாங்குவது நலம் தரும். வாண வேடிக்கைகளும் அவை ஏற்படுத்தும் வண்ண ஜாலங்களும் ஓசையில்லாமலேயே மனதை நிறைவு செய்யாதா?

வீதிகளில் பட்டாசுகள் வெடிப்பதினால் மற்றவர்களுக்கு ஏற்படும் நிலைகுலைவை எண்ணிப் பார்த்து அவைகளைத் தவிர்க்க வேண்டும். இது பற்றிப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

வலிப்பு நோய் உள்ளவர்கள், மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள், மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் போன்றவர்கள் உள்ள இடங்களுக்கு அருகாமையில் கூட வெடிகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும். எங்கள் மருத்துவமனையில் உள்ளே எந்தவிதமான பட்டாசுகளும் அனுமதிக்கப்படுவது இல்லை. இங்கேயே உள்ள குடியிருப்புகளில் உள்ள மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் குழந்தைகள் தீபாவளிப் பண்டிகைகளை வெடி வெடித்துக் கொண்டாடுவது என்பது ஒருபோதும் கிடையாது.

ஒலி அதிர்வுகளைக் கருவிலுள்ள குழந்தைகள் முதல் மிகவும் வயதானவர்கள் வரை உணர்வது அனிச்சைச் செயல். இந்த அதிர்வுகளைக் கூட்டுவதும் குறைப்பதும் நம் கைகளில்தான். ஏன் இதை வீணாகக் கூட்ட வேண்டும்? இப்படிக் கூட்டிக் கொண்டே போனால் இதற்காக எதிர்காலத்தில் நாம் ஒரு 'மாபெரும் விலை' தர வேண்டி வரும் என்பது நிச்சயம்.

வெளிநாடுகளில் விழாக்காலங்களில் சில குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட நேரங்களில் அதுவும் குறிப்பிட்ட அளவு 'டெசிபல்' அளவில் வெடிக்கும் பட்டாசுகளை அரசின் அனுமதி பெற்றுத்தான் வெடிக்க முடியும். அமெரிக்காவில் இப்படி அரசு அனுமதியுடன் ஒரு தனியான இடத்தில் ஒரு குழுவினர்கள் கூடி வெடிக்கலாம் - ஆனால் அதையும் யாராவது ஆட்சேபித்தால்?! - வெடிப்பவர்கள் உடனே அதை நிறுத்திவிட வேண்டும்.

எடுத்ததற்கெல்லாம் வெளிநாடுகளை உதாரணம் காட்டும் நாம் இந்த விஷயத்தில் அவர்களைப் பின்பற்றக் கூடாதா?

மனபாதிப்பை ஏற்படுத்தி மனோவியாதிக்கு அடிகோலும் - பல வித இழப்புகளுக்கு நம்மை ஆளாக்கும் - பெரும் ஒலியுடன் வெடிக்கும் பட்டாசுகளுக்கு அரசு ஏன் தடை விதிக்கக் கூடாது? எனக் கேட்டனர் டாக்டர்கள் இருவரும் ஒரே குரலில்.

பேட்டி : **'தேசி'**

பார்க் டவுன்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

PBF

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806
223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354
கிளை: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு *
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில் ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில் ரூ.1 கோடி பெறுவீர்

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர். 252 மாதங்கள் நிறைவில் ரூ.2 லட்சம் பெறுவீர்.

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை
வைப்புத் தொகை ரூ. 5,100/-
3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும். 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.
நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.
திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட்திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000	15 Yrs	Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ. 100/-	25 Yrs	Rs.3,00,000

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535

பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேமிப்பு திட்டம் 10% P.a.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விதிகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக டெபாசிட் செய்யும்பொழுதே வழங்கப்படும்.
* தனிபோகம் டெபாசிட் திட்டம் 20%
குறைந்த அளவு ரூ.20,000 டெபாசிட் காலம் 5 ஆண்டுகள்.

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❒ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❒ வெள்ளி விடுமுறை



ஃபேன்ஸி புடவைகள்தான்

“இந்த வருட தீபாவளிக்கு ‘டபுள் கலர்’ பிரிண்டட் பட்டுப்புடைவைகளுக்குத்தான் மவுசு...” என்று சென்னை மயிலாப்பூர், 5 வடக்கு மாட வீதியில் உள்ள ‘பி.எம். சில்க் கடையின் நிர்வாகி ஏ. சந்திரசேகர் சொன்னவுடனே கோபம்தான் வந்தது.

“பிரிண்டட் பட்டுப் புடைவைகளை ஏகப்பட்ட பணம் போட்டு வாங்குகிறோம். தண்ணீரில் தப்பித் தவறி விழுந்து விட்டால் அவ்வளவுதான். சாணிச் சுரணை மாதிரி ஆகிவிடுகிறது.”

இதைச் சொன்னவுடன் அவர் சிரித்தார். “பிரிண்டட் பட்டுப்புடைவை





• சந்திரசேகர்



களே ஃபேன்ஸி புடைவைகள்தானம்மா. அவற்றை மற்ற பட்டுப் புடைவைகள் மாதிரி நனைத்துப் பயன்படுத்த முடியாது. ஆனால் எங்களுடைய பிரிண்டட் பட்டுப் புடைவைகள் நிச்சயம் நீங்க சொன்னா மாதிரி ஆகாது. நன்றாக நனைத்து வீட்டில் கட்டிக் கொள்ளலாம். காஞ்சிபுரத்தில் எங்கள் தறி உரிமையாளர் பி.எம். பாரஸ்மல் சில சிறப்பு

(தொடர்ச்சி 92 - ஆம் பக்கம்)

ஃபேடிங்!

Ultra Benefit Fund Limited

Regd. Office: 39/1, Thirumalai Pillai Street, T. Nagar, Madras-600 017.

உண்மையான வளர்ச்சிக்கு சரியான மனிதர்கள்

தலைவர் : பேராசிரியர் கே.ஆர். ஆறுமுகம் M.Pharm.
அல்ட்ரா குருப் நிறுவனங்கள்
நிர்வாக இயக்குநர் : திரு. ஏ.டி. சுந்தரம் B.Sc.
பாங்க் ஆஃப் மதுராவின் முன்னாள் தலைமை அதிகாரி
செயலர் : திரு. ஆர்.எம். முத்துராமன் B.Com.
தொழிலதிபர்

1. ஃபிக்சட் டெபாசிட் திட்டம்

காலம்	45 நாட்கள்	90 நாட்கள்	6 மாதங்கள்	1 வருடம்	2 வருடம்	3 வருடம்	4 வருடம்	5 வருடம்
ஆண்டு வட்டி விகிதம்	12%	14%	15%	17%	18%	18.5%	19%	20% *

2. சூப்பர் டெபாசிட் திட்டம்

* குறைந்த பட்சம் ரூ. 20,000/-

வைப்பு நிதி	முதிர்வுகால மதிப்பு 60 மாதங்கள்	இலவசம்
ரூ. 1,000/- ரூ. 10,000/-	ரூ. 2,400/- ரூ. 24,000/-	10 கிராம் வெள்ளிக்காசு ** 2 கிராம் தங்கக்காசு ** ** முதல் 1000 முதலீட்டாளர்களுக்கு மட்டும்

3. நெ. 1 டெபாசிட் திட்டம்

வைப்பு நிதி தொகை	முதிர்வு கால மதிப்பு						
	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	45 மாதங்கள்	50 மாதங்கள்	60 மாதங்கள்	66 மாதங்கள்
ரூ. 5,000/- ரூ. 7,500/-	5,920/- 8,880/-	7,150/- 10,725/-	8,650/- 12,975/-	10,000/- 15,000/-	10,950/- 16,425/-	13,450/- 20,175/-	15,000/- 22,500/-

4. சிறப்பு வைப்புத் திட்டம்

வைப்புத் தொகை ரூ. 10,000/-
2-வது ஆண்டு முடிவில் ரூ. 5,000/-மும்
4-வது ஆண்டு முடிவில் ரூ. 5,000/-மும்
6-வது ஆண்டு முடிவில் ரூ. 10,000/-மும் பெறலாம்.

5. டாப் டெபாசிட் திட்டம்

1. ஒரு தடவையில் ரூ. 3000/- செலுத்தி 5 ஆண்டுகள் கழித்து ஒவ்வொரு வருடமும் ரூ. 1,150/-ஐ ஆயுள் முழுவதும் பெறலாம்.
2. ஒரே தடவையில் ரூ. 30,000/- செலுத்தி 5 ஆண்டுகள் கழித்து, மாதாமாதம் ரூ.1000/-ஐ ஆயுள் முழுவதும் பெறலாம்.

6. அல்ட்ரா பத்திரம்

காலம்	தொகை	முதிர்வுகால மதிப்பு
36 மாதங்கள்	ரூ. 2,925/-	ரூ. 5,000/-
36 மாதங்கள்	ரூ. 5,850/-	ரூ. 10,000/-
36 மாதங்கள்	ரூ. 8,775/-	ரூ. 15,000/-

7. ரெக்கரிங் டெபாசிட் திட்டம்

மாத முதலீடு	முதிர்வுத் தொகை					
	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்	60 மாதங்கள்	72 மாதங்கள்
ரூ. 100/-	1,320/-	2,900/-	4,340/-	7,220/-	10,340/-	13,940/-
ரூ. 200/-	2,640/-	5,800/-	9,680/-	14,440/-	20,680/-	27,880/-
ரூ. 300/-	3,960/-	8,700/-	14,520/-	21,660/-	31,020/-	41,820/-

8. அல்ட்ராவின் பாரடைஸ்

முதியோர்களுக்கு மட்டுமே

குறைந்த தொகை	குறைந்த காலம்	வருட வட்டி விகிதம்
ரூ. 30,000/-	3 வருடங்கள்	21%

9. அல்ட்ராவின் அற்புதத் திட்டம் :

ஒரே தடவை ரூ.2,000/- செலுத்தி 41 ஆண்டுகள் கழித்து ரூ. 20 இலட்சம் பெறுங்கள்
ஒரே தடவை ரூ. 10,000/- செலுத்தி 41 ஆண்டுகள் கழித்து ரூ. 1 கோடி பெறுங்கள்.

இன்றைய சேமிப்பு - நாளைய பாதுகாப்பு

முந்துங்கள்
ரூ. 10,000/- மற்றும் அதற்கு மேற்பட்ட டெபாசிட்டுகளுக்கு 2 கிராம தங்கக்காசு.
ரூ. 1000/- மற்றும் அதற்கு மேற்பட்ட டெபாசிட்டுகளுக்கு 10 கிராம் வெள்ளிக்காசு
பரிசுகள் : முதல் 1000 முதலீட்டாளர்களுக்கு மட்டுமே.

சேவிங்ஸ் பேங்க் கணக்கு ஆண்டுக்கு 10% வட்டி

ஆண்களுக்கே அதிகம் சருமநோய் வருகிறது!

"தோல் வியாதி பொதுவாக ஆண்களுக்குத்தான் வருகிறது காரணம் அவர்கள் சுத்தம், தோற்றம் இரண்டிலும் அவ்வளவு கவனம் செலுத்துவதில்லை. அவசரமாகக் குளித்து விட்டு வெளியே வந்து விடுகிறார்கள். அது தவிரவும் இறுக்கமான ஜட்டி, பேண்ட், இன் செய்த பனியன் என உடம்போடு ஒட்டி அணிவதாலும் பிரச்னைகள் வருகிறது..."

என்கிறார் பதினெண் சித்தர் மருத்துவமனையில் நிர்வாக இயக்குநர் சிநேகலதா.

"தோல் வியாதிக்குச் சித்த மருத்துவத்தில் மிகச் சிறந்த மருந்துகள் இருக்கின்றன. 'குறிப்பாக வெண் தேமலுக்குத் தரும் எண்ணெய் நல்ல ரிசல்டைத் தருகிறது. அதேபோல குழந்தைகள் தலையில் புண், உடம்பில் கரப்பான் என நிறைய அவஸ்தைப் படுவார்கள். பதினான்கு வயது வரை குழந்தைகளை இப்படிப்பட்ட வியாதிகள் தாக்குகின்றன. அதற்கப்புறம் காளான் போன்றவை வருகிறது.

தோல் என்பது மனிதனின் ஆரோக்கியத்தைக் காண்பிக்கும் கண்ணாடி. ஒருவரின் சருமத்தைப் பார்த்தே அவர் ஆரோக்கியமானவரா, இரத்தம் இல்லாமல் இருக்கிறாரா என்பதைத் தெரிந்து கொண்டு விடலாம். ஏன் குழந்தை, பெண், வயதானாவர்களின் சருமம் எல்லாம் அவர்களின் வயதைக் காட்டிக் கொடுக்கிறது அல்லவா? சருமம் மனிதருக்கு ஒரு நுழைவாயில் மாதிரி. கண்டிப்பாக அதைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்" என்கிறார்கள் இம்மருத்துவமனை டாக்டர்கள்.

அதே போல மற்ற எந்த நோயை விட தோல் நோய் வந்து விட்டால் பார்ப்பவர்கள் அருவருப்பு அடைகிறார்கள். அதனால் தானே தொழு நோயைப் 'பெருவியாதி' என்றார்கள். (இப்போது இதை முழுமையாகக் குணப்படுத்தி விடுகிறார்கள்). தோல் அழகையும் கொடுக்கிறது. அருவருப்பையும் கொடுக்கிறது. எனவே நம் உடம்பின் மற்ற உறுப்புக்களைப் போலவே இதையும் கவனமாகத்தான் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தோலில் படரும் காளான்கள் :

தோலில் ஏற்படும் நோய்களில் பொதுவாக கிருமிகளால் ஏற்படுவது, ஒவ்வாமையால் ஏற்படுவது, சத்துக்கள் குறைவால் ஏற்படுவது இது போன்று பலவாறாக பிரிக்கலாம்.

இதில் கிருமிகளால் ஏற்படும் காளான் தொற்று தற்காலத்தில் அதிகமாகக் காணப்படுகிறது.

காளான் தொற்றுகள் :

பெரும்பாலான காளான் தொற்றுகள் வட்ட வடிவில் பரவுகின்றன. பெரும்பாலும் அவை அரிக்கும் இயல்பு உடையவனாக உள்ளது.

பொதுவாக இவ்வகைத் தொற்றுக்கள் இடுப்பு, அரையிடுக்கு, தொடை உட்புறம், அக்குள் பகுதிகளில் அதிகமாக பாதிக்கும். சிலவேளை தலையில் மயிர் உதிர்ந்து செதில் செதிலாக உதிர்ந்து சொட்டை ஏற்படக்கூடும்.

நோய் வரும் காரணங்களை அறிந்து கொள்வது இன்றியமையாதது. ஏனெனில் நோய் உண்டாக்கும் காரணங்களை தெரிந்து கொண்டு விட்டால் நோய் உண்டாகாமல் தடுத்து விடலாம்.

தோல் பிணிகளுக்கு முக்கிய காரணம் சுகாதாரக் குறைவு தான். இதற்கு இன்றியமையாதது இன்றைய மக்களிடம் பரவலாகக் காணப்படும் சுய சுகாதாரம் (Personal hygeine) பற்றிய அறிவின்மை ஆகும்.

- நன்றாக சுத்தப்படுத்தப்படாத உடைகளை அணிவது.
- நன்றாக உடலைச் சுத்தமாக வைக்காமல் இருப்பது



• சிநேகலதா



தோசை சுடும்பொழுது ஒரு கரண்டி தோசை மாவைக் கல்லில் வார்த்துவிட்டு, பூப்போலத் துருவிய தேங்காய்த் துருவலை மாவின்மேல் பரத்தி, இருபுறமும் சிவக்க சுட்டு எடுக்க அருமையான, மணமான, ருசியான தேங்காய் தோசை தயார். இதற்குத் தொட்டுக் கொள்ள எதுவுமே தேவையில்லை.

- ஏஞ்சல் பாப்டிஸ்ட்

தொற்று நோய்களால் (காளான் தொற்று) பாதிக்கப்பட்டவருடன் நெருங்கிப் பழகுதல், பாதிக்கப்பட்டவருடைய உடைகளை அணிவது.

- தலையில் ஏற்படும் தொற்று பொதுவாக தலை வாரும் சீப்புகள் மூலம் பரவுகிறது.
- இறுக்கமாக ஆடைகளை அணிவதாலும் இவ்வகை தொற்றுகள் உண்டாகும்.
- உள்ளாடைகளை நன்றாக உலர்த்தி அணிவதால் இந்நோய் வராமல் தடுக்கலாம்.

பொதுவான தோல் நோய்கள்

1. கரப்பான், 2. சொறி, சிரங்கு, 3. தேமல், 4. காளாஞ்சரப்படை, 5. வெண்குஷ்டம், 6. குஷ்டம், 7. தோல் புற்றுநோய், 8. பால்வினை நோய்கள், 9. காணாக்கடி, 10. புழுவெட்டு, 11. முகப்பரு, 12.பாலுண்ணி, 13. மேகவெட்டு.

தோல் நோய்கள் வருவதற்கான

பொதுவான காரணங்கள் :

1. கிருமி தொத்துதல், 2. வயிற்றில் புழு, பூச்சி ஏற்படுதல், 3. ஒருவர் பொருளை மற்றவர் பயன்படுத்துதல், 4. ஒவ்வாமை, 5. விஷக்கடி, 6. பாரம்பரியம், 7. தாதுக்குறைவு.

கரப்பான் (Eczema) இது ஆறு விதம். இது அரிப்பில் தொடங்கி, வேர்க்குருவாக மாறி, கருப்பு நிறத்தை ஏற்படுத்தி, நீர் வடியும். நீர் வடியும் இடங்களில் பரவும். இது தொற்றக்கூடியது. பிறக்கும்போதே குழந்தைக்குக் கரப்பான் வரும். இதற்குச் சித்த மருந்துகள், கரப்பான் தைலம், பரங்கிப்பட்டை சூர்ணம், வல்லாதகி லேகியம்.

சொறி சிரங்கு (Scabies) :

சிறு குழந்தைகள், பள்ளிச் சிறார்களுக்கு அதிகம் வரும். இது உடலில் மடிப்புகளிலும், இடுக்குகளிலும் வரும். இது அரிப்பில் தொடங்கி, முற்றினால் கரப்பானாக மாறும். இதற்குச் சிரங்கு பேஸ்ட், சந்திமலர் சிறப்பான மருந்து.

தேமல் :

இது ஒரு காளான் தொற்று நோய். தோல் வெளிறிப் போகும். ஒருவிதமான மாவு வெளிவரும். வியர்வை அதிகம் சுரப்பவர்களுக்கு இது வரும். சீமை அகத்தி இலை சாறு இதற்கு மருந்து. இது ஆண்களுக்குக் கன்னத்தில், முதுகில் அதிகம் வரும்.

காளாஞ்சரப்படை (Psoriasis)

தோல் நோய்களிலேயே இதுதான் மோசமான நோய். பாதிக்கப்பட்டவர் மிகவும் கஷ்டப்படுவார். முதலில் தோல் சிவக்கும், படைபடையாக உதிர்ந்து, மெழுகு உதிர்வது போல் வரும். இதற்கு விஷக்கடி முக்கிய காரணம். இதனால் பாதிக்கப்பட்டு சொரிந்து சொரிந்து வாழ்க்கையே இழந்தது போல ஆகிவிடுவார்கள். வேறு எதிலும் அவர் களுக்குக் கவனமே போகாது. மிகச் சிறந்த சித்த மருந்துகளால் நிறைய பேர் நலம் பெற்றிருக்கிறார்கள்.

வெண்குஷ்டம் (Leucoderma)

இரும்புச் சத்து குறைவதால் ஏற்படுவது. இதற்குச் சித்த வைத்தியத்தில் சந்திமலர் போன்ற சிறப்பு மருந்து உண்டு. 'லூகோடர்மா' எனும் இதனைச் சித்த மருத்துவத்தில் நன்கு குணப்படுத்தி விடலாம்" என்கிறார் சிநேகலதா.

குஷ்டம் :

ஒருவிதமான உயிரணுக்களால் உண்டாகக் கூடியது. இது மூக்குச் சளியின் மூலம் பரவும். நரம்பு இடைவெளிகளில் பரவும். இந்த நோய் தொற்று மூலம் மூன்று சதவீதம் பரவுகிறது என்று சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. லைப்த செந்தூரம் போன்ற மருந்துகள் சிறப்பான பயன்களை அளித்து வருகின்றது.

தோல் புற்று நோய் :

பாதிக்கப்பட்ட உறுப்பைச் சோதிப்பதன் மூலம்தான் இதனைக் கண்டுபிடிக்க முடியும். (Biopsy) ஆரம்பகாலத்தில் கண்டுபிடிக்கப் பட்டால், லிங்கசெந்தூரம் மூலம் குணப் படுத்த முடியும். ஒரு சில தாதுக்கள் உடலில் பாதிக்கப்படும்போது இந்தத் தோல் வியாதி கள் வெளிப்படுகின்றன. ஏழுதாதுக்களும் கெட்டுப் போனால் AIDS போன்ற பெரு வியாதிகள் ஏற்படுகின்றன.

பால்வினை நோய்கள் :

தவறான பால் இனச் சேர்க்கையால் ஏற் படுகின்றன. ஜனன உறுப்புகளில் வலியில் லாத புண் ஏற்பட்டு, துர்நீர் சுரக்கும். தொடர்ந்து அரிப்பும், காய்ச்சலும் ஏற்பட்டு நெறி கட்டும். சித்த மருத்துவத்தில் 'ரசம்' கலந்த மருந்துகள் இதற்குச் சிறந்த நிவா ரணியாக இருக்கின்றன.

காணாக்கடி (Allergic dermatitis)

அமாவாசை, பௌர்ணமிக்கு இது தடிக் கும். சூரிய வெளிச்சம்பட்டால் சிவந்து விடும். காணாத பூச்சிகள் கடிப்பதால், ரத்தம் கெட்டு, இந்த நோய் ஏற்படும். சிவசக்தி குடோரி இதற்குச் சிறந்த நிவாரணியாக இருக் கிறது.

புழுவெட்டு (Pediculosis)

தலையில் அதிக வியர்வை ஏற்படுவதா லும், ஈரத்தைச் சரியாகத் துடைக்காததாலும், இது ஏற்படுகிறது. இதற்குச் சிறப்பான 'மை' ஒன்று இருக்கிறது.

முகப்பரு :

உணவில் கொழுப்பு அதிகம் இருப்பதால் இது ஏற்படுகிறது. மலச்சிக்கல் ஏற்பட்டாலும் இது தோன்றும். இவர்கள் ஐஸ்கிரீம் சாப் பிடக்கூடாது. இளநீர், பால், மோர் அதிகம் சாப்பிட வேண்டும்.

பாலுண்ணி :


இது முகத்தில் சிகப்பு கலந்த கொப்பு ளங்களாக வரும். இதற்குச் சிறப்பான நல்ல உள் மருந்துகள் உண்டு.

தோல் வியாதி உள்ளவர்கள் தவிர்க்க வேண்டியவை :

கம்பு, சோளம், மீன், கருவாடு, பெரிய கத்திரிக்காய், எண்ணெய்ப் பதார்த்தங்கள், தக்காளிப் பழம், அதிக பால் இனத் தொடர்பு மதுவகைகள்.

பொதுவான குறிப்புகள் :

1. கீரை வகைகள் அதிகமாக உண்ண வேண்டும்.
2. ஒருவர் உபயோகப்படுத்திய பொருட் களை மற்றவர் உபயோகிக்கக் கூடாது.
3. வழக்கமாக பயன்படுத்தும் பொருட் களை விளம்பரத்தைப் பார்த்து மாற்றிக் கொள்ளக் கூடாது.



ஆப்பம் சுடும்பொழுது ஒரு கரண்டி ஆப்ப மாவை, ஆப்பச் சட்டியில் விட்டுப் பரத்திய பிறகு ஒரு முட்டையை உடைத்து அதன் மேல் விட்டு மூடி சுட்டு எடுக்க, சத்தான ஆப்பம் தயார். இதற்கு முட்டை ஆப்பம் என்று பெயர். முட்டையை அடித்து ஊற்றக் கூடாது.

– ஏஞ்சல் பாப்டிஸ்ட்

மங்கையர் மலர் & மீரா ஹெர்பல் பவுடர் இணைந்து வழங்கும் கூந்தல் பராமரிப்புப் பக்கங்கள்

? எனக்குத் திடீரென்று முடி கொட்ட ஆரம்பித்திருக்கிறது. தினமும் தலைக்குத் தண்ணீர் ஊற்றிக்கிறதாலதான் கொட்டுது என ஸ்நேகிதி சொல்கிறாள். தலைக்குத் தண்ணீர் ஊற்றவில்லை என்றால் தலை வலிக்கிறது. இது நிஜம்தானா?

ஆர். சுந்தரா, சென்னை.

! தினம் தலைக்குத் தண்ணீர் ஊற்றுவதனால் முடி கொட்டாது. ஆனால் தலைக்குக் குளித்ததும் தலையை நன்றாகக் கோதி விட்டு சிக்கு எடுத்து நன்றாக உலர வைக்க வேண்டும். முடி ஈரத்துடன் இருக்கும் போது தலையைப் பின்னுவதும் கூடாது. பராமரிப்புச் சரியாக இல்லையென்றால், முடி கொட்டும். தினமும் ஹேர்-டிரையர் உபயோகிப்பது கூட முடிக்கு நல்லது அல்ல. டிரையரின் மிகுந்த சூடினால் கூட சிலருக்கு முடி கொட்டும்.

? எனது தங்கையின் முகத்தில் பாலுண்ணி என்று சொல்வோமே அது போன்று சின்னச் சின்ன வெள்ளையாக இருக்கிறது. தோல் நிபுணரிடம் காண்பித்தும் பிரயோஜனம் இல்லை. இதற்கும் ஏதேனும் மருந்து இருக்கிறதா?

எம். சுதாமதி, கோயம்புத்தூர்.

! பாலுண்ணி ஓரிடத்தில் வர ஆரம்பித்தால் அந்தச் சிழ்பட்டு பக்கத்தில் நிறைய வரும். மேலும் இது மற்றவர்களுக்கும் பரவும். இதற்கு மருந்து, அம்மாம் பச்சரிசி என்கிற மூலிகையை எடுத்து அதனை ஒடித்தால் வரும் பாலை அந்தப் பாலுண்ணியில் வைத்தால் உதிர்ந்து விடும். இதில் முக்கியமான காரியம் என்னவென்றால், இந்த மூலிகையை ஒடித்தவுடன் பாலை உடனடியாக எடுத்துப் பாலுண்ணியில் வைத்து விட வேண்டும். இதைத் தொடர்ந்து ஒரு வாரம் செய்ய வேண்டும். சேலத்தில் உள்ள சித்தர் மலையில் வேண்டிக் கொண்டால் பாலுண்ணி உதிர்ந்துவிடும் என்பார்கள். அது வல்ல உண்மைக் காரணம். அந்த ஊரில் உள்ள நீரை எடுத்து வந்து தினம் அதைப் பாலுண்ணி இருக்கும் இடத்தில் வைத்துக் கழுவினால் அது உதிர்ந்து விடும். அந்த நீரில் ஏதோ ஒரு மூலிகைத் தன்மை கலந்துள்ளதாக முன்னோர்கள் கருத்து. இது எனது அனுபவத்திலேயே ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி.

? எனக்கு மாத விலக்கு ஒரு மாதம் வரும் அடுத்த இரண்டு மாதம் வராது. பின் டாக்டரிடம் காண்பித்து அவர் சொன்ன மாத்திரையைச் சாப்பிட்டேன். 10 வது மாதத்திலிருந்து எனது முகத்தில் பருக்களும் மேல் உதட்டில் முடியும் வர ஆரம்பித்தன. எனக்கு யாரையும் பார்க்கவே வெட்கமாக உள்ளது. என்னுடைய பிரச்னைக்கு நிரந்தர தீர்வு சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு வாசகி.

! மாத விலக்கு சிலருக்குத் தாங்கள் கூறிய பிரச்னைகளை எழுப்பும். அதாவது உடம்பில் அதற்குரிய மாற்றங்கள் ஏற்படும் போது சிலர் இந்த மாதிரி தொல்லைக்கு ஆளாவார்கள். கண்டிப்பாக தாங்கள் மாத விலக்குச் சரியாக வருகின்ற மாத்திரையை சாப்பிட வேண்டும். மேலும், முகத்தில் உள்ள முடியை நிரந்தரமாகப் போக்க ஒரே வழி எலக்ட்ராலிஸிஸ். ஆனால் இந்த சிகிச்சை, நன்றாகக் கற்றுத் தேர்ந்த



ஹேர்-டை ஆறு மாதம் நீடிக்குமா?

பதில்களைத் தருபவர் —
அழகுக்கலை நிபுணர்
திருமதி. மைதிலி

அழகுக்கலை நிபுணரால் மட்டுமே செய்ய முடியும்.


முகப் பருவிற்கு வேப்பிலை, துளசி, புதினா, பூலாங்கிழங்கு இலைகளை ஒரே சம அளவு எடுத்து அரைத்து அதைத் தினம் பரு உள்ள இடத்தில் தடவினால் பரு குறையும். முகம் பளபளப்பாக இருக்கும். மாதவிலக்குத் தொல்லையினால் கூட முகத்தில் பரு வரும்.

எலக்ட்ராலிஸிஸ் என்பது ஒரு மிகத் துல்லியமான சிகிச்சை ஆகும். இதை மிகச் சரியாகச் செய்தால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

? எனக்கு வயது 38. அங்கங்கே கொஞ்சம் நரை இருக்கிறது. எனக்கு ஒருவர் ஒரு ஹேர்டை ஒரு பாக்கெட் கொடுத்து இது தடவினால் 6 மாதம் வரை கருப்பாக இருக்கும் எனக் கூறினார். அதை எப்படி உபயோகப்படுத்துவது என்று அவரும் சொல்லவில்லை. நானும் அப்போது கேட்டுக் கொள்ளவில்லை. உபயோகிக்கலாமா?


லக்ஷ்மி, விஜயவாடா.

! கடையில் விற்கும் எந்த விதமான ஹேர்டை தங்களுக்கு ஒத்துப் போகின்றது என்று சோதித்த பின்னரே டையை உபயோகப்படுத்த வேண்டும். அது எப்படி என்றால் கொஞ்சம் ஹேர்டையை ஒரு பாத்திரத்தில் எடுத்து ஹேர்டை அட்டையில் உள்ள குறிப்புப்படி கலந்து காதின் பின்புறத்தில் முடி இருக்கும் இடத்தில் தோலில் படுமாறு ஒரு ரூபாய் நாணயம் அளவு பூசி 24 மணி நேரம் தண்ணீர் விடாமல் வைத்துக் கொள்ள வேண்டும். எந்த விதமான பின் விளைவுகளும், பக்க விளைவுகளும் இல்லாவிடில் அந்தக் குறிப்பிட்ட ஹேர்டையை நீங்கள் தொடர்ந்து உபயோகிக்கலாம். மேலும் எந்த ஹேர்டையையும் 6 மாதங்கள் நிலைத்திருப்பது என்பது, தாங்கள் முடியை எப்படிப் பாதுகாக்கின்றீர்களோ அதைப் பொறுத்தது. மாதம் ஒரு முறை ஹேர்டை நிறம் மாறும் போது டச்-அப் செய்து கொள்ளலாம்.



சீதா
வழங்கும்
அற்புத படைப்புகள்
இலவசம்
ஒவ்வொரு சீதா வாட்டர் பில்ட்டருடனும் 100/- ரூபாய் மதிப்புள்ள ஒரு தெர்மோ வாட்டர் பாட்டில்
இலவசம்
ரூ. 650/- மதிப்புள்ள 17 லிட்டர் இரண்டு கேண்டில் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் வாட்டர் பில்ட்டர்.
● ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டபுள் கேண்டில் வாட்டர் பில்ட்டர்.
● ஹெவி டூட்டி மிக்ஸர் கிரைண்டர்
● ஸ்டெயின்லஸ் ஸ்டீல் காப்பர் பாட்டம் குக்கர்
● ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கேசரோல்
Seetha
இலவசம்
ரூ. 650/- மதிப்புள்ள 17 லிட்டர் இரண்டு கேண்டில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வாட்டர் பில்ட்டர்.
அலுமினியம் மிக்ஸிங் டியூப் எரிபொருள் சேமிப்புத் திறன் (68%+)
● ஆட்டோ இக்னிஷன் கேஸ் ஸ்டவ்
Seetha
சீதா ஹோம் அப்ளையன்சஸ்
5, நயாணார் நாடார் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4. போன்: 8521301, 8524425.

KAN ADS



சிறிய ஷாம்பூ வரும சாஷேயை எறிந்து விடாமல் சுத்தம் செய்து வைத்துக் கொண்டால், கோவிலுக்கு செல்லும்போது கையோடு எடுத்துச் சென்றால், வீட்டிற்குக் குங்குமம், விபூதி கொண்டு வர எளிதாக இருக்கும்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு பிளேடை இந்த சாஷேயில் போட்டு அனுப்ப லாம்.

— ஆர். சிதா

? எனக்கு 33 வயது ஆகிறது. எனக்கு 18 வயதிலேயே ஒன்றிரண்டு நரைமுடிகள் தோன்றின. 25 வயதில் நிறைய நரைமுடி வரத் தொடங்கி விட்டது. நான் அவ்வப் போது ஏதாவது ஒரு கூந்தல் தைலம் ஒரு வருடம், ஆறு மாதம் என உபயோகித்து இருக்கிறேன். ஒன்றும் பலனில்லை.

ஆகவே கடந்த மூன்று வருடமாக 'டை' போட ஆரம்பித்து விட்டேன் (மாதம் ஒருமுறை) இப்பொழுதும் கடந்த ஒரு வருஷம் (அகில் கட்டை வெட்டி வேர்) போன்ற மூலிகைகள் கலந்த எண்ணெய் உபயோகித்து வந்தேன். இப்பொழுது ஒரு மாதமாக கரிசாலங்கண்ணித் தைலம் உப யோகித்து வருகிறேன்.

இந்த 33 வயதில், கரிசாலங்கண்ணி எண்ணெய்த் தடவி, மாதம் ஒருமுறை 'டை' அடித்துக் கொண்டும் இருந்தால் இளநரை போகுமா? அல்லது மேலும் வராமல் தடுக் குமா?

என் பெண்ணிற்கும் என்னை மாதிரி இளநரை வருமா? வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

ஒரு வாசகி.

! நரை முடி அதிகம் தங்களுக்கு வந்தால் தங்கள் பெண்ணிற்கும் வர வாய்ப்பு உண்டு. இருந்தாலும், முடியை நல்ல மூலிகைத் தைலம் தயாரித்து உபயோகப்படுத்தி சரியானபடி பாது காக்க வேண்டும். அடிக்கடி தைலத்தை மாற்றுவ தாலும், முடி கொட்ட ஆரம்பித்து முடிக்குச் சக்தியில்லாமல் போகும் போது அது தன் தன்மையை இழந்து நரைக்க ஆரம்பிக்கின்றது. இளநரை, நம் உடம்பில் முடிக்குத் தேவையான சத்து இல்லாவிட்டாலும் தோன்ற ஆரம்பித்து விடும். ஊட்டச்சத்து கொடுத்து முடியை நன்கு பராமரித்தால் நரை முடி தோன்றாமல் பாது காக்கலாம்.

? எனககு 18 வயது வரை கூந்தல் நன்கு நீளமாக இருந்தது. என் தாய் (41 வயது)க்கு பெரியம்மை மற்றும் சில உபாதைகள் காரண மாக முன் தலையில் கடந்த 7 வருடங்களாக முழுவதும் சொட்டையுடன் காணப்படு கிறார். எனக்கும் 3 வருடங்களாக முடி மிகவும் பொடுகு தொந்தரவு காரணத்தில் ஒரேயடியாக மாறிவிட்டது. சொட்டை விழ ஆரம்பிக்கிறது. மிகவும் வருத்தமாக உள்ளது.

சிதா புஷ்பலதா, தாராபுரம்.

! தாங்கள் அதிமதுரத்தைப் பொடியாகச் செய்து பசும்பாலில் குழைத்துத் தலையில் உள்ள சொட்டையில் பத்து போல் போட வேண்டும். இந்த சிகிச்சையைத் தொடர்ந்து செய்து வந்தால் சொட்டையாக உள்ள இடத் தில் முடி வளரும். (அல்லது) பக்கத்தில் அழகு நிலையம் இருந்தால் high-frequency machine மூலம் அந்த சொட்டைப் பகுதிக்குச் சிகிச்சை செய்து இரத்த ஓட்டத்தை சீர் செய்தாலும் கண்டிப்பாக முடி வளரும். இது நன்றாகத் தேறிய அழகுக்கலை நிபுணரை அணுகினால், செய்து கொள்ளக் கூடிய சிகிச்சை ஆகும்.

? நான் சில மருந்துகள் உபயோகித்ததால் பேன் மற்றும் ஈறுகள் இறந்து விட்டன. ஆனால் இறந்த ஈறுகளை ஈறு குச்சியால் எடுக்க முடியவில்லை. இதை எடுப்பதற்கு ஒரு எளிய முறை கூறவும்.

ஒரு வாசகி.

! கண்டிப்பாக தலையில் உள்ள ஈறுகளை ஈறு எடுக்கின்ற சீப்பினால்தான் வாரி எடுக்க வேண்டும். இதை ஒரே நாளில் செய்ய முடி யாது. ஆனால் ஈறு எடுக்கின்ற சீப்பை உப யோகிக்கும் போது தலையில் எண்ணெய்ப் பிசுக்கு இருக்கக் கூடாது.

? மருதாணி தைலம் பயன்படுத்தினால் முடியின் நிறம் ப்ரௌன் கலராக மாறி விடும் என்கின்றார்கள் உண்மையா? மேலும் செம்பருத்திப் பவுடரைத் தலைக்குத் தேய்த் துக் குளிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. அந்தப் பவுடருடன் கறிவேப்பிலைப் பொடி யும் சேர்த்துத் தேங்காய் எண்ணெயில் போட்டுத் தினமும் தடவிக் கொள்ளலாமா?


JEWELLERY CHOLA
நம்பிக்கை,
நாணயம்,
கைராசி
வைரம்,
தங்க நகைகள்,
வெள்ளிப் பாத்திரங்கள்
ஜ்வல்லரி
சோழா
15, வடக்கு மாட வீதி
மைலாப்பூர்,
சென்னை-4.
போன்: 4940199

அல்லது தேய்த்து மட்டும்தான் குளிக்க வேண்டுமா?

சசிகலா, தஞ்சாவூர்.

! சென்ற இதழில் சொன்னது போல கூந்தல் தைலம் தயாரித்து அதனைத் தலைக்குத் தேய்த்துத் தலைமுடியை நாங்கள் கூறியவாறு பராமரித்து வந்தால் உடனே இல்லாவிட்டாலும் குறைந்த பட்சம் ஒரு வருட காலத்துக்குள் நல்ல பலன் தெரியும்.

குழந்தைகளின் முடியை எப்படி பாதுகாப்பது :

இல்லத்தரசிகளுக்கும், தாய்மார்களுக் கும் உள்ள பெரிய பிரச்னை குழந்தைகளுக்குப் பேன், ஈறுகள் உள்ளதுதான். இரண்டாவது நேரமின்மை காரணம். மூன்றாவது விளம்பர ஆசை. இதற்கு எளிதான சில யோசனைகள் :

பள்ளி செல்லும் குழந்தைகளின் முடியை வளர்ப்பது என்பது அவர்களாக தங்கள் முடியைப் பாதுகாக்கக் கற்றுக் கொள்ளும் வரை அத்தனை எளிது அல்ல. குழந்தைகளுக்கு வாரம் 2 முறை தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டும். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதனால் குழந்தையின் முடி மட்டுமின்றி சருமமும் பளபளப்பாக இருக்கும். குளித்த பிறகு நன்கு முடியைத் துடைத்து, கோதி விட்டு சிக்கு எடுத்து உலர வைத்து வார வேண்டும். நிறைய முடி இருந்து நாம் எண்ணெய் அதிகம் தடவி பின்னி விடுவதால் நமது தலை வேர்க்கும் போது வேர்வையும், முடியில் உள்ள எண்ணெயும் வேரில் தங்கி அதனால் முடி கொத்து, கொத்தாக உதிரும். இல்லையென்றால் முடியில் விரும்பத்தகாத சிக்கு வாசனை வரும். பேன்களின் முட்டைகளைத் தான் நாம் ஈறு என்கிறோம். இது வெகு விரைவில் வந்து விடும். ஆனால் போக்குவதுதான் கடினம். தலையில் நீர் கோர்த்துக் கொள்வது இப்போது பொதுவான பிரச்னையாக உள்ளது. எனவே கண்டிப்பாக 10 வயது வரை முடியை வெட்டி விடுவது என்பது மிகவும் பாதுகாப்பானது.

பேன் மருந்தை எப்படி உபயோகிப்பது :

முதலில் பேன் மருந்து குழந்தைகளுக்கு ஒத்துக் கொள்கிறதா? என்று கண்டிப்பாக பரிசோதனை செய்ய வேண்டும். பிறகு பேன் மருந்து போட்டு தலைக்குப் பின்புறமாக முகத்தில் தண்ணீர் படாமல் Hair wash செய்ய வேண்டும். இதில் மிகவும் முக்கியமான விஷயம் என்னவென்றால், சாதாரணமாக தலைக்கு விடுவது போல் விடக் கூடாது. அப்படிச் செய்தால் பேன் மருந்து கலந்த அந்த நீர் குழந்தைகளின் வாயில் போக வாய்ப்பு இருக்கிறது. கண்டிப்பாகச் சரியான முறையில் Hair wash செய்ய வேண்டும். பேன் மருந்தினால் Hair wash செய்து முடிந்த பிறகு சாதாரணமாக நாம் வாரினாலே பேன் இறந்து உதிர்ந்து விடும். ஆனால் அதன் முட்டை அப்படியே தங்கி மீண்டும் பேன் உற்பத்திக்கு வழி வகுக்கும்.

இதற்கு என்ன வழி என்றால் பேன் மருந்து போட்ட மறுநாளே ஈறு எடுக்கின்ற சீப்பை உபயோகித்து குழந்தைக்கு வலித்தாலும் பரவாயில்லை என்று கோதி எடுத்தால் இந்தப் பிரச்னையிலிருந்து நிரந்தர தீர்வு காணலாம்.

பேன் நிறைய இருப்பதால் குழந்தைகள் தலையைச் சொரிந்து கொண்டே இருப்பதால் பேன் கையில் உள்ள நகத்தில் அண்டி குழந்தைகள் சாப்பிடும் பதார்த்தத்தில் நம்மை அறியாமலேயே கலந்து விடுகின்றது. நகம் சொரியும் போது தலையைக் கீறுவதால் தலையில் புண் ஏற்பட்டு சீழ் படிந்து டாக்டரிடம் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

மேலும் விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால் குழந்தைகள் பேன் தொந்தரவினால் எப்போதும் சொரிந்து கொண்டே இருப்பதால் அவர்களின் நினைவு அதிலேயே மூழ்கி விடுவதால் குழந்தைகளின் நடவடிக்கைகள் உற்சாகமாக இருக்காது. படிப்பிலும் கட்டியாக இருக்க மாட்டார்கள் என்றும் சொல்கிறார்கள்.

சுவையான ப்யூட்டி பார்லர் சம்பவம்

பரிசு பெற்ற கட்டுரை

எடுங்கள் 250 ரூபாய்!

என் தோழியின் தோழி ஒருத்தி காஞ்சனா (பெயரை மட்டும் மாற்றியிருக்கிறேன், சம்பவம் உண்மை) என்று பெயர், வெளியூர்

இந்த இதழ் பரிசுக் கட்டுரைக்கு
மீரா அளிக்கும்
பரிசு - ரூ. 1,000/-
மதிப்புள்ள குக்கர்

அடுத்த இதழுக்கான போட்டி -
உங்கள் மகளின்
கூந்தலை எப்படிப்
பராமரிக்கிறீர்கள்?

சென்று ஆறுமாத காலம் பியூட்டிஷியன் கோர்ஸில் படித்துவிட்டு, சொந்த ஊருக்கு வந்தாள். முதலில் சில க்ரீம்கள், லோஷன்கள் மற்ற சில தேவையான பொருட்களை வாங்கி வைத்துக் கொண்டு, அவர்கள் வீட்டில் ஒரு ரூமைக் காலி செய்து, அந்த ரூமிலேயே 'பியூட்டி பார்லர்' வைத்தாள். ஆனால், பயமா, இல்லை வெட்கமா, இல்லை அனுபவமின்மை காரணமா என்று தெரியவில்லை, அந்த பார் லருக்கு ஒரு ஈ, காக்கை கூட வரவில்லை.

காஞ்சனா, என் தோழியிடம் சொல்லவே அவளும் தன் கல்லூரியில் பல பெண்களிடம் சொன்னாள். முதல் நாள், என் தோழி, அவ ளின் நெருங்கிய சினேகிதி ஒருத்தியை பணம் எல்லாம் கொடுக்கத் தேவையில்லை, சும்மா வந்து அழகு 'படுத்திக் கொள்'' என்று கூறி அழைத்து வந்தாள். வந்த பெண், பாவம் ரொம்ப சாது!

காஞ்சனாவும், முதன் முதலில் தன் தொழில் திறமையைக் காட்ட வாய்ப்பு வந்த தைக் கண்டு, மிகவும் சந்தோஷமாக அந்தப் பெண்ணை அதிரூப சுந்தரியாக்கிவிட்டு, கை கழுவி வர பாத்ரூம் சென்று விட்டாள். வந்த பெண்ணும், தன் கண்ணையே நம்பாமல், கண்ணாடியில் பார்த்துக் கொண்டு உட்கார்ந் திருந்தாள்.

காஞ்சனாவிற்கு ஒரு அண்ணன் உண்டு, மிலிட்டரி ஏர்ஃபோர்சில் இருப்பவர். மிக, மிக, குறும்புக்காரர். அவர் அந்தச் சமயத்தில் லீவில் வந்திருந்தார். அவர் அங்கு வந்து உட் கார்ந்திருந்த பெண்ணிடம், ''என் தங்கை உங்களுக்கு ஃபேஷியல் செய்து, ஹேர்ட்ரெஸ் செய்து, மேக்கப் போட்டு விட்டதற்காக இரு நூற்றைம்பது ரூபாய் கொடுங்கள்'' என்று கூலாகச் சொல்லவும், தோழி அதை உண்மை யென்று நினைத்து விட்டாள். அவளுக்குப் பயத்தில் வேர்த்து விட்டது.

''என்னை ஃப்ரீயாக தானே மேக்கப் செய்து விடுவதாகச் சொல்லி அழைத்து வந் தார்கள்'' என்று கூறியிருக்கிறாள்.

அவரும், ''ஓசி என்றால் உடனே ஓடி வந்து விடுவதா.... க்ரீம்கள் எல்லாம் என்ன விலை தெரியுமா... எடுங்கள் ரூபாயை'' என்று சொல்லவும், தோழி அழுதே விட்டாள்.

பாத்ரூமிலிருந்து வந்த காஞ்சனா, விபரத் தைக் கேட்டதும், ''என் அண்ணன் அப்படித் தான். யாரையாவது வம்புக்கு இழுத்துக் கொண்டிருக்கும்'' எனச் சொல்லி, அவளைச் சமாதானப்படுத்தினாள்.

இதில் என்ன விசேஷம் என்றால், அந்தப் பெண்ணின் அப்பாவித்தனம், காஞ்சனாவின் அண்ணனுக்குப் பிடித்துப் போய், பிடிவாத மாக வீட்டில் சொல்லி, அந்த பெண்ணையே அப்புறம் திருமணம் செய்து கொண்டுவிட்டார்.

- என். உஷா, நீடாமங்கலம்.

பிரசுரத்திற்குச்சில : கல்யாணப் பெண்ணிற்கு B.P.?

எங்களின் கூட்டுக் குடும்பம் மிக ஜாலி யானது. என் மைத்துனர்களும் நாத்தனார் களும், நாங்கள் மருமகள்கள் மூன்று பேரும் நண்பர்கள் போல்தான் பழகுவோம். எப் பொழுதும் எதிலும் கேலி கிண்டல்தான். யாருக்கும் பட்டப் பெயர்தான். எங்கள் மைத் துனர்கள் எங்களை சுருக்கிதான் கூப்பிடுவார் கள். பெரிய மன்னியான என்னை P.M. என்றும், சின்ன மன்னியை C.M. என்றும், கடைசி குட்டி மன்னியை M.M. என்றுதான் கூப்பிடு வார்கள். ப்ளீஸ் சொ. தொ. என்றால் சொல் லித் தொலை என அர்த்தம். இதையெல்லாம் சொல்லும் பாங்கு செல்லமாகவும் இருக்கும். யாருடைய மனமும் புண்படும் படியும் பேச மாட்டார்கள். இப்படியே எதிலும் சுருக்கிப் பேசிப் பழகிய எங்களுக்கு ஒரு அதிர்ச்சி, எங்களின் கடைசி நாத்தனார் கல்யாணத்தில்.

கல்யாணம் முடிந்து சாயங்காலம் ஏதோ

சிறு குழந்தைகளுக்குப் புத்தாடையின் மீது ''ஏப்ரான்'' அணிவித்து விட்டால் சின்ன மத்தாப்பு, 'சுறுசுறுவத்தி' போன்றவற்றைப் பற்றவைத்தால் வரும் சிறு நெருப்புப் பொரிகளிலிருந்து அவர்களது பளபள ஆடையையும் குழந்தையையும் பாது காக்கலாம்.

— ஆர். சீதா



எடுத்துவர நான் வீடு போய் திரும்பி வரும் பொழுது சத்திரத்தில் என் நாத்தனாரைக் காணவில்லை, மாடியிலிருந்து நான் கீழே நின்றிருந்த என் மைத்துனரிடம் 'ஜீ' எங்கே என்றேன் (ராஜீ என்ற என் நாத்தனாரை 'ஜீ' என்றுதான் அழைப்போம்) அவனும் மிகச் சத்தமாக, 'நார், B.P. போயிருக்கா' என்றான். (நார் - நாத்தனார்.) நான் with clinic? என்றேன். அவனும் 'யா' என கூறிப் போய் விட்டான். நாங்கள் பேசுவதை ஒரு அத்தைப் பாட்டி கேட்டுக் கொண்டிருந்தார் போலிருக்கிறது. உடனே நெருப்பில்லாமல் பத்த வைத்து விட்டார்.

"கல்யாணப் பெண்ணிற்கு B.P. இருக்கு, இன்று அதிகம் ஆயிருக்குப் போலிருக்கு, அதனால் கிளினிக்கிற்கு அழைத்துப் போயிருக்கிறார்கள். அவளின் அண்ணாவும், மன்னியும் பேசிக் கொண்டதை என் காதால் கேட்டேன்" என கூறிவிட்டார். ஏதோ வேலையாயிருந்த எங்க மாமியாருக்கு இது எதுவும் தெரியாது. சம்பந்தி மாமா, மாமி மிகவும் நல்லவர்கள் மெதுவாக என் மாமியாரிடம் வந்து ஒரு நிமிடம் தனியாகப் பேசணும் என கூறி அழைத்துப் போய்,

"உங்க பெண்ணிற்கு பி.பி. உள்ளதாமே? எதுவாக இருந்தாலும் மறைக்காதீர்கள் நாங்கள் அதற்குத் தகுந்த சிகிச்சை இனிமேலும் அளிக்கிறோம். இத்தனை சிறிய வயதில் பி.பியா?" எனப் பேசப் பேச என் மாமியாருக்குத் தலை சுற்றாத குறை.

"என்ன சொல்கிறீர்கள் என் பெண்ணுக்கு பி.பியா? யார் சொன்னது? மிக ஆரோக்கியமான பெண்ணாயிற்றே" என கூறவும், அவர்களும் உங்க மருமகளும், மகனும் பேசிக் கொண்டிருந்தார்களாம் எனக் கூறவும், நானும் மைத்துனரும் குற்றவாளி கூண்டில். இரண்டு பேருக்கும் அதிர்ச்சி என்ன சொன்னோம், எப்பொழுது பேசினோம், என அலசி ஆராய்ந்த பிறகு மிக சாந்தமாக அத்தைப் பாட்டியை வரவழைத்துக் கேட்டால் விஷயம் தெளிவாயிற்று. சம்பந்திமார்களுக்கு நாங்கள் மிக விரிவாக விஷயத்தை விளக்கினோம். ராஜீயை 'ஜீ' என்றும் 'ப்யூட்டி பார்லர்' போயிருக்கா என்பதை B.P. என்றும் கிளினிக் ஷாம்பூவை 'கிளினிக்' என்றும் பேசியதைக் கூறக் கூற அனைவருக்கும் ஒரே சிரிப்புதான்.

இதற்கிடையில் பியூட்டி பார்லர் சென்று மிக அழகாக அலங்காரமாய்த் திரும்பி வந்த என் நாத்தனார் விஷயம் அறிந்து, கொண்டை அவிழ்ந்து போகும் அளவுச் சிரித்தாள். என் மாமியாரோ, "போறுமே உங்களின் பேச்சும், நீங்களும், நீங்க அடிக்கிற கூத்தில் எனக்கு நிஜமாகவே பி.பி. வந்துடும் போலிருக்கு" என்றார்.

- ராதா நரசிம்மன், பெங்களூர் - 27.

சித்தெறும்பு கடிச்சுது!

எங்கள் மாதர் சங்கத்தில் இருந்த பதினைந்து பெண்களும் சேர்ந்து, ஆண்டு விழா கொண்டாட நினைத்தோம். விழா நாளன்று நாங்கள் அனைவரும், 'ப்யூட்டி பார்லர்' சென்று மேக்-அப் செய்து கொள்ளலாம் என்று திட்டமிட்டு, அன்று அவ்வாறே அனைவரும் மதியம் மூன்று மணி அளவில் சென்றோம். செல்லும் முன்பு நான் என் கணவருக்கு ஃபோன் செய்து, ஆபீஸ் விட்டு வரும் போது, ப்யூட்டி பார்லருக்கு வந்து என்னை அழைத்துக் கொண்டு போகும்படி சொல்லியிருந்தேன். அவ்வாறே அவரும் சுமார் ஐந்து மணி அளவில், 'ப்யூட்டி பார்லரில்' வந்து காத்திருந்தார்.

அப்போது நான், முத்துக்கள் பதித்த அழகான கொண்டை போட்டுக் கொண்டு இருந்தேன். நான் வெளியே வந்து ஒரு பதினைந்து நிமிடங்கள் காத்திருக்குமாறும், முக அலங்காரம் முடிந்தவுடன் வருவதாகவும் சொல்லி விட்டுத் திரும்பகையில், என் முத்துக் கொண்டையை கவனித்த அவர் 'கொண்டை சூப்பர்' என்றார். உள்ளே சென்றவுடன் எனக்குத் தலைக்குள் ஒரே அரிப்பு. தாங்க முடியவில்லை. விரலால் சொறிந்து கொள்ளவும் முடியாமல், கொண்டை இறுக்கமாகப் போடப்பட்டு இருந்தது. ரொம்பவும் தவித்துப் போனேன். எனக்கு முக அலங்காரம் செய்யும் பெண்ணிடம் கூறினேன். அதற்கு அவள் 'ஹேர்பின் ஏதாவது ஒன்று மண்டையில் உரசிக் கொண்டிருக்கும் கொஞ்ச நேரம் போனால் சரியாகிவிடும்' என்றாள்.

எனக்கோ மண்டைக்குள் ஏதோ குடைவது போலிருக்கவே, தாங்க முடியாமல் கொண்டையைப் பிரித்துவிட்டேன். அப்போது மயிர்க்கால்களுக்கு நடுவே ஒரு பெரிய கட்டெறும்பு இருந்ததை அந்தப் பெண் கண்டு பிடித்து எடுத்தாள். நேரமாகி விட்ட காரணத்தால் எனக்கு மறுபடியும் கொண்டை போட வேண்டாம் என்று சொல்லி விட்டு, பின்னிய கூந்தலுடன் வெளியே வந்தேன். என் கணவர் (திரு. சின்னராஜா) என்னைப் பார்த்ததும் கொண்டை என்ன ஆச்சு? என்று கேட்டார். அப்போது நான், 'சின்ன ராசாவே கட்டெறும்பு என்ன கடிச்சுது' என்று ராகமாகப் பாட 'ப்யூட்டி பார்லரே' சிரிப்பால் நிரம்பி வழிந்தது.

- கீதாஞ்சலி, சென்னை.

➢ மக்கள் தங்கள் பணத்தை டெபாசிட் செய்கிறார்கள். சிறிது காலத்துக்குப் பணம் பாதுகாப்புடன் வைக்கப்படுகிறது. அப்படி பாதுகாப்பாக இருந்தால்... ஆனால், எப்போதுமே அப்படி இருப்பதில்லை. ITI போன்ற பாதுகாப்பான நிறுவனமாக இருந்தால்தான், உங்கள் பணம் பெருகும். உங்கள் பிக்செட் டெபாசிட்டுகளுக்குக் கிடைக்கும் பலன்கள் அவ்வளவுதானா? ➢ இப்போது ITI-யைப் பாருங்கள். அதில் டெபாசிட்டையும் வட்டியையும் தவிர, வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் வழங்கும் நன்மைகள் பல உள்ளன. அதனால்தான் எங்கள் 'டிரஸ்ட் ப்ளஸ்' சேவையில் உங்களுக்குக் கூடுதலான நன்மைகள் வழங்குகிறோம். ➢ கவனியுங்கள் - மிகவும் அவசரத் தேவையுள்ள காலங்களில் நீங்கள் உடனடியாகப் பணத்தை எடுத்துக் கொள்ளும் வசதி. எங்கள் அலுவலகங்கள் உள்ள 35 நகரங்களிலும் உங்கள் வாசற்படிக்கே வந்து அளிக்கப்படும் 'வாடிக்கையாளர்-நட்புறவு' சேவை. இராப்பகலாக தொலைபேசி மூலம் 'தகவல் தரும்-பெறும்' வசதி. சென்னையில் 8274871 என்னும் தொலைபேசி எண்ணை சுழற்றினால், உங்கள் தேவைகளை கவனிக்க ஓர் இனிமையான குரல் ஒலிக்கும். நீங்கள் பாடுபட்டு சம்பாதிக்கும் பணத்தை சேமிக்க வழிமுறைகளைக் கண்டுபிடித்து உதவ, 'இலவச வருமான வரி' ஆலோசனை சேவை*. ➢ சுருக்கமாகச் சொல்லப் போனால், ITI-யின் 47 ஆண்டுகால புகழுக்கு மேலும் புகழ் சேர்க்க, இந்தச் சில சிறப்பம்சங்கள்.

A TRADITION OF TRUST
SINCE 1946

தி இன்வெஸ்ட்மெண்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிமிடெட்.

[illegible]

[illegible] - 600 034. [illegible] 8274871, 8274863, 8271691.

* இந்த சேவை சென்னைக்கு மட்டுமே விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இந்த சேவையால் ஏற்படும் பொறுப்புகளுக்கு ITI பொறுப்பாளி அல்ல.

(F) Profit of the Company before and after making provisions for tax for the three financial years immediately preceding the date of advertisement

(G) Dividend declared by the Company in respect of the said year. (Rupees in lakhs percentage).

	Profit before Depreciation & taxation (Rs. in lakhs)	Profit before taxation	Profit after taxation	Amount (Rs. in lakhs)	Percentage
31-3-94	792.74	434.91	411.91	76.27	35
31-3-93	474.37	307.08	291.08	76.27	35
31-3-92	312.81	187.44	183.19	56.10	28

(H) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets:

LIABILITIES	31-3-94 (Rs. in lakhs)	31-3-93	ASSETS	31-3-94 (Rs. in lakhs)	31-3-93
Share Capital	217.88	217.67	Fixed Assets	3239.01	2438.88
Reserves & Surplus	1233.31	897.35	Investments	741.13	215.66
Secured Loans	3229.69	2766.40	Current Assets, Loans & Advances	8671.19	6066.06
Unsecured Loans	5290.77	2802.41	Miscellaneous Expenditure	14.79	16.22
Current Liabilities	2535.08	1916.60			
Provisions	159.39	136.39			
	12666.12	8736.82		12666.12	8736.82

Note : Contingent Liabilities not provided for

(i) On partly paid Shares and Debentures — Rs. 5.08 lakhs

(ii) Sales tax on lease contracts under writ petitions — Rs. 22.35 lakhs

I. The amount which the company can raise by way of deposit under Reserve Bank of India directions — Rs. 143.64 crores.

Aggregate of deposits actually held on the last day of the immediately preceding financial year, viz 31-3-94 — Rs. 37.88 crores.

J. The Company has no over due deposits other than unclaimed deposits.

K. It is hereby declared that :-

(i) The company has complied with the applicable provisions of the directions.

(ii) The compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India.

(iii) The deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities.


The above text of this advertisement has been approved by the Board of Directors on 27-5-94

(By order of the Board)
For The Investment Trust of India Limited

P.S. Balasubramanian
Chief Executive and Secretary.

Note : A copy of this text duly signed by a majority of the Directors of the Company has been filed with the Reserve Bank of India, Bangalore.

A + HIGH SAFETY



இப்படியும் ஒரு நிறுவனமா?

★ 'மண்டைக்கனம் ஜாஸ்தியாப் போச்சு' என்ற தலைப்பைப் பார்த்ததும் கர்வம் அடைந்தவர்களை அறிவு பூர்வமாகத் திருத்துவது பற்றிக் கூறுவீர்கள் என எண்ணினேன். ஆனால் 'சைனஸைடிஸ்' பற்றித் தெளிவாகக் கூறி அசத்தி விட்டீர்கள்.

சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

★ எத்தனை குறிப்புகள்? எத்தனை பயனுள்ள விஷயங்கள்? கொலுவுக்கு அழகூட்ட எத்தனை, எத்தனை யோசனைகள்? வார்த்தைகளை தேடிப் பிடிக்க வேண்டும் பாராட்டுவதற்கு.

சென்னை - 41, சுகவரி.

★ சின்னச் சின்ன விஷயங்களால் கணவன் தன்னை சந்தோஷப்படுத்த வேண்டும் என்று மனைவி எதிர் பார்க்கிற மாதிரி, கணவனையும் அவ்வாறு தான் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று பெரும்பாலான மனைவிகளுக்குத் தோன்றுவதில்லை. தாம்பத்தியம் என்பதில் வாங்குவதற்கு மட்டுமல்ல கொடுப்பதற்கும் எவ்வளவோ விஷயங்கள் உண்டு என்பதை அழகாக எடுத்துரைத்த கதை 'சுபா'வின் குறுநாவல்! நேற்று பூத்த ரோஜா. பாராட்டுக்கள்.

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

★ 'நாங்கள் பெண்கள் விரும்பும் நகை வியாபாரத்தில் இருந்தாலும், பெண்களை விளம்பர சாதனமாக வைத்து விளம்பரம் செய்ய விரும்புவதில்லை. அதை எங்கள் கோட்பாடாகவே வைத்து இருக்கிறோம், என எல்.கே.எஸ். கோல்ட் ஹவுஸின் உரிமையாளர் கூறியிருப்பது மனத்திற்கு ஆறுதலைத் தந்திட்டது. எந்த வித சம்பந்தமும் இல்லாவிட்டாலும் கூட, பெண்களை விளம்பரப் பொருளாக பாவித்துப் பெண்மையை கொச் சைப்படுத்தி வரும் இன்றைய விளம்பர யுகத்தில் ''இப்படியும் ஒரு நிறுவனமா'' என வியந்து போனேன்!

தூத்துக்குடி, எஸ். சையது முகமது.

★ எதைச் சொன்னாலும் ஏன், எதற்கு? என்று ஆயிரம் கேள்வி கேட்கும் இன்றைய இளம் பெண்களுக்கு தாய்மார்களாகிய நாங்கள் எப்படிச் சொல்லி விளங்க வைப்பது என்று கவலைப்படும் தருணத்தில் வெளி வந்த ''பாரம்பரிய உடை அணிவதில் பெருமைப் படவேண்டும்'' என்ற கட்டுரை எங்கள் கவலையை லேசாகி விட்டது. மிகத் தெளிவாகவும், எளிதில் புரிந்து கொள்ளும் வழியாகவும் அமைந்துள்ள இது போன்ற கட்டுரைகள் இன்னும் பல வர வேண்டும். இவற்றை இளம் பெண்கள் படித்துத் தூர எறிந்து விடாமல் தன் சந்ததிக்கும் இவற்றைப் பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

புது டெல்லி, ஜனனி ராமதுரை.

★ இணைப்புப் புத்தக அட்டையை பூப்போட்டு பூஜிக்க முடிவு செய்து விட்டேன். நன்றி.

மதுரை - 16, எல்.எம். அபிநாட்சயா.

★ 'நவராத்திரி ஸ்பெஷல்' உண்மையிலே சூப்பர் ஸ்பெஷல். எத்தனை யோசனைகள் கொலுவிற்கு! அப்பப்பா! படித்துப் படித்து மகிழ்ந்தோம். அது மட்டுமல்ல நீங்கள் தந்த ஒவ்வொரு யோசனையையும் கொலுவில் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்தோம்.

தர்மபுரி, எம்.எஸ். சரஸ்வதி வெங்கடேசன்.

★ தங்களின் ''சில பிரச்னைகள், சில வார்த்தைகள்'' படித்தேன். என்ன ஆழமான ஒரு முடிவினை வெகு அழகாக எழுதியுள்ளீர்கள். ''மனிதர்கள் அல்லாத மனிதர்கள் உங்கள் வாழ்வில் வர நேர்ந்தால், தீக்குளிக் காதீர்கள், கிணற்றில் விழாதீர்கள், குறைந்த பட்சம் கண்ணீர் கூடச் சிந்தாதீர்கள்.''

நிச்சயமாக உங்கள் தெளிவான வார்த்தை பலிக்கும். ''இன்றைய பெண்கள் மகாபுத்திசாலிகள். தைரியசாலி கள்'' உண்மைதான். மண் பார்த்து நடந்தவள், விண்ணிலே காலடி எடுத்து வைக்கிறாளே! இளையபாரதம் ஒளிபெற்று வழிகாட்ட ஆரம்பித்து விட்டது.

திருவிடைமருதூர், ஏ. சிந்துபாரதி.

★ வாழ்க்கையினை இன்னது என உணராதவர்கள் கல்லூரி மாணவிகள். கற்பனையுலகில் திரிபவர்கள். ''புதுமைக் கருத்துகள், பெண் சுதந்தரம்'' என்று பேசி இல்லறத்தின் மேல் அவர்களுக்கு வெறுப்பு ஏற் படுத்துவது இன்றைய நாகரீகத்திற்கு நல்லது அல்ல என்பதனை நயம்பட உரைத்தமைக்கு நன்றி.

சென்னை - 47, ஜெயலட்சுமி ஈஸ்வரன்.

★ எங்கள் வீட்டுச் சமையலறையில் நான் நடந்து கொள்ளும் விதத்தினையே என்னுடன் கூடவேயே இருந்து கவனித்து ''சமையலறை மர்மங்கள்'' என்னும் கட்டுரையை சூரியா சிதானந்த் எழுதியிருப்பாரோ என்ற எண்ணத்தை என்னுள்ளே ஏற்படுத்தும் விதத்தில் கட்டுரை அத்தனை யதார்த்தமாய் அமைந்திருந்தது.

தூத்துக்குடி, சியாமளா சிவராமன்.

(73 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

கெமிகல்களைப் பயன்படுத்தி பிரிண்ட் செய்யச் சொல்கிறார். அதைப் பிறகு 'ஸ்டீம்' செய்தும் விடுகிறோம். மேலும் இரண்டு பாதுகாப்பு அம்சங் களை எப்போதும் கையாள வேண் டும்.

முதல் வாஷ் வீட்டில் தோய்க்கக் கூடாது. பிறகு வீட்டில் தோய்க்க லாம். ஆனால் துவைக்கும் சோப் களைப் போடக் கூடாது. உடம்புக் குத் தேய்த்துக் குளிக்கும் சோப்பைப் பயன்படுத்தலாம். அதுவும் நீங்கள் சொன்ன மாதிரி விலையில் இருக் கும் புடைவைகள் தவிர ஐந்நூறு, அறு நூறு ரூபாயிலிருந்து கூட எங்களிடம்





இருக்கிறது.''

''அப்படியா, நடுத்தர வர்க்கப் பெண்மணிகள் வாங்கும் விதமாக இருக் கிறதே.''

''ஆமாம். அதில் நாற் பது கிராம், அறுபது கிராம் புடைவைகள் என இருக் கிறது. அறுபது கிராம் புடை வைகள் நன்கு துவைத்து உபயோகிக்கலாம்... நீங்கள் படத்தில் பார்க்கும் நீல, வயலட் பிரிண்டட் பட்டுப் புடைவைகள் அந்த வகை யைச் சார்ந்ததுதான்....''

விருது பெற்ற டிசைனர் ராதா கிருஷ்ணன் தான் இவர்களுடைய புடைவைகளுக்கு டிசைன் செய்கிறாராம். இவர் செய்த மகா பாரத டிசைன்கள் கொண்ட 'பல்லு' (தலைப்பு) உடைய புடைவைகள் கண்ணைக் கவரும் விதத்தில் இருக்கிறது.

''இவையெல்லாம் 'ஃப்ளேச்சஸ் சில்க்' என்பார்கள். இவை சாதாரண பட்டு இழையை விட உயர்ந்த ரகம். இவை அற்புதமான பளபளப்பையும், வண்ணத்தையும் மிளிரச் செய்யும். இவற்றிலேதான் ஜரிகையாலும், நூலாலும் மகாபாரத டிசைன்களை நெய்கிறார்கள்.

(இங்கு படத்தில் உள்ள மெஜந்தா, பச்சைப் புடைவைகள் அந்த வகை தான்.)

''இப்போதெல்லாம் பாரம்பரிய முறையில் உள்ள பட்டுப்புடைவைகளை வாங்குபவர்கள் குறைவு. நிறைய பேர் 'பேன்ஸி சாரீஸ்'தான் விரும்புகிறார்கள். தென்னாப்பிரிக்காவில் இருந்து வரும் பெண்கள் 'குஜராத்தி புடைவை' இருக்கிறதா என்று கேட்பார்கள். (இங்கு படத்தில் சிவப்புப் புடவை இருக்கிறதே, அதுதான்!) இந்த மாதிரி ஜெகஜ்ஜோதி யாக இருக்கும் புடவைகளை விரும்பி வாங்குகிறார்கள். இவையெல்லாமே ஃபேன்ஸி சாரீஸ் தான்!'' என்கிறார் சந்திர சேகர்.



முன்பு மாதிரி புடைவைக்கு ரவிக்கை தேடி அலைய வேண்டியதில்லை. பட்டுப் புடைவையானாலும் அதோடு ப்ளவுஸ் துணியும் வந்து விடுகிறது. இந்த ஃப்ளேச்சஸ் புடைவைகளில் முழுக்க முழுக்க ஜரிகையால் நெய்யப்பட்ட ரவிக்கைத் துணி மின்னுகிறது.

''இவையெல்லாம் இன்றைய மக்களின் ரசனை நாங்கள் புதிதாக ஒன்றும் போடவில்லை. மக்கள் விரும்புவதை நாங்கள் தருகிறோம்'' என்கிறார்கள்.

புடைவைகளை பார்சலில் கூட அனுப்புகிறார்களாம். வி.பி.பியில் அனுப்புவார்களாம். சந்திரசேகர் ஒரு வியாபாரியாக, முதலாளியாக உட்கார்ந்து இருக்காமல் வரும் ஒவ்வொருவரையும் ஓர் உறவினர் போல கவனிக்கிறார். அந்த அன்பு அனைவரையும் மீண்டும் வரவழைக்கச் செய்யும் போலும்!

வண்ணப்படங்கள்:
ஓம். சுப்ரமண்யம்
படங்களில் : **புவனா சேகர், தாரிணி பிரேம்**

நான்
கமலா மாமி
பேசறேன்

நேக்கு பொறந்தாத்தும், புக்காத்தும் ரெண்டுமே உதவும் கரங்கள்தான். சொந்த மனுஷா யாருமில்லைன்னு நினைக்கிறேளா? எல்லாரும் இருக்கா. ஆனா எனக்கு ஒரு வேள சோறு போடத்தான் யாருமில்லை. என் ஆத்துக்காரர் கார் விபத்துல இறந்தப்போ, நான் கூடத்தான் இருந்தேன். என் பிள்ளைகள் ரெண்டு பேரும் எங்க போனாங்கன்னு தெரியலை. அன்னிலேந்து எல்லோரும் என்னை 'பைத்தியம், பைத்தியம்'னு சதா கரிச்சுக் கொட்டி வெளியில தள்ளிட்டா. ஆச்சு 10 வருஷமா இங்கத்தான் இருக்கிறேன். வருஷா வருஷம் நீங்க செய்ற உதவியாலதான் நானும் என்னைப் போல இங்கிருக்கும் 600 அனாதைகளும் தீபாவளி கொண்டாடறோம். இந்த வருஷமும் தீபாவளி கொண்டாடணும்னு ஒரு சின்ன ஆசை! நீங்கள உதவி செய்வேளா? காத்திண்டிருக்கிறோம்!



நீங்கள் உதவ நினைத்தால்,

உதவும் கரங்கள்

460, என்.எஸ்.கே. நகர், அரும்பாக்கம், சென்னை-106.

ஃபோன்: 6216521, 6216421

நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

மனச் சாந்திக்கு தியானம்

டென்ஷன் நிறைந்த இந்தக் காலத்தில் படிக்க வேண்டிய நூல். எழுதியவர் கே. வெங்கடராவ்.

விலை ரூ. 18.00

கணேஷ் வஸந்த்

சுஜாதாவின் புகழ் பெற்ற பாத்திரங்களான கணேஷ் வஸந்த் துப்பறியும் கதை. வழக்கமான சுஜாதாவின் சுவையூட்டும் வேகமான கதைப் போக்கு.

விலை ரூ. 30.00

(இரண்டும் - குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001)

பாரத ரத்னா எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். எனும் மாபெரும் மனிதரின் வாழ்வில் நடந்த அற்புதமான சம்பவங்களைப் பற்றி, அவருடைய பெருந்தன்மையைப் பற்றி எழுதுகிறார் நாகை தருமன்.

விலை ரூ. 15.00

(பேரறிஞர் அண்ணா பதிப்பகம், A-16/1 பீட்டர்ஸ் சாலைக் குடியிருப்பு, இராயப் பேட்டை, சென்னை - 600 014.)

சப்தரிஷி நாடியின் யோக விளக்கம்

ஜோதிடத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கான நூல். ஆசிரியர் எஸ்.பி. சுப்பிரமணியன்.

விலை ரூ. 23.00

சிரிப்பு விருந்து

நகைச்சுவைக் கதைகள், துணுக்குகள் என ஜமாய்கிறார் பாலா.

விலை ரூ. 20.00

(இரண்டும் - நர்மதா பதிப்பகம், 16/7 ராஜா பாதர் தெரு, பாண்டி பஜார், தி.நகர், சென்னை - 17.)

காவில் விழுந்த கவிதைகள்

சு. சமுத்திரத்தின் சிறுகதைகள். இன்றைய வாழ்வின் வலிகளை, அவலங்களை பட்டை யுரித்துக் காட்டும் கதைகள்.

விலை ரூ. 22.00



சிறு தொழில் முனைவோர் சிறப்படைவது எப்படி?

சிறுதொழில் செய்ய ஆசைப்படுவர்களுக்கு நிறைய செய்திகள்.

ஆசிரியர் - வாசன்.

விலை ரூ. 22.00

(இரண்டும் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 98)

உழைப்பின் உயர்வில் வாழ்வு

ஆசிரியர் - கே.என். சரஸ்வதி.

தொழிலில் வெற்றிக்கான, நேரத்தைத் திறம்படச் செலவிட என நிறைய யோசனைகள்.

விலை ரூ. 12.00

ஜோதிர்லிங்கங்கள்

ஸோமநாதர், மல்லிகார்ஜுனர் போன்ற பன்னிரெண்டு லிங்கங்கள் இருக்கும் இடங்கள், சிறப்பு, கதைகள் ஆகியவற்றை விளக்குகிறார் கே. என். சரஸ்வதி.

விலை ரூ. 9.00

(இரண்டும் - கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

எல்லோருக்கும் மேன்மை எப்படி ஏற்படும்?

மகான் ஸ்வாமி ராமஸுகதாஸ் கீதையை அடிப்படையாகக் கொண்டு எழுதிய கேள்வி - பதில்கள்.

விலை ரூ. 1.50

மிக உயர்ந்த நிலையை அடைவதற்கான வழி

இதுவும் அந்த வகையில் அருளப்பட்ட நூல்.

விலை ரூ. 1.50

பக்தராஜ ஹனுமான்

ஹனுமானின் பிரபாவங்களைக் கூறுகிறர் ஸ்ரீ ஹனுமான் பிரசாத் போத்தார்.

விலை ரூ. 4.00

(மூன்றும் - கோபால் சேவா டிரஸ்ட், 82, கிருஷ்ணா டாக்கீஸ் ரோடு, ஈரோடு - 638 003.)

மனம் என்னும் மேடை

பிரபல மனநலமருத்துவர் பல்வேறு நோய்களைச் சுவையாக விவரிக்கிறார்.

விலை ரூ. 18.00

(கற்பகம் புத்தகாலயம், 18, ராஜாபாதர் தெரு, தி. நகர், சென்னை - 17.)

தமிழில் ஆட்சிச் சொற்கள்

ஒரு வரலாற்றுக் கருவூலமாக தமிழ் மாணவர்களுக்குத் தந்திருக்கிறார் டாக்டர் சி. செல்வராஜ். வெறும் அகராதி மாதிரி இல்லாமல் சுவையாக வரலாற்றோடு இணைத்துச் சொல்வது சிறப்பு.

விலை ரூ. 75.00

(அன்பு பதிப்பகம், 10, பொன்னுசாமி தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14.)

ஞானியர் கண்ட ஞானக் கண்ணன்

பகவான் சத்ய சாய்பாபாவின் அத்யந்த பிரேமியான சாயி சரஜ், மகான்களெல்லாம் பாபாவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதை ஒரு சுவையான சம்பவங்கள் அடங்கிய நூலாகப் படைத்துள்ளார்.

விலை ரூ. 30.00

(சுராஜ் சாய்மூர் பப்ளிஷர்ஸ், 1, டி.எம். மேஸ்திரி தெரு, வண்ணான்துறை, சென்னை - 600 041.)

மாணவர்களுக்கான கட்டுரைகளும் பயிற்சி முறைகளும்

சில மாதிரிக் கட்டுரைகளுடன் விளக்குபவர் பி.சி. கணேசன்.

விலை ரூ. 14.00

கடவுளைக் கண்ட மகான்களின் கதை

முப்பது மகான்களைப் பற்றி தனக்கேயுரிய மனமுருக்கும் நடையில் எஸ். லட்சுமி சுப்ரமண்யம் கதைகளாகத் தந்துள்ளார்.

விலை ரூ. 47.00

(இரண்டும் - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.)

இதுதான் இந்தியா

ராஜேஷ்குமார் எழுதியுள்ள துப்பறியும் நாவல்.

விலை ரூ. 27.00

பகல் விளக்கு

பாலகுமாரனின் குறுநாவல்கள். எழுத்துக்கள் சீறி எழுந்து மனித மன உணர்வுகளை வெளிப்படுத்துகிறது.

விலை ரூ. 28.00

(இரண்டும் - விசா பப்ளிகேஷன்ஸ், 55, வெங்கடநாராயணா சாலை, தி. நகர், சென்னை - 17.)

பேச்சாளராக...

பேச்சாளராக விரும்புபவர்களுக்கு அருமையாகப் பயன்படும்படி எழுதியிருக்கிறார் அ. கி. பரந்தாமனார்.

விலை ரூ. 20.00

வாழ்க்கைக் கலை

வாழ்வை எப்படிப் பயனுள்ளதாக, மகிழ்ச்சியாக வாழ வேண்டுமெனக் கூறுபவர் அ.கி. பரந்தாமனார்.

விலை ரூ. 30.00

(இரண்டும் பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை - 600 108.)

குருபெயர்ச்சி பலன்களும் பரிகாரங்களும்

கணித்தவர் ஹனுமத்தாசன். 12, ராசிகளுக்கும் உரியது.

விலை ரூ. 4.50

(அருள்மிகு அம்மன் பதிப்பகம், 8, கங்கையம்மன் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.)



இன்றைய
பெண்ணிற்கு

வீணா

ப்ளவுஸ் துணிகள்

கேம்ப்ரிக்
ஷிபான்
2 X 2
எம்ப்ராய்டரி

Veena Textiles Limited

ஸ்ரீ கலங்காமர் காத்த விநாயகர் துணை

அருள்மிகு ஆபத்சகாயேஸ்வர சுவாமி திருக்கோயில்

ஆலங்குடி – 612 801.

வலங்கைமான் வட்டம் : : தஞ்சாவூர் மாவட்டம்.

(குரு பரிகார ஸ்தலம்)

குருப்பெயர்ச்சி இலட்சார்ச்சனை விழா

நிகழும் பவ வருடம் **ஐப்பசி மாதம் 18ந் தேதி (4.11.94) வெள்ளிக்கிழமை** அருள்மிகு குரு பகவான் **'துலாம்' ராசியில்** இருந்து **'விருச்சிக' ராசியில்** பிரவேசம் செய்கிறார். எனவே கீழ்க்கண்ட ராசிநேயர்கள் தங்களுடைய ஜென்ம நட்சத்திரத்திற்குப் பரிகாரம் செய்து கொள்வது மிகவும் உத்தமம்.

ராசிகள் : மேஷம், மிதுனம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, கும்பம் முதலியன.

அதனை முன்னிட்டு அருள்மிகு குரு பகவானுக்கு

16.10.94 முதல் 31.10.94 முடியவும்

மீண்டும் 7.11.94 முதல் 1.12.94 முடியவும்

"இலட்சார்ச்சனை" நடைபெறும்.

இலட்சார்ச்சனை கட்டணம் ரூ. 50/- (ரூபாய் ஐம்பது)

(அருள்மிகு குரு பகவான் உருவம் பொறித்த சுமார் 2 கிராம் வெள்ளியினால் செய்த டாலர் பிரசாதமாக வழங்கப்படும்)

பிரசாதம் தபாலில் பெற விரும்புவோர் அர்ச்சனை ஒன்றுக்குப் பதிவுத் தபால் கட்டணம் ரூ. 10-ம் சேர்த்து ரூ. 60/- அனுப்பிப் பிரசாதம் பெற்றுக் கொள்ளவும். தொகையை மணி ஆர்டர் மூலம் அனுப்புவோர் M. O. கூப்பனில் தங்களது முகவரியைத் தெளிவாகக் கொட்டை எழுத்துக்களில் எழுதி அனுப்பவும். முகவரி இல்லாத M. O. க்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

தொகையை M. O./டிமாண்ட் டிராப்ட் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு எடுத்து அனுப்பவும்.

Executive Officer,
Abathsagayeswarar Temple,
Alangudi - 612 801.
Valangaiman (Tk) Thanjavur (Dt).
Tamil Nadu

செயல் அலுவலா
அருள்மிகு ஆபத்சகாயேஸ்வர சுவாமி திருக்கோயில்
குரு பரிகார ஸ்தலம்
ஆலங்குடி - 612 801 வலங்கைமான் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

குறிப்பு : தபாலில் பிரசாதம் பெறுவோர்க்குப் பிரசாதம் இலட்சார்ச்சனை முடிவு பெற்று 15 நாட்களில் கிடைக்கும். காசோலைகள் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. D.D. எடுப்போர் கும்பகோணத்தில் மாற்றத்தக்க வகையில் எடுத்தனுப்பவும்.

(நித்திய பூஜை கட்டளை ரூ. 750/- ரூபாய் எழுநூற்று ஐம்பது)

நிர்வாகிகள் & ஆலயப் பணியாளர்கள்

பஸ்ரூட் : கும்பகோணம் to மன்னார்குடி சாலையில் 17 கி.மீ. தொலைவில் உள்ளது. தஞ்சாவூர் நீடாமங்கலம் to ஆலங்குடி 7 கி.மீ. தொலைவில் உள்ளது.

மாலைப்பொழுதின் மயக்கத்திலே...

தாமரை

மங்கையர் மலரும்
ஃபாஹிமாஸ் ஜுவல் ஹவுஸும்
இணைந்து நடத்திய சிறுகதைப்
போட்டியில் பரிசு பெற்ற கதை

லேசாகத் தலைவலிப்பது போல் இருந்தது. நாக்கு கசந்தது. வாந்தி வந்து விடுமோ என்று பயமாக இருந்தது. ஜன்னலின் பக்க வாட்டுக் கம்பிகளின் மேல் இடதுகையை வைத்து அதன் மேல் தலையைச் சாய்த்துக் கொண்டாள் சியாமளா. ஒரு நிமிடம்தான். அதற்குள் ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸின் அதிர்வுகள் தலையைத் தாக்க, சட்டென்று தலையை நிமிர்த்திக் கொண்டாள். காற்றில் கலைந்திருந்த தலைமுடியை சரிசெய்து கொண்டாள். நிலைகொள் ளாமல் இருந்தது.

'என்ன ஆயிற்று எனக்கு? காந்திபுரத்தில் பஸ் ஏறும் போது நன்றா கத்தானே இருந்தேன்!'

'மயக்கமென்ன... இந்த மௌனமென்ன...'

ஸ்பீக்கரில் பாட்டு அலறியது. நாராசமாக இருந்தது. இதை நிறுத்தித் தொலைத்தாலென்ன? பாட்டு இல்லையென்று இப்போது யார் அழுதது?

ஆனால் இதே பஸ்ஸில் இரண்டு மணி நேரத்துக்கு முன்பு கோவை யில் ஏறிய போது, உள்ளே டேப்ரிகார்டர் இருக்கிறதா என்று பார்த்து விட்டல்லவா ஏறினாள்?

கிளம்பும் போதும் அம்மா கேட்டார், "ஏன் சின்னி, அவசியம் நீ இந்தக் கல்யாணத்துக்குப் போய்த்தான் ஆகணுமா?"

"ஏம்மா அப்படிக் கேட்கறீங்க? நான் போய்த்தான் ஆகணும். கவலைப்படாதீங்க. பத்திரமா திரும்பி வருவேன்" - சொல்லி முடிப்பதற் குள் குரல் கம்மி கண்கள் கலங்கி விட்டன.

"இல்லை சின்னி. உன்னைத் தனியா அனுப்ப எனக்கு இஷ்டம் இல்லை. நானும் வர்றேன். எப்படியாவது தாங்கிக்கறேன்."

ஆனால் அம்மாவால் வர முடியாது. அவருக்கு மூட்டுவலி. பஸ்ஸில் ஏறவோ, இறங்கவோ, மணிக்கணக்கில் உட்கார்ந்து பிரயாணம் செய்யவோ முடியாது.

"என் மனசில் கஷ்டம் எதுவுமில்லைம்மா. போயிட்டு கல்யாணம் முடிஞ்சவுடனே அடுத்த பஸ்ஸிலேயே திரும்பிடுவேன்."

பலமுறை சமாதானம் செய்து விட்டுத்தான் கிளம்பினாள்.

மதிய நேரமாக இருந்தாலும் புத்துணர்ச்சியோடுதான் இருந்தாள். வெயிலும் அப்படியொன்றும் தகிக்கவில்லை. குளித்துச் சிரத்தையாக அலங்கரித்துக் கொண்டாள். பட்டுப் புடவை மட்டும் மண்டபத்திற்குப் போய்ச் சேர்ந்தவுடன் கட்டிக் கொள்ளலாம். எப்படியும் திருச்சியை அடையும் போது குறைந்தது மாலை ஏழு மணியாகிவிடும். இப்போது பிரயாணத்திற்கு சௌகர்யமாக ஒரு சிந்தடிக் புடவை.

வருண் இப்போது என்ன செய்து கொண்டிருப்பார்?

நண்பர்கள் சூழ்ந்து கேலி செய்து கொண்டிருக்க, ஐந்து நிமிடத்துக்கொருமுறை யாராவது பெண்கள் வந்து 'மாப்பிள்ளைக்கு ஏதாவது வேண்டுமா?' என்று உபசரிப்பு செய்து கொண்டிருப்பார்கள்.

வருண் முகம் இந்த நேரத்தில் எப்படியிருக்கும்? அதே சாந்தமான பார்வையும் மனசை அள்ளுகிற சிரிப்புமாகவா? அல்லது என்னைப் போலவே உள்ளே வாட்டிக் கொண்டிருக்கிற வேதனை முகத்தில் சிடுசிடுப்பு ரேகையாகவா?

வருண் முகத்தில் எப்போதாவது சிடுசிடுப்பு தோன்றியிருக்கிறதா? நினைவுபடுத்திப் பார்க்க முயன்றாள். ம்ஹூம். ஒருபோதுமில்லை.

சியாமளாவும் சிரித்த முகம்தான். ஆனால் வங்கியில் சில சமயம் ஒருசில வாடிக்கையாளர்கள் கேட்ட கேள்வியையே பலமுறை கேட்கிற போது சியாமளாவுக்கு எரிச்சல் கிளம்பி முகத்தில் வந்து விடும். அப்போதும் அதிகபட்சமாக 'சார் கொஞ்ச நேரம் உட்கார்றீங்களா?



நானே கூப்பிடறேன்' என்பாள்.


அந்த எரிச்சல் வார்த்தைகள் கூட வருணிடம் கிடையாது. எப்போதும் சிரித்த முகம். சென்ற வருட ஆண்டு விழாவின் போது 'சிறந்த வாடிக்கையாளர் சேவை'க்கான பரிசு அவனுக்குத்தான்.

"வருண், உங்களுக்குக் கோபமே வராதா?" இந்தக் கேள்வியை மட்டும் இந்த மூன்று வருடப் பழக்கத்தில் சில நூறு முறைகள் கேட்டிருப்பாள்.

ஒவ்வொரு முறையும் அதே பதில்தான். "என்னவோ தெரியலை. எங்க குடும்பத்திலே எல்லாருமே இப்படித்தான். எங்கப்பாவோட வளர்ப்பு அப்படி."

"எங்கப்பா."

'எங்கப்பா, எங்கப்பா' - என்ன பேச்செடுத்தாலும் அதில் 'எங்கப்பா'வின் ஏதாவது ஒரு தொடர்பு இருக்கும். வெறுமே 'அப்பா' என்று சொன்னால் எங்கே அது எல்லோருக்கும் பொதுவாகி விடுமோ என்று பயம். அதுதான் 'எங்கப்பா'.



அந்த எங்கப்பாவை அவளும் இரண்டு மூன்று சந்தித்திருக்கிறாள்: நிஜம்தான். வருண் அவரைப் பற்றி எதையும் மிகைப்படுத்திக் கூறவில்லை.

அந்தக் கால சுதந்திரப் போராட்ட வீரர். உண்மையிலேயே தியாகி. வெள்ளை வெளேரென்ற கதர் வேட்டி, போர்த்துக் கொள்ள ஒரு வெள்ளைக் கதர்த் துண்டு. தேசத் தந்தை எப்போது மேல் சட்டையைத் துறந்தாரோ அப்போதிருந்தே இவரும்.

கண்களில்தான் என்ன ஒரு தீட்சண்யம்! பேச்சில் ஒரு நூலிழை அதிர்வு கூட இல்லை. வருணைப் பிரதியெடுத்தாற்போல அதே சிரித்த முகம்!

முதல் முறை அவர் மருத்துவ சிகிச்சைக்காக கோவை வந்திருந்த போது வங்கிக்கு வந்திருந்தார். அத்தனை பரபரப்பான காலை நேரத்திலும் வங்கி ஊழியர்கள் ஒருவர் விடாமல் அவரிடம் போய் 'ஐயா வணக்கம். சௌக்யங்களா?' என்று மரியாதை செலுத்திய போது எவ்வளவு அருமையாக புன்னகை பூத்தார்! எப்படி சலிக்காமல் வருணிடம் 'இவரு யாரு தம்பி? கல்யாணமாயிட்டுதா? எங்கிருக்காக?' என்று விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

சியாமளாவிடம் சொந்த ஊர் எது, தாய் தகப்பன் யார் என்று விசாரித்தார். தகப்பனில்லாத பெண் என்று தெரிந்ததும் வாஞ்சையோடு, 'தகப்பன் இல்லைன்னு இனிமேல் சொல்லாதம்மா' என்றார்.

சியாமளாவிற்கு நெஞ்சம் நெகிழ்ந்து போயிற்று. இத்தனை வருடத்தில் நெருங்கிய உறவுக்காரர்கள் யாராவது இப்படியொரு அருமையான வார்த்தையைச் சொல்லியிருப்பார்களா? 'உங்கப்பா இதுக்கொண்ணும் சொல்லலையா? என்று 'உங்கப்பா'விற்கு ஒரு அழுத்தம் கொடுத்து எப்போதும் வருணை கேலி பேசுபவள், அன்றிலிருந்து 'அப்பா என்ன சொன்னார்? எப்படியிருக்கார்?' என்று உரிமை கொண்டாட ஆரம்பித்தாள்.

இரண்டாவது முறை அவர் உடல்நலம் குன்றியிருந்த போது அவரைப் பார்க்கவென்றே திருச்சிக்குப் போய் வந்தாள். வருணுடன் அப்படித் தனியாக கல்யாணத்திற்கு முன்பு அவள் போவது அம்மாவுக்கு சம்மதமில்லையென்றாலும் வருணிடம், 'தம்பி, இந்தத் தடவை அப்பாகிட்ட விஷயத்தைச் சொல்லிடுங்க. அவர்கிட்டே சொல்லி நீங்களும் சின்னியும் ஒரு வார்த்தை ஆசீர்வாதம் வாங்கிக்கிட்டு வந்திட்டீங்கன்னா எனக்கு நிம்மதியாயிருக்கும். உங்க மேலே நம்பிக்கையில்லாம சொல்றேன்னு நினைக்க வேண்டாம். ஆம்பிளைத் துணையில்லாத வீடு. பெத்த மனசு அடிச்சுக்குது' என்றார்.

ஆனால் அவரைப் பார்க்கப் போன போது விஷயத்தைச் சொல்லும் சந்தர்ப்பம் அமையவில்லை. வரும் போகும் மனிதர்கள் கூட்டமும், அவரது பலவீனமான உடல்நிலையும்... 'அப்புறமா சொல்லிக்கலாம்' என்று வருண் சைகை செய்து விட்டான்.

ப்ச்... அதுதான் தப்பாகப் போய் விட்டது. எல்லாமே தலைகீழாகப் போய் விட்டது. எந்த முகூர்த்தத்தில் அவன் சைகை செய்தானோ... வாழ்க்கையே அடியோடு மாறி, நம்பிக்கைகள் நசுக்கப்பட்டு...

வேதனை இப்போது இனம்புரியாததாக இல்லை. உருப்பெற்று விட்டது. அடையாளம் காட்டிக் கொண்டு விட்டது. காதலில் தோல்வி கண்டால் அதன் வேதனை சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் தெரியும். எத்தனை சொன்னாலும் மற்றவர்களுக்குப் புரியாது.

அதுவும் இந்தத் தோல்வி எதிர்பாராதது! நேர்ந்திருக்க வேண்டிய அவசியமே இல்லாதது!


“உடம்பு நல்லாதான் இருக்கும்மா! என்னைப் பார்க்கவா இப்படி முன்னூறு மைல் பிரயாணம் பண்ணி வந்தே? போ, போய்ச் சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுத்துக்கோ” என்று அவர் சியாமளாவை அருகில் அமர்த்திக் கொண்டு சொன்னபோதே சொல்லியிருக்க வேண்டும். 'அப்பா, நானும் வருணும்...' என்று ஆரம்பித்திருந்தாலே போதும். பெரியவர் புரிந்து கொண்டிருப்பார். உடனே வெறும் சர்க்கரையையாவது வரவழைத்து வாயில் போட்டிருப்பார். அப்பேர்ப்பட்ட மனிதர்தான் அவர்!

அடைக்கு அரைக்கும்பொழுது ஒரு பெரிய காரட் ஒன்றைத் துருவிப் போட்டு அரைத்து அடை வார்த்தால் நல்ல பொன் நிறத்தோடு மிகவும்ருசியாக இருக்கும். உடம்புக்கும் நல்லது. ஒரு தடவை செய்து பார்த்துவிட்டு அடைக்கு ஊறப் போடும் போதெல்லாம் காரட் வாங்கிச் செய்ய ஆரம்பித்தேன்.

- உஷா



ரங்கோலி போடலாமே!
16 புள்ளி 16 வரிசை



- ஆர். சுபத்ரா

ஆனால் காய்ச்சலில் விழுந்து மிகப் பலவீனமாக, கிழிந்த நாராகக் கிடக்கும் அவரிடம் அப்போது விஷயத்தைச் சொல்ல மனம் வரவில்லை. வருணும் படுக்கையின் தலைமாட்டில் நின்று கொண்டு 'இப்போ வேண்டாம். அப்புறம்' என்று சைகை செய்ய, அந்த நிமிடத்தில் அவர்கள் இருவரது எதிர்காலமும் அவர்களறியாமலேயே நிச்சயிக்கப்பட்டு விட்டது.

"பாக்யா, சியாமளாவை உள்ளே அழைச்சுக்கிட்டுப் போம்மா. பாவம் ரொம்பக் களைச்சுப் போயிருக்கு."

பாக்யா... பாக்யலட்சுமி.

எங்கிருந்து வந்தார்கள் அம்மாவும் பெண்ணும்? எதற்காக அந்தச் சமயத்தில் பெரியவரிடம் தஞ்சம் என்று புக வேண்டும்? விதி என்று சொல்வதா? அபத்தமாக இல்லை? 'என் தலையெழுத்து' என்று சொல்லிக் கொள்ளலாமா?

பாக்யாவின் தந்தை பெரியவரின் சிறை நண்பர். இருவரும் சேர்ந்துதான் அந்தக் காலத்தில் கொடுமைகளை அனுபவித்திருக்கிறார்கள். அவர் போய்ச் சேர்ந்து இரண்டு வருடங்களாகி விட்டன.

படிக்காத அந்த ஏழைப் பெண்மணி, வயதுக்கு வந்த பெண்ணை வைத்துக் கொண்டு கிராமத்தில் சமாளிக்கப் பார்த்து முடியாமல் உறவினர்களின் சொல் பேச்சு தாங்காமல் இரயிலேறி எப்படியோ விசாரித்துக் கொண்டு இங்கு வந்து சேர்ந்து விட்டாள்.

"அண்ணா நீங்கதான் எனக்கு எல்லாம். என் பொண்ணுக்கு நீங்க பார்த்து ஒரு கல்யாணம் பண்ணி வைச்சிடுங்க. நிம்மதியா அவர்கிட்ட போய்ச் சேர்ந்திடுவேன்."

அழுது அரற்றியவளை எப்போதும் போல பெரிய மனதோடு, "இங்கேயே இரும்மா. நானே பார்த்து பாக்யாவுக்கு கல்யாணத்தை முடிச்சிடறேன். இனி அந்தக் கவலை எனக்குத்தான்" என்று கூடவே இருத்திக் கொண்டார்.

வரன் எதுவும் உடனே அமையவில்லை. அதற்குள் உடல்நலம் குன்றி, நடமாட முடியாமல் போய்...

சியாமளா கோவைக்குத் திரும்பி இரண்டு மாதங்களுக்கெல்லாம் 'உடல்நிலை மிக மோசம்' என்று தந்தி வந்து வருண் உடனே திருச்சிக்குக் கிளம்பிப் போனான். மிகப் பதற்றமாக இருக்கிறான் என்று வின்சென்ட்டும் கூடவே. வின்சென்ட் வங்கியில் சியாமளாவுக்குப் பக்கத்து இருக்கை. வருணுக்கு ஆப்த நண்பன்.

"உங்களை மாதிரி ஒரு பிரச்னையில்லாத ஜோடியைப் பார்த்ததே இல்லேடா" என்பான். பெரியவர் அவனுக்கும் 'அப்பா'தான்.

"சியாமளா, அப்பாவுக்கு எதுவும் ஆகாது. தைரியமா இரு. அவரு நல்ல மனசுக்கு நூறு வருஷத்துக்குக் குறையாம இருப்பார். வருணை நான் பார்த்து அழைச்சிட்டுப் போறேன்" என்று ஆறுதல் சொல்லிக் கிளம்பிய தினம் இன்னும் நினைவில் இருக்கிறது.

படுக்கையில் கிடந்த பெரியவரைச் சுற்றி எத்தனை மனிதர்கள்! உறவினர் கூட்டம் போக, பார்க்க வந்த ஊர்க்காரர்கள்.

இது மரணப் படுக்கை, இனி தாங்காது என்று அவருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

"எதுக்கு அழறீங்க? நல்லபடியா பிறந்தேன். ஏதோ என்னாலானதை நாட்டுக்கும் வீட்டுக்கும் செய்தேன். அந்தத் திருப்தி இருக்குப்பா எனக்கு. ஏகதேசம் என் கடமையெல்லாம் முடிச்சிட்டேன்." அருகிலிருந்த அவரது நண்பர் கண்ணுசாமி பக்கம் திரும்பி, "கண்ணுசாமி, என் பசங்க பிள்ளைகளையெல்லாம் எப்படி வளர்த்திருக்கேன் பார்த்தியா? ஒருத்தர் கூட சத்தமா பேச மாட்டாங்க. இத்தனை நாள் இல்லாத பெருமை இப்ப வருதுப்பா எனக்கு மனசில இந்த வருணுக்குத்தான ஒரு நல்ல காரியத்தை முடிக்காம போறேன். நீ பார்த்து..." என்றவர் பார்வை சுழன்று பாக்யலட்சுமியின் பக்கம் வந்து நின்றது.

"அடடே... இது ஏன் எனக்கு இத்தனை நாள் தோணலை? பாக்யா, இங்கே பக்கத்தில வாம்மா. உங்கப்பா இருக்கானே, பெரிய எமகாதகன். வெள்ளைக்காரனுக்கு எப்படித் தண்ணி காட்டினான் தெரியுமா? அவன் பொண்ணா பிறக்கறதுக்கு நீ கொடுத்து வைச்சிருக்கணும். என் பிள்ளை வருணைப் பத்தி நான் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. உனக்கே தெரியும். என்னவோ கடவுள் உங்க ரெண்டு பேருக்கும்தான் முடிச்சுப் போட்டு

வைச்சிருக்கார்" என்றவர் சற்றும் எதிர்பாரா மல், அருகில் அமர்ந்திருந்த வருணின் கை களில் பாக்யாவின வலது கையை வைத்தார்.

"இங்கே இருக்கிற அத்தனை பேர் சாட்சியா பாக்யாவை என் மகன் வருணுக்குக் கல்யாணம் செய்ய ஒப்புக்கறேன்."

யாராலும் எதுவும் பேச முடியாமல் போயிற்று. வருணுக்கு வார்த்தைகள் தொண்டையிலேயே சிக்கிக் கொண்டது. தன்னைச் சுற்றி என்ன நிகழ்கிறது என்று புரியாத அதிர்ச்சியில் மௌனமாகி நின்றான். மகனின் திடீர் கல்யாண முடிவில் சந்தோஷப்படுவதா இல்லை பெரியவரின் கடைசி நிமிடங்களுக் காக அழுவதா என்று புரியாத குழப்பத்தில் கூட்டம்.

எல்லாமே சட்டென்று சில நிமிஷங்களில் ஆரம்பித்து, நடந்து, முடிந்தே போயிற்று. சில சமயம் நிஜவாழ்க்கையில் நடக்கிற நிகழ்ச்சிகள் சினிமாவில் வருபவற்றைத் தூக்கிச் சாப்பிடக் கூடியவையாக இருக்கிறதில்லையா?

பத்து நாட்கள் கழித்து வருண் வங்கிக்கு வருமுன்பாகவே, வின்சென்ட் மூலமாகவும் சாவுக்குப் போய் வந்த மற்ற சில ஊழியர்கள் மூலமாகவும் விஷயம் கேள்விப்பட்டு சியாமளா துடிதுடித்துப் போனாள். சாவுச் செய்தி வந்தவுடன் உடனே கிளம்பி திருச்சி செல்ல முடியாதபடி அவள் அம்மாவின் உடல்நிலை மோசமாக இருந்தது.

என்னவோ எல்லா கெட்ட கிரகங்களும் ஒன்றுசேர்ந்து சியாமளாவைப் பார்த்தது போல...

வருண் திரும்பி வருவதற்குள் அந்தப் பத்து நாட்களும் தனிமையில் அழுது, தனக்குத் தானே பேசிக் கொண்டும் சாப்பிடாமல் பட்டினி கிடந்து உடலை வருத்திக் கொண்டும் சியாமளா பட்ட கஷ்டத்தை எந்த வார்த் தைகளால் விவரிப்பது?

இருந்தும் வருண் திரும்பி வந்த போது சியாமளாதான் அவனைத் தேற்றினாள். "போகட்டும் விடுங்க வருண். நமக்குக் கெட்ட நேரம். இப்படி நடக்கணும்னு இருந்தால் யாரால மாற்ற முடியும்?"

"இல்லை சியாமளா... நடந்ததை என்னால இன்னும் ஜீரணிக்க முடியலை. எங்கப்பா இப்படி செய்வார்னு நினைக்கவேயில்லை."

'எங்கப்பா.'

சியாமளாவின மனசில் ஒரு மூலையில் இருந்த நம்பிக்கை 'பட்'டென்று காற்றுக் குமிழியாய் உடைந்தது.

'இல்லை சியாமளா. ஏதோ தெரியாம கடைசி நிமிஷ வேகத்தில் இப்படியாயிடுச்சு. கல்யாணமா நடந்திடுச்சு? இல்லையே! மறு படியும் பெரியவங்களைக் கூட்டி நமக்குள்ள இருக்கிற உறவைச் சொல்லி எல்லாத்தையும் சரிபடுத்திடலாம்' என்று சொல்வான் என்று தான் எதிர்பார்த்தாள்.

ஏன் சொல்லவில்லை வருண்? திடீரென்று நான் 'யாரோ'வாகி விட்டேனா? காதலா, இரத்த பாசமா என்று தேர்வு செய்ய நேர்ந்த போது, சற்றும் குழப்பமேயில்லாமல் 'பாசம்' தான் என்று சொல்லி விட்டீர்களே! நம் காதல் தெய்வீகமானது என்றெல்லாம் நினைத் திருந்தேனே, தப்பு என் பேரில்தானா?

காதலிக்கிற யாரும் தங்களைப் போல இதற்கு முன்பு யாருமே காதலித்தது இல்லை என்றுதான் நினைக்கிறார்கள். தங்கள் காத லுக்கு நிகர் எதுவுமேயில்லை என்று இறு மாந்து போய் விடுகிறார்கள்.

அவன் பாசத்தின் முன்னால் தன் காதல் தோற்றுப் போன அவமானம் நெஞ்சில் கரைய, அதைக் காட்டிக் கொள்ளாமல் பெருந் தன்மை யாக நடக்க முற்பட்டது கூட இப்போது நினைத்தால் ஆச்சர்யமாக இருக்கிறது.

"ஆமாம் வருண், உங்கப்பாவோட கடைசி ஆசையை நிறைவேற்றுவது உங்கள் கடமை" சொல்லி விட்டு முகத்தைத் திருப்பிக் கொண் டாள்.

சொல்லி விட்டாளே தவிர, வங்கியில் வேலை செய்து கொண்டு, எதையும் மனசில் நினைக்காமல் - அம்மாவின அழுகை, சக

செப்டம்பர் '94 இதழில் பாசிப் பயிறு குழைந்து போகாமல் இருக்க மூடிபோட்ட டிபன் பாக்ஸில் உப்புப் போட்டு திட்டமாக நீர்ஊற்றிக் குக்கரில் வைக்க வேண்டும் என்று ஒரு சகோதரி எழுதியிருந்தார்கள். அதைவிடவும் சுலபமான வழி இதோ. குக்கர் கண்டெய்னரில் குழைந்து போகக் கூடிய எந்தப் பருப்பு வகை யானாலும் (பட்டாணி உட்பட) குழைந்து போகாமல் இழை இழை யாக இருக்க பருப்பைக் கழுவிவிட்டு நீர்ஊற்றாமல் சரியான அளவு உப்பு சேர்த்துக் குக்கரில் வைத்தால் போதுமானதாகும். பிரஷரும் பருப்பு கழுவிய ஈரமும் பருப்பு வேகப் போதுமானது. பட்டாணியைக் குழையாமல் அப்படியே உருண்டையாக எடுக்கலாம். இது அனுபவரீதியானது.

- கிருஷ்ணவேணி பொன்னுசாமி



பெண்களுக்கென...

விற்பனையாகிறது.



ஹெல்த் & Beauty

மாறுபட்ட மருத்துவ மாத இதழ்

விலை ரூ.6.

ஆசிரியர் : எம்.ஜி. வல்லபன்

நவம்பர்
இதழில்...

- ✪ உங்கள் குழந்தையின் IQ எப்படி கண்டு பிடிப்பீர்கள்?
- ✪ அடிக்கடி மயக்கம் வருவது ஏன்?
- ✪ கருப்பை நீக்கம் அவசியமா?
- ✪ மேதாவி முட்டாள்களைப் பற்றி தெரியுமா?
- ✪ கருவுற்ற காலத்தில் செலவற்ற மருத்துவம்

-என பிரபல டாக்டர்களின் கருத்துக்கள்

ஆண்டு சந்தா ரூ.72 மட்டும்

அனுப்ப முகவரி   பிலிமாலயா பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.,
96, காம்தார் நகர், மகாலிங்கபுரம், சென்னை - 600 034.

ஊழியர்களின் சில சமயம் பரிதாபம் சில சமயம் கேலிப் பார்வை - விட்டேற்றியாக இருப்பது எத்தனை நரக வேதனையான அனுபவம்!

வெளியே பார்வையைச் செலுத்தினாள். காவிரியாறு கூடவே ஓடி வந்தது. சில இடங்களில் வாய்க்கால் போல, சில இடங்களில் ஆற்று வெள்ளம் கரை புரண்டோட... சில சமயம் சாலைக்கு இடதுபுறமாகவும் சில சமயம் சட்டென்று இடம் மாறி வலது புறமாகவும்... கண்ணாமூச்சி விளையாடுகிறதா?

கல்யாணம் முடிந்ததும் இந்தக் காவிரியாற்றங்கரைக்குத்தான் முதல் முதலாக வர வேண்டும் என்று நினைத்திருந்தாள்.

ஆற்றைப் பார்க்கப் பார்க்க துக்கம் பொங்கியது. ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்றாள். முடியவில்லை.

'காவேரி ஓரம் கவிசொன்ன காதல் கதை சொல்லி நான் பாடவா...?

உள்ளம் அலைமோதும் நிலைகூறவா...'

பாட்டு காதில் ஒலிக்க, சட்டென்று நிமிர்ந்தாள். எப்படி, என் மனசறிந்து யார் பாட விட்டார்கள் இந்தப் பாட்டை?

- 'இன்று கனிவான காதல் முடிவாகும் முன்பே கனவான கதைகூறவா...

பொங்கும் கண்ணீரை அணை போடவா...?'

இவள் மனசை அப்படியே பிரதியெடுத்தது போல் பி. சுசீலா உருகிப் பாட, கண்ணீரை அடக்கத்தான் முடியவில்லை. எல்லாமே போச்சு, என் வாழ்க்கை இத்தோடு முடிந்து போயிற்று. முகத்தைப் பொத்திக் கொண்டு விசும்பினாள்.

பக்கத்து சீட் பெண்மணி மெல்ல தோளைத் தொட்டாள். "என்னம்மா உடம்பு ஏதும் சரியில்லையா?"

சுதாரித்துக் கொண்டு நிமிர்ந்தாள். "ஒண்ணுமில்லைங்க. கொஞ்சம் தலைவலி. ஒரு மாத்திரை சாப்பிட்டா சரியாயிடும்."

கைப் பையிலிருந்து அனாசின் ஒன்று எடுத்து வாயில் போட்டு விழுங்கினாள். அப்படியே துக்கத்தையும் தண்ணீரோடு சேர்த்து உள்ளே...

திருச்சியை அடைந்து திண்டுக்கல் ரோட்டிலிருந்த மண்டபத்துக்கு வந்து சேர்ந்த போது இரவு மணி எட்டாகி விட்டது. வாசலில் மாவிலைத் தோரணங்கள், வாழைக்குலை, பந்தல், வரவேற்பிற்கு சந்தனம், குங்குமம், கல்கண்டு...

பார்க்கப் பார்க்க பற்றிக் கொண்டு வந்தது. நான் வேதனையில் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்க, இந்தக் கோலாகலமெல்லாம் தேவையாயிருக்கிறதா வருண் உங்களுக்கு?

ஒரு பக்கம் இயல்பான குணங்கள் அமைதி அமைதி என்று சொல்ல, மற்றொரு பக்கம் தோல்வி வேதனை வெறுப்பாகவும் பழியாகவும் உருவெடுத்துக் கொண்டிருந்தது.

பிரயாணக் களைப்பில் ஒரு கையில் பெட்டியோடும் கைப் பையோடும் மண்டபத்து வாசலில் தன்னந்தனியாய் நின்றாள்.

உள்ளிருந்து ஒரு பெரியவர் வந்தார். இவள் வெளியூர் என்று சட்டென்று புரிந்து கொண்டு, "வாம்மா வா. எல்லாரும் மாப்பிள்ளை அழைப்புக்குக் கோயில் வரை போயிருக்காங்க. மாடியில வலது பக்கம் ரெண்டாவது ரூம் காலியா இருக்கு. பெட்டியை வைச்சிட்டு முகம் கழுவிட்டு வா. காப்பி கொடுத்தனுப்பறேன்" என்று உபசரித்தார்.


பெட்டியை அறையில் வைத்து விட்டு முகம் கழுவி, உடை மாற்றி லேசான அலங்காரத்துடன் வெளியே வந்தாள்.

அதே பெரியவர் காப்பி தம்ளருடன் வந்தார். "வருண் தம்பியோட வேலை செய்யற பொண்ணாம்மா நீ? காப்பி குடிச்சிட்டு, அதோ கடைசி ரூம்ல கல்யாணப் பொண்ணு இருக்கா. மாப்பிள்ளை வர்ற வரைக்கும் வேணா அங்கிரும்மா" என்றார்.

பாக்யாவைப் போய்ப் பார்க்கப் பிடிக்கவில்லை. இருந்தும் இப்போது செய்யக்கூடியது எதுவுமில்லை. எனவே நிதானமாக நடந்து மணப்பெண்ணின் அறைக்குச் சென்றாள்.

மணப்பெண்ணுக்குரிய அலங்காரத்துடன் சொற்ப தோழிகளும் சில வயதான பெண்களும் சூழ உட்கார்ந்திருந்தாள் பாக்யலக்ஷ்மி. சியாமளாவைப் பார்த்ததும் எழுந்து நின்றாள்.

19 புள்ளியிலிருந்து 10 புள்ளி வரை (ஊடுபுள்ளி)



- பா. பிரேமா லதாராணி

தீபாவளிக்குப் பட்சணங்கள் தயார்செய்து அன்றைய தினம் தெரிந்தவர் வீடுகளுக்குக் கொடுக்கிறோம். அவைகளை தட்டுகளில் வைத்துக் கொடுப்பதற்குப் பதில் இரண்டு நாட்கள் முன்பாகவே பிளாஸ்டிக் கவர்களை மொத்தமாக வாங்கிக் கொண்டு பட்சண வகைகளை அதில் போட்டு எந்த எந்த வீடுகளுக்குக் கொடுக்க வேண்டுமோ அவர்கள் பெயர்களை அதில் போட்டு ஸ்டேப்ளர் பின் போட்டு பாக் செய்து விட்டால் மறுநாள் எடுத்துக் கொடுப்பதற்கு எளிதாக இருக்கும். முடிந்தால் 'ஹேப்பி தீபாவளி' என்று அதில் எழுதிக் கொடுக்கலாம்.

- உஷா நாராயணன்



"வாங்க வாங்க, சியாமளா அக்காதானே நீங்க? எப்ப வந்தீங்க? நீங்க வருவீங்கன்னு அவரு சொன்னாரு. காப்பி சாப்பிட்டீங்களா?" என்று உபசரித்தாள்.

'அக்காவா? என்ன ஒரு உரிமையான உறவு? 'அவரு' சொன்னாராமே 'அவரு'! எவரு? என் வருண்டி அவரு. உனக்கென்ன தெரியும் வருணைப் பற்றி? நேத்திக்கு முளைச்ச காளான் நீ. இன்னிக்குப் பட்டுப் புடவை கட்டிக்கிட்டு மண்டபத்தில வந்து நின்னுகிட்டா எல்லாந் தெரிஞ்சவளாயிட முடியுமா? வருணோட மூச்சுக் காத்து கூட சியாமளான்னுதான் சொல்லும். வந்துட்டா பெரிசா உபசாரம் பண்ண!' சியாமளாவின் மனம் பொருமித் தீர்த்தது.

நின்றால் சியாமளாவின் தோளுக்குக் கூட வரவில்லை. கிராமத்துப் பெண். கட்டான உடலாக இருந்தாலும் மாநிறம் உறுத்தியது. முகமும் சிரித்தால் பளிரென்று தெறிக்கிற பல் வரிசையும் லட்சணமாக இருந்தாலும் பட்டிக்காட்டுத்தனம், இழுத்து வாரப்பட்ட தலையிலிருந்து, மருதாணி சிவப்பிலிருந்த வெடித்த பாதம் வரை விரவியிருந்தது.

நின்றால் எங்கே ஆத்திரம் தாளாமல் எதையாவது ரசாபாசமாகப் பேசி விடுவோமோ என்று பயம் எழும்பியது. "கீழே போய் மாப்பிள்ளை வர்றாரான்னு பார்க்கிறேன்" என்று கிளம்பிக் கீழே வந்தாள்.

ஹாலில் மேடைக்கு வலதுபுறம் ஒரு மேசை போடப்பட்டு வருணின் அப்பாவின் பெரிய படம் வைக்கப்பட்டு மாலை போடப்பட்டிருந்தது.

அதைப் பார்த்ததும் இன்னும் அதிகமாக வெறுப்புக் கிளம்பியது. 'ஒரே நிமிஷத்தில் என் வாழ்க்கையைக் கெடுத்திட்டீங்களே! என்னை அழ வைச்சிட்டு யாராவது நல்லா இருந்திட முடியுமா? என்ன துரோகம் பண்ணினேன் உங்களுக்கு!' கண்கள் சிவந்து ஒரு நொடியில் முகம் மாறிப் போனாள்.

வெளியே வாத்திய சப்தம் கேட்டது. அந்த மங்கல இசை வயிற்றைக் கலக்கியது. எனக்காக நிகழ வேண்டியது இவையெல்லாம். என்னை முட்டாளாக்கி விட்டு, கொண்டாடிக் கொண்டிருக்கிறவர்களையெல்லாம் பெரிய மனதுடன் வாழ்த்திக் கொண்டிருக்க நானென்ன தெய்வப் பிறவியா? இடையாது. வருண்! இதற்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்.

மாப்பிள்ளைக் கோலத்தில் வருணைப் பார்த்ததும் வாஞ்சையும் வன்மமும் ஒரு கலவையாகக் கிளம்பியது. கூடவே வந்த வின்சென்ட் தான் முதலில் இவளைப் பார்த்தான். விரைந்து அருகில் வந்தான்.

"வாங்க சியாமளா, எப்போ வந்தீங்க? பிரயாணம்லாம் சௌகர்யமா இருந்ததா? வருண் எதிர்பார்த்துகிட்டே இருந்தான்."

ஆனால் அவன் பழகிய புன்சிரிப்பு அவன் முகத்தில் இல்லை. "வின்சென்ட், எனக்குக் கொஞ்சம் வருணோட தனியா பேசணும். ஏற்பாடு பண்றீங்களா?"

இதென்ன புது கலாட்டா? சியாமளாவின் மனநிலை தெரிந்ததுதான் என்றாலும் கல்யாண மண்டபத்தில் அது எப்படி சாத்தியம்? வெளியே தெரிந்தால் எவ்வளவு பெரிய பிரச்னையாகி விடும்! "சியாமளா... வந்து... கொஞ்சம் அமைதியா இருங்க. இப்ப அதெல்லாம் வேணாம்னு தோணுது."

"வின்சென்ட், உங்களை நான் அபிப்ராயம் கேக்கலை. முடியாதுன்னா நேரா நானே போய்ப் பேசிக்கறேன்."

சியாமளாவின் இந்தத் தொனியும் கெடுபிடியும் ரொம்பப் புதிது. பதறிப் போனான் வின்சென்ட். "வேண்டாம் சியாமளா. நானே அழைச்சிட்டு வர்றேன்."

ஹாலில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் ஒதுக்குப்புறமாக ஒன்றில் போய் அமர்ந்தாள். மேடைக்குப் பக்கத்தில் யார், கணேஷா? இல்லை, யாரோ... கணேஷ் என்றதும் தவிர்க்க முடியாமல் நினைவுக்கு வந்தது.

கோவையில் இவர்கள் வங்கியில் வருண் - சியாமளா ஜோடியைத் தவிர, கணேஷ் - விஜயலட்சுமி ஜோடி ஒன்று இருந்தது. இவர்கள் காதல் அமைதியான வெளியில் தெரியாத ஒன்று என்றால் அவர்கள் காதல் ஆர்ப்பாட்டமான ஒன்று. சதா கும்மாளமும் கிண்டல் பேச்சும்தான். கணேஷ் கலகல மன்னன். அவன் 'அப்செட்' ஆகி யாரும் பார்த்தது கிடையாது.

யாரும் எதிர்பாராமல் திடீரென்று விஜயலட்சுமி வீட்டில் பார்த்து வைத்த மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்து கொண்டு, வேறு கிளைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு போய் விட்டாள். எல்லோரும் கணேஷின் ரியாக்ஷனைத்தான் ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

'எல்லாரையும் கிண்டல் பண்ணிகிட்டே இருந்தே இல்லை? நல்லா வேணும். இப்ப என்ன பண்றே பார்க்கலாம்' என்று ஒரு சாராரும், 'இவன் நல்ல மனசுக்கு இப்படி நடந்திருக்க வேண்டாம், அதிர்ச்சி தாங்காம ஏதாவது பண்ணிடப் போறானே' என்று இன்னொரு சாராரும்...

கணேஷ் பாதிக்கப்பட்டது உண்மைதான். அவன் வாழ்க்கையிலேயே முதன் முறையாக 'அப்செட்' ஆகி, ஷேவ் செய்யப்படாத கன்னமும் இருண்ட முகமுமாக... பார்க்கச் சகிக்கவில்லை.

ஆனால் இதெல்லாம் எண்ணி இரண்டே நாள்தான். மூன்றாவது தினம் பளபளவென்ற முகமும் அதே கிண்டலுமாக வந்ததோடல்லாமல் மகத்தானதொரு காரியம் செய்தான். மானேஜரைத் தவிர்த்து, மற்ற ஊழியர்கள் அனைவருக்கும் காட்பரீஸ் சாக்லேட் பட்டையோடு ஒரு துண்டுப் பிரசுரமும் விநியோகம் செய்தான். 'உலகம் அஸ்தமிக்கவில்லை' என்று ஏதோ தலைப்பு. கவிதை அசத்தலாக இருந்தது. 'நன்றி' என்று யாரோ கவிஞர் பெயர் கூட இருந்தது.

ஆச்சர்யம் தாங்க முடியவில்லை. எல்லோரும் கேள்வியாகக் கேட்டு மாய்ந்தார்கள். 'இப்ப என்ன ஆகிப் போச்சு? உலகம் விஜயலட்சுமியோடு முடிஞ்சு போச்சா?' என்ற ரீதியில் பதில்.

சியாமளா கூட ஆர்வம் பொறுக்க மாட்டாமல், வவுச்சரில் கையெழுத்து வாங்க கணேஷ் தன் இருக்கைக்கு வந்தபோது கேட்டாள். "கணேஷ், நிஜமா சொல்லுங்க. உங்க வேதனை இரண்டே நாள்ல மறைஞ்சு போச்சா?"

"அதுக்காக இருபத்திரெண்டு வருஷம் செலவு பண்ணி தாஜ்மஹாலா கட்ட முடியும்? நீங்க வேற! நமக்கு அதெல்லாம் கட்டுப்படியாகாது."

அவன் விஷயத்தை இவ்வளவு சுலபமாக எடுத்துக் கொண்டதை சியாமளா, உட்பட எல்லாரும் சிலாகித்துத்தான் பேசினார்கள். ஆனால் தனக்கென்று வரும் போது? முடியவில்லையே, அறுக்கப்பட்ட ரணமாக வலிக்கிறதே!

எப்படியோ வருணைத் தனியாக, மண்டபத்திலேயே இருந்த மண்டப சொந்தக்காரரின் பிரத்யேக அறைக்கு அழைத்து வந்து விட்டான் வின்சென்ட். வருண் குழப்பமாக இருந்தான்.

"சியாமளா, என்னம்மா? எப்ப வந்தே? கூப்பிட்டாயாமே?"

"வருண், இந்தக் கல்யாணத்தை நிறுத்துங்க!" என்றாள் எடுத்த எடுப்பில்.

அதிர்ச்சியில் உறைந்து நின்றார்கள் வருணும் வின்சென்ட்டும்.

"அது இப்ப எப்படி?"


"அதெல்லாம் எனக்குத் தெரியாது வருண். என் சோகத்துக்கு நீங்க பதில் சொல்லியே ஆகணும். உங்கப்பா சொன்னாருன்னு என்னை விட்டுறதா? எல்லாரையும் கூட்டி, இங்கேயே என்னைக் கல்யாணம் பண்ணிக்கறதா சொல்லுங்க. வேணும்னா பாக்யாவுக்கு வேற நல்ல மாப்பிள்ளையா பார்த்து முடிச்சிட்டு அப்புறமா நாம செய்துக்கலாம்."

என்ன சமாதானம் சொல்லியும் அவளிடம் எடுபடவில்லை. அழுகை, தணிந்த குரலில் பேச்சு, மீண்டும் விசும்பல்.

வருணை மெதுவாக அனுப்பி வைத்துவிட்டு அழுது கொண்டிருந்த சியாமளாவை நெருங்கினான் வின்சென்ட். "சியாமளா, எனக்கு உங்களை நல்லா புரியுது. இப்ப ரொம்ப அப்செட்டா இருக்கீங்க. பக்கத்தில சென்ட் தாமஸ் சர்ச் இருக்கு. வாங்க, மெதுவா

புதுவகை மணக்கோலம்

11 புள்ளி - 11 வரிசை



என். ஆர். சித்ரா

நடந்து போயிட்டு வந்திடலாம். மனசு அமைதியாகும்."

"நான் எங்கேயும் வரலை. என்னால் இதைத் தாங்க முடியலை வின்சென்ட்" மேலும் பொங்கிப் பொங்கி அழுதாள்.

சிறிது நேரத்தில் தேறி எழுந்து, கொடுக்கப்பட்டிருந்த மாடியறைக்கு வந்து படுத்தாள். முகூர்த்தம் தாமதமாகத்தான். காலை மெதுவாக எழுந்தால் போதும்.

எழுந்து? எழுந்து என்ன செய்வது? ஆங்காரம், ஆங்காரம்... ஏதாவது செய்ய வேண்டும். காலையில் இதே அறையில் தூக்குப் போட்டுக் கொண்டு தொங்கி விட்டால் என்ன? எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்த வேண்டும். அல்லது வாழ்நாள் பூரா என் நினைவு உறுத்த வேண்டும்.

உங்களுக்கு 'உங்கப்பா' பெரிசு என்றால், எனக்கு என் காதல் பெரிசு. வன்மத்துடன் பொருமிக் கொண்டே படுத்தாள். எப்போது உறங்கினாளோ தெரியவில்லை.

காலை பேச்சுக் குரல் கேட்டு விழித்த போது பொலபொலவென்று நன்றாக விடிந்திருந்தது. முகம் கழுவி வந்ததும் இன்னும் புத்துணர்ச்சியாக இருந்தது. என்ன நடந்தது இரவு?

மனநிலையில் நல்ல மாற்றத்தை உணர்ந்தாள். மயக்குகிற மாலைப் பொழுதும், சோகமான பாடல்களும், மண்டபத்துச் சூழலும் தான் முந்தைய தினம் தன் நடத்தைக்குக் காரணம் என்று புரிந்தது. 'அந்தியில் மயங்கி விழும், காலையில் தெளிந்து விடும்...'

இதுதானா அது? ச்சே, எவ்வளவு கேவலமாக நடந்து கொண்டு விட்டோம்!

வருணிடமா அப்படிக் கடுமையாகப் பேசினோம்?

குளித்து, உடை மாற்றி, அலங்காரம் செய்து தயாரானாள். வின்சென்ட்டின் உதவியுடன் வருணின் அறைக்குப் போனாள். 'ஒரு நிமிஷம்' என்று தனியாக அழைத்தாள். அருகே வந்ததும் தாழ்ந்த குரலில், "வருண், தயவுசெய்து என்னை மன்னிச்சிடுங்க. நேத்து சாயங்காலம் கள்ளு குடிச்சவ மாதிரி ஏதேதோ உளறிட்டேன். இப்ப மனசு தெளிவா இருக்கு. உங்கப்பா விருப்பப்படியே நல்லா இருங்க. முகூர்த்தம் முடிஞ்சதும் கிளம்பறேன். ஒரு விஷயம் வேற பிராஞ்ச் கேட்டு மாத்திக்கப் போறேன். அதுதான் ரெண்டு பேருக்கும் நல்லது. சரியா?"

முகூர்த்தம் முடிந்ததும் கிளம்பினாள். தாம்பூலப் பை கொடுத்தார்கள். பாக்கை மட்டும் எடுத்து கைப் பைக்குள் போட்டவள் உள்ளே கசங்கிக் கிடந்த கணேஷின் துண்டுப் பிரசுரத்தைப் பார்த்தாள். எடுத்துப் பிரித்து, படித்த படியே நடந்தாள்.


'காதலில் தோல்வியா?
கவலையைத் தள்ளுங்கள்
நாளையே ஒருதினம்
நட்புடன் ஆரம்பம்' என்று ஆரம்பித்திருந்தது.

ஆமாம்... வேறு கிளைக்கு மாறிக் கொள்ளலாம். வருணையும் 'எங்கப்பா'வையும் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கலாம். இரவு தூங்கிக் காலையில் எழுவதற்குள், அந்த ஆறு மணி நேரத்தில் மனநிலை எவ்வளவு மாறி விட்டது? இன்னும் ஆறு மாதத்தில் அல்லது ஒரு வருடத்தில் எத்தனையெத்தனை மாற்றங்களோ? மனசை வேறெதிலாவது செலுத்தலாம். ஏன் இந்த வருஷ 'சிறந்த வாடிக்கையாளர் சேவை' பரிசு எனக்குக் கிடைக்க உழைக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளலாம். காதல்தான் வாழ்க்கையா? இன்னும் எத்தனையோ இருக்கிறது! அல்லது இன்னொரு முறை காதலிக்கக் கூடாது என்று யார் சொன்னார்கள்?

மீண்டும் பஸ் பிரயாணம், கோவையை நோக்கி. ஆனால் இந்த முறை தெளிவாக், காவிரியோடு ஜன்னல் வழியாகக் கைகுலுக்கிக் கொண்டே!

நவராத்திரியின் போது, விசேஷங்களின்போது வெற்றிலைப் பாக்குடன் சிறுசிறு எவர்சில்வர் கிண்ணங்கள் கொடுத்தது நிறைய சேர்ந்திருந்தால் அவற்றைப் பயன்படுத்த ஓர் எளிய யோசனை. அரிசி மாவு, கடலை மாவு, கோதுமை மாவு, ரவை மற்றும் பருப்பு வைத்திருக்கும் சம்படங்களில் போட்டு வைத்தால் மாவு எடுப்பதற்கும் வசதி... கை படாமலும் இருக்கும்! சுத்தத்திற்கும் சுத்தம்!

- ரமா சந்திரசேகர்



மகாலட்சுமி அந்தப் பெரியவர் எழுதிய கதையை நிறுத்தி விட்டு ஒரு பெரு மூச்சோடு நிமிர்ந்தாள்.

காயத்ரியும் நிமிர்ந்து நாற்காலியில் சாய்ந்தாள்.

இருவர் முகங்களும் சலனமில்லாமல் இருந்தன.

ஒரு நிசப்தம் கல் போல் கதையில் விழுந்தது.

மகா முதலில் பேசினாள்.

"புரிஞ்சுக்கிட்டீங்களா, காயத்ரி! ரங்கா என்கிறவரை நானும் பெரிய மனிதனா நினைச்சிருக்கேன். வசந்தாவும் நினைச்சிருக்கா! இப்போதான் அவர் விஷயம் அம்பலமாகுது!"

"ஓ! அவர்தான் உங்க பிரசாத் கம்பெனி மானேஜிங் டைரக்டரா?"

"ஆமாங்க! அவர்தான் இப்படி எல்லாம் செஞ்சிருக்காரு!"

"கேஸ் ரொம்ப சுவாரஸ்யமாய் போகுதே!" என்று தளர்ந்து உட்கார்ந்தாள் காயத்ரி.

யோசித்து விட்டு, "மகா! இதைப் பாரு. இந்தப் பிரதாப் ஒரு பையனைக் கடத்தி வீட்டிலே ஒளிச்சு வச்சிருந்திருக்காரு. பிறகு பையனோட தந்தைக்கு ஒரு பணயக் கடிதம் எழுதி இருக்காரு. இந்தக் கடிதத்தை பிரசாத் எங்க லைப்ரரி புத்தகத்திலேர்ந்து கண்டுபிடிச்சுட்டாரு. இதுவரைக்கும் கதை புரிஞ்சிருக்கு!"

"அதுக்கு மேலே நான் சொல்றேன்" என்றாள் மகா. "பிரசாத் உங்க உதவியால அந்த பணயக் கடிதம் எழுதின ஆசாமியோட விலாசத்தைக் கண்டுபிடிச்சுட்டாரு. நிச்சயமா அதை விசாரிச்சுக்கிட்டு அங்கே போயிருப்பாரு! அது அவரோட மானேஜிங் டைரக்டர் வீடுன்னு தெரிஞ்சு அதிர்ச்சி அடைஞ்சிருப்பாரு!"

"ஆமாம்! அதுக்கு மேலே என்ன நடந்திருக்கும்?"

"அதைப் பற்றி கீழே அந்தப் பெரியவர் எழுதியிருக்கிறாரா பாரு!"

மகா திரும்ப அந்த பேப்பர் கட்டை எடுத்தாள். படிக்க ஆரம்பித்தாள்.

அந்த போன் பேச்சுக்கள் என்னை மிகவும் கலவரப்படுத்தின.

மாடியில் பிடித்து வைத்திருக்கும் சிறுவனை நினைத்து நிறைய வேதனைப்பட்டேன்.

பெற்றவர்கள் அவனை நினைத்து எவ்வளவு கஷ்டப் படுவார்கள்?

இரண்டு நாள் ஓடியது.

எனக்கு இன்னொரு பயமும் வந்தது.


இதுபோல கடத்தல்காரர்கள் பின்னர் பணயக் கைதியைக் கொன்று விடுவதுண்டு.

அது போல இந்தச் சிறுவனுக்கு எதாவது நிகழக் கூடாதே என்று கவலைப்பட்டேன்.

இரண்டு நாட்கள் சென்றன.


மூன்றாம் நாள் இரவு!

எனக்கு அப்படித் தூக்கம் வந்தவிதம் தெரியாது!



ப்ரிய காயத்ரி

(10)



ஸ்ரீவேணுகோபாலன்

எப்போதும் பத்து முறை ஒன்றுக்கு எழுந்திருக்கிறவன். அன்றைக்கு எழுந்திருக்கவே இல்லை. காலையில்தான் ஆயாசமாக எழுந்தேன்.

இன்னும் தூக்கத்தின் கனம் என் மீது விழுந்திருந்தது. கொட்டாவிகளாக வந்தது.

ஒரு மாதிரி எழுந்து, சமையல் அறைக்குப் போய் சமையல்காரியைப் பார்த்தேன்.

"ஸார்! ராத்திரி என்ன நடந்திச்சு?" என்றான் அவன்:

"ஏம்மா ஏன் கேட்கிறே?" என்றேன்.

"ராத்திரி ஏதோ நடந்திருக்கே!"

"என்ன?"

"நிஜம்மா உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது நல்லாத் தூங்கிட்டேன்! இதைப் போல் இவ்வளவு மெய்மறந்து தூங்கினதில்லை! போ! அடிச்சுப் போட்டாபோல தூங்கிட்டேன். இப்போ எழுந்தேனே, இன்னும் எனக்குத் தூக்கம் கலையலை. மயக்கமா இருக்கு. என்ன விசேஷம்?"

"காலையிலே மேலே போய்ப் பார்த்தேன். பையனைக் காணல்லை."

"ஐயோ!"

என் அடி வயிறு சுருண்டது. அந்த விபரீதம் நடந்திருக்குமோ என்று நினைத்தேன்.

எனக்கு எதுவும் ஓடவில்லை. இரண்டு நாட்கள் சரியாகச் சாப்பிடாமல் பொழுதைப் போக்கினேன்.

தினம் தினம் பேப்பரை உற்றுப் பார்த்து வந்தேன்.

எங்கேயாவது கொலை நடந்திருக்கிறதா? எங்கேயாவது பையன் காணாமல் போயிருக்கிறார்களா?

தினமும் பேப்பர் வந்ததும் இதைத்தான் துருவிப் பார்த்தேன்.

ஆச்சரியம்! பேப்பரில் எதுவுமே வரவில்லை.

இரண்டு வாரங்கள் கூட ஓடி விட்டன. எந்தச் செய்தியும் வரவில்லை.

அப்போதுதான் என மனம் ஓரளவு சமாதானம் அடைந்தது.

. பணயச் சிறுவன் தன் பெற்றோரிடம் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும்.

பணயத் தொகை ரங்காவுக்கு வந்திருக்க வேண்டும்.

ரங்கா கேட்டது தொகை அல்ல! அதற்குப் பதிலாக சிலைகள். அப்படியானால் அந்தச் சிலைகள் அவனுக்குக் கிடைத்து விட்டதா?

அந்தச் சமையல்காரி தயவுடன் மேலே போய்ப் பார்த்தேன். அங்கு எதுவும் தென்படவில்லை.

ஒரு அறை மட்டும் பூட்டியிருந்தது. எப்போதும் அது திறந்திருக்கும் அறை!

கதவை அழுத்திப் பார்த்தேன். அது நெக்கு விடவில்லை. இடுக்கில் மூக்கை வைத்து ஏதாவது நெடி வருகிறதா என்று பார்த்தேன். அதுவும் இல்லை.

இதற்குள் சமையல்காரி, வெளிப்புற மொட்டை மாடிக்குப் போய், அங்குள்ள சன்னலை அழுத்தி இருக்கிறாள்.

அது திறந்து விட்டது. என்னை அவசரமாக அழைத்துப் போய் அதைக் காட்டினாள்.

நான் போய்ப் பார்த்தேன். அங்கே ஒரு பெரிய ஜாதிக்காய் பெட்டி ஓரமாக நின்று கொண்டிருந்தது. புதிய பலகைகள். பலகைகளில் இடுக்கிலிருந்து வைக்கோல் துரும்புகள் துரித்துக் கொண்டிருந்தன.

தலையை ஆட்டினேன்.

"என்ன ஸார்?" என்றாள் சமையல்காரி.

நான் மனசில் நினைத்துக் கொண்டேன்.

ரங்கா கேட்ட பணயப் பொருள்களான அந்தச சிலைகள் அவனிடம் வந்திருக்க வேண்டும்.

சிறுவனும் பத்திரமாக பெற்றோரிடம் போயிருக்க வேண்டும்!

சமையல்காரியைப் பார்த்து, "எல்லாம் சரியாப் போச்சு, அம்மா! இனிமே கவலை இல்லை" என்றேன்!

அதன் பிறகு சற்று நிம்மதியோடு நாட்களை ஓட்டினேன்!

இன்னொரு விஷயத்தை இங்கே நான் கூற வேண்டும்.

அந்தக் குறிப்பிட்ட இரவில் நான் நன்றாகத் தூங்கி விட்டேன் என்று சொன்னேனே!

அதன் காரணம் ரொம்ப காலம் கழித்து இப்போதுதான் எனக்குத் தெரிய வந்திருக்கிறது.

அதாவது அதை நான் ஊகித்து விட்டேன்.

என் பிள்ளை ரங்கா எனக்கு இரவில் தரும் பாலில் மயக்க மருந்து கலந்திருக்க வேண்டும்.

அதனால்தான் ரொம்ப ஆழமாகத் தூங்கி விட்டேன்.

குறிப்பிட்ட இரவில் எனக்கு கண்விழிக்கக் கூடாது, அங்கு நடப்பதைப் பார்க்கக் கூடாது.



சீயக்காய் அரைக்கும் போது, மற்ற சாமான்களுடன், சிறிது வேப்பிலையையும் காயவைத்து சேர்த்துக் கொண்டால், தலையில் பேன் பிடிக்கும் பயம் இல்லை.

- உமையாள்சம்பத்

என்பதற்காகவே என் அருமைப் பிள்ளை எனக்கு மயக்க மருந்து கொடுத்து நன்றாகத் தூக்கம் வர பண்ணியிருக்கிறான்.

இரண்டு மாதம் ஓடியிருக்கும்.

வெள்ளைக்காரர் ஒருத்தர் ஒருநாள் இரவில் வீட்டுக்கு வந்தார்.

வெள்ளைக்காரன் வருவது அதுதான் முதல் தடவை!

ஆளைப் பார்த்தவுடனேயே பெரிய இடம் என்று தோன்றியது.

அப்படி ஒரு நடத்தையும் ஆகிருதியும் இருந்தது.

மாடியில் ரங்காவும் அவனும் பேசி விட்டுப் பிரிந்து விட்டார்கள்.

அதன் பிறகு கொஞ்ச நளில் இன்னொரு வெள்ளைக்காரன் வந்தான்.

அப்புறம் பலரும் வந்து போனார்கள்.

இதே நாட்களில் ரங்காவும் கொஞ்சம் சதைப் பிடிப்போடு நிமிர்வது தெரிந்தது.

முன்பு போல கடன்காரர்கள் நேரிலும் போனிலும் வரவில்லை.

பழைய காரை விற்று புதிதாக ஒரு பியட்டை வாங்கிக் கொண்டான்.

அவன் தோரணைகளிலிருந்து அவனிடம் பணம் திடீரென்று புழங்குகிறது என்பதைப் புரிந்து கொண்டேன்.

கொஞ்ச நாட்கள் செல்ல திடீரென்று மீண்டும் ஒருநாள் நான் ஆழ்ந்த தூக்கம் தூங்கி விட்டேன்.

மறுநாள் எழுந்து, என் வேலைகள் வழக்கம் போல நடந்தன.

பகல் பதினோரு மணி இருக்கும்.

சமையல்காரி என்னிடம் வந்தாள்:

வீடு நிசப்தமாக இருந்தது.

"ஸார்! சின்ன ஐயா காலையிலேயே வெளியிலே போய் விட்டார். இன்னும் வரலை!" என்றாள்.

எனக்கு அப்போது கொஞ்சம் கொஞ்சமாக தூக்கம் வந்து கொண்டிருந்த நேரம்.


Agasthiar's
COLLEGE PUBLICATIONS/
TEXT BOOK OF DYNAMICS (Eighth Edition) Rs. 45
TEXT BOOK OF STATICS (Seventh Edition) Rs.45
(for B.Sc. & Engg. Classes)
Both by:
Dr.M.K.VENKATARAMAN
Buy
Agasthiar
HINDI GUIDES/
Get Sure Success//
From: PRATHAMIC
To: VISHARADH
UTHARARDH EXAMS.
Releasing Shortly:
Agasthiar's Great Treasures!!
Agasthiar Publications
CLIVES BUILDING,
POST BOX:554 ★ TRICHY
620002 ★ 26061
STATICS
DYNAMICS

நான் தூக்க மாத்திரையில் இருக்கிறேன் என்று எனக்குத் தோன்றியது.

"அப்படியா?" என்று யோசித்தேன்.

மாடிச் சாவியை கொண்டு வரச் சொல்லி ஏறி பார்த்தோம்.

குறிப்பாக அந்த அறைக்குள் போனேன்.

அறை இப்போது திறந்திருந்தது. உள்ளே எட்டிப் பார்த்தேன்.

அது சூன்யமாக இருந்தது. எனக்குப் புரிந்து விட்டது. சிலைகள் போய் விட்டன.

என் ஊகங்கள் கிளை விட்டன.

பருத்தியூர் நடராசர் சிலையைப் போல் என் அருமந்தப் பிள்ளை அந்தச் சிலைகளை யாரோ வெளிநாட்டாருக்கு விற்றிருக்க வேண்டும்.

அதனால்தான் அவனிடம் திடீர் பணப் புழக்கம்!

பாவி! இப்படி அநியாயம் எல்லாம் செய்கிறானே! இவனைக் கடவுள் சும்மா விட்டு வைப்பாரா என்று நினைத்தேன்.

இதே நேரம் இன்னொரு எண்ணமும் ஓடியது.

இந்தச் சிலைகள் பழங்காலச் சிலைகளாக இருக்குமா?

நிச்சயம் இருக்க வேண்டும்.

இல்லாவிடில் பெரும் தொகைக்கு அவைகளை விற்றிருக்க முடியாது!

எந்த ஊர்ச் சிலைகள்? எந்தக் கோவில் சிலைகள்?

அது பற்றி மனசு அலை புரண்டது.

அதையும் கண்டுபிடிக்க வேண்டும் என்று எண்ணினேன்.

அப்போதுதான் இன்னொரு எண்ணமும் எனக்குப் பளிச்சிட்டது.

இந்தச் சிலைகளை ரங்கா திருடவில்லை!

ஆனால் யாரோ திருடின சிலைகள் இவனிடம் அடைந்திருக்கிறது.

ஆமாம்! பணயத்திற்கு அகப்பட்டானே, அந்தச் சிறுவன், அவனது பெற்றோர்களிடம் தானே அந்தச் சிலைகள் இருக்கின்றன.

அப்படியானால் அவர்களே இந்தச் சிலைகளை எங்கிருந்து திருடி இருப்பார்களோ?

அந்த எண்ணம் வந்ததும் எனக்கு உள்ளே இருந்த என் வேதனை சற்று குறைந்து விட்டது!

ஏனெனில் சிறுவனின் பெற்றோர்கள் ஏற்கெனவே சிலைகளை திருடியிருக்கிறார்கள்.

அவர்களிடமிருந்து ரங்கா அவைகளைப் பெற்றிருக்கிறான்.

இதனால் ஒரு திருடனை இன்னொரு திருடன் திருடியது பெரிய குறையில்லை என்று தோன்றியது.

அதனால் ஏற்பட்ட சிறிய நிம்மதிதான் எனக்குக் கிடைத்திருந்தது.

ஒரு நாள் இரவு.

ரங்கா மாடியில் இருந்தான். யாரோ மோட்டார் சைக்கிளில் வந்து இறங்குவது தெரிந்தது.

நான் நாசூக்காக ஜன்னல் பக்கம் வந்து பார்த்தேன்.

அந்த ஆளைப் பார்த்து விட்டு எங்கோ பார்த்தது போலிருந்தது. பாராதிருந்தது போலவும் இருந்தது.

சடக்கென்று அடையாளம் புரிந்து விட்டது!

அடடே! இவன் பத்மு ஆயிற்றே என்று நினைத்தேன். பத்முவும் பைரவனும் ரங்காவுக்கு உதவி புரியும் சிற்றாட்கள்.

அவர்கள்தான் அடிக்கடி ரங்காவுடன் வந்து நடுராத்திரிகளில் பேசுவார்கள்.

அந்தக் கடத்தல் நாட்களில் அதிகம் வருவார்கள்.

அந்த இருவரில் ஒருவன்தான் பத்மு என்ற பத்மநாபன்.

இப்போது அவன் பாண்ட் ஷர்ட் நாகரீகமாகப் போட்டு மாறியிருந்தான். சிற்றாள் போல் இல்லை. அதனால்தான் 'சட்'டென்று எனக்குத் தெரியவில்லை.

மாடிக்கு ஏறிப் போகும் தோரணையே வித்தியாசமாக இருந்தது.

அவன் போன சிறிது நேரத்திற்கு மேலே கூச்சல் பிரமாதமாகக் கேட்டன.

இருவரும் வாதம் செய்கிறார்கள் என்று தோன்றியது.

எனக்கு அரிப்பு தாளவில்லை.

அவர்கள் என்ன வாதம் புரிகிறார்கள் என்பதை அறிய நினைத்தேன்.

மாடிக்குப் போய் ரகசியமாகக் கேட்க விரும்பினேன்.

புறப்பட்டேன்.

(தொடரும்)

மேடையருகில் நின்று கொண்டு சமைக்கும் பொழுது நைட்டியாக இருந்தாலும் சரி, புடவையாக இருந்தாலும் ஈரம் பட்டு அழுக்காகி விடும். இதைத் தவிர்க்க பழைய புடவையின் தலைப்புப் பகுதியை மட்டும் கிழித்து துண்டு போல் கட்டிக் கொண்டு விட்டால் நம் உடையும் அழுக்காகாது. ஏப்ரான் செலவும் மிச்சம். அழகாகவும் இருக்கும்.

- கீதா கிருஷ்ணமூர்த்தி



"இட்'ஸ் ஆல்ரைட்"

- வாழ்வின் தாரக- மந்திரமானது!

அறுசுவை உணவு, எட்டு வகை பாயசம், பதினாறு வகை பதார்த்தம் இதெல்லாம் அந்தக் கால பாணி. இப்பெல்லாம் எதற்கும் நேரமில்லை. ஏதோ சமைத்து சாப்பிட்டு ஓடி விடுகிறோம், வேலைக்கு. இப்படி அவசர யுகத்தில் இருப்பவர்களுக்குக் கை கொடுப்பவை ரெடிஃபுட்ஸூம், ஊறுகாய்களும்தான்.

ஊறுகாய் என்றால் தயிர் சாதத்துக்குத் தொட்டுக் கொள்ளும் அயிட்டம் என்பது தான் பழைய கால நினைப்பு. ஆனால், "ஊறுகாய் தயிர் சாதத்தைத் தாண்டி பல உணவு வகைகளுக்கும் பயன்படும் வகையில் தயாரிக்க ஆரம்பித்து விட்டோம்!" என்கிறார் அவந்திகா ஃபுட்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் உரிமையாளர் திருமதி காஞ்சனா போஸ்.



காஞ்சனா போஸ்



"இன்றைய வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும், காலை அவசரத்தில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல பறக்கும் போதும் எங்களைப் போன்றவர்கள் தயாரிக்கும் ஊறுகாய்களும், தொக்கும் மிகவும் உபயோகமாக இருக்கும்" என்கிறார் காஞ்சனா.

"ஊறுகாய்ன்னாலே தொட்டுக் கொள்ளும் உணவுதானே?"

"அது தயிர்சாதத்துக்கு. ஆனால் சப்பாத்தி போன்றவற்றிற்கு 'சைட் டிஷ்'ஷாகவே பயன்படுத்தலாம். சப்பாத்திக்கு ஊறுகாய் என்பது அற்புதமான காம்பினேஷன். அதே போல பிரெட், மற்ற கூட்டு கலந்த சாதம், சித்ரான்னங்கள் போன்றவற்றிற்கெல்லாம் ஊறுகாயோ, தொக்கோ மிகவும் நன்றாக இருக்கும்..."

"ஊறுகாய், தொக்கு இதெல்லாம் ரொம்பப் பழைய கால உணவுதானே? இதிலே

நீங்கள் என்ன புதுமையைப் புகுத்தி விட முடியும்?"

"அட ஆண்டவனே, இந்தக் கேள்வியை எங்கள் எம்.டி.யிடம் கேட்டு விட்டீர்களா?" என்று பயப்படுவது போலச் சிரித்தார் மார்க்கெட்டிங் டைரக்டர் பழனிகுமார்.

"ஏன்?"

"ஊறுகாயில் என்ன புதுமை செய்யலாம் என்பதுதான் அவருடைய வாழ்க்கை லட்சியமே!" என வேடிக்கையாகச் சொல்வது போல ஆரம்பித்தவர்,

"இப்படி நான் சொல்வது ஜாஸ்தி மாதிரி உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் முப்பத்தி ஐந்து வகை ஊறுகாய்களைத் தயாரித்து இருக்கிறார் இவர். எந்தக் காய்கறியைப் பார்த்தாலும் அதில் ஊறுகாய் போட ஆரம்பித்து விடுவார்..."

"முப்பத்தி ஐந்து வகை ஊறுகாய்களா?"

"ஆமாம்..." என்ற காஞ்சனா, "மாங்காய், ஆவக்காய், எலுமிச்சை இதுதான் தொன்று தொட்டு வரும் வகைகள். நான் உருளைக் கிழங்கு, காலிஃப்ளவர், குடைமிளகாய், எல்லா காய்கறிகளையும் சேர்த்து எனப் பல வகைகளிலும் செய்கிறேன். இதிலே 'டயட் வெஜிடபிள் ஊறுகாய்' என்ற ஒன்றைக் கொண்டு வந்து இருக்கிறேன். இதற்குத் தர நிர்ணயம் செய்யும் அதிகாரி கூட கேட்டார்,

"அதெப்படி நீங்கள் டயட் என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம்?" என்று. அப்புறம் அந்த வகை ஊறுகாயில் எண்ணெயே சேர்க்காமல், அத்தனை வகை காய்கறிச் சத்துக்களுடன் 'த்ரிசூரணம்' எனப்படும் மிளகு, இஞ்சி, பூண்டு இவற்றை உபயோகித்துச் சுவையாகத் தயாரித்திருப்பதையும், அது எப்படி உடம்புக்கு நல்லது என்பதையும் கூறினேன். அதற்குப் பிறகுதான் அவர் ஒத்துக் கொண்டார்.

அதே போல டயபடீஸ், இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் ஊறுகாயே சாப்பிடக் கூடாது என்பார்கள். அவர்களுக்காகவும், எண்ணெயே சேர்க்காமல் அவர்களுக்கு ஏற்றாற் போன்ற ஊறுகாய் தயாரித்து இருக்கிறேன். இது பரிசோதனை நிலையில் உள்ளது. முடிவுகளும் திருப்திகரமாகத்தான் இருக்கிறது. விரைவில் மார்க்கெட்டிற்குக் கொண்டு வரப் போகிறோம். அதுவரை அவர்கள் எங்கள் 'டயட் வெஜிடபிள் ஊறுகாயையே கூட சாப்பிடலாம்!' என்றார்.

அவர்கள் தயாரித்து வைத்துள்ள ஊறுகாய்களைப் பார்த்தேன். பழனிகுமார் சொன்னது உண்மைதான். மாங்காய், சிறிதாகக் கட்' செய்த மாங்காய், துருவிய மாங்காய், எலுமிச்சை, வெடி எலுமிச்சை, பச்சை மிளகாய், வெங்காயம் என நிறைய. தொக்கு வகைகளைப் பார்த்தாலும் எல்லாம். இப்படி நிறைய புதுவித பரிசோதனைகளைச் செய் திருக்கிறார். இவர் யார் வீட்டிற்கு, ாந்த ஓட்டலுக்குப் போனாலும் புது



விதமான 'டேஸ்ட்'டோடு ஊறுகாய் இருக்குமானால் ஆராய்ச்சி செய்யப் புகுந்து விடுவாராம். அதே போன்று தயாரித்து விட்டுத்தான் மறு வேலை.

இப்படி ஊறுகாய் பைத்தியமாய் இருக்கிறாரே? இவருக்கு இவ்வளவு தூரம் ஊறுகாய் தயாரிப்பில் சுவை வந்ததற்கு என்ன காரணம்?

"என் கணவர் சுபாஷ்சந்திரபோஸ்தான் காரணம். அவருக்கு ஊறுகாய் என்றால் ரொம்பப் பிடிக்கும். நான் கோயமுத்தூரில் பிறந்து சிவகாசியைப் புகுந்த வீடாகக் கொண்டவள். பட்டாசுத் தயாரிப்பு எங்கள் மாமனார் வீட்டுத் தொழில். நான் வெளியில் அதிகம் போனவளில்லை. குழந்தைகள், குடும்பம் என்று இருந்தேன். கணவருக்கு என்ன தேவையோ, அதை நிறைவேற்றிக் கொண்டு, குழந்தைகளைக் கவனித்துக் கொண்டு அப்படியே இருந்து விட்டேன். என் கணவருக்கு ஊறுகாய் பிடிக்கும் என்பதால் நிறைய பெண்மணிகளிடம் ஊறுகாய் செய்யும் வகைகளைக் கற்றுக் கொண்டு செய்ய ஆரம்பித்தேன். வீட்டிற்கு வந்து சாப்பிடுபவர்கள் ரொம்பப் பாராட்டுவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக என் ஊறுகாய் புகழ் பரவவும், அதிக அளவில் செய்து மெதுவாக விற்பனைக்குக் கொடுத்தேன். நல்ல வரவேற்பு. பிறகு மதுரை, கோயமுத்தூர் பக்கமெல்லாம் விரிவுபடுத்தினவுடன் விற்பனை அதிகமாகியது. மெதுவாக தமிழ்நாடு பூராவும் விநியோகிக்க ஆரம்பித்தோம். தொழிற்சாலைக்கு மதுரையே ஏற்ற இடம் என்பதால் அங்கேயே சின்ன யூனிட் ஒன்று போட்டுத் தயாரிக்க ஆரம்பித்தோம். இதுதான் என் ஊறுகாய் கதை..." என்கிறார் காஞ்சனா.

"அது சரி. இத்தனை விதமாகப் போடுகிறீர்கள்?"

"நான் ஏற்கெனவே காலிஃப்ளவர், குடைமிளகாய் இவற்றைக் கொண்டு போடுவேன். பிறகு உருளை, வெங்காயம் என விரிவுபடுத்தினேன். வீட்டில் போட்டு நாங்கள் எல்லாம் சாப்பிட்டு சுவையாக இருக்கு என்றான பிறகுதான் தொழிற்சாலைக்குக் கொண்டு வருவேன். நான் இயற்கையாகவே புதிய வகைகளைப் போடுவேன் என்பதாலும், சாப்பிடுபவர்களுக்கும் ஒரு வெரைட்டி வேண்டும் என்பதாலும் என்னுடைய வகைகளை விரிவுபடுத்தினேன்..."

"இதிலே காய்கறிகள் பயன்படுத்துகிறீர்கள். எண்ணெய் சிலவற்றில் பயன்படுத்துவதில்லை. ஊறுகாய்க்கு எண்ணெய் ஊற்றுவதே நீண்ட காலம் இருக்கத்தான். உங்கள் வெஜிடபிள் ஊறுகாய், டயட் ஊறுகாய் எல்லாம் எத்தனை நாள் உபயோகப்படுத்த முடியும்? கெட்டுப் போய் விடாதா?"

"நிச்சயமாகப் போகாது. ஒரு வருடம் வரை எந்தவிதமான சேதமும் இல்லாமல் பயன்படுத்தலாம். அந்த வகையில் அவற்றை நாங்கள் பக்குவப்படுத்துகிறோம். காய்கறிகளை அரைவேக்காட்டில் போட்டு எடுத்து ஊறுகாய் போடும் போது ஒவ்வொரு சாமானாகச் சேர்த்து அடுப்பிலிட்டுக் கிளறியே பக்குவப்படுத்துகிறோம். தர நிர்ணயப்படி 'பிரிசர்வேடிவ்'வும் பயன்படுத்துவதால் கெடுவதற்கான வாய்ப்பே இல்லை!"

"அதே போல கறிகாய்கள் சாப்பிடுவதே அதன் சத்துக்காகத்தானே? ஆனால் இப்படி ஊறுகாய் போடுவதால் நிறைய எண்ணெய் காரம் சேர்ப்பதால் அதன் சத்து கெட்டு விடாதா?"

"இதையும் நாங்கள் பரிசோதித்து விட்டோம். குறிப்பாக வாழைப் பூ ஊறுகாயில்



நான் இதை அறிய விரும்பினேன். ஏனெனில் பெண்களுக்கு வாழைப் பூ நல்லது. எல்லா காலத்திலும் எல்லாருக்கும் வாழைப்பூ கிடைக்காது. எனவே இந்த வடிவில் கிடைத்தால் பெண்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்குமே என நினைத்தேன். எனவே பரிசோதித்த போது, பரிசோதனை முறைப்படி வாழைப் பூவின் சத்திற்குப் பாதிப்பு இல்லை என்பது தெரியவந்தது."

"ஒரு பெண்ணாக, குடும்பத் தலைவியாக இருந்து கொண்டு பிஸினஸில் இறங்கி இருக்கிறீர்களே. நீங்கள் நிறைய பிரச்னைகளைச் சந்தித்து இருப்பீர்கள் இல்லையா?"

சிரிக்கிறார் காஞ்சனா. "நிறைய. முதலில் ஃபுட் பிராடக்ட்ஸ் கம்பெனி ஒன்று நடத்துவதே மிகச் சிரமம். ஏனெனில் நம் நாட்டில் ஒருவருக்கொருவர் சுவை வேறுபடும். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான 'டேஸ்ட்' உள்ளவர்களாக இருப்பார்கள். அதனால்தான் உணவுப் பொருள் தயாரிப்பவர்கள் சிரமப்பட வேண்டியதாக இருக்கிறது.

இதையும் தாண்டி நான் வந்தேன். குழந்தைகள் பெரியவர்களாகி விட்டதால் என்னால் முழுமையாகத் தொழிற்சாலையில் கவனம் செலுத்த முடிகிறது. தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் அத்தனை பேரும் பெண்கள் தான். அவர்கள் நாம் எது சொன்னாலும் புரிந்து கொண்டு செயல்படுவார்கள். ஒரு ஆர்டர் திடீரென்று வந்து, கூட நேரம் வேலை செய்ய வேண்டும் என்றால் கூடச் சலிக்க மாட்டார்கள். எனவே அவர்களின் ஒத்துழைப்போடு வெற்றிகரமாக இயங்க முடிகிறது. எங்களுக்கு முதலில் ஆடிட்டராக இருந்த பழனிகுமாரே மார்க்கெட்டிங் பார்க்கிறார். நான் ஏதோ 'எமோஷனலாக' அதிகம் தயாரிக்க ஆரம்பித்தால் கூட கணக்கு வழக்குப் பார்த்து நிறுத்தி விடுவார். 'இவ்வளவு முதல் இதிலே போய் முடங்கி விடுவது நல்லதல்ல. அதற்குப் பதிலாக இப்படிச் செய்யலாம்' என எச்சரித்து வழிகாட்டுவார்.

எல்லாவற்றிற்கும் மேலாக என் கணவர் என்னை மிகவும் ஊக்குவிப்பார். என்னுடைய முயற்சிகளையும், போராட்டங்களையும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார். 'எல்லாம் போதும் நீ செஞ்சது. நிறுத்திக்கோ!' என்று சொன்னதில்லை. சிலருடைய தவறான வழிகாட்டுதலால் நிறைய ஆரம்பத்தில் நஷ்டமடைந்தேன். பிறகு சரியான நேரத்தில் விழித்துக் கொண்டு நேரிடையாகவே எல்லா இடங்களுக்கும் போனேன். தமிழ்நாடு முழுக்கச் சுற்றி இருக்கிறேன். முதலில் ஏமாந்து நஷ்டமடைந்த நான் இனி இப்படி இருக்கக் கூடாது என எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைக்கிறேன். மிகவும் சிந்தித்து முயற்சி எடுத்து இன்று ஒரு நிலையான மார்க்கெட்டிற்கு வந்து விட்டோம். இதற்கெல்லாம் என் கணவர் என்னைக் குத்திக் காண்பித்ததே கிடையாது. அவர் தரும் தைரியத்தில்தான் நான் இருக்கிறேன்..."

"பிரச்னைகள் மிகுந்த நேரமெல்லாம் இருந்தது என்றீர்கள். சாதாரண குடும்பத் தலைவியாக முன்பு இருந்த நீங்கள், இவையெல்லாவற்றையும் பார்த்து ஏன் இவற்றையெல்லாம் ஆரம்பித்து வருத்தப்படுகிறோம் என நினைக்கவில்லையா?"

"இல்லவே இல்லை. எது வந்தாலும் 'இட்ஸ் ஆல் ரைட்' என்றுதான் போய் விடுவேன். என் பேரனிடம் இருந்துதான் 'இட்ஸ் ஆல் ரைட்' எனும் தாரக மந்திரத்தைக் கற்றுக் கொண்டேன். நான்கு வயதான அவன், நான் ஏதாவது கீழே கொட்டி விட்டால், அல்லது ஏதேனும் தவறு நடந்து விட்டால்,


"இட்ஸ் ஆல் ரைட் கவலைப்படாதீர்கள் பாட்டி" என்பான். இந்த 'இட்ஸ் ஆல்ரைட்' வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துவான். அதை ஏதோ ஃபார்மலாடிக்காகச் சொல்லாமல் நிஜமாகவே உள்ளார்ந்த உணர்வோடு சொல்லுவான். அவனிடம் இருந்தே எனக்கு இந்த வார்த்தை ஒட்டிக் கொண்டு விட்டது. இரண்டு மூன்று முறை நானும் சொல்ல ஆரம்பித்தேன். பெரிய பிரச்னைகள் வரும் போது "இட்ஸ் ஆல்ரைட், நடந்தது நடந்து போச்சு. அடுத்து என்ன செய்யலாம்" என யோசிக்கும் போது ஒரு புதுத் தெம்பு வந்தது. அடடே எவ்வளவு பெரிய தாரகமந்திரம் இது என அதற்கப்புறம்தான் என் வாழ்க்கையின் கோட்பாடாகவே எடுத்துக் கொண்டு விட்டேன். நான்கு வயதுப் பேரன்தான் எனக்கு தகப்பன்ஸ்வாமி ஸாரி பாட்டிஸ்வாமி" பெருமையோடு சிரிக்கிறார் காஞ்சனா.

"மற்ற வகை ஊறுகாய்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?"

"மற்றவர்கள் எப்படித் தயாரிக்கிறார்கள் என்பது தெரியாது. ஆனால் எங்களைப் பொறுத்தவரை எப்படித் தயாரிக்கிறோம் என்று பாருங்களேன்..." என்று மதுரையிலுள்ள அவருடைய தொழிற்சாலையைச் சுற்றிக் காண்பித்தார்.

வாசலிலே அழகிய கோலம். ஒரு பக்கம் மாங்காய் நறுக்கும் பெண்கள். இன்னொரு பக்கம் கேஸ் அடுப்பானாலும் அதிலும் கோலம் போட்டு, மாங்காய் இஞ்சியை கிளறிக் கொண்டிருக்கும் பெண். இன்னொரு இடத்தில் பாட்டில்களில் ஊறுகாய் நிரப்பிச் சீலி

நிலத்தின் வளத்துக்கும் ஒரு நிதி
நிறுவனத்துக்கும் என்ன சம்பந்தம்



AKSHAR SF/94173

சக்தி பைனான்ஸ் — வங்கிகளுக்
இணையான பாதுகாப்



பயிர் செழிக்க நல்ல விதை இருந்தால் மட்டும் போதாது. உரிய தண்ணீர் வசதி இருந்தாலும் போதாது. அது பயிரிடப் படும் நிலம் வளம் நிறைந்ததாக இருக்க வேண்டும். அந்தப் பயிருக்கேற்ற நிலமாக, சத்து நிறைந்ததாக, சிறந்த ஊட்டம் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். நிலம் வளமாக இருந்தால் நிறைந்த அறுவடை என்பதில் விவசாயிகளுக்கு நம்பிக்கை.

சக்தி பைனான்ஸையும் மக்கள் அப்படித்தான் நம்புகிறார்கள். உங்களுடைய சேமிப்புக்கு சக்தி பைனான்ஸ் அதிக பாது காப்பு அளிக்கிறது. உங்கள் நலனில் அக்கறை கொண்டு உங்கள் சேமிப்புக்கு நீங்கள் அதிக வருமானம் பெற வகை செய்கிறது. சக்தி பைனான்ஸின் ஸ்திரத்தன்மையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

சக்தி நிறுவனங்களின் எண்ணிக்கை 20. மொத்த ஆண்டு வர்த்தகம் ரூ. 700 கோடி. 1.5 லட்சம் டெபாசிட்தாரர்கள் மிகுந்த நம்பிக்கையோடு வைத்திருக்கும் டெபாசிட் தொகை ரூ. 150 கோடி. நாடு முழுவதும் 37 கிளைகள். 25 சேமிப்பு மையங்கள். பரவலாகப் பாதுகாப்புப் பெட்டகங்கள்.

சக்தி பைனான்ஸ் ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவையையும் பூர்த்தி செய்வதில் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறது. அதற்காகவே அவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு பல புதுமையான திட்டங்களை முதன் முதலாக அறிமுகப்படுத்திய சிறப்பையும் பெற்றுள்ளது. அது மட்டுமல்ல, இத்தகைய திட்டங்களைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அறிமுகப்படுத்தி விரைவாகச் செயல்படுத்துவதிலும் முன்னோடியாகத் திகழ்கிறது.



உங்கள் சேமிப்புகளை சக்தி பைனான்ஸில் டெபாசிட் செய்யுங்கள். நிம்மதி பெறுங்கள்.

சக்தி
பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்:
475, டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோயம்புத்தூர்-641 018.
தொலைபேசி எண்கள்:
231471/231472/231473/231474

டும் பெண்கள்.

ஒரு பக்கம் தொட்டியில் உப்பில் ஊறிக் கொண்டிருக்கும் மாங்காய் எலுமிச்சை காய்கள். ஒரு பக்கம் பெங்களூரில் இருந்து வந்து இறங்கிக் கொண்டிருக்கும் இஞ்சி, மாங்காய் இஞ்சி மூட்டைகள்.

"நான் முதலில் பார்ப்பது சுத்தம்தான். கறிகாய்கள், மாங்காய் எல்லாமே நன்கு கழுவி ஆற வைத்துப் பயன்படுத்த வேண்டும். பெண்கள் சுத்தமாக தலையில் கேப்புடன் இருக்க வேண்டும் என்பது சட்டம். தவிர எந்தப் பொருள் எங்கே சிறப்பாக இருக்குமோ அங்கிருந்துதான் வாங்குகிறோம். இராமநாதபுரம் மிளகாய், தூத்துக்குடி உப்பு என நேரடியாகவே தருவிக்கிறேன்.

அதே போல அத்தனை சாமான்களையும் கலந்து எண்ணெய் கடுகு தாளிப்பதில்லை இங்கே. அடுப்பில் இட்டுக் கிளறித்தான் தயாரிக்கிறோம். அதனால் பச்சையாகச் சில வகைகளை உண்பதால் ஏற்படும் தீங்கும் ஏற்படாது. ஒவ்வொரு சமயத்திலும் நான் பக்கத்தில் இருந்து கவனித்துக் கொள்கிறேன்" என்கிறார் இவர்.


மெதுவே மார்க்கெட்டை விரிவுபடுத்திக் கொண்டிருக்கும் இவர் வாடிக்கையாளர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொண்டதுண்டோ?

"நிறைய பேர் எங்களுக்குக் கடிதம் எழுதுவார்கள். சென்னையிலிருந்து தொடர்ந்து ஒருவர் எழுதிக் கொண்டே இருப்பார். அவர் எங்கள் குடமிளகாய் ஊறுகாயின் ரசிகர். அவ்வப்போது அவரிடம் இருந்து 'ரிப்போர்ட்' மாதிரி கருத்துக்கள் வரும். எங்கேனும் ஏதேனும் குறைகளைச் சுட்டிக் காட்டினாலும் உடனடியாக ஆக்ஷன் எடுக்கிறோம். எந்த நிலையில் தவறு ஏற்பட்டது என்பதைக் கண்டுபிடித்து விடுகிறோம்" என்கிறார்கள்.

"நிறைய ஊறுகாய் கம்பெனிகள் இருக்கின்றன. இது போட்டி அதிகம் இருக்கும் தொழில் அல்லவா? ஒரு பெண்ணான உங்களால் எப்படித் தாக்குப்பிடிக்க முடிகிறது?"

"பிரபல கம்பெனிகள் இரண்டு மூன்று ஆந்திரா அருகிலிருந்து வருகின்றன. இங்கு இருப்பவை ஓரளவு சிறிய அளவில்தான் இயங்குகிறார்கள். நாங்கள்தான் அதிக அளவில் தயாரிக்கிறோம். போட்டி இருப்பது நல்லதுதான். அப்போதுதான் தயாரிப்பாளர்களும் கவனமாக இருப்பார்கள். நான் பெண்ணாக இருப்பதாலும், இது உணவு சம்பந்தப்பட்ட விஷயம் என்பதாலும் நுணுக்கமான சுவை மாற்றம் கூட என்னால் செய்ய முடியும். புதிய பல வகைகளைக் கொண்டு வர முடியும். மற்றவர்கள் நினைக்க முடியாத அளவு

அன்ன தீபம் கோலம்



- கே. சுஜாதா

புதிய வகைகளைக் கொண்டு வந்து கொண்டு இருக்கிறேன்.

பெண்ணாக இருப்பதால் நல்லதே. தயாரிப்பிலும் நன்கு கவனம் செலுத்த முடிகிறது. அதே போல சலிக்காமல் விநியோகம் சம்பந்தமாகவும் அலையும் போது, 'ஐயோ பெண்ணான இவர் இவ்வளவு தூரம் வந்திருக்கிறாரே' என அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள். இதுவும் ப்ளஸ் பாய்ண்ட்தானே?"


"சரி, நிறைய வெரைட்டி கொடுப்பது தவிர வேறென்ன புதிதாகச் செய்யப் போகிறீர்கள்?"

"ஊறுகாய் உலகில் என் பெயர் இடம்பெற வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அதற்காகத் தளராமல் முயற்சி செய்து கொண்டு இருக்கிறேன். அதற்காகவே 'அவந்திகா' எனும் பெயரை என் கம்பெனிக்குத் தேர்ந்தெடுத்தேன். இத்தாலியில் 'அவாந்தி' என்றால் 'கோ அஹெட்' (முன்னேறு) என்று அர்த்தம். அவந்திகா எனும் தெய்வமும் சூரியக் கோயிலில் உள்ளது. இந்தப் பெயர் எனக்கு ரொம்பப் பிடித்து வைத்தேன். பெயரில் மட்டும் புதுமை என்றில்லை. விநியோகம் என்று வரும் போது ஊறுகாயை 'சாஷே' பாக்கெட்டிலும் கொண்டு வரப் போறோம். வெளிநாடுகளில் இறக்குமதி செய்ய நாங்கள் அனுமதியும் பெற்று விட்டோம். இப்போதும் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அதையும் பெரிய அளவில் கொண்டு வர முயற்சி செய்து கொண்டு இருக்கிறேன்!"


"உங்களுடைய பெரிய லட்சியங்களுக்கு வாழ்த்துக்கள்" என்று சொல்லி விடைபெற்றோம்.

- பவித்ரா

படங்கள் : ராஜு


22.10.94
தீபாவளி
தீபாவளி தீபம் ஏற்றும் பண்டிகை.
நாங்க எல்லாரும் பட்டாசு
வெடிக்கிறோம். மில்க்மெய்ட்
கொண்டு அம்மா நல்ல நல்ல
ஸ்வீட் செய்யறா. அப்பா திருட்டி
லட்டு பூராவும் சாப்பிட்டாரு.
பிரியமான அம்மா மேலும்
நிறைய ஸ்வீட் செய்யறா,
தீபாவளி வாழ்த்துக்கள்.
சாக்லேட் பர்ஃபி
தேவை: மில்க்மெய்ட்: 1 டின், அரிந்த பருப்பு: 100 கிராம், கொக்கோ பொடி: ½ கப், வெண்ணெய்: 50 கிராம், சர்க்கரை: ¾ கோப்பை.
செய்முறை: 1. மில்க்மெய்ட், வெண்ணெய், சர்க்கரை, கொக்கோ பொடி மற்றும் பருப்பு இவற்றை ஒன்று சேர்த்து கனமான அடியுள்ள சட்டியில் நன்றாகக் கலக்கவும்.
2. சட்டியில் ஒட்டாமல் ஆகும் வரை கலவையை தணிந்த சூட்டில் நன்றாகக் கிளறவும். (சுமார் 15 நிமிடம்).
3. வெண்ணெய் தடவிய தட்டில் விடவும். நன்றாக ஆற விட்டு துண்டு போடவும்.
*'புதிய மில்க்மெய்ட் ரெஸிப்பி புத்தகம்' இலவசமாகப் பெறுவதற்கு மில்க்மெய்ட் லேபல் அனுப்ப வேண்டிய முகவரி. மில்க் மெய்ட் (MMD), த.பெ. எண் 22, புது தில்லி-110 019.
Nestlé
Milkmaid
TSMcCann/MM/2384 Tam
தீபாவளிக்கு சுவை சேர்த்திடும் மில்க்மெய்ட்

காரு சவாரி ஜோரு



கடந்த ஒரு வாரமாகவே பாமாவின் நடவடிக்கைகளில் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்தது. அவள் எதற்கு மாறி இருக்கிறாள் என்பது தான் தெரியவில்லை.

சந்துரு யோசித்தான்.

இவன் பல் தேய்த்து விட்டு வருவதற்குள் காப்பி டைனிங் டேபிளில் ரெடி. முன்பெல்லாம் இவன் டைனிங் டேபிளின் முன் தவம் கிடப்பான். 'காப்பி, காப்பி' என்று கரடியாய்க் கத்தினாலும் காட்டிலிருந்து கரடி வந்தாலும் வருமே தவிர, காப்பி வர கொஞ்சம் தாமதம் தான் ஆகும்.

“ஒண்டி ஆளா இண்டாடிட்டு இருக்கேன். பாதி சமையல்லே இருக்கேன். குக்கரை இறக்கிட்டுத்தானே காப்பிக்கு பால் வைக்கணும். உங்களுக்குக் காப்பி டேஸ்டே தனி. அப்ப பால் காய்ச்சணும். ஏதோ காப்பி கலந்தோம் ஃப்ளாஸ்கிலே விட்டு வைச்சோம்னு முடியுமா? அப்புறம் சமையல் ரெடியா? ஆபீஸுக்கு லேட்டுன்னு கத்துவீங்க!”

- இப்படி இவனுடைய பேச்சுக்குப் பேச்சு அதிரடிப் பதில் தரும் பாமா, கடந்த ஒரு வாரமாக எதற்கும் தயார் நிலையில் இருப்பது இவனுக்கு ஆச்சர்யத்தை விட மெல்லிய அதிர்ச்சியைத்தான் தந்தது! காலை காப்பி ரெடி! இவன் குளிக்கப் போனால் வெந்நீர் அறையில் துணிமணி ரெடி! சாப்பிட வந்தால் டைனிங் டேபிளில் எல்லா பதார்த்தங்களும் ரெடி. டிபன் பாக்ஸ் கேட்பதற்குள் தயார்! எல்லாவற்றிற்கும் மேலாக வழியனுப்ப பாமா வாசலுக்கே வந்தாள்!


புது மருமகளாய் என்ன ஒரு பவ்யம்! திருமணமான இந்த ஐந்து வருடங்களில் இப்படி ஒரு பவ்யத்தை இவன் பார்த்ததே இல்லை!

'வருது... வருது விலகு விலகு' என்று ஏதோ வரப் போவது மட்டும் தெரிந்தது. அது என்ன என்பதுதான் தெரியவில்லை. 'டைம்பாம்' ஒன்று காத்திருப்பது தெரிந்தது! அது என்று வெடிக்கும்?

தீபாவளிக்குப் பட்டுப் புடைவை ஏற்கெனவே எடுத்தாகி விட்டது. ஸோ, அது இல்லை. ஊரிலிருந்து வரக்கூடிய உறவினர் லிஸ்டில் தற்சமயம் யாருமில்லை. பின் அது என்ன? என்ன? என்ன? கே. பி. சுந்தராம்பாள் மாதிரி இவன் தனக்குள் பாடிக் கொண்டிருந்த அன்று -

'டைம் பாம்' வெடித்தது!

அன்று மாலை ஆபீஸிலிருந்து வந்த இவன் சட்டைப் பொத்தானில் விஷமம் செய்த படியே பாமா பேசினாள்.



- விமலா ரமணி

“என்னங்க?”

இவன் திகைப்புடன் அவளைக் குனிந்து பார்த்தான்.

“ஆமா... நீ சட்டையை கழட்டறியா? போடறியா?”

“குறும்பு... இந்த சட்டை பொத்தானைப் பார்க்கும் போது பழைய பாட்டு ஒண்ணு ஞாபகத்துக்கு வருது... உங்களுக்கு வரல்லை?”

“இல்லை.”

“அத்தானும் நீதானே... சட்டை பொத்தானும் நீதானேன்னு ஒரு பழைய பாட்டு....”

“இந்தப் பாட்டு ஏன் ஞாபகத்துக்கு வருது? பொத்தான் பிஞ்சு போய் வேற தைக்கணுமா?”

“குறும்பு... உங்ககிட்டே ரொம்ப நாளா ஒண்ணு சொல்லணும்னு ஆசை... நேரமே கிடைக்கல்லை...”

அபாய அறிவிப்பு! புரிந்து விட்டது.

என் மகள் அன்று மாலை பள்ளியிலிருந்து வந்ததும், தன் தோழி, மதிய உணவின் போது கொடுத்த ஓமப் பொடி வற்றல் ரொம்ப ருசியாக இருந்தது என்று புகழ்ந்து அதே மாதிரி ஓமப் பொடி வற்றல் இரவு சாப் பாட்டிற்கு நிச்சயம் வேண்டும் என்று அடம்பிடித்தாள். வீட்டில் ரெடிமேட் சேவை பாக்கெட் வாங்கி வைத் திருந்தேன். உடனே அதை எண்ணெயில் பொரித்து ஓமப் பொடி வற்றல் என கொடுத்து விட்டேன். மகள் என்னை மிகவும் பாராட்டி மறுநாள் பள்ளிக்கு அதை எடுத்துச் சென்றாள்.

- லக்ஷ்மிரங்கநாதன்



இனி... இனிதான் திரிக்கு நெருப்பு வைக்கப் போகிறாள்! சந்துரு நீ செத்துரு!

"உங்க கிட்டே காரு இருக்கு இல்லையா?"

"இ... இருக்கு. ஏதோ ஒரு ஹெரால்ட் வைச்சிருக்கேன். அது ஜஸ்ட் ஷோவுக்கு. பெட்ரோல் விக்கற விலையிலே காரை சும்மா எடுக்க முடியாது."

"அதான் சொல்றேன். அதை வித்துடுங்க..."

"விக்கறதா?"

"ஆமாங்க... எல்லாரும் பியட், மாருதின்னு ஜம்முன்னு போகும் போது நாம ஹெரால் டிலே போறது நல்லாவா இருக்கு?"

"நல்லா இருக்கோ இல்லையோ... பெட் ரோலுக்குக் காக எவன் தருவான்? அது சும்மா இருந்துட்டுப் போகட்டும். எங்கப்பா ஞாபகார்த்தமா..."

"உங்கப்பா ஞாபகார்த்தமா நீங்க இருக் கிறது போறாதா?"

"இப்போ என்னாங்கறே... அந்த ஹெரால்டை வித்துட்டு வேற கார் வாங்க ணுமா? பணம் வேண்டாமா?"

"வேற காரைப் பத்தி அப்புறம் யோசிக்க லாம். இதை முதல்லே வித்திடுங்க. நாம வெளியிலே போகணுமானா ஸ்கூட்டர் இருக்கு. ஆட்டோ இருக்கு..."

பாமாவா இப்படிப் பேசுகிறாள்! சந்தேகம்!

"சரி... ஆபீஸிலே சொல்லி வைக்கறேன்..."

பாமா சந்தோஷப்பட்டாள்.

"காரை விக்கறதா தீர்மானம் பண் ணிட்டோம்..."

"என்னமோ கூட்டம் போட்டு தீர்மானம் பண்ணின மாதிரி சொல்றே. இப்பத்தான் சொன்னே, சரி பாக்கலாம்னு சொல்லி இருக்கேன்."

"பாருங்க. பாருங்க! பார்ட்டி வரதுக் குள்ளே அந்தக் காரிலே எனக்கு டிரைவிங் கத்துக் கொடுங்க..."

டைம்பாம் இதுதான்! கொஞ்சம் லேட் டாக வெடித்திருக்கிறது!

"வாட்!"

"வாட்டும் இல்லை... கோட்டும் இல்லை. இதுக்கு முன்னால காரைத் தொட விட மாட்டீங்க. இப்பத்தான் விக்கப் போறீங்களே! எனக்கு டிரைவிங் கத்துத் தந்தா என்ன?"

"காரை உருப்படியா வித்தாத்தான் காசு கொடுப்பான்."

"ஏன் எனக்கு டிரைவிங் கத்துக் கொடுத்தா அது உருப்படியாகாதா?"

"புரியாமப் பேசாதே. எங்கயாவது போய் இடிச்சு.. கிடிச்சு..."

"ஆமாம் ஆரம்பிக்கும் போதே இப்படி அபசகுனமா அஸ்து கொட்டுங்க... என் தலை எழுத்து. என் பிரண்ட்ஸ் எல்லாம் ஜம்முன்னு தானே டிரைவிங் பண்ணிட்டு காரிலே வராங்க. நான் பைத்தியம் மாதிரி..."

"நீதான் காரை விக்கணும்கிறே... அப்புறம் எப்படி ஜம்முன்னு 'டிரைவ்' பண்றது?"

"வித்தா என்ன? ரெண்டு மாசத்துக்குள்ளே இன்னொரு செகண்ட் ஹாண்ட் கார் வாங்கா மலா போகப் போறீங்க?"

"சரி ஆயிரத்தெட்டு டிரைவிங் ஸ்கூல் இருக்கே. அதுலே போய்ச் சேரு. அவங்களே லைசன்ஸூம் வாங்கித் தந்துடுவாங்க!"

"கேட்டேனே... ஆயிரக்கணக்கா பணம். தவிர நம்ப வீட்டுக்குப் பக்கத்துலே இருக்கிற டிரைவிங் ஸ்கூல்லே ஆண் பிள்ளை ட்யூட்டர் தான். இன்னொருத்தர் பக்கத்துலே உட் கார்ந்துகிட்டே நான் கார் ஓட்டக் கத்துக் கணுமா?"

இனி இவளிடம் வாதாடிப் பயன் இல்லை! பாமா ஒன்று தீர்மானித்தால் தீர்மானித்தது தான். யாராலும் மாற்ற முடியாது.

மறுநாள் -

ஞாயிற்றுக்கிழமை என்பதால் அன்றே கார் கற்றுக் கொள்ளும் வைபவத்தை ஆரம் பிக்கலாம் என்று சொல்லி விட்டாள். தப்பு உத்திரவிட்டு விட்டாள். பஞ்சாங்கம் பார்த்து நான் பார்த்து, சுபயோக சுபதினத்தில் கார் கற்கும் படலம் ஆரம்பமானது.

நன்றாக விடிந்த பிறகு கார் கற்றுக்

புகழ்பெற்ற ஜோதிஷர், மந்திர சாஸ்திர நிபுணர் பண்டித காழியூர் ம.பத்மனபன்



காழியூர்
ம. பத்மனாபன்

ஸத்யமேவ ஜயதே

பிரபல ஜோதிஷர் (பண்டித காழியூர் ம. பத்மனாபன்) காழியூர் ஸ்ரீனிவாசாச்சாரியாரின் மூத்த புதல்வரும், அவரால் ஜோதிஷ மந்திர சாஸ்திரங்களில் 45 வருட காலம் நன்கு தேர்ச்சியும், ஆசீர்வாதமும் பெற்றவரால் கீழ்க்கண்ட மகத்தான சக்தி வாய்ந்த யந்திரங்கள் சக்கரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

		ரூ. 200/-
மஹாசுதர்சன யந்திரம்	(வெள்ளியில்)	ரூ. 200/-
ஹனுமத் கவசம்	"	ரூ. 200/-
ஸரஸ்வதி கவசம்	"	ரூ. 200/-
மஹாலக்ஷ்மி கவசம்	"	ரூ. 400/-
தனாகர்ஷண யந்திரம்	"	ரூ. 300/-
லக்ஷ்மிநரஸிம்ம கவசம்	"	ரூ. 500/-
மஹாலக்ஷ்மி சக்ரம்	"	ரூ. 500/-
மஹாசுதர்சன சக்ரம்	"	

இவை தவிர இன்னும் அநேகவிதமான யந்திரங்களும் கவசங்களும் விசேஷ பூஜா க்ரமப்படிக்கு தயாரித்து அனுப்பப்படும்.
வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகையையும்,D.D (Bank Draft) மூலம் அனுப்ப வேண்டும். தபால் செலவு தனி ரூ.50/-
கேட்லாக்கும் அனுப்பப்படும்.

மற்றும் சர்வாரிஷ்ட நிவாரிணி விபூதி ரூ.30.00; க்ஷேம ஸம்ரக்ஷணி குங்குமம் ரூ.30.00; விஜய தனாகர்ஷணி மூலிகை ரூ.25.00; வசீகரண அஞ்சனம் ரூ.25.00; சதாமூலிகா தூபம் ரூ.35.00.



எனது தந்தையார் அடியேனுக்கு மந்திரோபதேசம் செய்யும் காட்சி.

கம்ப்யூட்டர் ஜாதகம் தமிழில்	... ரூ.40.00
கம்ப்யூட்டர் ஜாதகம் ஆங்கிலத்தில்	... ரூ. 40.00
ஆயுள் பலனுடன் (ஜனன வருஷம், மாதம், தேதி, நேரம், ஊர் தேவை)	... ரூ. 200/-
ஜாதகத்தின் பொதுபலன்களை நேரில் சொல்வதற்கு	... ரூ.35.00
முகூர்த்தம் அல்லது விவாஹப் பொருத்தம் விவரித்து எழுத	... ரூ.35.00
ஆரூடம் 3 கேள்விகளுக்கு	... ரூ. 25..00

முக்கிய கவனிப்பு :

தபால் மூலம் வரும் எல்லா கடிதங்களும் வெகு கண்டிப்பாக பரம ரகசியமாக வைக்கப்படுகின்றன. எனவே எவரும் எம்மாதிரியான ஆந்திரிக ரகசிய விஷயங்களைப் பற்றியும் பயமின்றி எழுதலாம். மற்றும் இதர விஷயங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

வீட்டில் கிரக தோஷம், திருஷ்டி தோஷம், சல்லியம், வாஸ்து தோஷம், சங்கா தோஷம் மற்றும் எந்த விதமான தோஷங்களும் பாதியாமல் இருப்பதற்கு சுதர்சன ஹோமம், மஹா சுதர்ஸன சக்கரம், பிரதிஷ்டை செய்து தரப்படும். உள்ளூர் வாசிகளுக்கு மட்டும் செய்யப்படும். விவரம் வேண்டுவோர் நேரிலோ, தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். சுபமஸ்து!

வேண்டுவோர்
கடிதத் தொடர்பு கொண்டு
விபரம் அறிந்து
பணம் அனுப்பி
சகல நன்மைகளும்
அடைவீர்களாக.

பிரபல ஜோதிஷர்
பண்டித காழியூர்
ம. பத்மனாபன்
"தபோநிதி"
தெ : 5, வித்யோதயா
முதல் மெயின் தெரு,
தபால் பெட்டி
எண் : 1411,
தி. நகர்,
மதறாஸ் - 600 017,
தென் இந்தியா
Phone : 8263814

கிளைகள் கிடையாது

கொண்டால் அத்தனை பேரும் பார்ப்பார்களாம். அதனால் காலை ஆறு மணிக்கே காரை எடுத்துக் கொண்டு ரேஸ் கோர்ஸ் போவது, அங்கே கற்றுக் கொள்வது என்று திட்டம்!

ஞாயிற்றுக் கிழமை ஒருநாள் நிம்மதியாகத் தூங்கலாம் என்றால் அதற்கும் இந்த மகராசி வேட்டு வைத்து விட்டாள்! எரிச்சலுடன் சந்துரு படுக்கையை விட்டு எழுந்தான். தினம் காலை ஐந்து மணிக்கே வந்து விடும் பூத்பால் அன்று பார்த்து வரவில்லை.

"பரவாயில்லை, வழியிலே எங்கேயாவது காப்பி சாப்பிட்டுக்கலாம். நேரம் முக்கியம்."

பாமா பரபரத்தாள்.

தலைஎழுத்து. காப்பி சாப்பிடாமல் சந்துருவிற்கு ஒரு வேலையும் ஓடாது. பல் துலக்கி விட்டு ஒரு டம்ளர் தண்ணீரை எரிச்சலுடன் குடித்து விட்டுக் கிளம்பினான்.

"இருங்க, ஒரு நிமிஷம்..."

உள்ளே உட்கார்ந்து கொண்டு என்ன பண்ணுகிறாள் இவள்? ஏற்கெனவே காப்பி சாப்பிடாத எரிச்சல். சந்துருவுக்குக் கோபம் வந்தது.

பாமா என்னமோ பாஷன் பரேடுக்குப் போகிறவள் மாதிரி கொண்டை போட்டுக் கொண்டு, புத்தம் புதிய புடைவையைக் கட்டிக் கொண்டு, லிப்ஸ்டிக் போட்டு, ருஜ்தடவி, ஹேண்ட் பாக்கை சுழற்றியபடி வந்தாள்.

"ஆமா... நீ கார் கத்துக்கப் போறியா? இல்லே பாஷன் பரேடுக்கு போகப் போறியா?"

"இந்தக் கிண்டல்தானே வேணாங்கிறது. ரேஸ் கோர்ஸிலே என்னை மாதிரி இன்னும் எத்தனை பேர் வருவாங்களோ? அவங்க எதிரிலே பக்கி மாதிரியா போறது?"

சந்துரு காரை எடுத்தான்.

அதிகாலை பனியில் கொஞ்சம் முக்கி முனகி விட்டு கார் கிளம்பியது.

"நீங்க ரொம்ப நல்லா கார் ஓட்டறீங்க!"

பாமாவின் பாராட்டு. குருதக்ஷணை இது தான்!

"இதோ பார். இது க்ளச். இது கிர். இது பிரேக், இது ஸ்விட்ச்... - இப்படி காரின் ஒவ்வொரு பாகமாக விளக்கியபடி வந்தான் சந்துரு. ரேஸ் கோர்ஸ் வந்தது.

"சரி... இனிமே நீ டிரைவிங் சீட்டுலே உட்கார். நான் பக்கத்துலே உட்கார்றேன்."

இருவரும் இடம் மாறினார்கள்.

"ரொம்ப நல்லா இருக்கு இல்லே?"

"இன்னும் நீ ஸ்டார்ட் பண்ணவே இல்லை! அதுக்குள்ளே எப்படி?"

"ஐயோ... நான் காரைச் சொல்லலீங்க. எதிரில் ஒரு பெண் கார் ஓட்டிட்டுப் போனா இல்லே..."

"நான் பார்க்கல்லை. நீ வேற பக்கத்துலே இருக்கே..."

"சீ போங்க... அவ கட்டி இருந்த புடவை ரொம்ப நல்லா இருந்தது. இப்போ புதுசா மார்க்கெட்டிலே வந்திருக்கே... மைக்ரோ ஷிபான்! அந்தப் புடவை மாதிரி தெரியுது. ஐந்நூறு ரூபாய் இருக்குமா?"

"இதோ பார், நீ கார் கத்துக்க வந்தியா? இல்லே கண்காட்சி பார்க்க வந்தியா? சரி.. சரி ஸ்விட்சை போடு..."

பாமா ஸ்விட்சை போட கார் ஒரு பெரிய குலுக்கலுடன் கிளம்பியது.

'சட்'டென்று ஸ்விட்சை 'ஆப்' செய்தான் சந்துரு.


"மண்டு... கார் கிரிலே இருக்கும்போதா ஸ்விட்ச போடுவாங்க..."

"இதோ பாருங்க. எனக்குக் கார் சேறுலே இருந்தாத்தான் தெரியும். கிர், பாயாசம் இதுலே எல்லாம் இருந்தா தெரியாது."

"என் தலைவிதி..." - என்று தன்னைத் தானே நொந்து கொண்டு சந்துரு மிகப் பொறுமையுடன் கார் ஓட்டுவது எப்படி என்று பாடம் எடுத்தான்.

இவர்கள் கார் ஓட்டும் படலம் முடிந்து வீடு வந்த போது... பூத் பால் எல்லாம் தீர்ந்து போய் சந்துரு பாலுக்கு பரவாய் பறக்க நேர்ந்தது.

"நாளையிலே இருந்து இதுக்கு வேற ஏற்பாடு பண்ணப் போறேன். பால் வரலேட்டாச்சுன்னா பக்கத்து வீட்டிலே பாலை கொடுக்கச் சொல்லப் போறேன்" - என்று



யாரிடம் பேசும் பொழுதும், நம்மையோ அல்லது நம் குடும்பத்தைப் பற்றியோ பெருமை அடித்துக் கொள்ளாமல் பேச வேண்டும். அடுத்தவர் சொல்வதில் சிறப்பான உத்தி இருந்தால் அதனைப் பாராட்டி நாமும் செய்ய பழகிக் கொள்ள வேண்டும். நம்முடையதுதான் சிறந்தது என்று பேசுவதை விட்டு, நல்ல விஷயத்தை யார் சொன்னாலும், எப்படிச் சொன்னாலும், கவுரவம் பார்க்காமல் பின்பற்ற வேண்டும். இதுவே நமக்கு நல்ல நட்புகளை தேடித் தரும்.

\- லக்ஷ்மி

பாமா பிரச்சனையை சமாளித்தாள்.

சந்துருவிற்குத் தூக்கம் கெட்டு ஒரு வார மாயிற்று. பாமா கார் கற்றுக் கொள்கிறேன் பேர்வழி என்று இவனைக் குதறி எடுத்துக் கொண்டிருந்தாள்.

அன்று -

"இன்னிக்கு நீங்க பேசாம இருந்து பார்த்துட்டு வரணும். நானே கார் ஓட்டப் போறேன்."

சந்துரு பேசவில்லை. கார் ரேஸ் கோர்ஸை சுற்றி வந்தது. பாமா கார் ஓட்டியபடி - "காரு சவாரி ஜோரு" என்று பாடினாள்.

"ஷ்... கார் ஓட்டும் போது கவனம் கார்லேதான் இருக்கணும்...."

திடீரென்று, பாமா...

"பிடிங்க... பிடிங்க..." என்றாள்.

என்ன இழவு சொல்கிறாள் இவள்?

"என்ன சொல்றே?"

"பிடிங்க.. பிடிங்க... நடு முதுகிலே எறும்பு கடிக்குது..."

"என்ன பண்ணச் சொல்றே? ராசாவே சித்தெறும்பு என்னை கடிக்குதுன்னு பாடப் போறியா?"

"ஐயோ கிண்டல் பண்ணாதீங்க. ஒண்ணு முதுகு சொறிஞ்சு விடுங்க... இல்லை ஸ்டியரிங் கைப் பிடிங்க...."

பாமா கத்தியபடி நெளிந்தாள்.

சந்துரு ஸ்டியரிங்கைப் பிடிப்பதற்குள்... ஸ்டியரிங்கிலிருந்து பாமா கை எடுத்து விட... வண்டி தாறுமாறாக ஓடியது... சந்துரு சமாளித்தபடி...

"பிரேக்.. பிரேக்... பிரேக்கை மிதி..." என்று கத்தினான்.

பிரேக்கிற்கு பதிலாக பாமா பதட்டத்தில் ஆக்ஸிலேட்டரை மிதிக்க, கார் கனகுஷியாக ஸ்பீட் எடுத்து... எதிரில் இருந்த ஒரு மரத்தில்... மோதி...

பாமா இப்போது ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். கால் எலும்பு முறிவு! ஒரு வாரம் கண்டிப்பாய் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமாம்! கார் முன்பகுதி ஏகச் சேதமாகி விட்டது. இனி அதை பாதி விலைக்குக் கூட யாரும் வாங்க மாட்டார்கள்!

தவிர ஆக்ஸிடண்ட் ஆன வண்டி என்றால் செண்டிமெண்ட் வேறு பார்ப்பார்கள்!

சந்துரு ஆபீஸுக்கு ஒரு மாதம் லீவு போட்டிருக்கிறான். அதிகாலை சீக்கிரம் எழுந்து காப்பிப் போட்டு, ப்ரேக் பாஸ்ட் பண்ணி, ப்ளாஸ்கில் பாமாவிற்குக் காப்பி எடுத்துக் கொண்டு... அதோ... அதோ... ஸ்கூட்டரில் பரிதாபமாக ஒரு ஜீவன் கிளம்பிப் போகிறதே!

அவன்தான் சந்துரு!

அல்ட்ரா கிரைண்ட்+ வீட்ல இருந்தா வேலை எவ்வளவு ஈஸி!




ULTRA GRIND +

12 month warranty

இந்தியாவின் முதல் ''டேபிள் டாப்'' ஆட்டுக்கல்

என்னைப் போல ஒங்களைப் போல பிஸியா இருக்கற புதுயுகப் பெண்களுக்காகவே தயாரிச்சிருக்காங்க இந்த அல்ட்ரா கிரைண்ட் + ஆமாம்! இந்த அல்ட்ரா கிரைண்ட் + வந்ததிலேருந்து இட்லி தோசைக்கு மாவு அரைக்கறது ஈஸி! சட்னிக்கு தேங்காய் துருவறது ஈஸி! சப்பாத்தி மாவு பிசையறது ஈஸி! இப்படி, நம்மளோட வேலையெல்லாம் எவ்வளவு ஈஸியாயிடுச்சு பாத்தீங்களா?

என்னைப் பொருத்தவரைக்கும் இல்லத்தரசிக்கு வசதி மட்டுமில்ல; இல்லத்திற்கே பெருமை தர்றது இந்த அல்ட்ரா கிரைண்ட் + என்ன, நான் சொல்றது சரிதானே!



மாவு பிசை சாதனம்



தேங்காய்த் துருவி

எல்ஜி தயாரிப்பு


எல்ஜி அல்ட்ரா அப்ளையன்சஸ் லிட்
எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-641 045.
போன்: 0422-216132. பேக்ஸ்: 0422-212810
மண்டல அலுவலகம்: சிந்தூர் டவர்ஸ்,
95, வஸ் சர்ச் சாலை, சென்னை- 600 004. தொ.பே: 4992101

PATENT PENDING DESIGN REGD. NO. 163445 & 163446.

புதுயுக வசதி அல்ட்ரா. புதியதோர் அனுபவம் அல்ட்ரா.

Anugrah 1693/94

Black










மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம்.

10ந்தேதிவரை இராசிக்குக் குருபார்வை உண்டு. திருமணத்திற்காகக் காத்து நிற்பவர்களுக்குக் குரு மாறுவதற்கு முன்கூட, மாதத்தின் முதல் வாரத்திற்குள் திருமணம் கைகூடி வருவதற்கு வாய்ப்பு உண்டு. இராசிநாதன் நீச்சம். 11ல் உள்ள சனியால் இரும்பு, கருப்புக் கல், மற்றும் எரிபொருள் துறையினருக்குச் சில ஆதாயங்கள் ஏற்படலாம். புதன், சுக்கிரன் ஆகியவர்கள் களஸ்திர ஸ்தானத்தில் - அதாவது 7 மிடத்தில் வக்கரித்து நிற்பதால் சுப நிகழ்ச்சிக்கும், அரசு தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கும் வாய்ப்பளிக்கக் கூடும். மேலோரைக் கண்டு பணி விஷயமாக மாறுதல் தேவையானால் கேட்க நல்லதொரு கால கட்டம். சூரியனால் கலைஞர்களுக்கு ஆதாயம் ஏற்படும். அதற்கு 26ந் தேதிவரை சுக்கிரனும் உதவுவார். ஆனால் பெண் ஒருத்தியினால் மனச் சங்கடம், அது உங்கள் பெண்ணாகக்கூட இருக்கலாம். அல்லது தாம்பத்யத்தில் குறுக்கிடும் வேறு ஒருத்தியாகவும் இருக்கலாம். அதனால் குடும்பத்தில் கலகம், சிறுசலசலப்பு, சஞ்சலம் உண்டாகலாம். அமைதியும், பொறுமையும் தேவை. 26ந் தேதிக்கு மேல் காவல் துறையினர், சுங்க இலாகாவினர், மற்றும் இரசாயனத் துறையில் இருப்போருக்கு எதிர்பாராத தன லாபம் வரலாம். மாதத்தின் பிற்பகுதியில் சூரியன், குரு ஆகியவர்களின் சஞ்சாரநிலை நன்கு அமையாததால் கீர்த்திக்குப் பங்கம், நாணயக் குறைவு, உடல் நலக்குறைவு என ஏதேனும் ஒரு விதத்தில் சிரமம் ஏற்படலாம். இது எத்துறையினர்க்கும் பொருந்தும். ராகுவால் ஒரு சிலர் வெளிநாட்டிற்குப் போகும் வாய்ப்பு கிடைக்கும். கேதுவால் 10க்கு மேல் சிறு தடைகள் ஏற்படலாம். எனவே தக்ஷிணாமூர்த்திக்கும், கேதுவுக்கும், கணபதிக்கும் அர்ச்சனை செய்வது நல்லது. குழந்தைகள் கல்வி, உடல்நலம் குறித்துக் கண்காணிப்பு தேவை.





ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 ஆம் பாதங்கள்.

இந்த மாதத்தில் ஏற்பட இருக்கும் குரு பெயர்ச்சி பலவிதத்திலும் நன்மையைத் தரும். யோககாரகனாகிய சனி 10ல் ஆட்சி - தொழிலில் மேன்மை உண்டு. கருப்புக்கல், இரும்பு, கட்டிடப்பணிக்குத் தேவையான பொருட்களை விற்பவர்கள், ரியல் எஸ்டேட், கட்டிடம் கட்டி விற்போர், இசைக்கலைஞர்கள், வாத்திய இசைக்கலைஞர்கள், வெளிநாடு செல்ல அனுமதிக்குக் காத்து நிற்பவர், கலைத்துறையினர், படத்துறை மற்றும் அரசுப் பணியாளர் அனைவருக்கும் அதிருஷ்டமான நிலை. சுப நிகழ்ச்சி கைகூடி வரும். 6ல் உள்ள ராகு வாகனத்தை வாங்க உதவுவார். அல்லது பழையதைக் கொடுத்துப் புதிதும் வாங்கலாம். போக்குவரத்துத் துறையினர்க்குக் கூடுதல் வருமானம் ஏற்படும். வெளிநாட்டிலிருந்து, திருமணத்தை எதிர்பார்த்து வரும் கன்னிகைகளுக்கும், வரன்களுக்கும் திருமணம் நிச்சயம் கைகூடி வரும். ஆறாம் இடத்தில் ஒரு கிரகக் கூட்டமே உள்ளது. குருவைத் தவிர மற்றவர்கள் உதவும் நிலை. 10ந் தேதிக்கு மேல் குருவின் கடாட்சம் உண்டு. ஆலங்குடிக்கு அர்ச்சனைக்கு ஏற்பாடு செய்து கொள்வது நல்லது. எத்துறையினர்க்கும் ஏற்றமிகு காலம். எனினும், கேதுவால் தாய்வழி உறவினர்க்கு உடல்நலக் குறைவு ஏற்படும். அத்தகைய நிலை அன்னையைப் பெற்ற தந்தைக்கும், சிறிய, பெரிய தகப்பனார் வகையறாவுக்கு

பாதிப்பு ஏற்படுத்தலாம். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு ஆதாயம் உண்டு. செவ்வாய் நீச்சமானதால் காவல் துறையினர் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள். குறிப்பாகக் கைதிகளைக் கண்காணிப்பவர்கள் அவர்களைக் கையாளும்போது கவனமுடன் கடமைகளைச் செய்ய வேண்டும். இல்லையேல் இடம் மாறும் நிலை ஏற்பட்டுவிடும். சுங்க இலாகாவினர்க்கும் இது பொருந்தும். லக்ஷ்மி ஸ்தோத்திரம், சுப்ரமணிய புஜங்கம், சஷ்டி கவசம் நல்லது. சரியான துணையின்றி இரவுப் பயணத்தைப் பெண்கள் தள்ளி வைப்பது நல்லது.


மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

காவல்துறை, சுங்க இலாகா, வனத்துறையினர் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதம். 10ந் தேதி வரை நல்ல காலகட்டம் என்றாலும், வேறு வீட்டுக்குச் செல்லும் குரு மாறுபட்ட பலனைத் தர ஆரம்பிப்பார். குடும்பச் சொத்து ஒன்று உங்களுக்கு வரலாம். மாமன் முறை உறவினரால் சிறு தொல்லைகள் நேரலாம். எது எப்படி இருப்பினும் கேதுவின் பரிபூரண அருள் உண்டு. அவர் கொடுப்பார். ஆனால் அனுபவிக்க வேண்டிய சுகத்திற்கு இராகுவும், புதனும் சிறு இடைஞ்சல்களைத் தரலாம். வெளியூர்ப் பிரயாணம் காரணமாக குடும்பத்தைப் பிரிந்து இருக்க வேண்டி வரும். மாதத்தின் பிற்பகுதியில் சூரியனால் பதவி உயர்வு, புகழ், தனலாபம் ஆகியவை ஏற்படலாம். ஆட்சியில் சனி இருந்த போதிலும், தந்தை வழி உறவினர்கள் முன்னோர் சொத்து சம்பந்தமாக சிறு சலசலப்பை உண்டாக்குவார்கள். ஆனால் கேதுவால் நல்லது நடக்கும். எனவே விநாயகனையும், தக்ஷிணாமூர்த்தியையும் ஆராதியுங்கள். காகத்திற்குத் தண்ணீரும் அன்னமும் கூட வைக்கலாம். சுக்கிரனால் சுகமுண்டு. சான்றோர்கள், ஆன்மிக முனிவர்கள் ஆகியோரது ஆசிகளைப் பெறுவீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும். ஒரு தொலைதூரப் பிரயாணம் ஏற்படலாம். குழந்தைகளின் கல்வி விஷயத்தில் கவனம் செலுத்தவும். அவர்களை உற்சாகப் படுத்துங்கள். மாறாக, மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பேசினீர்களேயானால் வீண் விவகாரம்தான் வரும்.

கேக் முதலியவற்றைச் செய்யும்போது தேவையான பதத்தில் இறக்கி வைக்காமல் சிறிது முன்பாகவே இறக்கி விட்டால் கவலைப்பட வேண்டாம். அவை ஆறியவுடன் ஃப்ரீசரில் அரை மணி நேரம் போல் வைத்து எடுத்தால் சுலபமாகத் துண்டு போடலாம்.

- எஸ். விஜயா சீனிவாசன்



கடக ராசி :

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

உள்ளபடியே சென்ற ஆண்டு முழுவதும் அலைச்சலையும், மன உளைச்சலையும் தாங்கிக் கொண்டு எப்படியோ நிலைமையைச் சமாளித்தீர்கள். முயற்சி எடுத்துக் கொண்டும் எந்தச் செயலையும் முழுசாக முடிக்கவில்லையே என்ற குறையும் இருந்ததுண்டு. ஆனால் நவம்பர் 10க்கு மேல் நல்லதொரு திருப்பம் ஏற்பட இருக்கிறது. அது சமயம் இதுவரை எதிர் கொண்ட ஏமாற்றங்களினால், ஏற்பட்ட நஷ்டங்கள், இலாபகரமாக மாறும் நிலை தெரிகிறது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள். திருமணம் கைகூடி வரும். குறிப்பாக நவம்பர் 10 முதல் 20ந் தேதிக்குள் ஒரு சுப நிகழ்ச்சி நடந்தேறும். திருமணம், உபநயனம், புதுமனை புகுவிழா என ஏதோ ஒன்று நடக்கும். பதவி உயர்வு ஒன்றை எதிர் பார்க்கலாம். விரும்பிய பணிக்குச் சேர உத்தரவு வரலாம். தேர்வுகள் நன்கு எழுதுவீர்கள். திட்டமிட்டபடி எதுவும் நடக்கும். ஆலங்குடிக்கு அர்ச்சனை செய்ய ஏற்பாடு செய்து, பிரசாதம் வரவழைத்து அதைத் தவறாமல் நெற்றிக்கு வைத்துக் கொள்ளுங்கள். 4ல் உள்ள புதன் தனலாபத்திற்கும், குடும்ப சுகத்திற்கும் தேவையானதைச் செய்யும் அருளை உங்களுக்கு வழங்குவார். அங்காரகன் நீச்சமாக இருப்பதால் திருமுருகாற்றுப் படை, பாம்பன் சுவாமிகளின் ஷண்முகக் கவசம் படியுங்கள். சென்னை வாசிகள் ஸ்ரீமத் பாம்பன் சமாதியில் தியானம் செய்வது

ல்லது. இந்த ஆண்டில் நீங்கள் எப்படி டந்து கொள்ள வேண்டுமென்பதற்கேற்ப ன் உணர்வைப் பெறுவீர்கள். மற்றபடி அன்றாடப் பணிகளில் அதிகம் மாற்றம் செய்ய வேண்டாம்.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்.

மாதத்தின் முற்பகுதியில் மூன்றாமிடத்தில் ள்ள கிரகங்களினால் புதியதொரு பதவியும், திப்பும், தனலாபமும் கிடைக்கும் வாய்ப்பு ண்டு. சுக்கிரனது ஆட்சி வீட்டில் குரு. அவ டன் சேர்ந்திருப்பதால் நன்மையே நடக்கும். த்திரப் பேறு சிலருக்கு ஏற்படும். ராகுவால் ாகன யோகம் உண்டு. அத்துடன் 12ல் ள்ள நீச்ச செவ்வாயை குருவிருச்சிகத்தி லிருந்து பார்ப்பதால் அங்காரகன் நில சம்பந்த மான விவகாரத்தில் வெற்றியைத் தேடித்தர வேண்டும். சப்தமஸ்தானத்து அதிபதியான சனீஸ்வரனை 10ந் தேதிவரை குரு பார்க்கிறார். அதனால் தொழிலில் மேன்மை இருக்கும். மாதத்தின் பிற்பகுதியில் புதன் தனலாபத் தையும், குடும்பசுகத்தையும் வழங்கிடுவார். கேதுவால் உடல்நலம் பாதிக்கப்படலாம். எனினும் விபரீதமாக ஒன்றும் நடந்து விடாது. வங்கி, மற்றும் பணம் புழங்கும் இடங்களில் பொறுப்பேற்றவர்கள் அது ஆணாயினும், பெண்ணாயினும் சற்று எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சற்று கூடுதலான அலைச் சலைக் கொடுக்கும் மாதமாக இருக்கும். அது அலுவலக சம்பந்தமாகவும் அமையலாம். மற்றும் அரசியல், சமூகசேவை, காவல்துறை ஆகியவைகளில் ஈடுபட்டிருப்பர்களுக்குத் தங்கள் சேவையைச் சரிவரச் செய்வதிலும் ஏற்படலாம். மற்றபடி இந்த குரு மாற்றத்தால் பதவிக்கோ, மதிப்புக்கோ பங்கம் வராது. இராகுவால் எதிரிகளை வீழ்த்தும் ஆற்றலும், முருகன் அருளால் நல்ல ஆரோக்கியமும் இருக்கும். ஆன்மீகத்துறையில் உள்ள ஆன்ற மைந்த சான்றோர்களை அணுகி ஆசி பெறுங்கள். அதுவே சிறந்த பரிகாரம். தொலை தூரப் பிரயாணத்திற்கு வாய்ப்பு உள்ளது. பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

கன்னி ராசி :

உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2, ஆம் பாதங்கள்.

மாதத்தின் முதலிரண்டு வாரங்களில் குடும்பத்தில் சஞ்சலம் இருக்கும். இராசிநாதன் நல்ல நிலையில் சஞ்சரிக்கவில்லை. உற்றார் உறவினர் கூட பகையாகும் நேரம். மாதம்



கண்ணாடி போட்டோ, காலண்டர் போன்றவற்றை சுவரில் மாட்ட ஆணி அடிப்பது தவிர்க்க முடியாததாகிறது. உபயோகித்த ரினோல்ட்ஸ் பேனா மூடிகளை நீட்டிக் கொண்டிருக்கும் பகுதியை ஒடித்து எடுத்துவிட்டு, அவற் றுக்கு வெளியே தெரியும் ஆணியில் சொருகி வைத்தால் வித்தியாசமாகவும் இருக்கும். துரு (ஆணியின் கரை) பிடிக் காது. கலர்பொருத்தம் பார்த்துத் தேர்ந் தெடுக்கலாம்.

- சாந்தி

பூராவும் புதன் சற்று மன அமைதியின்மை யைத்தான் தருவார். யாரிடம், எப்படி, எப் போது, என்ன பேச வேண்டும் என அறிந்து உரையாடுங்கள். இல்லையேல் சொற்குற்றத் திற்கு ஆளாக வேண்டி வரும். பெரியவர் களின் இன்சொல்லுக்கும், நல்ல நண்பர்களின் கண்டிப்பு மிக்க புத்திமதிகளுக்கும் மதிப் பளித்து அதற்கேற்ப நடந்தால் எல்லாமே நன்மையாக இருக்கும். 10ந் தேதிக்கு மேல் அரசுடைமை வங்கிகள், தனியார்த்துறையில் உள்ள நிதி நிறுவனத்தில் உள்ளவர்கள் சற்றுக் கவனமுடன், பொறுப்புணர்ந்து பணிபுரிய வேண்டிய காலகட்டம். வீண் அபவாதத்திற் கும், பழிக்கும் கூட ஆளாக வேண்டி வரலாம். சனீஸ்வரன் ஒருவரே சகல காரியங்களிலும் துணை நின்று உங்களைக் காப்பார். எனவே அவரை, அவரது சன்னிதானத்திற்குச் சென்று விளக்கேற்றி வணங்குவது நல்லது. மனித னுக்குச் சோதனை வராமலேயே இருக்குமா? அவற்றைத் தாங்கும் மனதை நாம்தான் திட முடன் வைத்திருக்க வேண்டும். பதினொன் றில் உள்ள அங்காரகனால் நில சம்பந்தமான வியாஜ்ஜியம் ஒன்றில் நவம்பர் 10க்கு மேல் வெற்றி கிடைக்கும். மற்றபடி வைஷ்ணவ கோவில்களுக்குச் சென்று ஆஞ்சநேயரையும் கருடாழ்வாரையும் சேர்த்தே சேவியுங்கள். புதன் கிழமைகளில் கருடனைத் தரிசனம் செய்து வணங்குங்கள். வானத்தில் பறக்கும் கருடன் உங்களுக்கு உரிய முறையில் ஞானத் தைக் கொடுத்துக் காப்பார்.



புளித்த தயிரை வீணாக்காமல் ஒரு தம்ளர் தயிருக்கு ஒரு தம்ளர் ரவை என்ற அளவில் சேர்த்து 5 நிமிடம் ஊற விடவும். இத்துடன் இஞ்சி, பச்சை மிளகாய், கொத்துமல்லி, வெங்காயம் சேர்த்து வடை போலத் தட்டி எண்ணெயில் போடவும். சூடாகச் சாப்பிடச் சுவையாக இருக்கும். திடீரென்று செய்வதற்கும் எளிது.

- எஸ். சுமதி

துலா ராசி :

சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

உங்கள் ராசியில் மாதத்தின் முற்பகுதியில் 5 கிரகங்கள், இராசிநாதன் ஆட்சியில் இருக்க சூரியனோ நீச்சம் பெற்று குருவுடனும், புதனுடனும் சம்பந்தம். இந்த நிலையில் வீடு, வாகனயோகம் ஏற்படுகின்ற நல்ல கால கட்டம். எனினும், 10ல் உள்ள நீச்ச செவ்வாயின் பார்வை உங்கள் ராசிக்கு இருப்பதால், நிலம், வீடு சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஒரு முறைக்கு இரு முறை யோசித்தே விற்கிரயமோ, கொள்கிரயமோ செய்வது நல்லது. 10ந் தேதிக்குப் பிறகு குருவின் பார்வை செவ்வாய் மீது இருப்பதால் கவலை தேவையில்லை. சுப நிகழ்ச்சி ஒன்று நடக்கும். சுவாதி நக்ஷத்திரத்தின் நாயகன் இராகு. எனவே இந்த நட்சத்திரத்தில் பிறந்துள்ள கன்னிப் பெண்களுக்குத் திருமணம் கைகூடி வரும். குறிப்பாக குரு மாற்றம் யோகத்தைத் தரும். வேலை கிடைக்கும். தொழிலில் மேன்மை ஏற்படும். 10ந் தேதி வரை சற்று பிரச்னைகள் உண்டு. அதன் பிறகு நல்ல காலகட்டம் ஆரம்பம். ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த மாதம்தான். சில எதிர்பார்த்த இனங்கள் கைகூடி வருவது போல் வந்து கை நழுவிப் போகும் வாய்ப்பு உண்டு. கூடிய மட்டும் எந்த நல்ல முயற்சியையும் நவம்பர் 10 தேதிக்கு மேல் செய்வது நல்லது. இசைக்கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகிய அனைவரும் ஆதாயம் பெறலாம். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆகியோருக்கு நல்ல கால கட்டம் ஆரம்பம். ஆதித்ய ஹ்ருதயமும், நவக்கிரக ஸ்தோத்திரங்களும் படிப்பவர்களுக்கு எல்லாம் நல்லபடியே முடியும்.

விருச்சிக ராசி :

விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை 1, 2, 3 ஆம் பாதங்கள்.

விரையத்தில் இருந்த குரு 10ந்தேதி முதல் உங்கள் இராசிக்கே வருகிறார். கோட்சார ரீதியில் ராசியில் குரு இருப்பது நல்லதல்ல என்பர். ஆனால் செவ்வாய் வீட்டில் அதாவது விருச்சிக குரு மிகவும் நல்லவர் ஆவார். அதனால் குழந்தைகளின் கல்வி நலன் நன்றாக அமையும். மாதத்தின் கடைசி வாரத்தில் புதனும், சுக்கிரனும், இந்த ராசிக்கு வருகிறார்கள். சூரியன் நீச்சத்திலிருந்து விடுபட்டு இந்த இராசிக்கு 17ந் தேதி வருகிறார். அது சமயம் குரு சம்பந்தமும் பெறுவதால், உங்களுக்கு ஒரு மாற்றம் ஏற்படலாம். இடமாற்றமும் ஏற்படலாம். அல்லது வீடே கூட மாற்ற வேண்டி வரலாம். 6ம் இடத்தில் உள்ள கேது உங்களுக்கு சகல விதத்திலும் வெற்றி தேடித்தர வேண்டும். நீண்ட கால முயற்சி ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். அது தொழில் சம்பந்தமாகவும் இருக்கலாம். அல்லது பணிபுரியும் இடத்தில் ஏற்படும் விரும்பத்தக்க மாறுதலாகவும் இருக்கலாம். இராசிநாதன் நீச்சம் பெற்றிருந்தாலும், 10ந் தேதிக்குப் பிறகு குருவின் பார்வை அவருக்கு இருப்பதால் அவரது நீச்சத்திற்குப் பங்கம் ஏற்பட்டு இராஜயோகத்தைத் தருவார். வீட்டில் ஒரு சுப நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடக்கும். மனைவியின் மனநிலை குறித்தோ அல்லது உடல்நிலை குறித்தோ சற்று மனச் சஞ்சலம் ஏற்படும். ஆனால் கேது அதற்குண்டான முறையில் உங்கள் மனதிற்கு அமைதி ஏற்படும் வண்ணம் அருள்புரிவார். எனவே விநாயகருக்கு வேண்டிக் கொள்ளுங்கள் வேண்டியதைக் கொடுக்கும் வேல்முகத்தோன் தன்னை அண்டினவர்களைக் கைவிட மாட்டார்.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்.

மாதத்தின் முற்பகுதியில் உங்கள் முயற்சியில், அது எதுவானாலும் சரி வெற்றி உண்டு நீண்டகால அபிலாஷை ஒன்றை நிறைவேற்றிக் கொள்ளுவீர்கள். தாய்வீட்டுச் சீதனப்

கிடைக்கலாம். அல்லது அவர்களது உதவியாவது உங்களுக்குக் கிடைக்கும். வாகனமோ, வீடோ வாங்கும் யோகம் உண்டு. அஷ்டமத்தில் செவ்வாய் நீச்சம். எனினும் 10ந் தேதிக்குப் பிறகு குருவின் பார்வையைப் பெறும் செவ்வாய் இராஜ யோகத்தைத் தரும் நிலைக்கு வருவார். அதனால் வாகனத்துறை, இராணுவம், காவல்துறை, வனத்துறை மற்றும் எரிபொருள் துறையினர்க்கு எதிர்பார்த்த தனலாபம் உண்டு. குறிப்பாக சந்திரன் உச்சம் பெறும் சமயம் உங்களுக்கு அத்தகைய தனலாபம் உண்டு. 3ல் உள்ள சனீஸ்வரன் உங்களுக்குத் தேவையானவற்றை அருள இருக்கிறார். செவ்வாய், இராகு, குரு, சனி இவர்களுக்கு அந்தந்த கிழமைகளில் இந்த மாதம் பூராவும் அர்ச்சனை செய்து வருவது நல்லது. மந்த்ராலய மகானுக்குக் காணிக்கையாக உங்களால் முடிந்ததை அனுப்பி வையுங்களேன். அப்போது அஷ்டமத்துச் செவ்வாயின் தோஷம் நீங்கவும் 12க்கு வரும் சூரியன், குரு இவர்களால் ஏற்படுகின்ற சிறு பிரச்னைகளைச் சமாளிக்கும் ஆற்றலையும் தந்து ராகவேந்திரர் உங்களுக்குத் தோன்றாத் துணையாக நின்று நல்லதே நடக்க ஆசியும் கூறுவார். நம்பிக்கையுடன் தன்னை நாடுபவர்களை ஸ்ரீராகவேந்திரர் என்றும் கைவிட்டதில்லை. மாறாக தன்னை அண்டினவர்களுக்கு அவரைப் போல் கொடுப்பார் யாருமில்லை என்பதற்கு ஹயக்ரீவரே சாட்சி என அவரது ஸ்தோத்திரத்தில் இருப்பதைப் பார்க்கலாம்.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்.

2, 7 ஆகிய இடங்களில் உள்ள கிரகங்களில் ஒன்று ஆட்சி, மற்றொன்று நீச்சம், 10ந் தேதிக்குப் பிறகு இராஜயோகம் உண்டு. இதுவரை அரசுடன் போராடியவர்களுக்கு நிச்சயம் நல்லதொரு அனுகூலமான முடிவு கிடைக்கும். சற்று கிரகங்கள் ஏற்ற இறக்கமான நிலையைத் தான் மாதம் பூராவும் தருவார்கள். அதனால் அனுபவித்துக் கழிக்க வேண்டியதே. இராசி நாதன் ஆட்சியில் இருந்தாலும் நீச்சச் செவ்வாய் அவரைப் பார்ப்பது சரியல்ல. எனவே ஷண்முக நாதனுக்கும், விநாயகருக்கும் சக்திக்கும் ஏற்ற அளவிற்கு அபிஷேகம் செய்வது நல்லது. மேற்கண்ட எந்த நட்சத்திரத்தன்றும் செய்யலாம். 2வது பாரியாய 7½ சனி உள்ளவர்களுக்கு, ஜீவனஸ்தானத்தில் ஆட்சியில்

உள்ள சனீஸ்வரன் நல்லதே செய்வார். திரு மணத்திற்காக இத்தகைய சுப நிகழ்ச்சிக்கான முயற்சியில் வெற்றி ஏற்படும் வகையில் மாதம் பூராவும் சுக்கிரனது சஞ்சாரம் அமைந் துள்ளது. மாதத்தின் பிற்பகுதியில் அனுகூல மான சூழ்நிலை உருவாகி உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும். இது எத்துறையினர்க்கும் பொருந்தும்.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்.

10ந் தேதி வரை குரு பார்வை உண்டு. மாத ஆரம்பத்தில் அனுகூலமான நிலை, சனி ஆட்சியில் இருப்பதால் கவலை தேவை யில்லை. தவிர, கணநாயகனை அதி தேவதை யாகக் கொண்டுள்ள கேது மூன்றாம் இடத்தில் தனலாபம், வழக்குகளில் வெற்றி, பதவி உயர்வு, தேவையான இடத்திற்கு மாற்றம் என பல வழிகளில் உதவுவார். குரு மாற் றத்திற்கு முன்னால் எதிர் பார்த்த இடத்தில், எதிர் பாராத வகையில் வெற்றி, அல்லது தனலாபத்தைத் தருவார். 6ம் இடத்தில் குரு வால், பார்க்கப்படுவதால் வீடு கட்ட ஏதேனும் ஒரு இடத்தை வாங்குவீர்கள். எந்தத்துறையில் இருப்பவர்களுக்கும் இது பொருந்தும். புத்திர உற்பத்தி கூட எதிர் பார்ப்பவர்களுக்கு ஏற்பட லாம். மாதத்தின் பிற்பகுதியில் சூரியன் எடுத்த காரியத்தில் வெற்றி ஏற்படுத்தும் அதேவேளை யில் புதனும் உதவுகிறார். ஆனால் ஒரு பெண்ணால் உங்கள் மன அமைதி குறையும். உங்கள் மகனே கூட காரணமாக அதற்கு அமையலாம். தக்ஷிணாமூர்த்திக்கும், ராகு வுக்கும் அர்ச்சனை செய்வது நல்லது. சனீஸ்வர ஸ்தோத்திரம், மற்றும் கந்தர் சஷ்டி கவசம் படிக்கலாம். வசதி படைத்தவர்கள் ஏதேனும் ஒரு கோயில் நிர்மாணப் பணியில் உதவுவது நல்லது. வெகு ஜனப் பக்திக்குப் பாத்திரமாக உள்ள ஸ்ரீ சத்யசாயி பாபா தரிச னம் செய்து ஆசி பெறுவதும் நல்லது.

மீன ராசி :

பூராட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

* Alliance for Brahacharanam Garkeya Gothram, Rohini, BHSc. (I class), Diploma in Computers, Stenography, 25, 155 cms, Rs. 2000/-, fair, slim, good looking Girl, Steno-Typist, at NOIDA (Near Delhi) from well qualified, well employed Boys around 30 years, preferably North based. Contact : S. Ramasubbu, Block No. 210/F, Risali Sector, Bhilai Nagar, (M.P.) - 490 006.

* வடமாள், காசியப கோத்திரம், பி.எஸ்ஸி., பி. எட்., படித்து ஆசிரியராகப் பணிபுரியும் (ரூ. 1800) 27 வயது, 150 செ.மீ. உயரமுள்ள குடும்பப்பாங்கான பெண்ணிற்கு அரசு, நல்ல நிறுவனத்தில் பணிபுரியும் மணமகன் தேவை. Contact : M. Viswanathan, 35-A, James Street, Madipakkam, Madras - 600 091. Ph : 6260769

* Alliance invited from Iyer Boys (reputed Co., Govt. employed) for Haritha, Vathima, Moolam 4th Padam, 23 years, fair, 5', B.Com., PGDCA., Type-writing English Higher & Tamil Lower. Subsect no bar. Reply to : M. Sivarama Iyer, V - Block No. 12, Foreshore Estate, Madras - 600 028.

* Alliance invited from Non-Haritha Iyengar Boy well qualified and employed as officers in Bank, Insurance professionals for Graduate, fair Girl, domestically well trained 30, 4'.8'', employed in quasi Govt. Contact : V. Srinivasan, 175, III Main Road, Natesa Nagar, Virugambakkam, Madras - 600 092.

* வடமாள், பாரத்வாஜ கோத்திரம், அவிட்டம், வயது 26, உயரம் 5'.2'', பி.காம்., தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரியும் பெண்ணுக்கு நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். Contact : K. S. Venkataraman, Plot No. 35, Kumarankudi, Thoraipakkam, Perungudi Post, Madras - 600 096.

* ரெட்டியார், 29, 153 செ.மீ., எம்.ஏ. எம்.ஃபில், எம்.எட்., பிஹெச்.டி., ரூ. 2500/-, சுமாரான தோற்றம், திருச்சி தனியார் மகளிர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரியும் பெண்ணிற்கு தகுந்த வரன் தேவை. அரசாங்க, தனியார் நிறுவனங்களில் நிரந்தர வேலையில் உள்ள பொருத்தமான வரன்கள் விண்ணப்பிக்கவும். K. Sivakumar, C/0. Mrs. Chandra Sourirajan, 26/1, Greens, 3rd Street, Bharathi Nagar, Crawford, Trichy - 12.

* A well settled match preferably Doctor, Engineer, C.A for Tamil Iyer Bharadhwaja Mriga-seersham, Vathimal Girl, 24, 170 cms, M.B.B.S. doing M.D. (Medicine) First Year in Delhi. Subsect no bar. Reply with horoscope to : G. Ramarathnam, KB-17, Kavi Nagar, Ghaziabad (U.P.) Pin 201 002, Phones 8-42102, 8-43053.

* Alliance invited for Koundinya Gothram, Swathi Star, fair, homely Girl, aged 24, height 5'.4'', M.A. (Tamil),.

Doing B. Ed., from well settled. Bank, LIC, Central Govt. PSU, employed Boy below 29 years. Apply with horoscope & family details to K. Sugavanam, 83-A, 'Subhalakshmi', Shankar Nagar, Salem - 636 007.

• Wanted Hindu Nadar Groom for domestically well, polite, beautiful, slim Girl, 25, 164 cms, Banglore employed Post Graduate, Computer professional. Contact : Inmates V. Sundararajan, 252, 6th Cross, Domlur Extn, I Stage, Bangalore - 560 071.

• Wanted qualified settled Iyer match for C.A. Inter employed Girl Bangalore Rs. 4500/-, 31, 5'.4" Pooradam, Vadamal, Koundinyam. Contact with horoscope to R. N. Moorthy, Synthokem P.B. 1911, Sanath Nagar, Hyderabad - 500 018. Telephone: 287213 (R)

• தெலுங்கு 6000 நியோகி பிராமின், சாலங்காயன கோத்திரம், ரோகிணி நட்சத்திரம், வயது 31, ரூ. 4000/-, 5'.5", சென்னைப் பல்கலைக் கழகத்தில் வேலை. படிப்பு பி.ஏ., டி.பி.ஏ., அரசு, தனியார் வங்கி வேலையில் நல்ல தகுதியுடைய மணமகள் தேவை. முகவரி : வி. கோபாலன், 40, மல்லிகா நகர், முடிச்சூர் ரோடு, மேற்கு தாம்பரம், சென்னை - 600 045.

• வடமாள், ஐயர், கௌசிக கோத்திரம், மிருகசீரிஷ நட்சத்திரம், 26, 147 செ.மீ., +2, ஆசிரியை பயிற்சி முடித்த பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. முகவரி : என். நாராயணன், நெ. 18, கோதண்ட பிள்ளை தெரு, சாமிநாதபுரம், வேலூர் - 1.

• Alliance invited from well placed, Non-Bharadhwaja broadminded Iyer Boys, for Chitthirai, 5'.4", 22, Rs. 1500/-, Graduate Girl. Please Reply with horoscope to A. Kumar, 31-C, 28th Street, Thillai Ganga Nagar, Madras - 600 061. Phone : 2345049

• தனியார் துறையில் பணிபுரியும் பி.ஏ. படித்த 31 வயது, 5'.6" முதலியார் வகுப்பைச் சார்ந்த பெண்ணிற்கு அதே வகுப்பைச் சார்ந்த மணமகன் தேவை. முகவரி : M. K. சங்கரன், 33, 5வது குறுக்குத் தெரு, T.P.C. ஷாப் பக்கம், சென்னை 600 010.

• Vadamal Srivatsam, Graduate, 34, 153 cms, Pooyam, fair, Central Govt. employed Girl seeks Trivandrum based Professionals, Bank, Govt. Gulf, well placed Grooms. Subsect acceptable. Reply with horoscope and details. Contact : S. Rajalakshmy, T.C. 28/2168, Near Ganapathy Temple, Pazhavangady Street, Fort, Trivandrum, Pin - 695023.

• Alliance from both sects Iyengar Graduate Bank, LIC, Central, State, Madras based for Thenkalai Girl Vadhoolam, Hastham, 26, B.A., 5'.4", TN Government Service, Rs. 2400/-. Full particulars to : P. S. Narasimhan, 28, Venkier Street, Madras - 600 079.

மணமகன் - மணமகள் தேவை

• ஐயர், பாரத்வாஜம், வடமாள், வயது 23, 158 செ.மீ., ரூ. 1000/- பி.யு.சி., குடும்பப்பாங்கான பெண்ணிற்கு அரசாங்க, வங்கி, நிரந்தரப் பணியிலுள்ள வரனும், வயது 32, 176 செ.மீ.ரூ. 3600/- பி.யு.சி., மத்திய அரசுப் பணியிலுள்ள சகோதரனுக்கு மணமகளும் தேவை. பெண் கொடுத்துப் பெண் எடுக்க சம்மதம். எளிய திருமணம். உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 30079

• Mutual, Separate alliance for Iyer Girl 28, Graduate Teacher Rs. 2300/-, Vergin divorcee from decently employed broadminded bachelors below 36 and Brother, Graduate, 33, Assistant Manager, Private firm, Rs. 2500/- requires employed Girls, divorcees without encumbrances acceptable for mutual. Subsect no bar. Box No. 30080

• Mutual, Separate alliance for daughter of Gazetted Officer (Retd.) 23, 153 cms, B.Com., Son 28, 169 cms, B.E., M.B.A. (USA) well placed Bombay. Brahmin, Naidu parentage with Brahmin customs. Pure Vegetarian. Box No. 30081

• கன்னட மாத்வ குடும்பம், ஆத்ரேய கோத்திரம், பெண் 32, வயது, 148 செ.மீ., பட்டப் படிப்பு, மூலம் 3ஆம் பாதம், தோலில் வயிற்றுப் பகுதியில் எவ்விதப் பிரச்னையுமற்ற வெள்ளைப் புள்ளிகள் கொண்டவர். சகோதரர் வயது 30, 158 செ.மீ., ரூ. 4500/- அரசுடைமை வங்கியில் வேலை, பெண் கொடுத்துப் பெண் எடுக்க விருப்பமுள்ளவர் மட்டும் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 30082

• Mutual or separate alliances invited for Telugu Pattusali Brother aged 32, 174 cms, Officer in Central Govt, Rs. 5000/-. Sister aged 30, 155 cms, fair and beautiful. SSLC, domestically well trained. Another Sister aged 26, 160 cms, medium complexioned, good looking, domestically well trained. Subsects no bar. Reply to Box No. 30083

• Mutual, separate alliance invited for Tamil Vania Chettiar Boy, DME 29, 176 cms, Rs. 4000/- employed in Indian Airlines, Bombay, Sister 22, 172 cms, MBM, good job opportunities. Box No. 30084

• Madhwa Kannada Koundinya Girl, 28, 160 cms, Utthiram, B.Sc and Computer Diploma unemployed and her Brother 29, 175 cms, Rs. 5000/-, Hastham Diploma Civil Engineer in Tata/Bombay. Reply to: G.B. Murthy, 71-B, Mukundan Street, Krishnapuram, Ambattur, Madras - 600 053.

• Alliance for Tamil Iyer Brahacharanam, Kasyapa Girl, Aswini, 26, 145 cms, 10th std, unemployed. Boy, 30, 145 cms, Star Bharani, S.S.L.C., Finance Managing Partner, Covai. Contact : R. Narayanan, 419, Jawahar Bazaar, Karur-1. Ph : 23401.

• Alliance for Brother, 29, M.B.A. and Sister, 24, B.Com., Tamil Brahmins, intercaste. Reply to : Venkatraman, 2, Green Valley, Din Quarry Road, Deonar, Bombay - 400 088.

Printed and Published by V. MURALI on behalf of MESSRS BHARATHAN PUBLICATIONS PRIVATE LIMITED, at the *BHARATHAN PRESS*, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.
Editor : MANJULA RAMESH. Managing Editor : V. MURALI
Telephones – Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622. Director : 2345621.
Annual Subscription : India Rs. 84/-; Overseas : Rs. 600/- (Air Mail); Rs. 250/- (Sea Mail);
Half Yearly Subscription : India Rs. 42/-; Overseas : Rs. 300/- (Air mail); Rs. 125/- (Sea Mail).

கிளறும் வகைகள் :

தீபாவளிக்கு இத்தனை வகை பட்சணங்களா?

1. விஜிடபிள் பால் அல்வா :

தேவையானவை :

கேரட் - 100 கிராம்,
ப.பட்டாணி - 50 கிராம்,
சௌசௌ - பாதி,
தே. மூடி - 1,
நெய் - 1 கிளாஸ்,
பால் - 1 லிட்டர்,
சர்க்கரை - 600 கிராம்,
ஏலக்காய் - 4,
முந்திரி - 8.

செய்முறை :

கேரட், சௌசௌ தோல் சீவி நறுக்கி, பட்டாணியும் சேர்த்து ஆவியில் வேகவைக்கவும். வெந்த கறிகாய், துருவிய தேங்காய், உரித்த ஏலக்காய் இவற்றைப் போட்டு மிக்ஸியில் மை போல அரைக்கவும். அடிகனமான பாத்திரத்தில் அரைத்த விழுதைப் போடவும். பால், சர்க்கரை, நெய் இவற்றையும் போட்டு, அடுப்பில் வைத்துக் கிளறவும். முதலில் அடுப்பை சற்றுப் பெரியதாக எரிய விட்டு, கலவை கொதி வந்ததும் சிம்மில் வைத்து விடவும். அல்வா பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும் போது, நெய் தடவிய டிரேயில் கொட்டி, சமப்படுத்தி, சீவிய முந்திரியால் அலங்கரித்துத் துண்டுகள் போடவும். வெள்ளரி விதை, டூட்டி ஃப்ரூட்டி பழத் துண்டங்கள் இவைகளாலும் அலங்கரிக்கலாம். தங்க, வெள்ளி பேப்பர்கள் வாங்கி ஒட்டத் தெரிந்தவர்கள், ஒட்டி பின் துண்டுகள் போடலாம்.


2. அக்ரூட் கோவா :

தேவையானவை :

அக்ரூட் - 200 கிராம்,
தேங்காய் - 1 மூடி.
பால் - 1 லிட்டர்,
சர்க்கரை - 600 கிராம்,
நெய் - 1 கிளாஸ்,
ஏலக்காய் - 4,
முந்திரி - 8

செய்முறை :

அக்ரூட் எனப்படும் காஷ்மீர் பாதாம் கடைகளில் கிடைக்கும். அதை வாங்கி வந்து ஓடு போன்ற பகுதியை உடைத்தால் உள்ளே இரண்டு, மூன்று பருப்பு கிடைக்கும். இதே போல் எல்லா பருப்பு களையும் உடைத்து உள்ளே



உள்ள பருப்பை இரவே ஊறவைக்கவும். காலையில் அதன் மேல் தோல்களை நீக்கினால் வெள்ளை வெளேர் என்ற பருப்பு கிடைக்கும். இதை, மிக்சியில் போட்டு, தேங்காயையும் துருவிப் போட்டு, பால் விட்டு வெண்ணை போல் அரைக்கவும். அரைத்த விழுதை அடிகனமான பாத்திரத்தில் போட்டு, நெய், சர்க்கரை, பால் இவற்றையும் போட்டுக் கலக்கி, அடுப்பிலேற்றவும். அடுப்பை நிழல் போல் எரிய விடவும். கிளறிக் கொண்டே இருந்தால் கேக், சட்டியில் ஒட்டாமல் சுருண்டு வரும். அப்போது ஏலப் பொடி போட்டுக் கிளறி தாம்பாளத்தில் கொட்டி, சமப்படுத்தி, சீவிய முந்திரியைச் சமமாகத் தூவி அலங்கரித்துத் துண்டுகள் போடவும். இதுவே அக்ரூட் கோவா. சுவையான, புதுமையான ஸ்வீட்.

3. த்ரீகலர் கோவா கேக் :

தேவையானவை :

மைதா மாவு - 3 கிளாஸ்,
சர்க்கரை - 7½ கிளாஸ்,
சர்க்கரை போடாத கோவா - 150 கிராம்,
முந்திரி - 100 கிராம்,
ரோஸ் எஸன்ஸ் - சிறிதளவு,
நெய் - 2¼ கிளாஸ்,
பச்சை, ஆரஞ்சு கலர்கள் - கொஞ்சம்,
பால் - 2 ஸ்பூன்.

செய்முறை :

ஒரு வாணலியில் 1 கிளாஸ் மைதா, ¾ கிளாஸ் நெய் விட்டு அடுப்பில் வைத்துப் பொரிக்கவும். பிஸ்கட் கலர் லைட்டாக வர வேண்டும். அடிகனமான உருளியில் 2½ கிளாஸ் சீனி போட்டு, நீர் விட்டு பாகு காய்ச்சவும். பாகு கம்பிப் பதம் வர வேண்டும். 5, 6 சொட்டு ரோஸ் எஸன்ஸ் விட்டு, பச்சைக் கலர் கொஞ்சம் போடவும். கலர் கொஞ்சம் பாகில் 'டார்க்'காக இருந்தால்தான் கேக் கிளறிக் கொட்டும் போது, கலர் குறைவாகி சரியான கலர் வரும். வறுத்த மாவை, பாகில் கொட்டி அடுப்பை சிறியதாக்கவும். கிளறிக் கொண்டே இருக்கவும். சற்று கெட்டியாகும் போது 50 கிராம் கோவாவைப் போடவும். முந்திரியை மிக்ஸியில் பொடித்து மூன்றில் ஒரு பங்கைப் போட்டு கிளறவும். பாத்திரத்தில் ஒட்டாமல் வரும் போது நெய் தடவிய தாம்பாளத்தில் போடவும். வாழையிலையால் அழுத்தி மெலிதாக பரத்தவும்.

மேற்சொன்னபடி மைதாவை 1 கிளாஸ் வறுத்து, பாகு வைக்கும் போது கலர் போட வேண்டாம் அதற்குப் பதில் 2 ஸ்பூன் பால் விடவும். அழுக்கெல்லாம் வெளியே வரும். எடுத்து விடவும். பின் ரோஸ் எஸன்ஸ் விட்டு, கம்பிப் பதம் வந்ததும், வறுத்த மைதாவை போட்டுக் கிளறி, கோவா 50 கிராம் போட்டு, முந்திரிப் பொடி போட்டுக் கிளறி, பச்சை கலர் மேலே கொட்டி சமப்படுத்தவும்.

மூன்றாம் முறை ஆரஞ்சு கலரில் மேற் சொன்னபடி கேக் கிளறிக் கொட்டி, சமப் படுத்தவும். நன்றாக அழுத்தவும். கத்தியால் ஆழமாக டைமண்ட் வடிவத்தில் துண்டுகள் போடவும். கேக்கின் மேலே ஒரு கலர், கீழே ஒரு கலர், நான்கு புறங்களிலும் முக்கலரில், கேக் பார்க்கவே அழகாய் இருக்கும். வாயில் போட்டால் ஐஸ்கிரீம் போல கரையும். முந்திரி, கோவா எல்லாம் நிறைய போடுவதால் சுவையாய் இருக்கும். செலவு கொஞ்சம் அதிகமானாலும் மனநிறைவான, பெருமைப் பட்டுக்கொள்ளக் கூடிய இனிப்பு இது.

4. கலவை கேக் :

தேவையானவை :

முந்திரி - 100 கிராம்,
பாதாம் பருப்பு - 100 கிராம்,
பிஸ்தா பருப்பு - 50 கிராம்,
கோவா - 200 கிராம்,
நெய் - 200 கிராம்,
சர்க்கரை - 600 கிராம்,
வென்னிலா எஸன்ஸ் - சிறிதளவு,
அலங்கரிக்க - வெள்ளி அல்லது தங்க பேப்பர் (கடைகளில் கிடைக்கும்),
ஆரஞ்சு (அ) பச்சை கலர் - சிறிதளவு.

தீபாவளி கேசரி

தேவையானவை :

ஜவ்வரிசி - 100 கிராம்,
சர்க்கரை - 200 கிராம்,
பால் - 200 மி.லி.,
நீர் - 100 மி.லி.,
நெய் - 200 கிராம்,
கேசரி பவுடர் - 1 ஸ்பூன்,
ஏலக்காய் - 6,
முந்திரி - 10.

செய்முறை :

ஜவ்வரிசியை இலேசாக வறுக்க வேண்டும். பாலையும் தண்ணீரையும் கலந்து கொதிக்கவைத்து ஜவ்வரிசியைப் போட்டு வெந்ததும் சர்க்கரையைப் போட்டு நன்றாக வற்றும் வரை நெய்விட்டுக் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். முந்திரி, ஏலப்பொடி தூவி தட்டில் விட்டுத் துண்டுகள் செய்ய வேண்டும்.

- ஆர். ஜெயலட்சுமி



தீபாவளி வரப் போகிறது! லட்டு, பர்பி, மைசூர்பாகு போன்ற இனிப்பு வகைகளுக்கு சமயத்தில் அளவு மறந்துபோய் விடுகிறது. ஆகவே இல்லத்தரசிகளுக்குச் சில ஞாபகக் குறிப்புகள் :

1. தேங்காய் பர்பி செய்ய தேங்காய்த் துருவல் எவ்வளவு உள்ளதோ அதே அளவு சர்க்கரையும், அதில் பாதி அளவு நெய்யும் சரியாக இருக்கும். 2. மைசூர்பாகு செய்ய 1 பங்கு கடலைமாவுக்கு, 2 பங்கு சர்க்கரையும் 3 பங்கு நெய்யும் சரியாக இருக்கும். 3. பயத்தம் மாவு லட்டுக்கு ஒரு பங்கு பயத்தம்பருப்புக்கு அதே அளவு சர்க்கரையும், அதில் பாதி அளவு நெய்யும் தேவை. 4. ரவா லட்டுக்கு ஒரு பங்கு ரவைக்கு, ஒன்றேகால் பங்கு சர்க்கரையும், முக்கால் பங்கு நெய்யும் தேவை. 5. பூந்தி லட்டுக்கு ஒரு பங்கு கடலை மாவுக்கு, அதே அளவு சர்க்கரையும், அரை கப் நெய்யும் சரியாக இருக்கும். 6. அதிரசம் செய்ய1 தம்ளர் ஈரமான அரிசி மாவுக்கு அதே அளவு (ஒரு தம்ளர்) வெல்லம் போதுமானது. 7. பால் பவுடர் கேக் செய்ய ஒரு கப் பால் பவுடருக்கு 2 கப் சர்க்கரையும் ஒரு கப் நெய், ஒரு கப் மைதா சரியாக இருக்கும்.

- ஆர். கோஞ்சலி

செய்முறை :

பிஸ்தா பருப்பை கொதி நீரில் போட்டு தோல் நீக்கவும். பாதாம் பருப்பை ஊறவைத்து தோல் நீக்கவும். முந்திரி, பாதாம் பருப்பு, பிஸ்தா பருப்பு இவற்றை வெண்ணெய் போல அரைக்கவும். சர்க்கரையை அடிகனமான பாத்திரத்தில் போட்டு, நீர் விட்டு கம்பிப் பதம் பாகு காய்ச்சவும். பாகில் கலர்ப் பொடி, எஸன்ஸ் சேர்க்கவும். அரைத்த விழுதைக் கொட்டிக் கிளறவும். நெய்யைச் சேர்க்கவும். கொஞ்சம் கேக் கெட்டியானதும் கோவாவை உதிர்த்துக் கிளறவும். சட்டியில் ஒட்டாமல் சுருண்டு வரும் போது, நெய் தடவிய தட்டில் கொட்டி சமப்படுத்தி, வெள்ளி (அ) தங்கத் தாளை கேக்கின் மேல் பரத்தி, பின் துண்டுகள் போடவும். எந்த வடிவில் வேண்டுமானாலும் போடலாம்.

5. தேங்காய் சாக்லேட் :

தேவையானவை :

தேங்காய் - 1,
சர்க்கரை இல்லா கோவா - 200 கிராம்,
சர்க்கரை - 500 கிராம்,
கொக்கோ பவுடர் - 2 டேபிஸ் ஸ்பூன்,
நெய் - 200 கிராம்.

செய்முறை :

தேங்காயைத் துருவி நைசாய் அரைக்கவும். சிறிது பால் விட்டு, சர்க்கரை, நெய் கலந்து அடுப்பில் வைத்துக் கிளறவும். கோவாவை உதிர்த்துப் போடவும். கலவை கெட்டியாகும் போது, கொக்கோ பவுடரைக் கலந்து, நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டிப் பரத்தி துண்டுகள் போடவும். இதுவே தேங்காய் சாக்லேட்.

6. போர்ன்விடா கேக் :

தேவையானவை :

மைதா - 1 கிளாஸ்,
சர்க்கரை - 2½ கிளாஸ்,
நெய் - 1 கிளாஸ்,
போர்ன்விட்டா - 1 கிண்ணம்,
கோவா - 50 கிராம்,
முந்திரிப் பருப்பு -12.

செய்முறை :

மைதாவை நெய்யில் ரோஸ்ட் செய்யவும். அடிகனமான உருளியில் சீனியை கம்பிப் பதம் பாகு காய்ச்சவும். மைதாவைக் கொட்டி அடுப்பை அணைக்கவும். கிளறவும். சற்று கெட்டியாகும் போது முந்திரியைப் பொடி செய்து போட்டு, கோவாவை உதிர்த்துப் போட்டுக் கிளறி, போர்ன்விட்டாவையும் போட்டுக் கிளறி, நெய் தடவிய டிரேயில் கொட்டி, சமப்படுத்தவும். துண்டுகள் போடவும். இதுவே 'போர்ன்விட்டா கேக்' சுவையானது.

7. சேமியா பால் அல்வா :

தேவையானவை :

சேமியா - 250 கிராம்,
பால் - 250 மில்லி,
சர்க்கரை - 500 கிராம்,
பச்சை கலர் - சிறிதளவு,
ஏலக்காய் - 10,
முந்திரி - 10+10,
நெய் - 1 கிளாஸ்.

செய்முறை :

சேமியாவை பாலில் ஊறவைக்கவும். அரைக்கவும். தோசை மாவு பதத்திற்குக் கரைக்கவும். சர்க்கரையைப் பாகு வைக்கவும். கம்பிப் பாகு பதத்தில் 2 ஸ்பூன் பால் விட்டு, அழுக்குகளை நீக்கவும். பச்சை கலர் சேர்க்கவும். சேமியா பாலை விடவும். கிளறவும். அடுப்பை நிழல் போல எரிய விடவும். பத்து முந்திரியை துண்டுகளாக்கி அல்வாவில் போட்டுக் கிளறவும். நெய்யைச் சிறிது, சிறிதாக விட்டுக் கிளறவும். அல்வா நெய்யை கக்க ஆரம்பிக்கும். இதுவே பதம். வேகும் போது நடுவில் 1 கிளாஸ் கொதி நீரை விடலாம். பதம் வந்ததும் ஏலப் பொடி போட்டு, நெய் தடவிய டிரேயில்



— Extra Care —
தூய்மைப்படுத்தும் வழிமுறைகள்
கூடுதல் ஈரப்பதம் தேவைப்படுகிறது.
கூடிய புதிய பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர் சோப்பின் நுரையைக் கொண்டு நன்கு இழைக்கவும்.
தனிச்சிறப்பான இருவழி செயலாற்றல் முதலில் தூய்மைப்படுத்தி பிறகு ஈரப்பதத்தை அளிக்கிறது.
சருமத்தைப் பட்டுப்போன்று மிருதுவாகத் திகழச் செய்கிறது.
தூய்மைப் படுத்தி புத்துணர்வு பெறவும்.
New
Palmolive
— Extra Care —
WITH NATURAL LANOLIN
MOISTURISES DRY SKIN
பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர்
இப்போது லானோலின் மாய்ஸ்ச்சரைசருடன்
தொட்டால் தெரியும் பட்டின் மென்மை
Ambience/EC/183/A/Tam



ஐசிஎஸ் R. நடராஜன்
நிர்வாக இயக்குநர்

ஐசிஎஸ்

(நிதி நிறுவனம்)

221, சத்தியமூர்த்தி சாலை, ராம் நகர்
கோயமுத்தூர் - 641 009.

54 ஆண்டுகளுக்கு
மேலான அரிய சேவை

குறுகிய கால டெபாசிட் திட்டம்

காலம்	ஒரு நாள் முதல் 12 மாதங்கள் வரை
வட்டி விகிதம் ஆண்டுக்கு	**15%**

டெபாசிட் தொகையை எப்போது வேண்டுமானாலும் உரிய வட்டியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

சுபிட்சம் வைப்புத் திட்டம்

ரூ. 10,000/- செலுத்தினால் 45 மாதங்களில்
ரூ. **21,000/-** கிடைக்கிறது.

பிக்சட் டெபாசிட் திட்டம்

காலம்	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்	60 மாதங்கள்
ஆண்டுக்கு ஒரு முறை வட்டி	18%	18.5%	19%	19.5%	20%
மாதம் ஒரு முறை அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறை வட்டி	16%	16.5%	17%	17.5%	18%

கார்கள், இதர இலகுவான வாகனங்கள் (Light Vehicles), கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அசையா சொத்துக்கள், ஷேர் சர்டிபிகேட்கள், இந்திர விகாஸ் பத்திரங்கள், தங்க நகைகள் ஆகியவற்றின் பேரில் கடன் பெற நேரில் அணுகவும்.

மூன்று தலைமுறை வாடிக்கையாளர்களின் முழு நம்பிக்கையைப் பெற்றது!

கொட்டிச் சமப்படுத்தி கேரட் சீவியில் முந்திரியைச் சீவி, அல்வா மேல் அலங்கரிக்கவும். துண்டுகள் போடவும். இந்த அல்வா யார் செய்தாலும் நன்றாக வரும்.

8. கோவை கோவா :

தேவையானவை :
பால் - 1 லிட்டர்,
கடலை மாவு - 250 கிராம்,
சர்க்கரை - 700 கிராம்,
நெய் - 300 கிராம்.

செய்முறை :
நெய்யில் கடலை மாவை ரோஸ்ட் செய்யவும். பாலை நன்றாகச் சூடாக்கி, கடலை மாவில் விட்டுக் கிளறவும். கலவை கெட்டியாகும். சர்க்கரையைக் கொட்டிக் கிளறவும். கோவா, பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும் போது நெய் தடவிய தட்டில் கொட்டி துண்டுகள் போடவும். மேலே அலங்காரம் செய்யலாம். இல்லையெனில் கேக்கை சிறு சிறு உருண்டைகளாக்கி, தட்டி, மேலே முந்திரி, திராட்சை, செரி ஏதாவது பதிக்கலாம். கோவை கோவா புது ஸ்வீட். சுவையானது.

எண்ணெயில் பொரிக்கும் இனிப்பு வகைகள் :

1. இனிப்பு சிங்காடா :

தேவையானவை :
சர்க்கரை போட்ட கோவா - 250 கிராம்,
கடலை மாவு - 4 ஸ்பூன்,
முந்திரி - 8,
பாதாம் பருப்பு - 8,
நெய் - 8 ஸ்பூன்,
கசகசா - 2 ஸ்பூன்,
ஏலப்பொடி - சிறிதளவு,
சர்க்கரை - 300 கிராம்,
மைதா மாவு - 300 கிராம்,
ரீபைண்டு ஆயில் - 400 மில்லி,
கலர் கலர் தேங்காய் பூ - 25 கிராம்.

செய்முறை :
மைதாவை 4 ஸ்பூன் நெய் விட்டுக் கலக்கி சிட்டிகை உப்பு போட்டு, நீர் தெளித்து ரொட்டி மாவு போல் பிசையவும். மூடி ஊற வைக்கவும். வாணலியில் நெய் 4 ஸ்பூன் விட்டு பாதாம் பருப்பு, முந்திரி பருப்பு இவைகளை சீவி வறுத்து, கடலை மாவையும் போட்டு வறுத்து இறக்கி, கோவாவோடு கலக்கவும். கசகசாவை வெற்று வாணலியில் வறுத்துப் பொடித்துப் போடவும். ஏலப்பொடி சேர்க்கவும். சிறு சிறு உருண்டைகளாக்கவும். மைதா மாவை ஒரு உருண்டை எடுத்து, கிண்ணம் போல செய்து, பூரணத்தை ஒரு உருண்டை வைத்து மூடி, கையால் வடை போல் தட்டி, எண்ணெயில் பொரிக்கவும். சர்க்கரையை இரட்டை கம்பிப் பதம் பாகு காய்ச்சி பொரித்த சிங்காடாவை முக்கி தாம்பாளத்தில் அடுக்கவும். சூட்டோடு மேலே தேங்காய்ப் பூ தூவவும். சுவையான ஸ்வீட் சிங்காடா இதுவே. புதுமை + ருசி.

2. சுருள் போளி

தேவையானவை :
கோதுமை மாவு - 200 கிராம்,
மைதா - 200 கிராம்,
நெய் - 100 கிராம்,
அரிசி மாவு - 1 கரண்டி,
சமையல் சோடா -சிறிதளவு,
ரீபைண்டு ஆயில் - 300 கிராம்,
சர்க்கரை - 500 கிராம்,
ஆரஞ்சு கலர் - சிறிதளவு,
ரோஸ் எஸன்ஸ் - 8 சொட்டு,
கலர் கலர் தே.பூ - 50 கிராம்.

செய்முறை :
மாவுகளைச் சலித்து, 4 ஸ்பூன் நெய் விட்டுப் பிசறி நீர் தெளித்து ரொட்டி மாவு



மனைவியை விடக்கணவன் குறைவாகச்சம்பாதிப்பதைச் சிலர் இயல்பாக ஏற்றுக் கொண்டாலும் மூன்றாவது மனிதர்களால் பிரச்னைகள் ஏற்படுவதுண்டு. ஒரு வேடிக்கையான சம்பவம் : மனைவி பெண்நல மருத்துவர். கணவர் பல் வைத்தியர். சொந்த வீட்டில் அடுத்தடுத்த அறைகளில் கிளினிக்குகள் வைத்திருந்தார்கள். மனைவியின் கிளினிக்கில் கூட்டம் 'ஜே, ஜே' என்றிருந்தது. கணவர் ஈயடித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு கிராமத்து நோயாளி கணவரைப் பார்த்து, "ஏன் சாமி! நீங்களும் டாக்டருக்குப் படித்தவர்தானே! எழுந்து இஞ்செக்ஷனையாவது போட்டால் கூட்டம் குறையுமில்லே!" என்றார், யதார்த்தமாக. கணவன் - மனைவி இருவருக்குமே என்னவோ போல் ஆகிவிட்டது. அவர் விரைவில் தன் கிளினிக்கை வேறு கட்டடத்துக்கு மாற்றிவிட்டார்.

- அ. ஷண்முகசுந்தரம்

பெரும்பாலும் கல்யாணமண்டபம் பக்காவாக இருக்கும். நாலுவகை ஸ்வீட்டோடு சாப்பாடும் அமர்க்களமாக இருக்கும். ஆனால் குடிக்கும் தண்ணீர் மட்டும் சுகாதாரமாக இருக்காது. பெரிய அண்டாக்களில் குடிக்கும் தண்ணீரை நிரப்பி இருப்பார்கள். பெரும்பாலும் சரியான மூடி இருக்காது. எண்ணெய் மிதப்பது போல இருக்கும். இதைத் தவிர்க்க மண்டப நிர்வாகிகளே, நிரந்தரமாக பெரிய மூடியுடன் கூடிய எவர்சில்வர் பாத்திரங்களை அல்லது பெரிய சைஸ் வாட்டர் ஃபில்டர்களை வாங்கி வைக்கலாம். அதற்குத் தனியாக பராமரிப்புச் செலவு என்று வசூலித்துக் கொள்ளுங்களேன். எத்தனையோ கல்யாண மண்டபங்களில் எனக்கு ஏற்பட்ட அனுபவம்தான் இதை எழுதத் தூண்டியது.

- ஆர். நிர்மலா



போல பிசைந்து 2 மணி நேரம் மூடி வைக்கவும்.

மீதி நெய்யையும், அரிசி மாவையும் கலந்து கிண்ணத்தில் வைக்கவும்.

மாவை ஆறு பாகமாக பிரிக்கவும். ஆறு பெரிய சப்பாத்தி போல இடவும். முதலில் ஒரு சப்பாத்தியை வைத்து அதில் 1 ஸ்பூன் நெய் + மாவு கலவையைத் தடவி, அதன் மேல் மற்றொரு ரொட்டியை வைத்து, அதன் மேலும் 1 ஸ்பூன் மாவு + நெய் கலவையைத் தடவி, மேலே மற்றொரு சப்பாத்தியையும் வைக்கவும். அதன் மேலும், நெய் கலவையைத் தடவவும். இப்போது, மூன்று அப்பளங்களையும், அப்படியே பாய் போல சுருட்டவும். அழுத்தி சுருட்டவும். இரண்டு விரல் கட்டை நீளத்தில் வெட்டி சுருள் பிரியாமல் ஓரத்தை ஒட்டி, எண்ணெயில் பொரிக்கவும். இரண்டாவது செட் சப்பாத்தியையும் இப்படியே செய்து சுருள், சுருளாக பொரிக்கவும்.

வாணலியில் சர்க்கரையை பாகு வைக்கவும். நல்ல கம்பிப் பதம் பாகு. எஸன்ஸ் விட்டு, ஆரஞ்சு கலர் போட்டு இறக்கவும். பொரித்த சுருள் போளியை பாகில் போட்டு 5 நிமிடம் ஊறவைக்கவும்.

ஒரு தட்டில் தேங்காய்ப் பூவைக் கொட்டி அதில் பாகிலிருந்து எடுத்த சுருள் போளியை லேசாக உருட்டி தாம்பாளத்தில் அடுக்கவும். அழகான, சுவையான, எளிதான ஸ்வீட்.

3. லவங்க லக்கிடி

தேவையானவை :

பால் - 1 லிட்டர்,
கசகசா - 4 ஸ்பூன்,
முந்திரி - 12,
ஏலப்பொடி - 1 ஸ்பூன்,
சர்க்கரை - 800 கிராம்,
ரவை - 1/2 கிலோ,
கிராம்பு - 25,
நெய் - 8 ஸ்பூன்,
ரீபைண்டு ஆயில் - 400 மில்லி.

செய்முறை :

பாலை சுண்டக் காய்ச்சவும். கசகசாவை வறுத்துப் பொடித்துப் போடவும். முந்திரியைச் சீவிப் போடவும். பாதி ஏலப் பொடி போட்டுக் கிளறவும். நாலு ஸ்பூன் நெய், 4 ஸ்பூன் சர்க்கரையைப் போட்டுக் கிளறி இறக்கி ஆறவிடவும். சிறு சிறு வில்லைகளாகத் தட்டவும்.

ரவையை நெய் போட்டுப் பிசைந்து ஊற வைக்கவும். கல்லுரலில் நைஸாக இடிக்கவும். சிறு சிறு உருண்டைகளாக்கி அப்பளங்களாக இடவும். நடுவில் ஒரு வில்லை கோவா கலவையை வைக்கவும். நான்காக அப்பளத்தை மடித்து, ஓரங்களை ஒட்டி கோவா உருண்டை அருகில் ஒரு கிராம்பைச் செருகி விட வேண்டும். வாணலியில் எண்ணெயை வைத்து, லக்கிடியைப் பொரிக்கவும்.

சர்க்கரையை பாகு காய்ச்சவும். கெட்டிப் பாகு காய்ச்சவும். ஏலப்பொடி போடவும். லவங்க லக்கிடியை முக்கி, முக்கி எடுத்து, தாம்பாளத்தில் அடுக்கவும்.

4. அங்கூரா பூந்தி :

தேவையானவை :

உளுத்தம் பருப்பு - 300 கிராம்,
மைதா மாவு - 300 கிராம்,
சர்க்கரை - 1 கிலோ,
ரீபைண்டு ஆயில் - 400 மில்லி,
பச்சை, ஆரஞ்சு, மஞ்சள், ரோஸ் - கொஞ்சம், கொஞ்சம்.
ஏலப்பொடி - 1 ஸ்பூன்,
நெய் - 4 ஸ்பூன்,
முந்திரி - 15.

செய்முறை :

உளுத்தம் பருப்பை ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். கொடகொடவென அரைக்கவும். மைதாவைக் கலக்கவும். மாவை ஐந்து பாகங்களாகப் பிரிக்கவும். நான்கு பங்கிற்கு நான்கு கலர்களைக் கலக்கவும். ஒன்றை கலர் இல்லாமல் வைக்கவும். வாணலியில் எண்ணெய் வைத்து, பூந்திக் கரண்டியில் ஒவ்வொரு கலர் மாவாக விட்டு பூந்தி செய்யவும். உளுந்து போட்டிருப்பதால் பூந்தி சிறிய வட்டமாக வராது. பெரிய பெரிய பூந்தியாக வரும். எல்லா கலர்களையும் தனித்தனியே பூந்தி-


ஹெர்பல் ப்ளஸ்
கேச பராமரிப்புக்கு இது ப்ளஸ் மார்க்.
அருமைத் தயாரிப்பு - ஹெர்பல் பிளஸ்.
அருமையான 18 மூலிகைகளின் நன்மையெல்லாம்
ஒன்று சேர்ந்து உருவானது... உங்கள் கேசத்திற்கு
ஊட்டம் அளித்து, கண்டிஷன் செய்து, அழகு
பளபளக்க அதை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.
New
ஹெர்பல் ப்ளஸ்
ஹெர்பல் பவுடர்
பாரம்பரியச் சிறப்புடன் கேச பராமரிப்பு. With all the glamour.
Mktd. By: J.K. Chemicals Ltd. Regional Off: Madras - 600 078
Ph: 4837716. Head Off: Bombay - 400 038.

போல தேய்க்கவும். அள்ளவும். சர்க்கரையை இரட்டை கம்பிப் பதம் பாகு காய்ச்சவும். பாகு காய்ச்சும் போது, இரண்டு ஸ்பூன் பால் விட்டு, சர்க்கரையில் உள்ள அழுக்கை நீக்கவும்.

பாகில் ஏலப்பொடி போட்டு, 2 ஸ்பூன் நெய் விட்டு, பொரித்த பூந்திகளைப் போட்டுக் கிளறவும். முந்திரியை சீவி, நெய்யில் பொரித்துக் கொட்டிக் கிளறவும். செய்வதோ மிக எளிது. பார்க்க மிக மிக அழகாய் இருக்கும். ஐந்து கலர்களிலே! சுவையும் நன்றாக இருக்கும். குழந்தைகள் விரும்பி உண்பர்.

உருண்டை வகைகள் :

1. சேமியா லாடு :

தேவையானவை :
சேமியா - 400 கிராம்,
சர்க்கரை - 600 கிராம்,
நெய் - 200 கிராம்,
முந்திரி - 8,
ஏலக்காய் - 8.

செய்முறை :
சேமியாவை நெய்யில் வறுக்கவும். நன்றாக இடிக்கவும். சர்க்கரையையும் அரைத்துக் கொட்டவும். முந்திரியை நெய்யில் வறுத்துப் போட்டு, ஏலப்பொடி போட்டு, மீதி நெய்யை உருக்கி விட்டு உருண்டைகளாகப் பிடிக்கவும்.

2. அவல் லாடு :

தேவையானவை :
அவல் - 400 கிராம்,
தே. துருவல் - 1கப்,
சர்க்கரை - 500 கிராம்,
நெய் - 3/4 கிளாஸ்,
ஏலப்பொடி - சிறிதளவு,
ப. கற்பூரம் - சிறிதளவு,
முந்திரி - 10.

செய்முறை :
அவலை சுத்தம் செய்து வெறும் வாணலியில் நன்றாகப் பொரிக்க வேண்டும். தேங்காயையும் பொரிக்க வேண்டும். இரண்டையும் மிக்சியில் நன்றாகப் பொடிக்க வேண்டும். சர்க்கரையையும் பொடித்துக் கலக்கவும். முந்திரியை ஒடித்து நெய்யில் வறுத்துப் போடவும். ஏலப்பொடி, ப. கற்பூரப் பொடி போட்டுக் கலந்து, மீதி நெய்யை விட்டுப் பிசைந்து, உருண்டைகளாகப் பிடிக்கவும்.

3. தானிய லட்டு :

தேவையானவை :
பயறு - 100 கிராம்,
உளுந்து - 100 கிராம்,
கோதுமை - 100 கிராம்,
து. பருப்பு - 100 கிராம்,
கடலைப் பருப்பு - 100 கிராம்,
அரிசி - 100 கிராம்,
அவல் - 100 கிராம்,
பொட்டுக்கடலை - 100 கிராம்,
தேங்காய் - 1,
நெய் - 2 கப்,
சர்க்கரை - 1½ கிலோ.


எல்லா தானியங்களையும் (சாமான்களையும்) தனித்தனியே சிவக்க வறுக்கவும். உலர் அரவை மிஷினில் அரைக்கவும். சீனியையும் மிஷினில் அரைக்கவும். கலக்கவும். நெய்யை உருக்கி விட்டு, சுக்குப் பொடி போட்டுக் கலந்து வைக்கவும். தேங்காயை நெய்யில் வறுத்து (துருவி) மிக்சியில் பொடித்துக் கலந்து உருண்டைகளாகப் பிடிக்கவும். சத்தான, சுவையான லட்டு இது.

4. பேஸன் லாடு

தேவையானவை :
கடலை மாவு - 1 கிளாஸ்,
நெய் - 1 கிளாஸ்,
சர்க்கரை - 2 கிளாஸ்

செய்முறை :
நெய்யில் கடலை மாவை பொரிக்கவும். சர்க்கரைப் பொடியைக் கலந்து சூட்டோடு உருண்டைகளாகப் பிடிக்கவும். இதன் சுவைக்கு இதன் சுவைதான் ஈடு. 15 நிமிடங்களில் செய்து விட முடியும். செலவும் குறைவு.

- கமலா ஜானகிராமன்



என் வீட்டு கழிப்பறையிலும், குளியலறையிலும் இரவில் நிறைய கரப்பான்பூச்சிகள் தொல்லை அதிகமாக இருந்தது. நிறைய மருந்து உபயோகித்தும் இரண்டு நாட்களுக்கு வராது. மறுபடியும் தொல்லை இருந்து கொண்டே இருந்தது. என் தோழியின் யோசனைப்படி இரவில் படுப்பதற்கு முன் ப்ளீச்சிங் பவுடரைச் சிறிது எடுத்து கழிப்பறையிலும், குளியலறையிலும் தூவிவிட்டு அப்படியே விட்டுவிட்டேன். இப்போது கரப்பான்பூச்சித் தொல்லை இல்லை.

- ஹேமா ராகவன்

தித்திக்கும் தீபாவளி திசையெங்கும் தீபவிழா
எத்திக்கும் கொண்டாடும் இந்தியரின் இனிய விழா
மத்தாப்பு கையிலேந்தி மாந்தரெல்லாம் மகிழும் விழா
புத்தாடை உடுத்தி புதுப்பொலிவு காணும் விழா
பத்தோடு ஆறும் பெற்று பாரெல்லாம் வாழ்க வாழ்கவே!

— கவிஞர் நல்முத்து

47 ஆண்டுகளாக உங்கள் பத்திரங்களைப் பாதுகாக்க எங்கள் சேவல் மார்க் ஃபைல்கள் பயன்பட்டு வருவதுபோல உங்கள் சேமிப்புகளை பாதுகாக்க எங்கள் டெபாசிட் திட்டம்...

கணக்கிடப்படும்
வட்டி விகிதம் – ஓராண்டுக்கு

24%

மாதங்கள்	ரூ.1000க்கு முதிர்வுத் தொகை	வருடாந்திர வட்டி விகிதம்
12	ரூ. 1260	26%
24	ரூ. 1587	29.35%
36	ரூ. 2000	33.33%
48	ரூ. 2520	38%
60	ரூ. 3175	43.5%

குறைந்தபட்ச டெபாசிட் ரூ.1000

COCK BRAND FILE
TRADE MARK
MUTHUVEL

MUTHUVEL INDUSTRIES
Mfrs. Of COCK BRAND OFFICE FILES
Angappa Chettiar Industrial Complex,
20-A, Round Road, Post Box No. 32,
DINDIGUL - 624 001. TAMILNADU.
Ph: Off: (0451) 25260 & 27637. Res: 25643 & 23726
Grams: COCKFILE

ADWAVE/MI/4794

உங்கள் முன்னேற்றமே எங்கள் வளர்ச்சி

T.S.S. NIDHI LTD.

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Off.: 230, R.K. Mutt Road, Mylapore, Madras 600 004. ☎ 4942303 / 4943365

BRANCHES: THIRUVANMIYUR : 112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras 41. ☎ 410058
TONDIARPET : 667, T.H. Road, Madras 81.
SAIDAPET : 11, Jones Road, Madras 15. ☎ 4851468

FIXED DEPOSIT SCHEME

Period (Months)	12	24	36	60
Rate of Int. P.A.	17%	18%	19%	20%

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of Rs.1,000/-

Period (Months)	12	24	36	45	67
Maturity Value	1190	1425	1760	2025	3025

SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Minimum Deposit Rs.10,000/- Period - 12 months

Interest payable monthly **19.5%** p.a. Interest payable annually **21%**

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

For Deposit of Rs.10,000/-

Period (Months)	Maturity Value
120	Rs.66,000
180	Rs.1,82,000

RECURRING DEPOSIT SCHEME

MONTHLY DEPOSIT Rs. 100/-

Period in Months	12	24	36	48	60	72
Maturity Value	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

BUSINESS HOURS

	Week Days		Sunday	Holiday
Regd. Office Mylapore	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Friday
Branch Offices	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Tuesday

HIGHLIGHTS

* Recognised as a **NIDHI COMPANY** by Central Government of India.
* **Company is in 21st year of service.**
* Transaction with members only (Rupees two only for membership)
* Premature repayment facility as per terms and conditions.
* Monthly Interest Warrants would be despatched in advance for the year of Deposits.

LOANS

* A) Jewel loans granted on Gold ornaments at Rs.300/- per gms. (Rs.2400/- per 8 gms.)
  * No Ceiling
  * No Charges
  * No Interest Tax
  * Recurring Deposit not required
  * **Your Jewels are insured at our cost.**

B) Property Mortgage Loans granted on RD basis within Madras city limits.

P.S. SAMBASIVAM
Secretary

G. KUMARAVELU
Vice-President

K.R.V. RAMANI
President

லக்ஷ்மி - குபேர பூஜை செய்வது பேராசையா?

பணமின்றி உலகில் எதுவும் நடக்காது என்பது அனைவரும் அறிந்ததே! சமீப காலமாக படக் கடைகளில் பார்த்தால் குபேர-லக்ஷ்மி படங்களும், பூஜை புத்தகமும் அதிகம் காணப்படுகின்றன. வடநாட்டினர் தீபாவளி சமயத்தில் குபேரலக்ஷ்மி பூஜையைக் கடைகளில் செய்வதுதான் வழக்கம். அவர்கள் கஜானா பெட்டி நிரம்பி வழிய வேண்டும் என்ற ஐதீகத்தில் செய்வார்கள். தென்னாட்டினரும் தற்போது இந்தப் பூஜையை செய்ய ஆரம்பித்துள்ளனர். ஆசை? தேவைதான் அதற்கு லக்ஷ்மி பூஜை செய்யலாம். குபேரனாகும் அளவு பணம் தேவையா? அது பேராசை அல்லவா? மனத்தில் தோன்றியது சந்தேகம். இந்தப் பூஜை செய்பவர்களை விளக்கம் கேட்டோம் -

திருமதி கீதா கிருஷ்ணன் :

என் உறவினர் ஒருவர் ஆறு மாதங்களாக இந்தப் பூஜை செய்து வந்தார். அதிகம் பூஜை தெரியாத எனக்கு இந்தப் பூஜை செய்தால் பணம் மட்டுமல்ல மனசாந்தியும் கிடைப்பதாகச் சொன்னதும் நானும் மூன்று மாதங்களாக வெள்ளிக் கிழமைகளில் செய்ய ஆரம்பித்தேன். நல்ல மாற்றம் தெரிந்தது. கையில் பணம் நிற்கிறது. ஏதோ பிரச்சனை பணத்துக்கு என்ன செய்வதென நினைக்கும் போது பணம் வந்து சேரும். தட்டுப்பாடே இல்லை. மேலும் காலை சூரியோதயத்துக்கு முன்பு செய்து வருவதால் ஒரு அமைதி. சாந்தி. அனுபவபூர்வமான உண்மை.

இந்தப் பூஜையை செய்வதன் தாத்பர்யம் என்ன? முறை உள்ளதா?

இலங்கேஸ்வரன், சூர்ப்பனகையின் சகோதரன் குபேரன். சிறந்த சிவபக்தன். தொடர்ந்து பலவித தவம் செய்ததால் சிவபெருமான் வடதிசைக்குக் குபேரனை அதிபதியாக நியமித்தார். ரிக்வேதத்தில் குபேரனுடன் மகாலட்சுமியும் தனதேவதைகளாக நியமிக்கப்பட்டுள்ளதாக உள்ளது. லக்ஷ்மியின் அஷ்டசக்திகளில் இரண்டான சங்க நிதி, பதுமநிதிகளை குபேரன்தான் ரக்ஷிக்கின்றான். சில்ப சாஸ்திரத்தில் உள்ளபடி குபேர பட்டிணத்தில் அத்தாணி மண்டபத்தில் தாமரை மலர் மீனாசனம், மெத்தை இவை மீது அமர்ந்து ஒரு கை அபய முத்திரையுடன் கிரீடம் முதலிய சொர்ணாபரங்களுடன் முத்துக் குடையின் கீழ் சிம்மாசனத்தில் குபேரன் வீற்றிருக்கிறார். இடதுகையில் வலம்புரி சங்கும், வலது கை வரமுத்திரையுடன் உள்ளார்.

குபேரன் ராஜயோகத்தை அளிக்க வல்லவன். தனலட்சுமி, ஐஸ்வர்ய லட்சுமியும் குபேரனிடம் வாசம் செய்கிறார்கள். தன, தைரியத்துக்கும் ராஜனாகிறான். சுகத்தில் லயிப்பதால் சாந்தகுணம் கொண்டுள்ளான். எந்தப் பூஜை செய்தாலும் ராஜாதி ராஜனாகிய குபேரனை வணங்கினால் பலன் கிட்டும்.

"ராஜாதி ராஜாய ப்ரஸஹ்ய ஸாஹினே
நமோ வயம் வைஸ்ரவணாய குர்மஹே!
ஸமே காமான் காமகாமாய மஹ்யம்
காமேஸ்வரோ வைஸ்ரவணோ ததாது!!
குபேராய வைஸ்ரவணாய, மஹாராஜாய நம!"
என்று ஆரத்தி எடுத்து முடிப்பார்கள்.

தீபாவளித் திருநாளன்று லக்ஷ்மிகுபேர பூஜை செய்வது நமது இருண்ட வாழ்விலிருந்து ஒளிமயமான பாதைக்குச் செல்ல இந்தப் பூஜை மிகவும் உதவும்.

திருமதி கல்யாணி

நான் பல வருடங்களாக குபேர பூஜை செய்து வருகிறேன். பௌர்ணமி அன்றும் பூஜை செய்கிறேன். எங்கள் குரு சொன்னபடி பணத்துக்காக மட்டும் செய்வதல்ல இந்தப் பூஜை. நாவுக்குச் சக்தி தருகிறது. பணத்துடன் குணமும் தேவை. ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. பேராசை என்பது தவறு. எல்லாவித கஷ்டங்களுக்கும் நிவாரணியாக விளங்குவதால்தான் இந்தப் பூஜையை செய்கிறோம்.

பேட்டி : பானு



இணைப்பு அட்டை வண்ணப்படத்தில் - குபேரன் தேவியுடன், பின்னால் தனம் அருளும் லட்சுமி. ஓவியம் - வேதா.



சத்தான சுவைநீர் அருந்தலாமா?

தீபாவளி போன்ற விசேஷங்களுக்கு வரும் விருந்ினர்களை காப்பி, தேனீரோடு வரவேற்கிறோம். இது உடலுக்கு அளிக்கும் தீமைகளைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். இதை எல்லாம் விடுத்து நம் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப் பொருட்களால் எளிய முறையில் அதிகச் செலவின்றி சத்துள்ள பானங்களை தயாரித்து நம் குடும்பத்தினரை, விருந்தினரை உபசரிக்கலாமே!

இஞ்சி சுவைநீர் :

இஞ்சி (தோல் நீக்கியது) 1 துண்டு எடுத்து நசுக்கி ½ குவளை நீர் விட்டுக் காய்ச்சி வடிகட்டி இத்துடன் ½ குவளை பசும்பால் கலந்து சர்க்கரை அல்லது பனங் கற்கண்டு அல்லது தேன் கலந்து காலையில் பருகும் காப்பிக்குப் பதிலாக அருந்தி வர நெஞ்சு கரிப்பு, புளி ஏப்பம், வாயுத் தொல்லை ஆகியவை நீங்கும். நல்ல பசி ஏற்படும். உடல் சுறுசுறுப்புடன் நாள் முழுவதும் செயல்படும். இஞ்சி ஒரு காயகல்ப மூலிகை. இதைத் தினமும் பருகுவதால் முதுமை நம்மிடம் நெருங்காது.

பாதாம் சுவை நீர் :


பாதாம் பருப்பு 2, முந்திரிப் பருப்பு 4, கசகசா 1 டீஸ்பூன் இவற்றை ஊறவைத்து அரைத்து ஒரு குவளை பசுவின் பாலில் கலந்து சிறிது சர்க்கரை சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர வாய்ப் புண், வயிற்றுப் புண் ஆகியவை ஆறும். இதைத் தினமும் குழந்தைகளுக்குக் கொடுக்க புரதச் சத்து எளிதில் கிடைப்பதோடு நாள் முழுவதும் உற்சாகமாக செயல்பட துணைபுரிகின்றது.

அத்திப்பழ சுவைநீர் :

கொத்துக்கடலை ஒரு கைப் பிடி எடுத்து இரவில் ஒரு குவளை நீர் விட்டு ஊறவைக்க வேண்டும். அத்திப்பழம் 4 எடுத்துத் துண்டுகளாக்கி இத்துண்டுகளையும் அத்துடன் கலந்து ஊறவைக்க வேண்டும். மறுநாள் காலையில் இக் கலவையை நன்கு வேக வைத்து வடிகட்டி சிறிது பால், சர்க்கரை சேர்த்துப் பருகி வர இரத்தம் தூய்மையடைகிறது. உடல் திசுக்களுக்கு வளர்ச்சியை அளித்து சுறுசுறுப்பை உண்டாக்கும். இரத்தக் குறையுடையவர்கள் (அனீமியா), மாதவிடாய் கோளாறு உள்ளவர்களுக்கு இது ஒரு சிறந்த பானம்.

செம்பருத்தி சுவைநீர் :

காம்பு நீக்கப்பட்ட ஐந்து செம்பருத்திப் பூக்களை ஒரு குவளை நீர் விட்டுக்



காய்ச்சி ½ குவளையாக்கி, பால் சர்க்கரை கலந்து பருக வேண்டும். இது இதய நோயாளி களுக்கு ஒரு சிறந்த மருந்து. மேலும் இரத்த அழுத்த நோயாளிகள், வெள்ளைபடும் பெண் களுக்கும் ஒரு சிறந்த மருந்தாக செயல்படு கிறது. இவர்கள் இதைத் தினம் பருகி வர நல்ல பலன் கிடைப்பதை கண்கூடாகக் காணலாம்.

தாமரைப் பூ சுவைநீர் :

10 தாமரை இதழ்களை 1 குவளை நீர் விட்டு ½ குவளையாக்கி அதில் பால், சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டு வர வேண்டும். தாமரை இதய நோயாளிகளுக்கு மிகச் சிறந்த மருந்து. தாமரைப் பூ இதழ்களை நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு இதை மாதிரி செய்து கொள்ளலாம். தாமரையை "இதயக் கமலம்" என்று சொல்லுவார்கள். இது இதயத்திற்கு மிகச் சிறந்த டானிக்.

ஆவாரைப் பூ சுவைநீர் :

"ஆவாரை பூத்திருக்க சாவாரை கண்டதுண்டோ" என்பது பழமொழி. ஆவாரை இலை, பூ, பட்டை இவற்றை நிழலில் உலர்த்தி பொடி செய்து கொண்டு, இப் பொடியில் 1 தேக்கரண்டி எடுத்து டிகாஷன் செய்து பால் சர்க்கரை சேர்த்துக் காலை வெறும் வயிற்றில் பருக உடல் வறட்சி, அடங்காத தாகம், மூச்சுத் திணறல் ஆகியவை நீங்கும். தோல் சம்பந்தமான நோய் உள்ளவர்களுக்கு இது மிகச் சிறந்த பானம். மேலும் நீரிழிவு நோயாளிகள் இதை சர்க்கரை சேர்க்காமல் தினமும் குடித்து வர உடலுக்கு நல்ல சுறு சுறுப்பை உண்டாக்கும்.

நிலகடலைப் பால் சுவைநீர் :

100 கிராம் நிலக்கடலையை நீரில் ஊற வைத்து, பின் அதை ஒரு பாலிதின் பையில் இட்டு ஒருநாள் முழுவதும் கட்டி வைத்து விட்டால் அடுத்த நாள் அது முளை விட்டிருக்கும். அத்துடன் 2 முந்திரி பருப்பு, 4 ஏலக்காய், சிறிது குங்குமப் பூ இவற்றைப் போட்டு மிக்ஸியில் அரைத்துப் பாலெடுத்து சர்க்கரை சேர்த்துப் பருகலாம்.

இது குழந்தைகளுக்கு மிகச் சிறந்த பானம். இது நரம்புகளுக்கு நல்ல சக்தியளிக்கின்றது. முளை கட்டி செய்வதால் சத்துக்கள் நமக்குக் கூடுதலாகக் கிடைக்கின்றது.

எள்ளுப் பால் :

100 கிராம் எள்ளை ஊறவைத்து முளைக்க வைத்துக் கொண்டு, சிறிது தேங்காய்த் துருவல், ஏலக்காய் கலந்து மிக்ஸியில் அரைத்து பாலெடுத்துக் கொள்ள வேண்டும். இத்துடன் சிறிது வெல்லம் அல்லது பனைவெல்லம் சேர்க்க வேண்டும். இது பருவம் அடைந்த பெண்களுக்குச் சிறந்த பானம். ஒல்லியான குழந்தைகளுக்கு இதைத் தினமும் செய்து கொடுக்கலாம்.

"இளைத்தவனுக்கு எள்ளு" என்பது பழமொழி.

கொள்ளுப் பால் :


100 கிராம் கொள்ளை ஊறவைத்து முளைக்க வைத்து, அத்துடன் சிறிது தேங்காய், ஏலக்காய் சேர்த்து மிக்ஸியில் இட்டு அரைத்துப் பாலெடுத்து அத்துடன் சிறிது வெல்லம் அல்லது பனைவெல்லம் கலந்து பருகி வரலாம். மழைக் காலத்தில் அடிக்கடி சளிபிடிப்பவர்கள், மூட்டுவலி உள்ளவர்கள், பக்கவாத நோயாளிகள் ஆகியவர்கள் இதைப் பருகலாம்.

உடல் எடையைக் குறைக்க 'டயடிங்' செய்யும் பெண்களுக்கு இது மிகச் சிறந்த பானம். இதைத் தினம் பருகுவதால் அவர்களுக்குப் பலன் உறுதி. "கொழுத்தவனுக்குக் கொள்ளு" என்பது பழமொழி.


- இராம. பத்மப்ரியா
(சித்த மருத்துவர்)

சகோதரி சாந்தி செல்வம் அவர்கள் பிளாஸ்டிக் குடத்தை குப்பைக் கூடையாக உபயோகப்படுத்த லாம் என்று எழுதியிருந்தார்கள். அது மட்டுமல்ல. அதன் கம்பியால் மூன்று துளைகள் போட்டு மண் பரப்பி பூச்செடி கூட வைக்கலாம். பூந் தொட்டிகள் நிறைய வாங்குவதை விட இது சிக்கன வழி. பார்ப்பதற்கும் தொட்டிகள் கலர் கலராக அழகாக இருக்கும்.

– கே. சுஜாதா




ஜிங்லர்ஸ்.
உங்கள் அருமைக் குழந்தையின் பட்டு மேனிக்கு இதமான, விசேஷ மெத்தை.



உங்கள் குழந்தைக்கு சிறப்பான கவனம் தேவை. இதை மனதில் கொண்டு, முழு ஈடுபாட்டுடன் தயாரிக்கப்பட்ட ஜிங்லர்ஸ் மெத்தையை உங்கள் குழந்தைக்கு அளிக்கிறோம். மென்மையான ஜிங்லர்ஸ் குழந்தை-மெத்தை பல ஒப்பற்ற சிறப்பம்சங்கள் கொண்டது.



- எளிதில் துவைக்கலாம், விரைவில் உலரும்
- சர்வதேச தொழில் நுட்பம்
- மென்மையான பாலிஃபைபர் கொண்ட உட்புறம்
- 100% பஞ்சினாலான மேல்பாகம்
- காற்றுப்புகும் அமைப்பு உள்ளதால் வெப்ப எரிச்சல், தடிப்பு ஏற்பட வாய்ப்பே இல்லை
- உட்புறம் ஈரத்தினால் கெட்டியாகாமல் மென்மையாக இருக்கும்
- பல அளவுகளில், மனதிற்கினிய வண்ணங்களில் கிடைக்கிறது.



ஜிங்லர்ஸ் — உங்கள் அரவணைப்புக்கு ஈடான அழகிய மெத்தை.

Jinglers

India's first real washable baby bed



Mfrs: Utility Textiles,
AH-248, 1st Street, Shanthi Colony,
Anna Nagar, Madras - 600 040.
Ph : 6211974.

Insight-UT-1876-R

Available at :
MADRAS CITY : • Children Choice, Luz; • London Stores, Mylapore/Purasawalkam/Mount Road; • Murugan Dresses, T. Nagar; • Naidu Hall, T. Nagar/Anna Nagar; • Trishla, Luz; • Witco, Anna Nagar/T. Nagar; • Vitan, Luz; • Lucky Dresses, Tambaram; • Grace Furniture, Chetput; • Annapoorna Departmental Stores, Kilpauk; • Vincy, Royapuram; **COIMBATORE :** • Bison Showroom, Ashok Plaza; • Grand Bazaar; • Saravanas, Lakshmi Complex; • Shobha, Big Bazaar Street; • Vandana, R.S. Puram; • Jack 'N' Jill Dresses, R.S. Puram. **CUDDALORE :** • Seematti; • Mummy Daddy; • Bharani Readymade. **CHIDAMBARAM :** • Seematti Dresses. **DINDIGUL :** • Shabnam; • Designs. **ERODE :** • Thomas & Sons.; **KUMBAKONAM :** • Seematti Dresses; • Mathivannan & Company. **MADURAI :** • Instyle; • Hajee Moosa; • Mummy Daddy; • Milan; • Shabnam; • Designs; • Sathyam Readymade• • Remuki• • Archana Fabrics; **MAYAVARAM :** • Seematti Dresses; • Tee Vee Textiles. **NAGERCOIL :** • Ganesh Plastic Centre. **NEYVELI :** • Banu Cloth Stores, Main Bazaar. **PONDICHERRY :** • Shabnam; • Crowns; • Kids Centre• **SALEM :** • Aunty Uncle; • Royal Home Decors; • Milan; • Mummy Daddy; • Ramyas Shopping Palace; • Chamundi Balaji Textiles; • Lavanya Shopping Paradise; **RAMANATHAPURAM :** • Daddy Mummy. **PUDUKOTTAI :** • Pinky. **TIRUNELVELI :** • Good Luck Emporium; • Roopam; • Mummy Daddy; **TIRUPUR :** • Selection Centre, Kamaraj Road; **THANJAVUR :** • Maharaja Readymades. **TRICHY :** • Ananda Corporation; • Kiddies Corner; • Krishna Readymade Hall; • Ruby Readymades; • Geetha Silkot. **TUTICORIN :** • Students Readymades Emporium; • Jasmine Readymades; **VELLORE :** • Shabnam; • Sarkar; • Milan. **THENI :** • Milan; **DHARMAPURI :** • Kamadhenu Agencies; **RAJAPALAYAM :** • Seematti Silk; • Nandhini Super Market; **KRISHNAGIRI:** • Sri Krishnapriya Agencies; • New Rani Dresses; **KOVILPATTI:** • Sangeetha Dresses; **THIRUVARUR:** • Mummy Daddy; **MANNARGUDI:** • Mummy Daddy; **VIRUDHUNAGAR:** • Design.

அவரது கம்பீரமும் தேஜஸும்!

என் கணவர் இரயில்வேயில் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தார். முப்பத்தியேழு வருடம் சர்வீஸ் செய்த பிறகு எங்களை விட்டு விட்டு இறந்து விட்டார். என் மகன்கள் ரகுநாதனும், ராமும் முறையே ஒன்பதாம், ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயம் அது. என் கணவர் காங்கிரஸ் கொள்கைகள் மீதும், மகாத்மா காந்திஜி, ஜவாஹர்லால் நேருஜி அவர்களின் மீதும் தீவிரப்பற்றுள்ளவர். அவருடனேயே இருந்த எங்களுக்கும் காங்கிரஸ் மீது அபார பக்தி உண்டு. என் கணவர் இறந்து மனம் உடைந்து எதிர்காலம் ஒரு புதிர்காலமாய் பயமுறுத்தி அழுது கொண்டிருந்த என்னை, என் மகன்கள் மன மாற்றத்துக்காக வெளியூர் அழைத்தனர். பாஸ் இருந்ததால் டில்லிக்குச் செல்லத் தீர்மானித்தோம்.

1963-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டில்லி சென்று மூன்று நாட்கள் சுற்றிப் பார்த்து விட்டு சென்னை திரும்ப புதுடில்லி ஸ்டேஷனுக்கு வந்தோம். டாங்காவாலா தமிழ் தெரிந்தவர் சாமான்களை ஏற்றி வைக்க உதவி செய்து கொண்டே,

"டில்லிக்கு சுற்றிப் பார்க்க வந்தீர்களா? எல்லா இடங்களையும் பார்த்தீர்களா? இந்திராஜியின் பிறந்த நாள் சமயம் வந்திருக்கிறீர்களே பார்த்து வந்தீர்களா?" என்றார்.

"எல்லா இடமும் பார்த்தோம். நாங்கள் ஹிந்தி மொழி தெரியாதவர்கள். சாமான்யர்கள். அவரை எப்படிப் பார்க்க முடியும்? நினைத்துக் கூடப் பார்க்க முடியாதே!" என்றதும்,

"இங்கு வந்து விட்டு அவரைப் பார்க்காமல் போவதா? காலை இரண்டு மணி நேரம் பார்வையாளர்களை சந்திப்பாரே!" என்றார்.

மனத்தில் ஒரு நம்பிக்கை. ரயில் புறப்பட ஓரிரு நிமிடங்களே இருந்த சமயம், மளமள வென்று சாமான்களை இறக்கிக் கீழே வைத்து விட்டு, ஏதோ ஒரு தைரியத்தில் சாமான்களை க்ளாக் ரூமில் போட்டு விட்டு அடுத்த ரயிலைப் பிடித்துப் போகலாம் என்று தீர்மா னித்து, இந்திராகாந்தி அவர்கள் இருந்த இடத்தை அடைந்தோம். ஒரு கூடாரம் போல் அமைந்திருந்த இடத்தில் பலர் மனுவுடன், விவசாயிகள் பிரச்னை சொல்ல, பள்ளிக் குழந்தைகள் இப்படி அமர்ந்திருந்தனர். ஒவ் வொருவரையும் காரணம் கேட்டு எழுதித் தரச் சொன்னதும்,

"அம்மாவுக்கு நேருஜி குடும்பம் மீது பற்று அதிகம். அதனால் டில்லி வந்த நாங்கள்



"இந்திராஜியைப் பார்க்க விரும்புகிறோம்" என்று என் மகன் எழுதித் தந்தான். காலை 8 மணி. அவர் 8.30க்கு அலுவலகம் கிளம்ப வேண்டும். அவரை அழைத்துச் செல்ல திரு. மொரார்ஜி தேசாயும், திரு. சவான் அவர்களும் கூட வந்து விட்டனர். நாங்கள் எங்கே பார்க்கப் போகிறோம்? என்று கவலை.

முதலில் அமெரிக்காவிலிருந்து வந்திருந்த பள்ளிக் குழந்தைகளை அழைத்தார். பத்தே நிமிடம். இதோ எங்களை அழைத்து விட்டார். நம்பவே முடியவில்லை. வாயிலில் ஆரம்பித்து உள் அறை வரை பதினைந்து, இருபது பாதுகாப்பு அதிகாரிகள் எங்களைச் சோதனை செய்த பிறகே உள்ளே அனுமதித்தனர். அங்கிருந்த போட்டோகிராபர் "உங்களுக்கு அவருடன் போட்டோ எடுத்துக் கொள்ள விருப்பமானால் எடுக்கிறேன்" என்றார். ஒரு வட்டம் போட்டு வைத்தார்.

அதற்குள் திருமதி இந்திராகாந்தி உள் அறையிலிருந்து எங்கள் அறைக்கு வந்தார். அவரைப் பார்த்தவுடன் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. நாக்கும் பல்லும் கெட்டிக் கொண்டு விட்டது. என் மடிசாரைப் பார்த்து விட்டு "எந்த ஊர்?" என்றதும் என் மகன் தனக்குத் தெரிந்த ஹிந்தியில் பேசினான். ஓரிரு வார்த்தைகள் பேசியதும் 'அச்சா' என்றார். தேனினும் இனிய மயக்கும் அவர் குரல் இன்றும் காதில் ரீங்காரம் செய்கிறது. போட்டோகிராபர் எங்கள் விருப்பத்தைச் சொன்னதும் "என்னுடன் போட்டோ எடுத்துக் கொள்ள என்ன ஆசை?" என்று சிரித்தபடி குறிப்பிட்ட இடத்தில் நின்றார். அவர் அருகே மிக அருகே நான். அவர் கண்களில் இருந்த தீட்சண்யம், அறிவுக் களை மறக்கவே முடியாது. போட்டோ எடுத்ததும், "அச்சா" என்றபடி என் கைகளைக் குலுக்கினார். எனக்குச் சந்தோஷத்தில் ஆனந்தக் கண்ணீர் வந்து விட்டது. விடைபெற்றும் சென்று விட்டார்.

நானா அன்னை இந்திராவை தரிசித்தேன். அவ்வளவு அதிர்ஷ்டமா? டாங்காவாலாவுக்கு மனதில் நன்றி சொன்னேன்.

இன்றும் எங்கள் வீட்டு அலமாரியில் அந்தப் படத்தைக் கண்ணாடி பிரேம் போட்டு என் மலரும் நினைவுக்குச் சாட்சியாக வைத்திருக்கிறேன். வீட்டுக்கு வருபவர்கள் கேட்டுக் கேட்டு பதில் சொல்லிச் சொல்லிப் பெருமைப்படுகிறேன். சாமான்யர்களை பலத்த பாதுகாப்புடன் அனுப்பிய செக்யூரிடிகளே அவரது முடிவுக்குக் காரணமானது நெஞ்சைப் பிளக்கின்றது.

அவரது கம்பீரமும், தேஜஸும் பெண் குலத்துக்குப் பெருமை சேர்க்கும் புதுமைப் பெண்களுக்கு வழிகாட்டி. நவம்பரில் அவரது பிறந்த நாள் வருகின்றது. எந்த நாளை மறந்தாலும் அந்த நாளை, நான் அவரைச் சந்தித்த நாளை மறக்க முடியாது. அவரைச் சந்தித்து வந்த பின்தான் நான் தைரியம் பெற்றேன். என் இரு மகன்களையும் படிக்க வைத்து ஆளாக்கி, எனக்கு முடிந்த சுயதொழிலையும் வீட்டிலிருந்தபடியே கவனித்துக் கொண்டு வருகிறேன். அவரை தரிசித்த நேரம் எனக்கும் வாழ்க்கையை எதிர்நீச்சல் போட்டு கரை சேரவும் முடிந்தது. அவர்தான் என் வாழ்விற்கு 'இன்ஸ்பிரேஷன்' எனலாம்.

சந்திப்பு : **பானுமதி இராமச்சந்திரன்**

சமீபத்தில் என் வீட்டிற்கு வந்த தோழி கட்டியிருந்த புடவை புதுப் பொலிவுடன் பளபள என அழகாக இருந்தது. அந்தப் புடவையை அவள் கட்டி நான் முன்பே பார்த்திருந்த போதும், தற்சமயம் புதுமையான ஜரிகை டாட்ஸுடன் அழகாக இருந்தது. கண்ணாடி, சமிக்கி என்றும் வேலைப்பாடு செய்யவில்லை. 'இந்தப் புடவையில் எப்படி ஜரிகைப் பொட்டு திடீரென்று வந்தது? கடையில் கொடுத்துப் போடச் சொன்னாயா?' எனக் கேட்டேன். அதற்கு அவள், 'சிகரெட் பெட்டியின் உள் இருக்கும் சில்வர் கலர் பேப்பரை, பஞ்சிங் மெஷினில் வைத்து சிறு சிறு வட்டமான பொட்டாக தயார் செய்து அதை, புடவையில் தம் விருப்பம் போல் பெவிகால் பேஸ்ட் தடவி ஒட்டி விட்டதாகக் கூறினாள். புடவை கிழிந்தால் கூட இந்த பேப்பர் கிழியாது என்றும், பளபளப்பு குறையாது என்றும் கூறினாள். உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் உங்கள் சிறுமிகளின் உடைகளில் இந்த புதுவிதமான வேலைப்பாட்டினை செய்யலாமே!

- பாலா



We accept
Fixed Deposits
at the rate of
24%
with incentives.

நீங்கள் சொந்த வீடு வாங்க இதுவே சரியான நேரம்

காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின் வெற்றிகரமான 14-வது குலுக்கல் 30.10.94 அன்று காசி திரையரங்கு வளாகத்தில் பிரபல திரைப்பட நட்சத்திரங்களின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத் திட்டத்தில் புதிதாக வழங்கப்பட்ட GIFT CARD குலுக்கல் மூலம் உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து கவர்ச்சிகரமான சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இத் திட்டத்தில் ரூ. 1,250/- முதல் ரூ. 5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 277 முதல் 1111 சதுர அடிகள் வரை உள்ள வீடுகளைத் தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை சொந்த வீட்டிலிருந்து கொண்டே வாடகை போல செலுத்தலாம். இத் திட்டத்தில் சேருபவர்கள் அனைவருக்கும் ரூ. 300/ முதல் ரூ. 1,000/- வரை ஒவ்வொரு கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

சுபமங்களா திட்டம் :

இத் திட்டத்தில் உடன் குடிபுகத் தயாரான நிலையில் உள்ள வீடுகளின் மொத்த விலையில் ரூ. 10,000/- மட்டுமே செலுத்தி உடனே சொந்த வீட்டில் குடியேறலாம். மீதித் தொகைக்கு நாங்கள் கடன் உதவி ஏற்பாடு செய்து தருகிறோம். இத் திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்கள் அனைவருக்கும் ரூ. 1,000/- மதிப்புள்ள கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

வீடு கிடைக்கும் இடங்கள் :

சென்னை கே. கே. நகர் மேற்கு, விருகம்பாக்கம், வளசரவாக்கம், சாலிகிராமம், வடபழனி, குமரன் காலனி, கில் நகர் போன்ற இடங்களில் வீடுகள் கட்டித் தருகிறோம்.

ஒரு சதுர அடியின் விலை ரூ. 450/- மட்டுமே!

FIXED DEPOSITS :

நீங்கள் முதலீடு செய்யும் வைப்பு நிதித் தொகைக்கு 24% வட்டியுடன் ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படுகிறது. மேலும் கூட்டு வட்டி வைப்பு நிதியில் நீங்கள் முதலீடு செய்யும் தொகை 3½ ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது.

மேலும் விவரங்களுக்கு :

காசி ஹவுசிங் & டெவலப்மென்ட் லிமிடெட்


மற்றும்

காசி பில்டர்ஸ்

காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்,
91, 92 ஜவாஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 600 095.
போன் : 4821969, 4822206 ஞாயிறு முழு நேரம் அலுவலகம் உண்டு.
FAX : 044-4821897

• ராஜா





மொட்டின் எழிலை விட மலர் அழகு. பிஞ்சின் சுவையை விட கனியின் சுவை இனிது. தளிர் கன்றின் வலுவை விட வளர்ந்த மரத்தின் உறுதி வலிது. ஓடும் நதியை விட கடலோடு கூடும் நதியின் வளம் பெரிது. இவை இயற்கை நமக்கு உணர்த்தும் பாடம். வளர்ந்த, முதிர்ந்த எப்பொருளிலும் வாழ்க்கைத் தத்துவம் அடக்கம். மரத்தின் உயரமும், மனிதன் வளரும் போது மட்டும் நம் கண்களுக்கு ஏன் தெரிவதில்லை? மூப்பு என்பது வாழ்கையின் முழு சாரமும் நிறைந்த அனுபவ பெட்டகம் என்பதை நாம் ஏன் உணருவதில்லை? முதியவர்கள் என்றாலே, நோய் என்றும், தொல்லை என்றும் பாரம் என்றும் உதறித் தள்ளும் இந்தச் சுயநலம் ஏன்? பிஞ்சும், தளிரும் ஒரு நாள் முதிர வேண்டியவைதானே? ஆனால் மூப்படைந்த கிழவனும், கிழவியும் வாழ்வின் இறுதிக் கட்டத்தை அமைதியாக, நிம்மதியாகக் கழிக்கிறார்களா? இல்லை.

இன்று முதுமை ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு நாட்டிலும் ஒரு பிரச்னையாகி வருகிறது. இன்றைய புள்ளி விவரப்படி இந்தியாவில் சுமார் 8 சதவீத மக்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். இந்தியனின் சராசரி ஆயுட்காலம் 60 ஆண்டுகள் என்று உயர்ந்த பிறகு முதியோர் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் முதியோர் மக்கள் தொகையில் 15 சதவீதமாக அதிகரித்து விடுவார்கள். அதாவது ஆறு இளைஞர்களுக்கு ஒரு முதியவர் என்கிற கணக்கில் அவர்கள் சமுதாயத்தில் நடமாடுவார்கள். இவர்களது தேவைகளும் பிரச்னைகளும் அதிகரிக்கும். எனவே அதற்காக இப்போதே திட்டமிடல் அவசியம்.

நம்மைவிட முன்னேறிய நாடுகள் பல ஆண்டுகளுக்கு முன்பே மூப்பியல் பற்றி எண்ணத் துவங்கி விட்டனர். 1914 ஆம் ஆண்டு அமெரிக்காவில் டாக்டர் நாய்ஸர் (Naiser) என்பவர் முதலில் முதியோர்களுக்கான சிகிச்சை முறையை மேற்கொண்டார். ஆனால் இது வெற்றி பெறவில்லை. பிறகு 1940 ஆம் ஆண்டு மேஜர் வாரன் (Major Warren) இங்கிலாந்தில் கிளாஸ்கோ என்னுமிடத்தில் சுமார் 300 முதியவர்களுக்கு எல்லா வசதிகளும் அளித்து சிகிச்சை செய்து வெற்றி பெற்றார். இதன் பின் முன்னேறிய அனைத்து நாடுகளிலும் மூப்பியல் மருத்துவம் என்பது (Geriatric Medicine) மிகவும் பிரபலமாகி விட்டது. அங்கு முதியவர்களை மூத்த குடிமக்கள் (Senior Citizens) என்று அழைத்து அனைத்து வசதிகளையும், சலுகைகளையும் அளித்து வருகின்றனர். ஆனால் இந்தியா, சீனா, மலேசியா, இலங்கை போன்ற வளரும் நாடுகளில் இம்மருத்துவத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் இந்தியாவில், அதுவும் நம் சென்னையில் அமைதியாக ஒரு மருத்துவச் சேவை முதியவர்களுக்காக நடைபெற்று வருகிறது. இப்பிரிவு சென்னை மருத்தவக் கல்லூரி

முதுமைக்குக்

• நடராஜன்





மருத்துவ மனையில் (Madras Medical College Hospital) டாக்டர் வி.எஸ். நடராஜன் என்பவர் தலைமையில் இயங்கி வருகிறது. இப்பிரிவுக்கான விதையை இவர் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே ஊன்றிவிட்டார். லண்டனில் உள்ள ஸவுத் ஆம்ப்டன் (Southampton) பல்கலைக் கழகத்தில் முதியோர்களின் மருத்துவ மற்றும் சமுதாயப் பிரச்னைகள் பற்றி 4 ஆண்டுகள் பயிற்சி பெற்று சிறப்புச் சான்றிதழும், MRCP என்ற பட்டமும் வாங்கி சென்னை திரும்பினார்: ஓராண்டில் மிக உயர்ந்த பட்டமான FRCP பட்டமும் பெற்றார். ஆனால் முதலில் இத்துறையின் முக்கியத்துவத்தை இங்குள்ள மருத்துவர்களே அதிகம் உணரவில்லை. 1978 இல் புற நோயாளிகள் (out patients) பிரிவை சென்னை பொது மருத்துவமனையில் துவங்கினார். அதில் முதியவர்களின் பல பிரச்னைகளை உணர முடிந்தால் கூட, படுக்கை வசதியோடு ஒரு சிகிச்சைப் பிரிவைத் துவக்க இவர் சுமார் 10 ஆண்டுகள் போராட வேண்டி வந்தது. 1988 ஆம் ஆண்டு இவரது பொறுப்பில் சுமார் 28 படுக்கைகள் அளிக்கப்பட்டன.

சென்னையில் மட்டுமே அண்ணாநகர் அரசினர் பொது புறநகர் மருத்துவமனை (6 படுக்கைகள்) கே.கே. நகர் அரசாங்க மருத்துவமனை (6 படுக்கைகள்) தண்டையார் பேட்டை அரசு மருத்துவமனை (6 படுக்கைகள்) சென்னை மருத்துவக் கல்லூரி பொது மருத்துவமனை (10 படுக்கைகள்) ஆகிய இடங்களில் மூப்பியல் மருத்துவ வசதி உள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலோ, அல்லது நகரங்களிலோ இச்சிகிச்சை வசதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புற நோயாளிகளின் பிரிவு :

சென்னை மருத்துவக் கல்லூரி பொது மருத்துவமனையில் டாக்டர் வி.எஸ். நடராஜன் அவர்களின் தலைமையில் டாக்டர் சாந்தி ரவீந்திரன், டாக்டர் கிருஷ்ணசாமி, பிஸியோ தெரபிஸ்ட் டாக்டர் பசுபதி, ஸ்டாப் நர்ஸ் கௌசல்யா சாரதி, சமூக சேவகி குமாரி ப்ரேமா, டைப்பிஸ்ட் திருமதி சுப்பு லட்சுமி, ஸ்டெனோ செல்வி கீதா ஆகியோர் கொண்ட குழு ஒன்று மூப்பியல் மருத்துவப் பிரிவை (Geriatric Medicine) இயக்குகிறது. இதில் முக்கியமானது புற நோயாளிகளை கவனிக்கும் O.P. பிரிவு. வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் காலை 10 மணி முதல் 12 மணி வரை இது இயங்கும். சராசரியாக ஒரு நாளைக்கு 100 முதியோர்கள் (ஆண், பெண் இருவரும் சம அளவில்) வருகிறார்கள். இதில் 15 சதவீதம் பேர்கள் மட்டும் புதிதாக வருபவர்கள். மீதி 85 சதவீதம் பேர்கள் ஏற்கெனவே வந்து போய்க் கொண்டிருப்பவர்கள். 15 நாட்களுக்கு ஒருமுறை மருத்துவ ஆலோசனைக்கு வரலாம்.

இங்கு புதிதாக வருபவர்கள் தடுமாற

கை கொடுப்போம்!

வேண்டாம். O.P. டிக்கட்" (புற நோயாளிகளின் அனுமதிச்சீட்டு) என்று கேட்கும் பொழுதே 60 வயதுக்கு மேல் என்றால் அங்குள்ள ஊழியரே அவரை மூப்பியல் மருத்துவப் பிரிவுக்கு அனுப்பிவிடுவார். முதலில் அவருக்கு ஒரு அடையாள அட்டை கொடுக்கப்படும். அதில் சமூக சேவகி, மற்றும் மருத்துவர்கள் அவரது மருத்துவ மற்றும் சமுதாயப் பிரச்னைகள், வயது, பெயர் முகவரி போன்ற விவரங்களை எழுதி விடுகிறார்கள். (இந்த அட்டையை வெளியே செல்லும் போது கூட தன்னுடனேயே வைத்துக் கொண்ட ஒரு சிலருக்கு எதிர்பாராத விதமாக விபத்து அல்லது பிரச்னை ஏற்பட்ட போது பத்திரமாக பொது மருத்துவ மனையின் மூப்பியல் பிரிவுக்கு பொது மக்களால் அழைத்து வரப்பட்டார்களாம். இது ஒரு ஐடெண்டிடி கார்டு (identity card) என்கிறார்கள்.)



முதலில் முதியவரோடு சமூக சேவகி மனம் விட்டுப் பேசுகிறார். அவரது குடும்பச் சூழ்நிலை, உறவினர்கள் மற்றும் பொருளாதார ரீதியான பிரச்னைகள் இவை பற்றி அவரிடம் அக்கறையோடு விசாரிக்கிறார். இதனாலேயே சுமார் 25 சதவீதம் பிரச்னைகள் தீர்ந்து விடுகின்றன. அதன் பிறகுதான் மருத்துவச் சோதனை. பிரச்னை குடும்பச் சூழ்நிலை காரணமாகத்தான் என்றால் உறவினர்களை அழைத்துப் பேசுகிறார்கள். தேவையானால் முதியவரின் வீட்டிற்குக் கடிதம் போடுதல், சென்று பார்த்து வருதல் கூட உண்டாம். அவ்வளவு ஏன், முதியோர்களுக்காக அரசு வழங்கும் பென்ஷன் தொகையை வாங்கித் தருவது, பண்டிகைக் காலங்களில் கிடைக்கும் இலவச அரிசி, புடவை, வேட்டி இவைகளைப் பெற்றுத் தருவது இவை கூட இவர்கள் செய்யும் சேவை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

அடுத்து டாக்டர் வி.எஸ். நடராஜன் அவர்களின் உதவியாளர்கள் முதியோர்களுக்கு உடல் நிலையைக் கண்டறியும் பரிசோதனை செய்கிறார்கள். இதுவும் O.P. டிக்கட்டில் குறிக்கப்படுகிறது. ஒருவருக்குக் குறிப்பிட்ட ஒரு நோய் மட்டும் இருந்தால் (மூட்டுவலி அல்லது ஆஸ்துமா) அதற்கென உள்ள தனி பிரிவிற்கு அனுப்பி சிகிச்சை பெறும்படி அறிவுரை வழங்குகிறார்கள். ஆனால் ஒரு முதியவருக்கே ஒரே சமயத்தில் பல நோய்கள் இருந்தால் (இருதயக் கோளாறு, மார்புச் சளி, இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி) அவரை மூப்பியல் மருத்துவ சிறப்புப் பிரிவில் (Speciality Block) அனுமதிக்கின்றனர். இங்கு அவரது ஒவ்வொரு நோயும் தனி கவனத்துடன் குணமாக்கப்படுகிறது.

மூப்பியல் மருத்துவ அக நோயாளிகள் பிரிவு:

மூப்பியல் மருத்துவ அக நோயாளிகளின் பிரிவு வார்ட் எண் 52ல் உள்ளது. இதை அடைய ஸ்பெஷாலிடி ப்ளாக், இரண்டாவது தளம் (II Floor, Speciality Block) என்று கேட்க வேண்டும். சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சுமார் 10 படுக்கை வசதிகள் கொண்ட இந்த வார்டில்தான் டாக்டர் வி.எஸ். நடராஜன் அவர்களின் அறை உள்ளது. நோயாளிகள் இவரது நேரடி கண்காணிப்பில் உள்ளனர். தனித்தனி கட்டில், சிறிய சப்போர்ட், ஸ்டூல் வசதியுடன் ஒவ்வொரு நோயாளியும் படுத்திருக்கிறார். ஒரு உறவினர் உடன் இருக்கிறார். குளியல் அறை, கழிப்பறை, இப்பிரிவிலேயே உள்ளது. தவிர கை கால் இவற்றிற்குப் பயிற்சியளிக்கும் கருவிகளும் (Physiotherapy equipments) இங்கு உள்ளன.

இப்பிரிவில் முதியோர்களின் நோய்கள் துல்லியமாக கவனித்துக் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நோயாளியும் அதிக பட்சம் 10 முதல் 15 நாட்கள் இங்கு தங்கி சிகிச்சை பெறுகிறார். முதியோர்கள் என்பதால் இங்கு அவர்களுக்குப் பல சலுகைகள் காட்டப்படுகின்றன. முதலாவதாக எப்போது வேண்டுமானாலும் பார்வையாளர்கள் வரலாம். வீட்டிலிருந்து டாக்டர் குறிப்பிட்ட வகையில் தயாரிக்கப்பட்ட உணவைக் கொண்டு வரலாம். தினமும் வார்டில் பூஜை உண்டு. வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடும் உண்டு. கலர் டி.வியும் மாலையில் கண்டு களிக்கலாம். உறவினர்கள் வராவிட்டால்

தாய்ப்பால் தருவது குழந்தைக்கு நல்லது. அது உங்களுக்கும் சுகமானதாக இருக்க வேண்டுமல்லவா ?




தாய்ப்பால் தருவது குழந்தைக்கு நல்லதுதான். அதனால் சிலசமயம் உங்களுக்கு எவ்வளவு வலி ஏற்படுகிறது ? உங்கள் மார்பக முனைகளில் புண் ஏற்படுகிறது. விரிசல்கள் ஏற்பட்டு, வேதனை மிஞ்சுகிறது ?

எண்ணெய், நெய் அல்லது வெண்ணெய் போன்றவற்றை தடவுவதால் போதுமான நிவாரணம் பெற முடிவதில்லை.

இதற்குத் தேவை — ஒரு நல்ல கிரீம். புண்ணை ஆற்றுவதுடன், வலி ஏற்படுத்தும் விரிசல்களை குணப்படுத்தும் கிரீமாக இருக்க வேண்டும். இதைத்தான் செய்கிறது மாஸ்ஸே பிரெஸ்ட் கிரீம். நஞ்சு சாராத, துர்வாடை வீசாத கிரீம் இது. டாக்டர்கள் சிபாரிசு செய்வதும் இதைத்தான். ஏனெனில் இதில் உள்ள ஒப்பற்ற பொருளான அல்லன்டாயின், வெட்டுக்கள் மற்றும் புண்களை விரைந்து குணப்படுத்துகிறது. தாய்ப்பால் தருவதை வலியற்றதாக்குகிறது. உங்களுக்கும், உங்கள் குழந்தைக்கும் ஏற்ற விசேஷமுள்ளதாக்குகிறது.

தாய்மார்களுக்கேற்ற தலைசிறந்த உடனடி நிவாரணம்



மாஸ்ஸே பிரெஸ்ட் கிரீம்

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

தாய்ப்பால் தருவது பற்றி மேலும் அறிய எழுதுங்கள் : மாஸ்ஸே ஆலோசகர், தபால் பெட்டி எண் : 9301, பம்பாய் 400 036.

Lintas J&J Mas 2 2013 Tm



அந்த முதியவர்களை டாக்டரின் குழுவினரே தங்கள் அறைக்கு அழைத்து வந்து காப்பி, பிஸ்கட் கொடுத்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அனுப்புகின்றனர். இத்தகைய பரிவான கவனிப்பு நோயாளிகள் விரைவில் குணமடைய உதவுகிறது. சுருங்கச் சொன்னால் டாக்டர் வி.எஸ். நடராஜன் அவர்கள் குறிப்பிட்டபடி இங்கு வீடு போன்ற ஒரு சூழ்நிலை நிலவுகிறது.

மூப்பியல் மருத்துவத்தின் அவசியம் என்ன?

எந்த மருத்துவ மனையிலும் முதியவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என்ற நிலையில் தனியாக மூப்பியல் மருத்துவம் தேவையா என்ற கேள்வி நியாயமானதுதான். ஆனால் இது பற்றி டாக்டர் வி. எஸ். நடராஜன் அவர்கள் அளித்த விளக்கத்தைக் கேட்டபின் நம் சந்தேகம் தீர்ந்துவிடும்.

1. மாறுபட்டு காணப்படும் அறிகுறிகள்:

முதலாவதாக எந்த நோயின் அறிகுறிகளும் இளையவர்களுக்குத் தோன்றுவது போல் வயோதிகர்களுக்குத் தோன்றாது.

அ) **மாரடைப்பு :** இளையவர்களுக்கு நெஞ்சுவலி, அதிக அளவு வியர்வை, ஜுரம், வாந்தியெடுத்தல் போன்ற அறிகுறிகள் தோன்றும். ஆனால் முதியவர்கள் வாயுவினால் ஏற்பட்ட உபத்திரவம் என்று தான் குறிப்பிடுவார்கள். ஏனென்றால் மேற்கண்ட அறிகுறிகள் எதுவும் அவர்களுக்குத் தோன்றாது. "உடம்பு என்னவோ போல இருக்கு" என்பது தான் அவர்கள் கூறும் அதிகபட்ச அறிகுறி.

ஆ) **மார்புச்சளி :** இளையவர்களுக்கு மூக்கில் ஒழுகுதல், தும்மல் இருமல் என்று அறிகுறிகள் தோன்றினால் முதியவர்களுக்கு இவை எதுவுமே இல்லாமல் மார்சளி பிடித்து விடும். ஸ்டெதஸ்கோப்பில் சளி இருப்பது தெரியாது. சளியின் அறிகுறியாக அவர்களுக்கு மனக்குழப்பம் ஏற்படும். எனவே மனக்குழப்பத்தை வயதானதால் வந்தது என்று அலட்சியப்படுத்தாமல் மார்சளிக்கான சிகிச்சை அளிக்க வேண்டும்.

இ) **ஜுரம் :** எந்தக் காரணத்திற்காகவாவது ஜுரம் வந்தால் வயோதிகர்களுக்கு அதன் வெப்பநிலை 100 அல்லது 101 டிகிரி (பாரன்ஹீட்)க்கு மேல் போகாது. இதை இளையவர்கள் வெப்பநிலையோடு ஒப்பிட்டால் 104 அல்லது 105 டிகிரிக்குச் சமம். எனவே 100 டிகிரி ஜுரம் என்றால் அதனை அலட்சியப்படுத்தக் கூடாது. மலேரியா காய்ச்சல் வந்தால் கூட முதியவர்களுக்குக் குளிராது.

ஈ) **வலி உணர்வு :** வலி உணரும் செல்களின் திறமை குறைந்து விடுவதால் வயிற்று வலி முதல் எந்தப் பகுதியில் வலி ஏற்பட்டாலும் அதை அவர்கள் உணரமாட்டார்கள். எனவே 'லேசான வலி' என்று அவர்கள் குறிப்பிட்டால் நம் பாஷையில் பயங்கர வலி என்று மொழி பெயர்க்க வேண்டும்.

நோயைக் கண்டு பிடிப்பது கடினம் :

நோய் அறிகுறிகள் நம்மை எப்படி குழப்புமோ அதேபோல் நோயாளியும் நோயைப் பற்றி நம்மிடம் சரிவரச் சொல்வதில்லை. இதற்கு முதல் காரணம் நோயாளிக்கே தன் உடல் நிலையைப் பற்றிச் சரியாகக் கணிக்க முடிவதில்லை. இரண்டாவது வயதாகி விட்டதால் ஏற்பட்ட பலவீனம் அல்லது சோர்வு ஒரு காரணம் என்று ஆரம்ப நிலையில் அலட்சியப்படுத்தி விடுகிறார்கள். மூன்றாவது பெரும்பாலான முதியவர்கள் பொருளாதார ரீதியாகவும், உடல் நிலை காரணமாகவும் குடும்பத்திலுள்ள மற்றவர்களைச் சார்ந்திருப்பதால் தன் உடல் நிலையில் ஏற்படும் நோய் அறிகுறிகளை வெளியே சொல்லத் தயங்கி மறைத்து விடுகிறார்கள்.

மேலே கண்ட அனைத்துக் காரணங்களுக்காகவும் மூப்பியல் மருத்துவம் அவசியமாகிறது. அது மட்டுமல்ல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னும் சிகிச்சை முறையும் முதியவர்களுக்கு மாறுபடுகிறது. உதாரணமாக நோயின் தீவிரம் அதிகமாக இருந்த போதும் அதிக வீரியமுள்ள மருந்தை அதிக அளவு கொடுக்க முடியாது. மருந்தின் எடை குறைக்கப்படுவதுடன் ஒன்று அல்லது இரண்டு வேளை மட்டுமே கொடுக்க வேண்டியுள்ளது. ஒரு நோய்க்குக் கொடுக்கும் மருந்து மற்றொரு நோய்க்கு எதிராக அமையாமல் கவனிக்க வேண்டும். கூடிய வரை சில வியாதிகளுக்கு உணவுக் கட்டுப்பாடு, உப்பு, சர்க்கரை குறைத்தல், எடை குறைத்தல், எளிய உடற்பயிற்சி (Physiotherapy) போன்றவைகளே சிகிச்சையாக அமையும். உள்ளுக்கு மருந்து கொடுப்பது கூடிய வரையில் தவிர்க்கப்படுகிறது. நோயாளிகளின் மனதை உற்சாகமாக வைத்து மன அழுத்தம், கவலை இல்லாமல் பார்த்துக் கொள்

வது மிக அவசியம். இதனாலேயே நோயின் தீவிரம் வெகுவாகக் குறைந்து விடுகிறது.

அவர்களின் சந்தோஷங்களும், சோகங்களும்!

மூப்பியல் மருத்துவத்தில் மிகுந்த ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பணி புரியும் டாக்டர் வி.எஸ். நடராஜன் கடந்த ஆண்டுகளில் முதியவர்களின் பிரச்னைகளை நுட்பமாகக் கண்காணித்துள்ளார். முதியவர்களின் சந்தோஷங்களையும், சோகங்களையும் அவர் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

1. மூப்பியல் மருத்துவத்தை மற்றவர்கள் மூலம் கேள்விப்பட்டு சிகிச்சைக்கு வருபவர்கள் பெரும்பாலும் முதியவர்களே. சிறியவர்கள் அழைத்து வருவது மிகவும் குறைவு.

2. வயதான பெற்றோர்களுக்குத் துணையாக வருவதும் வார்டில் தங்கி பணிவிடை செய்வதும் பெரும்பாலும் மகள் தான். மகன் அல்லது மருமகள் வருவதே இல்லை (அப்படி அபூர்வமாகப் பெற்றவருடன் மகன் வந்தால் அவருக்கு V.I.P. உபசாரம்தான்).


3. ஓ.பி. (புற நோயாளிகள்) பிரிவிற்கு ஆண், பெண் இருவரும் சம அளவில் வந்தாலும் பெண்கள் நோய் தீவிர நிலை அடைந்த போதுதான் வருகிறார்கள். எனவே அட்மிட் ஆகி சிகிச்சை பெருபவர்கள் பெரும்பாலும் பெண்களே.

4. ஓபியில் வரும் பல முதியவர்கள் நண்பர்களாகி விடுகிறார்கள். ஒவ்வொரு முறையும் குறிப்பிட்ட கிழமையைத் தேர்ந்தெடுத்து அன்று காலை எட்டரை மணிக்கே ஆஜராகி விடுகிறார்கள். பத்து மணிக்கு டாக்டர் வரும் வரை சந்தோஷமாக அரட்டை அடிக்கிறார்கள். இது அவர்களுக்கு ஒரு "கெட் டு கெதர்" மாதிரி. 1988 முதல் தவறாமல் வந்து போய்க் கொண்டிருக்கும் வயோதிகர்கள் பலர். இங்கு வருவதில் அவ்வளவு சந்தோஷம்.

5. சிகிச்சை பெறுபவர்கள் மீண்டும் செக் அப்பிற்கு வரும் போது அவர்களுக்கு 15 நாட்களுக்குத் தேவையான மருந்துகளை ஒரே தவணையில் கொடுக்கிறோம். பார்மஸியும் ஓ.பி.க்கு எதிரிலேயே இருப்பதால் அலைச்சல் மிச்சம்.

6. சிகிச்சைக்கு வரும் சில நோயாளிகளுக்கு உறவினர்கள் வந்து பார்ப்பதே இல்லை. இதனால் நோயாளி மிகவும் மனத்தளர்ச்சி அடைகிறார்.

7. சில சமயம் பொய்யான வீட்டு அட்ரஸைக் கொடுத்து விட்டு, பக்கத்து வீட்டுக்காரர் என்று கூறி அட்மிட் செய்துவிட்டு தலைமறைவாகிவிடும் பிள்ளைகள், பேரன்களும் உண்டு. டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்குக் கூட்டிப் போனால் விலாசம் தவறாக இருக்கும். முதியவரிடமே மெல்ல விசாரித்து விலாசத்தை ஊகித்து சரியான இடத்தில் சேர்த்து விடுவோம். அப்படியும் இல்லை யென்றால் முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுவோம். இது மிகவும் பரிதாபமான நிலை.



8. மற்ற பிரிவுகளில் சிகிச்சை பெற்றதில் மரணமடைந்த முதிய வர்கள் 15 சதவீதம் என்றால் மூப்பியல் பிரிவில் கிசிச்சை பெற்ற பின் மரணமடைந்தவர்கள் (சில வருடங்கள் கழித்துத்தான்) 5 சதவீதம் மட்டுமே.

9. இங்கு சிகிச்சை பெறுபவர்களில் உடல் நிலை மட்டுமல்ல, வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. ஓரளவு நல்ல உடல்நிலையில் உள்ளவர்களுக்கு சுய தொழில் துவங்க வங்கிக் கடனும் வாங்கிக் கொடுத்து உதவியுள்ளோம். மனநிலையிலும் இவர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள்.

10. இங்கு வரும் வயோதிகர்கள் ஓரளவு நகர்ப்புறங்களில் இருந்தும், சிற்றூர் (Urban) களிலிருந்தும் வருபவர்கள். அவர்களில் 32 சதம் பேர் கூட்டுக் குடும்பமாக வாழ்வதில்லை. இவர்கள் உறவினர்கள், அல்லது நண்பர்கள் வீட்டில் இருக்கிறார்கள். 1 சதம் முதியோர் முதியோர் இல்லங்களில் வாழ்கிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால் திரு டி.கே. நாயர் என்பவர் கூறும் 200 கிராமங்களில் எடுத்த சர்வேயும் இதை ஒத்திருப்பதுதான். ஆக கிராமங்களிலும் முதியோர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

மூப்பியல் மருத்துவப் பிரிவில் அட்மிட் ஆகி இருக்கும் ஒரு சிலரைப் பேட்டி கண்ட போது :

திருமதி பாபு ரத்தினம் என்பவர் மிக உயர்ந்த அளவு இரத்த அழுத்தம் உடையவர். இரண்டு முறை மாரடைப்பு (Heart Attack) வந்து மூன்றாவது முறை வந்த போது இங்கு அட்மிட் ஆனார். அவரது கணவர், மாமனார் ஆகியோர் இப்போது உயிரோடு இல்லை. உதவிக்கு இவரது சகோதரி செல்வி வித்யா ரத்தினம் (பள்ளியில் பாட்டு டீச்சர். படிப்பு தமிழ் எம்.ஏ., பி.எட்.). இவர் தன் உடல் நிலை இப்போது தேவலை என்றும் டாக்டர்கள் நன்றாகக் கவனிப்பதாகவும் கூறினார்.



சமீபத்தில் சிறுநீரகம் பழுது பட்டதில் டயாலிஸிஸ் வேறு இவருக்குச் செய்யப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட ஒரு மாதமாக இங்கு இருக்கும் இவர் இவ்வளவு உடல் குறைபாடுகள் இருந்தாலும் மகிழ்ச்சியாகவே காணப்படுகிறார்.

அடுத்து திருமதி திரிபுரசுந்தரி அவர்கள். 75 வயதான இம் மூதாட்டி சமீபத்தில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். பேச முடியவில்லை. தற்போது உடல் நிலை சற்று முன்னேறியுள்ளதாக அவரைக் கவனித்துக் கொள்ளும் அவரது மகள்கள் கூறினார்கள். 4 பெண் கள் பெற்றவர் இம்மூதாட்டி. ஓடியாடி வேலை செய்த இவர் தற்போது படுக்கையில். விரைவில் வீட்டிற்குப் போய் விடுவேன் என்றார் ஜாடை மூலமாக.

மூப்பியல் மருத்துவப் பிரிவின் ஆராய்ச்சிப் பணிகள் :

இப்பிரிவும் டாக்டர் முத்துகிருஷ்ணன் (மருத்துவப் பிரிவு) திருமதி பிரதிபா பிரபு (சத்துணவுப் பிரிவு) ஆகியோர் கொண்ட குழுவாக டாக்டர் வி.எஸ். நடராஜன் அவர்கள் தலைமையில் இயங்கி வருகிறது. இக்குழு சென்னையை அடுத்த மேல்மருவத்தூரில் சுமார் 400 முதியவர்களை 10 கிராமங்களிலிருந்து தேர்ந்தெடுத்து சுமார் 2 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வருகிறது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸாண்டோஸ் பவுண்டேஷன் (Sandoz Foundation) உதவியுடன் உணவு முறை, சத்துக்குறைவு போன்றவை ஆராயப்பட்டன. அவர்களின் ஆராய்ச்சியின் படி,

1. 55 சதம் முதியவர்கள் எடைக்குறைவால் அவதிப்படுகிறார்கள்.

2. வைட்டமின் குறைபாடு அதிகம்.

3. கால்சியம் 33 சதம் பேருக்கு அதிகமாகவே இருக்கிறது. (வெற்றிலை போடுவது காரணம்.)

4. காடரேக்ட் அதிகம். (சூரிய ஒளியை அதிகம் பார்ப்பது காரணம்)

5. கொழுப்பு (கொலஸ்ட்ரால்) 1.6 சதம் மட்டுமே உள்ளது.

6. சாதாரணமாக முதியவர்களின் ஒரு நாளைய கலோரி அளவு 1750 கலோரி. ஆனால் இங்குள்ளவர்களுக்கு 1000 கலோரிக்கு மேல் இல்லை.

7. பொதுவான குறைபாடு சோர்வு, தளர்ச்சி (காரணம் சத்துக்குறைவான உணவு.)

இதே போல் இதய நோய்கள் சம்பந்தமான ஆராய்ச்சியையும் Russel Scientific Institute of India, Bombay யின் உதவியால் செய்திருக்கிறார்கள்.

1. 19 சதம் முதியோர் இதயக் கோளாறு உடையவர்கள். (Cardiac problems).

2. 400 பேரில் 25 பேருக்கு மட்டுமே மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. அதுவும் 19 பேர்கள் பெண்கள். அவர்களுக்கு சுரப்பு நீர்களின் அளவு (hormone influence) குறைந்ததே காரணம். கொலஸ்ட்ரால், இரத்த அழுத்தம் இவை காரணமல்ல.

3. இங்குள்ள அமைதியான, அதிக பரபரப்பு, மன அழுத்தம் இல்லாத வாழ்க்கை முறையே இவர்கள் இதய சம்பந்தமான நோய்கள் குறைவாக இருக்கக் காரணம்.

இவர்களின் ஆராய்ச்சியின் விளைவாக முதியவர்களுக்கு என்னென்ன உணவு கொடுக்கலாம், அவற்றில் கலோரி அளவு என்ன, மற்றும் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் என்னென்ன என்பது பட்டியல்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்து முதியவர்களுக்கும் ஏற்றது. அவசியமானதும் கூட.

புரோட்டின் 2-3 கிராம், கார்போஹைட்ரேட் 19-21 கிராம் கொழுப்பு மிகக் குறைவு, கலோரி அளவு 85 கலோரி.

1. அரிசி - 2 மேசைக்கரண்டி
2. கோதுமை ரவை - 2 மேசைக் கரண்டி
3. அவல் - 2½ மேசைக் கரண்டி
4. அரிசிக் குருணை - 2 மேசைக் கரண்டி
5. சாதம் - ½ கப்
6. இட்டலி - 1
7. தோசை - 1
8. சப்பாத்தி - ½ கப்,
9. உப்புமா - ½ கப்,
10. வேக வைத்த பருப்பு - ½ கப்,
11. வேக வைத்த பயறு வகை - ½ கப்,
12. கோழி முட்டை - 1,
13. கோழி இறைச்சி - 75 கிராம்,
14. மீன் - 70லிருந்து 90 கிராம்,
15. உருளைக்கிழங்கு - 100 கிராம்,
16. நெய் - 2 மேசைக் கரண்டி,

கர்நாடகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள குடகுநாடு அழகு கொஞ்சும் மலைப்பிரதேசம். இந்த மலைக்கும் உயர்தர காஃபிப்பயிருக்கும் உள்ள தொடர்பு தொன்மையானது, வளமையானது, என்றும் பசுமையானது.

குடகு தரும் 100% கலப்படமற்ற ஃபில்டர் காஃபியை ஒரு முறை பருகியவர்கள் வேறு எதையும் அருந்த மாட்டார்கள். கூர்க் காஃபியில் அடங்கியுள்ளவையே இதன் தனித்தன்மைக்குக் காரணம். தூய மலைக்காற்றும், கறுத்த நிறமுள்ள செழிப்பான மண்ணும், பொழியும் மழையும், சூரிய கிரணங்களை இதமாகப் பாய்ச்சும் மரங்களடர்ந்த மலைப்பிரதேசமும் சேர்ந்து, காஃபிக் கொட்டைகளை மெல்ல, பதமாக முற்ற வைக்கின்றன.

குடகில் காஃபி வளர்ப்பது ஒரு கலை. குடகு நாட்டவர் பரம்பரை பரம்பரையாகப் படித்து கை தேர்ந்துள்ள அருமையான கலை. இந்த கலையில் விளைவது நறுமணமும் நற்சுவையும் நிறைந்த ஓர் அற்புத காஃபி : சிக்கரி சேர்க்கத் தேவையில்லாத காஃபி. இந்த ஃபில்டர் காஃபியை உங்களுக்கு கன்ஸாலிடேட்டட் காஃபி நிறுவனத்துடன் சேர்ந்து தருவது டாடா நிறுவனம்.

அடங்கியுள்ளவை :

மலைக்காற்று,

செழுமையான

நிலம்,

மழை,

கூர்க்

இவற்றுடன்

டாடா நிறுவனம்.

குடகின் மரபைப் பின்பற்றித் தயாரிக்கப்படும் " கூர்க் " இந்தியாவின் மிகத் தூய்மையான கலப்படமற்ற ஃபில்டர் காஃபி. துளியும் சிக்கரி சேர்க்காத 100% காஃபி.

டாடா நிறுவனமும் கன்ஸாலிடேட்டட் காஃபி லிமிடெட்-டும் குடகின் மிகப்பெரிய காஃபி தோட்டங்களின் உடைமையாளர்களாய் இருப்பதால் " கூர்க் ஃபில்டர் காஃபி 100% சிக்கரி இல்லாமல் வருவது மட்டுமல்ல மற்ற எந்த காஃபியையும் விட இன்னும் பசுமை மாறாத உங்களுக்கு டாடாவின் தோட்டங்களிலிருந்து வருகிறது.

NO CHICORY

100% கலப்படமற்ற " கூர்க் " ஃபில்டர் காஃபியை ருசித்துப் பருகுங்கள் ; ஆனந்தத்துடன் அனுபவியுங்கள். இதில் அடங்கியுள்ளவை இப்போது உங்களுக்குத் தெரியுமே. எனவே இனி உங்களுக்கு புரியும் ஏதனால் இது இத்தனை அருமையாக இருக்கிறது, எதனால் இதன் மணமும் சுவையும் இத்தனை சிறப்பாக இருக்கிறது. எதனால் இது ஆத்ம திருப்தியை அளிக்கிறது என்பது.



TATA's


coorg

100% PURE FILTER COFFEE

பெருமிதத்துடன்
வளர்த்த காஃபி.






OWN YOUR FLAT AT MADRAS
AKSHAYA
16, 3rd Main Road, Nanganallur, Madras - 600 061
AASHIRWAD
No.1, 1st Lane, 2nd Main Road, Trustpuram, Kodambakkam, Madras - 600 024
AISHWARYA
Plot 1 & 2, 7th Main Road, Dhandeeswarar Nagar, Velacheri, Madras - 600 042
ADITYA
15/4, Jayammal St., Extn., Aminjikarai, Madras - 600 029
CREATORS
NOT JUST BUILDERS
ASSOCIATED BUILDERS
2nd Floor, 26, Ranganathan Street, T.Nagar, Madras - 600 017. INDIA
Ph : Off : 4340224 / 4340210. Res : 2345244. Telefax : (044) 2344333
உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில் டீலக்ஸ் ஃபிளாட்டுகளும் பங்களாக்களும் சென்னை நகரின் பல்வேறு கௌரவமான பகுதிகளில் கிடைக்கும்.
கட்டடப் பணியின் முன்னேற்றத்தையொட்டி, வட்டியில்லாத தவணை முறையில் கட்டணம் செலுத்தலாம், அல்லது மொத்த கட்டணமும் செலுத்தி பத்து சதவிகிதம் தள்ளுபடி பெறலாம்.
முன்னணி நிதி நிறுவனங்கள் மூலம் கடன் வசதி செய்து தரப்படும்.
நவீன வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் ரசனையுடன் அழகாக வடிவமைக்கப்படுகின்றன.
தரமான கட்டமைப்பு; நிர்ணயித்த காலக் கெடுவுக்குள் முடிக்கப்படும்.

அன்றாடம் தயாரிக்கும் உணவு வகையின் அட்டவணை:

(1 கப் - 200 மிலி லிட்டர்)
காலை உணவு - அரிசி அல்லது ராகி கஞ்சி - 2 கப்
மோர் (சேர்த்து) - ½ கப்
வெங்காயம் அல்லது முட்டை - 1
மதிய உணவு - சாதம் - 2 கப்
முருங்கைக்காய் சாம்பார் அல்லது மீன் குழம்பு (1 துண்டு மீன்) - ½ கப்
ரஸம் - ½ கப்
மோர் - ½ கப்
கிரை மசியல் ¾ கப்
மாலை உணவு - டீ (அல்லது) காப்பி - 1 கப்
(¼ கப் பால் + 2 ஸ்பூன் சர்க்கரை)
அவல் உப்புமா - ½ கப் அல்லது பிஸ்கட் - 2,
(அல்லது சுண்டல்) - ½ கப்
இரவு உணவு - காய்கறிகள் சேர்த்த கோதுமை உப்புமா - 1½ கப்
(அல்லது) சாதம்
கெட்டியான பருப்பு - ½ கப்
புடலங்காய் பொரியல் - ½ கப்
(எண்ணெய் வகை 4 முதல் 5 டீஸ்பூன்) ஒரு நாளைக்கு.

மற்றொரு வகை உணவுப் பட்டியல் :

அதிகாலை - காப்பி அல்லது டீ - 1 கப் பால் + சர்க்கரை 2 டீஸ்பூன்)
காலை உணவு - கிச்சடி ½ கப்
(அல்லது) இட்டிலி 3 (அல்லது) தோசை 3
சட்டினி ½ கப் (அல்லது)
சாம்பார் - ¾ கப்
மதிய உணவு - சாதம் - 2 கப்
கத்தரிக்காய் சாம்பார் அல்லது கோழிக் குருமா
(1 துண்டு கோழிக்கறி) - ¾ கப்
ரஸம் (பூண்டு) - ½ கப்
கிரை மசியல் - ½ கப்,
மோர் - ½ கப்
மாலை உணவு - டீ அல்லது காபி (காலை மாதிரியே) - 1 கப்
சேமியா அல்லது அவல் உப்புமா - 1 கப்
இரவு உணவு - புளிசாதம் 1½ கப் அல்லது இட்டிலி - 3
உருளை வெங்காயம் பொரியல் அல்லது முட்டைப் பொரியல் - ½ கப்
தயிர் - ¼ கப்
ஊறுகாய்
வாழைப்பழம் (அ) ஆப்பிள் - 1
(ஒரு நாளைக்கான எண்ணெய் வகை 4 முதல் 5 டீ ஸ்பூன்)



அட்டவணைகள் தவிர எத்தகைய உணவு வகைகளை எப்படி பக்குவப் படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

1. நன்றாக வெந்த சாதம், பொங்கல், சேமியா உப்புமா.

2. பொடியாக நறுக்கப்பட்ட அல்லது மசிக்கப்பட்ட வேகவைத்த காய்கறிகள்.

3. மிருதுவான பழவகைகள் (வாழை, மாம்பழம், பப்பாளி, வேகவைத்த ஆப்பிள்)

4. எலுமிச்சை (அ) சாத்துக்குடி சாறு (அ) சூடான பால்.

5. நன்கு பொடியாக நறுக்கப்பட்டு வேக வைத்த அசைவ உணவுகள்.

6. வேக வைத்துப் பொடியாக்கப்பட்ட முட்டை.

7. அதிக மசாலா, எண்ணை, காரம் தவிர்க்கப்பட வேண்டும்.

சாதாரண உணவு வகைகளிலேயே எல்லா விட்டமின், தாது உப்புக்கள் கிடைக்கும் பட்சத்தில் அவைகளுக்கான மாத்திரைகளை சாப்பிட வேண்டாம். ஆனால் சில வயோதிகர்களுக்கு வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ், வைட்டமின், சி, இரும்பு, கேல்சியம் இவற்றிற்கான மாத்திரைகள் தினமும் கொடுக்க வேண்டும். அவர்கள்;

1. ஏழைகள்.
2. பக்கவாதம், மூட்டு நோய் உள்ளவர்கள்.
3. சமுதாயத்தால் கைவிடப்பட்டவர்கள்.
4. குடும்பம் இழந்து அநாதையானவர்கள்.
5. மன நோயாளிகள்.

இச்சத்துக்கள் குறைவதால் இவர்கள் ஊட்டச் சத்து குறைபாட்டு வியாதியாலும் அவதிப்பட நேரிடும்.

இறுதியாக டாக்டர் வி.எஸ். நடராஜன் அவர்கள் முதியவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், "முதியர்வர்களை மறைந்திருந்து தாக்கும் நோய்கள் பாதிக்கலாம். எனவே ஆண்



டிற்கு ஒரு முறை உடலை பொது மருத்துவச் சோதனை செய்ய வேண்டும். முதியவர்களை ஞாபக மறதி அதிக அளவில் பாதிக்கும். Dementiia என்ற அறிவுத் திறன் வீழ்ச்சி ஏற்படும் நிலையில் ஞாபக சக்தி அதிக அளவு பாதிக்கப்பட்டு சிறுநீர், மலம் கழிப்பது கூட அவர்களுக்குத் தெரியாது. எனவே, ஒரு குழந்தையிடம் காட்டும் பரிவையும், அன்பையும் அவர்களிடமும் காட்ட வேண்டும்" என்றார். "பொது மக்களிடம் முதுமை இயல் மருத்துவம் பற்றிய அறிவு பரவவில்லை. வானொலி, தொலைக் காட்சியில் முதியோருக்கான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. வானொலியில் ஒவ்வொரு செவ்வாய் 2.15க்குக் 'கனிந்த வாழ்வு' என்ற முதியோருக்கான நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது. பல ஆங்கில, தமிழ் நாள், வார இதழ்களிலும் அவ்வப்போது மூப்பியல் மருத்துவம் பற்றிய செய்திகள் வெளியாகின்றன. அக்டோபர் 1 ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் முதியோர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. சென்னையிலும் இவ்வாண்டு இவ்விழா நடை பெற்றது.

இவை அனைத்தும் இருந்தும் மக்கள் மனதில் பெரியவர்கள் மீது மரியாதையும், அன்பும் இருந்தால்தான் முதியவர்கள் பிரச்னை தீரும்" என்றார்.

சென்னை மருத்துவக் கல்லூரி அரசு பொது மருத்துவமனையின் முதல்வர் டாக்டர் ராஜா அவர்கள் :

கே: முதியோர்களின் சிகிச்சையில் குடும்ப உறுப்பினர்களின் பங்கு என்ன?

ப: மருத்துவமனையில் அட்மிட் ஆன வயதானவர்களைத் தினமும் 2 வேளையாவது வந்து பார்க்க வேண்டும். இது நோயாளிக்கு மிகுந்த சந்தோஷத்தை அளிக்கும். வீட்டிற்கு அழைத்துச் சென்ற பிறகும் ஒரு குழந்தையைக் கவனிப்பது போல சரியான நேரத்திற்கு உணவு, மருந்து கொடுப்பது, தவறுதலாக சிறுநீர் கழித்தாலோ, வாந்தி எடுத்தாலோ அருவருப்புக் கொள்ளாமல் சுத்தம் செய்தல் அவசியம்.

கே.: முதியவர்களிடம் அனுசரித்துப் போகும் குணம் மறைந்து விட்டதா?

ப.: நிச்சயம் இல்லை. இங்கு என் தாயார் குறிப்பிட்ட ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். 85 வயதான அவர் திருநெல்வேலியிலிருந்து சிகிச்சைக்காக சென்னை வந்திருந்தார். அப்போது அவரிடம், "பெரியம்மா, உங்களுக்கு எந்த இடம் பிடித்திருக்கு?" என்ற போது, "எங்கே எனக்கு நல்ல கவனிப்பும் அன்பும் இருக்கிறதோ அந்த இடத்தில் இருப்பதுதான் சந்தோஷம்" என்றார். இதுதான் அனைத்து முதியவர்களின் கருத்தும். அவர்களை எளிதில் சந்தோஷப்படுத்தி விடலாம்.

கே.: விரைவில் முதுமை அடைவது ஆண்களா, பெண்களா?

ப.: ஆண்கள் மனநிலையைப் பொருத்தே மூப்பு அடைகிறார்கள். 35 வயதில் கிழவனைப் போலவும், 70 வயதில் இளைஞனைப் போலவும் சிலர் காணப்படுவதற்கு இதுவே காரணம். பெண்கள் அப்படியல்ல. தோற்றத்தில் இளமையாக தெரியும் வரை அவர்கள் இளையவர்கள்தான். மாதவிடாய் நிற்கும் சமயத்திலும், பேரன், பேத்தி பிறக்கும் சமயத்திலும் பெண்கள் மனதளவில் வயதாகி விட்டதாக உணருகிறார்கள்.

கே.: இன்றைய இளைஞர் நாளைய முதியவர் ஆகப் போகிறவர். அவருக்கு என்ன அறிவுரை?

ப.: ஆண்கள் நற்பழக்கங்களுடன் உடல் ஆரோக்கியத்தைப் பேணினாலே போதும். இளமையோடு முதுமையிலும் வாழலாம். பெண்களைப் பொறுத்தவரை மனதில் சலிப்பை வளர்த்துக் கொள்ளக் கூடாது. புத்துணர்வுடன், தோற்றத்தில் இளமை இருக்கும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். சரியான உணவு, எடை கூடாதிருத்தல், வெட்கப்படாமல் உடற்பயிற்சி செய்தல், நடத்தல் இவை முதுமையை தூர விரட்டும்.

கே.: இன்றைய மூத்தத் தலைமுறைக்கு உங்கள் ஆலோசனை என்ன?

ப.: கூட்டுக் குடும்பத்தைச் சிதற விடாதீர்கள். மூத்தவர்களின் அறிவுரை (அனுபவ ரீதியானது) இளையவர்களுக்கு நல்ல வழி காட்டி. கணவன், மனைவி பரஸ்பரம் மனம் விட்டுப் பேசுங்கள். முதியோர்களுக்கும் அந்தரங்கம் (Privacy) தேவை. தனி அறையில் உறங்குங்கள். 60 அல்லது 70 வரை செக்ஸ் இருப்பது ஆரோக்கியமானது என்று மேலை நாட்டில் ஆராய்ச்சி மூலம் கண்டுள்ளனர். மற்றபடி தனிமையை விரட்ட தோட்ட வேலை, புத்தகம் படித்தல், இசை கேட்பது போன்ற பொழுது போக்குகளை வளர்த்துக் கொள்ளுங்கள். நோயை வரும் முன் காத்துக் கொள்ளுங்கள். பிறகு என்ன? முதுமையிலும் இளமை ஊஞ்சலாடுமே!

— லக்ஷ்மி சங்கர்

படங்கள் : **ஓம் சுப்பிரமணியம்**

என் மகன் ராஜூ கூறினான்: தாங்க் யூ மம்மி...



அதற்கு நான் கூறினேன்: நன்றி ஸரள்

ராஜூவின் பள்ளிக்கூடம் திறந்த முதல் நாளிலேயே அவனுக்கு டிபன் பாக்ஸ் கொடுக்கத் தவறியிருப்பேன். ஏன்னா, துரதிருஷ்டவசமாக கேஸ் தீர்ந்துவிட்டது. ஆனா, டிபன் பாக்ஸ் கொடுக்காம அவனை எப்படி பள்ளிக்கு அனுப்பறது?


அனைத்து விஷயங்களில் சுதந்திரத்தை அனுபவிக்கும் பக்கத்து வீட்டு சரளாவைப் பற்றி உடனே எனக்கு ஞாபகம் வந்தது. அவளிடம் கேஸ் கிடையாது. இதைப் பற்றி கேட்டதும் அவள் பெருமிதத்துடன் கூறினாள் "கேஸ் இல்லேனா என்ன . . . ஸரள் இருக்கே"!


நடைமுறைக்கு ஏற்றவாறு தன் வாழ்க்கையை அவள் அமைத்துக் கொண்டது என்னை மிகவும் கவர்ந்தது. இதனால் எனக்கு ஏற்பட்ட கூடுதல் நற்பயனைக் கூறட்டுமா? என் குழந்தை ராஜூ அன்போடு கூறினான் "தாங்க் யூ மம்மி".

IS 2980

HAMARA SANSAAR

ஸரள்





DRISHTY·RJT.

DISTRIBUTORS FOR
TAMILNADU AND PONDICHERY :

Naik BROTHERS

62, JERMIAH ROAD 1st FLOOR, VEPERY,
OPP. BENTINCK HIGHER SEC. SCHOOL
(NEAR DOVETON TOWER) MADRAS-600 007
PH. 6421115, 6422006



• ரமா



ஞானதேசிகன்



• தேவநாதன்

பெரியவர்களைப் பற்றி இளம் தலைமுறையினரும், இவர்களைப் பற்றி அவர்களும் குறை சொல்லிக் கொள்ளுவது சகஜம். இது சம்பந்தமாக நான்கு கேள்விகளை ஐம்பது வயதைக் கடந்த ஒருவர், நடுத்தர வயதுக்காரர், பெண்களில் நடுத்தர வயதுப் பெண்மணி, இளம் பெண் ஆகியோரிடம் கேட்டோம். அவர்கள் சொல்கிறார்கள் -

நாலு பேர் என்ன சொல்கிறார்கள்?

கேள்விகள் :

1. ஒரு தலை முறைக்கும் அடுத்த தலைமுறைக்கும் நடுவில் 'ஜெனரேஷன் கேப்' (தலைமுறை இடைவெளி) ஏற்படுகிறது என்கிறார்களே? அது சரியா?

2. தலைமுறை இடைவெளி உண்மையென்று எடுத்துக் கொண்டால் மூத்த தலைமுறையினரும் இளைய தலைமுறையினரும் இதற்கு என்ன செய்யலாம்?

3. மூத்த தலைமுறையினர் தாங்களே 'டாமினேட்' செய்து இளைய தலைமுறையினரின் அறிவாற்றலையும், சுயமாகச் சிந்திக்கும் திறமையையும் அழித்து விடுகிறார்கள் என்ற கருத்தில் உண்மை இருக்கிறதா?

4. முதியவர்கள் தங்கள் குழந்தைகளை வளர்க்கும் போது அவர்களைத் தங்கள் ஜெராக்ஸ் காப்பியாக ஆக்க முயலுகிறார்களா? அவர்களைத் தனித்துவத்துடன் செயல்பட விடுவதில்லை என்பது சரியா?

பதில்கள் :

கே. ரமா. (ஆராய்ச்சியாளர், சமஸ்கிருதப் பிரிவு, மாநிலக் கல்லூரி)

1. ஒரு மனிதன் வளர வளர அவனது கருத்துக்கள் மாறிக் கொண்டே வரலாம். இருபது வயதில் எனக்கிருந்த கண்ணோட்டம் இருபத்தைந்து வயதில் நிச்சயம் இருக்கும் எனக் கூற இயலாது. ஒரு தனி மனிதனுக்கே இப்படி என்றால் வளர்ந்து வரும் தலைமுறைக்கும் மூத்த தலைமுறைக்கும் இடையே கட்டாயம் இடைவெளி ஏற்படும். மூத்த தலைமுறையினர் பெரும்பாலும் சொல்லப்படும் விஷயத்தை விட சொல்பவருக்கு அதிக மதிப்பு கொடுத்து விஷயங்களை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் விஞ்ஞானம் முன்னேறி வரும் இக்காலத்தில் இளைய தலைமுறையினர் காரணகாரியங்களை ஆராயத் துடிக்கிறார்கள். உணர்ச்சி பூர்வமாக இல்லாமல் எதையும் அறிவுபூர்வமாக பார்க்க விழைகிறார்கள்.

2. மூத்த தலைமுறையினர் தங்களது மனப்பான்மையை விட்டு விட்டுத் திறந்த மனம் (open minded) கொண்டவர்களாக, இளைய தலைமுறையினரின் நியாயமான

4 பேர் என்ன சொல்கிறார்கள்?



விருப்பங்களுக்கு மதிப்புத் தர வேண்டும். முடியாவிட்டால், குறைந்த பட்சம் அவர்களின் விருப்பங்களை சகிப்புத் தன்மையோடு ஏற்க வேண்டும். (உதாரணம் தாத்தாவுக்கு இசைக் கச்சேரி விருப்பம், பேரனுக்கு ப்ரேக் டான்ஸ் விருப்பம். டீ.வி. யின் எந்தச் சானலைப் போட?) இன்றைய தலைமுறையினரும் 'கிழத்துக்கு வேறென்ன வேலை? புலம்பிக் கொண்டே இருக்கும்' என்ற அலட்சியப் போக்கை விட வேண்டும். அனுபவம் என்பது மிகப் பெரிய பாடம். அதைப் படித்துள்ள பெரியவர்களின் பேச்சில் பலசமயங்கள் நாம் அறியாத பல உண்மைகள் பொதிந்து இருக்கலாம். எனவே முதலில் நல்ல listeners ஆக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

3. குறைந்த பட்சம் ஐம்பது சதவீத மூத்த தலைமுறையினர் இப்படித்தான் இருக்கிறார்கள் என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இவர்கள் பெரும்பாலும் emotional ஆக இருப்பார்கள். எனவே இந்தப் பெரியவர்களை எளிதாகக் கவர ஒரு சின்ன 'க்ளு' தருகிறேன். இளைய தலைமுறையினர் இவர்களிடம் வெற்றி காண சிறுசிறு விஷயங்களில் விட்டுக் கொடுத்து இவர்களைத் திருப்திபடுத்துவதில் தவறில்லை. உதாரணமாக கல்யாணத்திற்கு நிறைய சரிகை போட்ட பட்டுப் புடவை உடுத்தி நிறைய நகைகளை அணிந்து செல்லுமாறு பாட்டி வற்புறுத்தலாம். விருப்பமில்லை என்றாலும் போனால் போகிறது என பேத்தி பாட்டிக்கு ஏத்த மாதிரி டிரஸ் செய்து கொண்டுவிடலாம். இவற்றிலேயே பெரும்பாலும் பெரியவர்களை இளையவர்கள் கவர்ந்து விட முடியும். இது போதுமே அவர்களுக்கு. பெரியவர்கள் உணர்ச்சி வசப்பட்டுக் கத்தும் போது அமைதியாகத் தெளிவாகப் பேசுதல், இளையவர்களின் உறுதியையும் மன வளர்ச்சியையும் காட்டும். அப்போது பெரியவர்களுக்கும் இளையவர்களின் மேல் மதிப்பு தானாகவே வரும்.

4. இதுவும் ஓரளவு உண்மைதான். Known devil is better than unknown angel' என்று பெரும்பாலான பெரியோர்கள் எண்ணுகிறார்கள். எனவே தாங்கள் நடந்து வந்த பாதை எப்படி இருந்தாலும் அது பழக்கமான பாதை ஆதலால் அதன் வழியே தன் மகனும் நடக்க வேண்டும் என விரும்புகிறார்கள், பாதை மாறினால் அவனுக்கு என்னென்ன புதிய அபாயங்கள் நேருமோ என்ற பாசத்தினால் எழுந்த பயத்தில் அவனையும் தனது நகலாக மாற்ற முயல்கிறார்கள். மேலும் தான் சாதிக்க இயலாத பல விஷயங்களை மகன் தனது பிரதிநிதியாக இருந்து சாதிக்க வேண்டியது அவனது கடமை என்ற உணர்வும் இவர்களுக்கு உள்ளது. எனவே சிறு பிராயத்திலேயே .வயதைக் காரணமாக்கி அவனது பேச்சுரிமையைப் பறித்து தங்களிஷ்டப்படி அவனை உருவாக்க முயல்கிறார்கள்.

எஸ்.ஜே. ஞான தேசிகன், (துணை இயக்குநர், சென்னைப் பல்கலைக் கழகம்):

1. ஒரு வயதானவர் அதே சமயத்தில் சாதாரண அறிவு படைத்த ஒருவர், தன்னை விட வயதில் சிறியவருடன் பழகும்போது, சிலவற்றை ஸ்தாபிக்க முயலுவார். தான் செயல்படுவது எப்போதுமே சரியான வழியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை, தன்னுடைய திறமையிலும் அறிவிலும் அளவுக்கு அதிகமான நம்பிக்கை, மூன்றாவதாக குழந்தைகளிடம் ஆழமான அன்பு என்று கூறலாம். இத்தகைய ஒரு அழுத்தமான மனப்போக்கும் செயல்பாடு முறையும் நாளடைவில் அதிகமாக வளருகிறது. நான் இதை அரக்க உருவெடுத்துவிட்ட தீமை என்று குறிப்பிடுவேன். ஏனென்றால் குடும்பத்தில் பிரச்னைகள் ஏற்படும் விஷயங்களில் இந்தப் பொய்மையான கண்ணோட்டமும் ஒரு நிலையான இடத்தைப் பெற்று விட்டது.

2. தத்துவமேதை ஸேன்ட்டயானா (Santayana) இந்த நூற்றாண்டு மக்களின் பொறுப்பற்ற வேகம், அவசரபுத்தி, சமூதாயக் குழப்பங்கள் இவைகளுக்குக் காரண கர்த்தாக்களாக இளம் தலைமுறையினரைக் குறிப்பிடுகிறார். சென்ற தலைமுறையினர் விவேகத்தின் அடிப்படையிலும் ஞானத்தின் அடிப்படையிலும் அமையப் பெற்ற கட்டுப்பாடுகள் அமைந்த வாழ்க்கையைத் தான் சுதந்திர வாழ்க்கை என்று கருதினர். சென்ற தலைமுறையினரிடம் இருந்த சில உயர்வான பண்புகள் இருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார்.

மூத்த தலைமுறையினர் இளைய தலைமுறையினரிடம் கண்ட அரிய பண்புகளையும், அதே போல் இளைய தலைமுறையினர் மூத்த தலைமுறையினரிடம் கண்ட அரிய பண்புகளையும் ஒன்று சேர்க்க வேண்டும். தலைமுறை இடைவெளி என்ற ஒன்று உண்மையிலேயே உருவாகியிருந்தால் அதன் குறுக்காக இருதரப்பினரும் சேர்ந்து இணைந்து ஓர் பாலம் அமைத்தால் சமுதாயம் முன்னேறும்.

3. தங்கள் பிள்ளைகளுக்காகத் தாங்களே



சிந்திப்பதுதான் சிறந்தது என்ற நம்பிக்கையுடன் செயல்படும் பெற்றோர்கள்தான் தங்கள் பிள்ளைகளின் சிந்திக்கும் ஆற்றலை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுகிறார்கள். பெற்றோர்களில் தந்தையோ தாயோ சுயமாகச் சிந்திக்கும் திறமையுடையவராகவும் பெரிய மேதையாகவும் இருந்தால் அவர்களுடைய மகனின் அல்லது மகளின் அறிவு வளர்ச்சி சரியான பாதையில் செயல்படும். ஆனால் சாதாரணமான அறிவு வளர்ச்சியும் சிந்திக்கும் திறனும் உடையவர்களாக பெற்றோர்கள் இருந்தால் அவர்களின் தவறான வழி காட்டுதல் காரணமாக பல பொய்யான சமுதாயக் கோட்பாடுகள் முன்பிருந்ததை விட மிகவும் ஆழமாக வேர்விட்டு அழிக்க முடியாத விஷ விருட்சமாக வளர்ந்து விடுகிறது.

இந்தச் சூழ்நிலையில்தான் இளைய தலைமுறையினர் மாபெரும் சாதனை ஒன்றை நிகழ்த்திக் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தங்களின் பெரியவர்களிடமிருந்து தேவையானவற்றைக் கற்று வேண்டாத பழக்க வழக்கங்களை விட்டு முன்னேற வேண்டியவர்களாகிறார்கள்.

4. உங்கள் கேள்வியைப் பெருமளவுக்கு ஏற்றுக் கொள்கிறேன். பெற்றோர்கள் சில வேளைகளில் காட்டுமிராண்டிக் காலத்துக் கருத்துக்களை வலுவாகக் 'குரங்குப்பிடி' பிடித்துக் கொண்டிருப்பார்கள். அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் பெரும்பாலான பெற்றோர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான். தங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் கருத்துக்களைத் தனிப்படுத்தி, அந்தக் களைகளை அழிக்கும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்பவர்கள் பெரிய மேதைகளாகவோ, அல்லது உயர் தரக் கல்வி பெற்றவர்களாகவோ இருப்பார்கள்.

பெயர் சொல்ல விரும்பாமல் பதில்களைச் சொன்ன நடுத்தர வயதுப் பெண்மணி:

1. 'தலைமுறை' என்று சொன்னவுடன் 'இடைவெளி' என்ற சொல்லை சேர்ப்பதிலே எனக்கு உடன்பாடில்லை. தலைமுறைகள் வழிவழியாக ஒரு தொடர் சங்கிலியாக வரும் போது எங்கே வந்தது இந்த இடைவெளி? எந்த ஒரு சமயத்திலும் தாய் தந்தை என்பவர்கள் தாத்தா பாட்டிக்கும் பேரன் பேத்திக்கும் ஒரு ஆரோக்கியமான, பலமான பாலமாக அமைந்துவிடுவதால் இடைவெளி என்ற வார்த்தைக்கே இடமில்லை. ஆரோக்கியமான மனங்களும், மனித நேயமும் உள்ள குடும்பங்களில் பரஸ்பர புரிந்து கொள்ளல் இருந்தால் இடைவெளி கண்டிப்பாக இருக்காது.

2. விட்டுக் கொடுப்பது, கருத்துக்களை பாரபட்சமின்றி பரிமாறிக் கொள்வது, முக்கியமாக, 'If I were in his shoes' என்று கூறுவார்களே, அதுபோல நான் அவரது நிலையில் இருந்தால் என் செயல்கள் எப்படியிருந்திருக்கும் என்று பொதுவான நோக்குடன் எண்ணிப் பார்ப்பது இவற்றின் மூலமே இருதலைமுறையினரும் இந்த இடைவெளியைத் தங்களுக்குள் குறைத் துக் கொள்ள முடியும். நம் வயதுக்கும் அனுபவத்துக்கும் மதிப்பேயில்லையே என்று புலம்பாமல் பெரியவர்களும், இவர்கள் சொல்வதெல்லாம் நமது இப்போதைய trend க்கு ஒத்துவராத விஷயங்கள் என்று ஒட்டுமொத்தமாக விட்டுப் பெரியவர்களின் கருத்துக்களை ஒதுக்கித் தள்ளாமல் இளைய சமுதாயமும் வாழப் பழகிக் கொண்டால் பிரச்னைகள் வராது.

3. இங்கு இப்போது மேல்நாடுகளைப் போல இளம் வயதினருக்கு முழுசுதந்திரமும் கொடுத்து விடாமலும், நம் முந்தைய நாட்களைப் போல் ஒரேயடியாகக் கட்டுப்படுத்தாமலும் ஒருவித இரண்டுங்கெட்டான் நிலைதான் இருக்கிறதென்று நான் நினைக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை இளம் வயதினருக்கு ஓரளவு சுதந்திரமாகச் செயல்படும் வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் வாய்ப்பு என்பது இன்றைய இளைஞர்களுக்கு அதிகம். இதனாலேயே அவர்களிடம் சின்ன வயதிலேயே சுயமாக சிந்திக்கும் ஆற்றலும், பகுத்தறியும் தன்மையும், உலகாயதமான அறிவும் காணப்படுகிறது. பத்து இருபது வருடங்களுக்கு முன்னால் மாலை பள்ளியிலிருந்து வீடு திரும்பினால் விளையாட்டு, இல்லையென்றால் ஹோம்வொர்க் படிப்பு என்பதோடு சரி. ஆனால் இன்று, ஸ்கூல் முடிந்தவுடன் கம்ப்யூட்டர், பாட்டு, நடனம் இல்லையென்றால் ஒரு விளையாட்டுப் பயிற்சி என்று நிறைய இருக்கிறது.

இளையவர்களின் பரந்த அறிவைப் புரிந்து கொண்டு அவர்களின் திறமையில் நம்பிக்கை வைத்துப் பெரியவர்கள் இளைய தலைமுறைக்கு அன்போடு ஆதரவளிக்க வேண்டும் தவறு என்றால் அறிவார்ந்த விவாதம் வேண்டும்.



4. இல்லை நான் இதற்கு கண்டிப்பாக ஒத்துக் கொள்ள மாட்டேன். எந்த வீட்டிலும் பெற்றவர்கள் தங்கள் குழந்தைகளுக்கெதிரே தவறாகச் செயல்பட மாட்டார்கள். பெரும்பாலான பெற்றோர்கள் எங்கள் வாழ்க்கைதான் இப்படியாகிவிட்டது,'நீயாவது நல்ல வழியில் சம்பாதித்து நல்ல 'விதமாக வாழ்' என்றுதான் கூறுவார்கள். முந்தைய நாட்கள் போல் இல்லாமல் இப்போது நிறைய குடும்பங்களில் இரவு ஒருமுறையாவது எல்லோரும் சேர்ந்து அமர்ந்து சாப்பிடும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. அப்போது ஏற்படும் கருத்துப் பரிமாற்றத்தில் எல்லா விஷயங்களும் விவாதிக்கப்பட்டு சிறியவர்கள் கூறும் கருத்துகள் சிறப்பாக இருக்குமெனில் (நிறைய சமயங்களில் அவர்கள் எடுக்கும் முடிவும், சொல்லும் விஷயங்களும் நாம் நினைத்துப் பார்க்காத அளவு matured ஆக இருக்கும்.) பாராட்டுதல்களுடன் 'ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

நல்ல விஷயம், சரியான அணுகுமுறை என்று தோன்றினால் யாரிடமிருந்து வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் பெரியவர்களுக்கு வேண்டும். பெரியவர்கள் சொல்வதெல்லாமே தப்பு என நினைக்காமல், அவர்களின் அனுபவம், நிதானம், பக்குவம் இவற்றினால் அவர்கள் வழிகாட்டுவதை சிறியவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. தேவநாதன் (குடும்பத் தலைவர்.) :

1. 'தலைமுறை இடைவெளி' இருப்பது உண்மைதான். புதியவர்கள் 'புதுவெள்ளம், பழைய வெள்ளத்தை அடித்துச் செல்லுவது போல' மக்கள் எதிலும் புதுமைதானே விரும்புவது இயல்பு. உணவு, உடை இருப்பிடம் இவற்றில் மாற்றம் விரும்புகின்றனர். இது போல வாழ்க்கை முறையிலும் ஒரு மாற்றம் விரும்புகின்றனர். எனவே இடைவெளி இருப்பது இயல்பு.

2. இந்த நிலையில் மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள் காலத்திற்கேற்ப செயல்பட தெரிந்து கொள்ள வேண்டும். இந்த மாற்றம் அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்டுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டால் இருவருக்கும் இடையில் பிரச்னைகள் தோன்றாது. அந்தக் காலத்தில் 10 மைல் தூரம் நடந்து சென்றவர் இன்றும் அந்தக் காலத்தில் நடந்தேனே... நீ ஒரு எட்டு வைக்கக் கூட கஷ்டப்படறே....' என்று பேசுவது தவறு. பஸ் அல்லது மின்சார ரயில் வசதி அன்று இல்லை. இப்படி எத்தனையோ விஷயங்களில் ஒருவருக்கொருவர் தகராறு வருகிறது.

அதேசமயம் மூத்த தலைமுறையினர் இளைய தலைமுறைகளை இந்த அவசர யுகத்தில் நிதானமாகச் செயல்பட தங்கள் அனுபவத்தின் மூலம் பக்குவமாக வழிகாட்ட வேண்டும். குற்றம் சொல்வதைவிட வழிகாட்டுவதையே இன்றைய இளம் தலைமுறையினர் விரும்புகின்றனர்.

3. நம் பாட்டி தாத்தா காலத்தில் கை கட்டி வாய்பொத்தி வாழ்ந்தார்கள். நான் சொல்கிறேன் - நீ கேள். ஏன்? எப்படி? எதற்கு? என்ற கேள்விக்கே இடமில்லை. ஆனால் இன்று 4-5 வயது பிள்ளைகள் பொது அறிவியல் வளர்ந்து விட்ட காலம். இதற்குப் பல காரணங்கள், டி.வி. வீட்டுக்குள்ளேயே வந்து எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கின்றது. அவர்களும் நம்மை கேள்வி மேல் கேள்விகள் கேட்கிறார்கள். இந்நிலையில் அவர்கள் கேட்கும் விடைகளுக்கு, மன நிறைவு ஏற்படும் வகையில் விளக்கங்கள் கொடுத்தால் இளந்தலைமுறையினர் ஏற்பார்கள். கண்மூடித்தனமாக பதிலளித்தால் மதிப்பிழக்க நேரிடுவதை கண்கூடாகக் காண்கிறோம்.

4. தங்கள் குழந்தைகளை வளர்க்கும் போது பெற்றோர்கள் தாம் பின் பற்றும் பழக்க வழக்கங்களை அவர்களும் பின்பற்ற வேண்டும் என்று கருதுவதில் தவறு ஒன்றுமே இல்லை. ஆனால் அவை இக்காலத்தில் அவர்களால் பின்பற்ற இயலுமா என்பதை நன்கு யோசித்துச் செயல்பட வேண்டும். திறந்த மனத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பெரியவர்கள் நிற்கும் போது சிறியவர்கள் உட்காரக் கூடாது என்ற முறைக்கூட எனக்குத் தவறாகப் படவில்லை. அலுவலகத்தில் பெரிய அதிகாரி வரும் போது சிறிய அலுவலர் எழுந்து நிற்பது இல்லையா? மனதில் ஒரு மதிப்பு, மரியாதை. அதில் என்ன தவறு?

இளந்தலைமுறையினரும் மனம் திறந்து பேசி கேள்விகள் கேட்க வாய்ப்பு அளிக்க வேண்டும்.

இளந்தலைமுறையினருக்குப் பெரியவர்கள் சிறந்த வழிகாட்டிகளாக இருந்தால் சமுதாயத்தில் அமைதி எப்போதும் இருக்கும். One way traffic ஆக இருந்து விடக்கூடாது. எதிர் நீச்சல் போடக் கூடாது.

தொகுப்பு : **மோகன்**


இடைவெளி

இளைஞர் பற்றி


சமீப காலமாய் தலைமுறை இடைவெளி பற்றி நிறையவே பேசுகிறோம். மாமியார் மருமகள் பிரச்னை போல முதியோர், இளையோர் தலைமுறை பிரச்னையும் இருந்து வருகின்றது. சில வருடங்களுக்கு முன் ஒரு பத்திரிகையில் ஒரு கட்டுரை ஒன்று வந்தது. அதில், "இளைஞர்கள் முதியோரை மரியாதை குறைவாக எதிர்த்துப் பேசுகின்றனர். தான்தோன்றித்தனமாக நடக்கின்றனர். பெரியவர்களை மதிப்பதில்லை" என்று இருந்தது. எழுதியவர் பெயரைப் புரட்டிப் பார்த்தால் அறிஞர் சாக்ரடீஸ் சொன்ன கருத்து அது. அதிர்ச்சியாக இருந்தது. அட! பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே "இது ஒரு தொடர்கதை"யாகத்தான் இருந்திருக்கிறது! சரி, இந்தத் "தலைமுறை இடைவெளி" பற்றி ஒருவரைப் பற்றி மற்றவர் என்ன சொல்கிறார்கள்?



ருக்மணி







முதிய தலைமுறை :

திருமதி ருக்மணி அம்மாள் :

இவருக்கு வயது 79. ஆறு பிள்ளைகள், மூன்று பெண்கள், பதினாறு பேரன் பேத்திகளுக்குச் சொந்தமானவர். வேலைக்குப் போகாத, போகும் மருமகள்களும் உண்டு. இந்த வயதிலும் மருமகளுக்கு உதவி செய்து கொண்டு, குடும்பப் பொறுப்போடு இருக்கும் தாய். மாமியார்களை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டு நிம்மதியாக சிலர் இருக்க நினைக்கும் இன்றைய கால கட்டத்தில் ஆறு மருமகள்களும் மாமியாரைத் தன்னுடன் வந்து இருக்கும்படி கேட்டுக் கொள்ளும் பாக்கியம் பெற்றவர்.

"எங்கள் காலத்திலும் சரி, இன்றும் சரி அனுசரித்துப் போகும் இல்லங்களில் பிரச்னை குறைவு. எங்கள் வளர்ப்பு அன்றைய சூழ்நிலையில் மாமியார், மாமனாருக்கு மரியாதை தந்து, வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்து விருந்தினர்களை உபசரித்து இப்படி முழு நாளும் ஈடுபாட்டுடன் செய்து வந்தோம். கடமை என நம்பினோம். குடும்பப் பொறுப்பு பெரியவர்களிடம் இருந்ததால் கவலை இல்லாமல் இருப்போம். குழந்தைகளைக் குளிப்பாட்டி, உணவளித்து, உடம்புக்கு வந்தால் கை வைத்தியம் செய்து, குடும்பத்துக்குத் தூண் போல பெரியவர்கள் இருந்தது சௌகரியமாகத்தான் இருந்தது. எனக்குப் பன்னிரண்டு குழந்தைகள். எல்லாமே வீட்டில்தான் பிறந்தன. 'செக் அப்' என்றால் என்ன என்பதே தெரியாது. கூட்டுக் குடும்பமாக, பரம்பரையாகவே இருந்து வந்ததால் அந்தப் பழக்கம் இரத்தத்தில் ஊறி விட்டது. இன்று பிள்ளைகள் வேலை காரணமாகத் தனித் தனியாக இருந்தாலும் என்னிடம் மிகவும் பாசமாக, மரியாதையாக இருந்து கொண்டு, அவர்களுக்குள் ஒற்றுமையாக இருப்பதும் அதன் காரணமாகத்தான். நாம் பெரியவர்களாக இருந்து



வழிகாட்டியதைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள். பிரச்னைகள் 'வீட்டுக்கு வீடு வாசற்படியாக' உண்டு என்றாலும், விலகிச் செல்லும்படியான அளவு கருத்து வேறுபாடுகள் வராது. வரவும் கூடாது.

வேலைக்குச் செல்லும் மருமகள் இருக்கிறாள். காலை எழுந்து அலுவலகம் செல்லும் வரை முடிந்த வேலைகளை செய்து விட்டுப் போகிறாள். பிறகு தொடர்ந்து நான் செய்கிறேன். பெரிய குடும்பம் என்பதால் பெண், பிள்ளைகள், பேரன் பேத்திகள், உறவினர் வருகை இருக்கும். ஒருவருக்கொருவர் அட்ஜஸ்ட் செய்து கொண்டு போவதால் பிரச்னை இல்லை. இருந்தாலும் பிளவுபடும் அளவும் இல்லை. இதுபோல, குடும்பத்தில் பாசமும், ஒற்றுமையும் இல்லாததால்தான் ஹோமில் சேர்க்கும் அளவு போய் விடுகிறது.

பெரியவர்களும் நம் அதிகாரம் குறைந்து விட்டதே, கண்டிக்க முடியவில்லையே, மருமகள் பாசத்தைப் பங்குபோட்டுக் கொண்டு விட்டாளே என்று நினைத்து மருகி சிறு பிரச்னையைக் கூட பூதாகாரமாக்கி விடுகிறார்கள். பாவம்! என்று நினைத்து மாமியாரை ஓய்வெடுக்கச் சொன்னால், என்னை சமையலறையிலேயே நுழைய விடுவதில்லை என்று குற்றச்சாட்டு. நல்லது நினைத்தும் புரிந்து கொள்வதில்லை. மருமகளுக்குத் தெரியாமல் பெண்களுக்கு உதவி செய்பவர்களும் உண்டு. பெண் வயிற்றுக் குழந்தைகள் மீது அதீத பாசம் காட்டுவதால் மருமகளுக்குக் கோபம் வரும். மேலும் என்னைப் பொறுத்தவரை என் உணர்வுகளை வெளிக்காட்ட மாட்டேன். எனக்குப் பிடிக்காத செயலை செய்தாலும் கேட்க மாட்டேன். அந்த இடத்தில் அவ்வளவாக ஒட்டிக் கொள்வதில்லை. வெளியே சொல்லாததால் மற்றவர்களுக்கும் எனக்கு பிடிக்குமா? பிடிக்காதா? என்பதே தெரியாது.

மருமகள் அலுவலகத்தில் வேலை அதிகமாக இருந்தால் அலுப்பாக வரலாம். அதற்காக நான் ஒன்றும் சொல்ல மாட்டேன். வந்தவுடன் வேலை செய்யவில்லையே என்று நினைக்காமல் நாமே செய்யும் போது அவர்களே உணருவார்கள். பிள்ளைகள் ஒற்றுமையாக இருப்பதால் பெண்களுக்கு சீர், பொது விசேஷங்களுக்கும் பகிர்ந்து செய்வதால் எனக்குப் பிரச்னையில்லை.

அதே போல குழந்தைகளைப் பொறுத்த வரையும் கூட நல்ல குழந்தைகள்தான். ஆனால் இப்போதுள்ள நாகரீக மோகம் காரணமாக அது போல் நடக்க விரும்பும் குழந்தைகளை மாற்ற முடியாது. ஆனால் பாட்டிக்கு மரியாதை தந்து அம்மா சொல்படி பண்டிகை, கல்யாண நாட்களில் பாவாடை, தாவணி அணிகிறார்கள். தவறான பாதையில் போவதில்லை. அவர்களை, அவர்களது நண்பர்களை கவனித்துக் கொண்டிருப்பதால் பெரிதாகத் தவறு நேர சந்தர்ப்பமும் இல்லை. மனம் விட்டுப் பேசுவதால் பிரச்னைகள் குறைகின்றது. எந்த விஷயத்தையும் பேசி முடித்ததும் மறந்து விட்டு விட வேண்டும். அதுதான் இன்று வரை எங்கள் குடும்ப வழக்கம்.

கடைசியாக, குடும்ப ஒற்றுமைக்குக் காரணம் பிள்ளைகள்தான். பிள்ளைகள் நல்லபடியாக அமைந்து விட்டால் மருமகள்களும் அவர்கள் சொல்படி மரியாதை தருவார்கள். பிள்ளைகளே பெற்றோரை மதிக்காவிட்டால் மருமகளிடம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

என் உறவினர் நாலைந்து மாதம் உடம்பு சரியில்லாமல் இருந்து பிறகு ஒரு வருடம் 'கோமா' நிலையில் இருந்தார். அவரது இரண்டு மகன்களும் வெளியூரில் இருந்தனர். இருந்தும் முறை போட்டு ஆளுக்கு இரண்டு மாதம் சென்னை வந்து தங்கி மாமியாருக்குப் பணிவிடை செய்தனர். இன்னொரு நண்பர் வீட்டில் தாயார் கீழே விழுந்த காரணத்தால் பதின்மூன்று வருடம் படுத்த படுக்கையாக இருந்தார். ஒரே மகன். அந்த மருமகளும் பணிவிடை செய்தாள் அலுக்காமல். இதற்கெல்லாம் காரணம் பிள்ளைகளிடம் இருந்த பாசமும், கடமை உணர்வும் சரியானபடி பரம்பரையாக ஊட்டப்பட்டதால்தானே?

வயதானவர்களுக்கும், இளம் தலைமுறையினர்க்கும் பாலமாக இருக்கும் அடுத்த தலைமுறை திருமதி ராஜலக்ஷ்மி மகாலிங்கம் :

மத்திய அரசுப் பணியில் இருந்தவர் மாமியார், மருமகன் இருவருக்கும் இடையே பாலமாக இருந்தார். வீட்டின் நலனுக்காக மாமியாரைக் கவனிப்பதற்காக வாலண்டரி ரிடையர்மெண்ட் வாங்கிக் கொண்டவர்.

“சமீபத்தில் எண்பது வயது வரை இருந்த மாமியார் தவறி விட்டார். மணமாகியதும் வேலைக்குச் சென்று கொண்டிருந்த சமயம் வீட்டு வேலைகளை முடித்து விட்டு, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி விட்டு, வேலைக்குச் சென்று திரும்பியதும் மாலை டிபன், இரவு சாப்பாடு செய்து, பாடங்களை சொல்லிக் கொடுத்து எல்லாவற்றையும் கவனித்தேன். நான்கு பெண்களுக்கும் இரண்டு



ஆம். இனிமையான இல்லறத்திற்கு
அன்பு, அரவணைப்பு, பரஸ்பரம்
புரிந்துகொள்ளுதல்-இப்படி
உளம்சார்ந்த விஷயங்கள்
மட்டும்தானா? உணவுசார்ந்த,
அம்சங்களும் உள்ளனவே!

SMB ரவா, மைதா, கோதுமை
மாவுகளில் பூரி, கேக், பப்ஸ்,
உப்புமா, பிரெட், ரவா இட்லி, ரவா
லட்டு... என்று விதவிதமாகச்
சமைத்திடுங்கள். இனிய
குடும்பவாழ்வுக்கு சுவையான
அடித்தளம் அமைத்திடுங்கள்.

சுவையான இல்லறத்திற்கு இவையும் வேண்டும்!

இப்பொழுது
பரிசோதிக்கப்பட்டு
நிருபணமான கூடுதல்
தரத்துடன் கிடைக்கிறது.

SMB மைதா, ரவை, கோதுமை
மாவுகள்
1 கிலோ, ½ கிலோ பாலிதீன்
பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.

SMB



**சக்தி முருகன் ரோலர் பிளவர்
மில்ஸ் (பி) லிட்**

தபால் பெட்டி எண். 15, அவினாசி - 638 654,
கோயமுத்தூர் மாவட்டம். போன்: 2991, 2992

தரமென்றால் இதுதான் தரம். சுவையென்றால் இதுதான் சுவை

SASI / 509 / 94



பிள்ளைகளுக்கும் மண மாகி விட்டது. இன்னும் ஒரு மகன் திருமணமாகா மல் இருக்கிறான். என் மரு மகள் என்னை விட சீக் கிரம் வேலைக்குப் போக வேண்டியிருந்தது. அவளுக் கும் சேர்த்துச் செய்ய வேண்டும். எங்கள் காலத் தில் பெரியவர்கள் சொல்லிக் கொடுத்த படி மாமியாருக்கும் பணிவிடை செய்து விட்டுத் தான் மீதி வேலை. அதைக் கடமை யாக மட்டுமல்ல விரும்பி ஈடுபாட்டுடன் செய் தோம்.

இப்போதுள்ள உணவு முறை, சூழ்நிலை யில் பெண்களுக்கு பலம், தெம்பு இல்லை. ஆரோக்கியம் குறைவு. அதிகப்படி வேலை பழகவும் இல்லை. திருமணமாகுமுன் நிறைய படிப்பு. அதனால் தாயாரே வேலை செய்து விடுவதால் பழக்கம் இல்லை. அதனால் கஷ் டப்படுகிறார்கள்.

வீட்டில் உள்ள பெரியோரிடம் கலந்து பிரச்னைகளைத் தீர்க்கலாம். அட்லீஸ்ட் ஆலோசனையாவது கேட்கலாம். அந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்பது கூட இல்லை. அதுவே அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். சிறு வேலைகள் செய்ய அனுமதிக்கலாம். குழந்தை களுக்குக் கதைகள், பாடங்கள் சொல்லித் தரச் செய்யலாம். ஹோமில் சேர்த்தால் இரு பக்கமும் மனவேதனைதான். நிம்மதி போய் விடும். குற்றமனப்பான்மை ஏற்படும். மேலும் இன்றைய குழந்தைகள் முதியோரிடம் அன்பு செலுத்துவதால் ஹோமில் விட இஷ்டப்படுவ தில்லை. தாய் கூட்டுக் குடும்பத்தில் இருந்திருந் தால் மகளும் அதையேதான் விரும்புவாள். வளர்ப்பும், பழக்கமும் எங்கும் போய் விடாது.

வெளியே செல்லும் போது மருமகள் சொல்லி விட்டுச் செல்லலாம். தடுக்கப் போவ தில்லை. இன்றைய விலைவாசியில் சாப் பாடோ, டிபனோ செய்து வீணாவதைத் தடுக்கலாமே! மனம் விட்டுப் பேச வேண்டும். மனதில் நல்ல எண்ணம் இருந்தாலும் வெளிக் காட்டாத காரணத்தால் மனத்தாங்கல் வரு வதும் உண்டு. அதற்கு இடம் கொடுக்கக் கூடாது.

தனியாகக் குடித்தனம் செய்வது இன் றைக்கு நல்லது. நானும் என் பிள்ளைகளைத் தனியாகத் தான் வைத் துள்ளேன். பண்டிகை, விசேஷ தினங்களில் ஒன்றாய் சேர்ந்து சந் தோஷமாக இருக்கலாம். பெற்றோர் உடல் நலம் பாதிக்கப்பட்டால் மட்டுமே பிள்ளை யிடம் இருக்கலாம். அதற்குள் அவர்களும் இளமை கால, தனிக்குடித்தன சுகங்களை அனுபவித்து, உலக அனுபவமும் பெற்று விடுவதால் இப்போது பெற்றோர் வந்தால் (வேறுவழியின்றி) சுமையாக நினைக்க மாட் டார்கள்.

இன்றைய நடுத்தர வயதினராகிய நாங்கள் நாளைய முதியோர். முதி யோர்கள் என் பவர்கள் (என்சைக்கிளோபேடியா) கலைக் களஞ்சியம் போன்றவர்கள். அந்த அனுபவங் களை நாம் இழக்கக் கூடாது. இன்று குழந்தை கள் பாசத்தை விரும்புவதால் நம்மை அதா வது, நாளைய முதியோரைப் பிரிய மாட்டார் கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. அதனால் தலைமுறை இடை வெளி என்பது பயப்பட வேண்டிய பிரச்னை அல்ல. அதை நம் அணுகுமுறையால் மாற்ற முடியும் என்பதே என் கருத்து."

இளையவர்கள் :


வீ. கல்பனா :

எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் பி.எஸ்ஸி., கணிதம் இறுதி ஆண்டு படிப்பவர். வயலின் மேதை திரு. எம். சந்திரசேகர் அவர்களது மாணவி.

"பாட்டி என்ற முதல் தலைமுறையினரும் பேத்தி என்ற மூன்றாம் தலைமுறையினரும் புரிந்து கொண்டுள்ள அளவு அம்மா என்ற இரண்டாம் தலைமுறையினர் புரிந்து கொள்ளவில்லையோ என்று தோன்றுகிறது. மிகவும் பழமையில் ஊறிய 'சாஸ்திரிகள்' குடும்பத்தில் பிறந்த என் தந்தையும், அவரது தாயும் (பாட்டி இப்போது இல்லை) என்னை மிகவும் புரிந்து அனுசரித்துப் போகும் அளவு மற்ற வீடுகளில் இல்லை என்பது கண்கூடு. பெற்றோர் இன்னும் மாற வேண்டும். நாங்கள் எவ்வளவு கண்டிப்பாக வளர்க்கப்பட்டோம்.

வாழைப் பூவை அரியும் போது உள் பூவை மட்டும் எடுத்து பொடியாய் அரிந்து வதக்கி வைத் துக் கொண்டு வறுத்த வற்றல் மிளகாய், உளுத்தம் பருப்பு இவற்றோடு சேர்த்துத் துவையலாக அரைத் துச் சாப்பிட சுவையாக இருக்கும். உடம் பிற்கு நல்லதும் கூட.

- இந்திரா



நீங்கள் ஏன் அடங்குவதில்லை? என்று திட்டுகிறார்கள். வயசானவர்களை வேலைக்குப் போகிறோம் நேரமில்லை என்ற காரணத்தால் ஹோமில் சேர்க்கிறார்கள். இது தவறு.

பள்ளியிலிருந்து வந்தால் வீட்டில் தாத்தா, பாட்டி இருந்தால் குழந்தையின், முதியோரின் தனிமை தவிர்க்கப்படுகிறது. பணத்துக்காக அதாவது வறுமைக்காக வேலைக்குப் போகிறவர்கள் சரி! ஆடம்பரத்துக்காக வேலைக்குச் சென்று குழந்தைகளின் அன்பை இழக்கிறார்களோ? என்றும் தோன்றுகிறது. காப்பகத்தில் குழந்தைகளை விட்டாலும் வீட்டுக்கு வந்ததும் தனிமைதான். முதியோர் இருந்தால் மரபுகள் காக்கப்படும். எவ்வளவுதான் இன்று வாழ்க்கை முறை மாறியிருந்தாலும் இரவு 12 மணிக்கு ஆண் நண்பருடன் வருகிறோமா? இல்லையே! இன்றைய பெண்களாகிய நாங்கள் மரபு காத்து வாழவே ஆசைப்படுகிறோம்.

இப்போது கல்லூரிப் பெண்களாகிய நாங்கள் வாழ்க்கையை கவனித்துப் புரிந்து கொள்கிறோம். தன் அம்மா குழந்தையைப் பராமரிக்க முடியாமல் பந்தாடி அல்லல் பட்டது போலத் தன் குழந்தையை வளர்க்க, பாசத்தை இழக்கத் தயாராக இல்லை. ஏன்? எனக்குக்கூட கூட்டுக் குடும்பத்தில் அல்லது அட்லீஸ்ட் மாமியார் மாமனார் உள்ள இடமாகத்தான் பார்த்துத் திருமணம் செய்து கொள்ள ஆசை. திட்டமும் கூட. இளையவர்களாகிய நமக்கு வழிகாட்ட, உதவ, நம் தவறுகளைத் திருத்திக் கொள்ள கண்டிப்பாய் உதவியாகத்தான் இருக்கும்.

இரண்டாம் தலைமுறையினர் அதிகம் வெளியே போனதில்லை. அதனால் பிரச்னைகள் ஏற்பட்டால் தீர்த்துக் கொள்ள முடியாது. நாங்கள் அப்படி அல்ல. கோஎஜுகேஷனில் படிக்கிறோம். ஸ்கூட்டர் ஓட்டுகிறோம். வெளியில் செல்கிறோம். அதனால் எங்களால் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும். நம்பிக்கை உள்ளது.

பாக்கெட் மணி கேட்கிறோம் என்கிறார்கள். குழந்தைகள் தேவையறிந்து தரலாமே! நண்பர்களைப் பொறுத்துதான் கெட்ட பழக்கங்கள் வருகின்றது. கண்காணித்துப் பொறுப்புடன் இருக்கும் பெற்றோர்கள் அளவறிந்து தருவதில் தவறல்ல.



முதல் தலைமுறையினரிடமிருந்து மூன்றாம் தலைமுறையினரைப் பிரித்து வளர்ப்பதால் குழந்தைகள் தனிமையால் பாதிக்கப்பட்டு முரட்டுத்தனம், பிடிவாதத்துடன் இருப்பார்கள். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வரவே வராது. அதனால் பெரியவர்கள் கூட இருக்க வேண்டும்.

நான் கர்நாடக இசைத் துறையில் இருப்பதால் அதில் கூட உதாரணம் சொல்ல முடியும். கர்நாடக சங்கீதம் பெரும்பாலும் டீன் ஏஜ் பருவத்தினர்கள் கேட்பதால் ஒரு மறுமலர்ச்சியே ஏற்பட்டுள்ளது எனலாம். இசை விழா சமயங்களில் முதல் நாள் மிடி, சூரிதாரில் அமர்ந்து கச்சேரி கேட்கும் கலைஞர்கள் மறுநாள் மேடையில் நமது கலாசார உடையில் அமர்ந்து பாடுவதை, வாசிப்பதையே வழக்கமாக்கியுள்ளனர். இதைவிட மரபுகளை நாங்கள் மதிப்பதற்கு வேறு சான்று எதுவும் தேவையில்லை. தலைமுறை இடைவெளி பெரிதுபடுத்தப்படுகிறதேயொழிய உண்மையில் இல்லை என்பதே என் கருத்து.

ஜே. பிரியா :


வடபழனி கார்த்திகேயன் மெட்ரிகுலேஷன் பள்ளியின் +1 மாணவி. தாத்தா மட்டும் உண்டு. ஒரே மகள் இவருக்குத் தந்தை, வேலைக்குச் செல்லும் தாய். இவரது அனுபவம் -

“பெற்றோர்கள் எங்களை மிகவும் கண்டித்துத்தான் வளர்க்கிறார்கள். படிக்க ஒரு பெண் வீட்டுக்குச் சென்றால் அவள் வரட்டுமே இங்கு என்பார்கள்! அதே போல அவர்கள் வீட்டிலும் சொன்னால் என்ன செய்வது? முதலில் எங்களை நம்ப வேண்டும். எங்கள்

நாம் எவ்வளவுதான் கவனமாக இருந்து கடையில் பஞ்சாப் கோதுமை வாங்கி மிஷினில் கொடுத்து அரைத்துச் சலித்த மாவைக் கொண்டு பூரி செய்தாலும் அது மிகவும் முறுக்கிக் கொண்டு சிறிது நேரத்தில் கொறிக்கும் சிப்ஸ் போல் ஆகி விடுகிறது. அதைப் போக்க ஒரு சுலபமான வழி -

பூரிக்கு மாவு பிசையும் பொழுது அதனுடன் சிறிதளவு புளித்த தயிர், கொஞ்சம் பால் மற்றும் எண்ணெய் விட்டுப் பிசைந்து பாருங்கள். பூரி பஞ்சு போன்று மெதுவாகவும், தனியாகவே சாப்பிடும் சுவையோடு கூடியதாகவும் இருக்கும்.

- கீதா அசோக்குமார்





வயதுப் பெண்கள் கூடிப் பேசினால் என்ன பேச்சு? என்பார்கள்.

பள்ளிக்குச் செல்லும் வகையில் வித விதமான வளையல், காதணிகள் இருக்கும். தோழிகளுக்குப் பிறந்த நாள் பரிசு தர வேண்டும். இதற்கெல் லாம் பாக்கெட் மணி தேவைதானே? பெற் றோர் காலத்தில் இது போல இல்லை என்ப தால் எங்களுக்கு மறுக்கக் கூடாது என்பதே என் எண்ணம். என் தாய் எனக்கு மிகவும் பரிந்துரைத்து வாதிட்டு உதவுவார். தந்தை நல்லதுக்குத்தான் சொல்வார் என்று தெரிந்து நான் அதன்படி நடக்கிறேன். ஆனால் தோழிகள் சிலர் அவர்கள் வீடு பற்றிச் சொல்வது எனக்கு வேதனை தரும்.

உடைகள் விஷயத்திலும் பனியன், மிடி, ஸ்கர்ட் போட்டால் பாட்டிகள் திட்டுவது வழக்கம். தாவணி போட்டால்தான் அங்கும், இங்கும் அரைகுறையாகத் தெரிகிறது. கோ-எஜுகேஷனில் படிக்கும் பையன் வீட்டுக்கு வந்து நோட்ஸ் கேட்டால் சில பெற்றோர் தவறாக நினைக்கிறார்கள். அதனால் வெளியே எங்கேனும் நின்று பேச வேண்டியிருக்கிறது. அதைப் பார்த்து விட்டு யாராவது வத்தி வைத்தால் பெற்றோர் ஏதேதோ கற்பனை செய்து கொண்டு திட்டுவார்கள்.

எங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதும் பிடிக்கவில்லை. 'அந்தப் பெண்ணைப் பார்? படிப்பு, பாட்டு, விளையாட்டு என்று எல்லா வற்றிலும் முதல். நீயும் இருக்கியே! அடுத்த ஜன்மத்திலாவது அவள் எனக்கு மகளாகப் பிறக்க வேண்டும்' என்று சிலர் திட்டும் போது வெறுப்பு அந்தப் பெண் மீது திரும்புகிறது. நகமும், சதையுமாக இருந்த நட்பு இங்கு அவளை எதிரியாக நினைக்கத் தோன்றுகிறது. அதற்குக் காரணமும் பெற்றோர்களே!

நாங்கள் பொறுப்பை உணர்ந்துதான் இருக்கிறோம். சாரதா வித்யாலயாவில் படிக்கும் தோழி ஜெயஸ்ரீயின் தாயாருக்கு கடந்த நான்கு வருடங்களாக (அவள் ஏழாவது படிக்கும் சமயம்) உடம்பு சரியில்லை. இரண்டு கிட்னியும் பழுதாகி டயலைசிஸ் செய்து கொள்கிறார். இன்று வரை காலை எழுந்து சமைத்து, தன் தம்பியை தாய் போலப் பராமரித்து, மருத்துவமனையிலிருந்து தந்தை வந்ததும் காரியர் தந்து அம்மாவுக்கு அனுப்பி மாலை வந்து இரவு சமையல் முடித்து இரண்டு நாட்களுக்கொரு முறை துணி துவைத்து, இரண்டு தெரு தள்ளிச் சென்று ஐந்து குடம் குடிநீர் பிடித்து அலுக்காமல் செய்து வரும் அவளே ஒரு உதாரணம். அவளுக்கு ஆறுதல் சொல்லுவது தவிர வேறு என்ன செய்வது?


ஒருநாள் எனக்குத் தெரிந்த பையன் அட்ரஸ் வாங்க வந்தான். வீட்டில் யாரு மில்லை. கதவை சாத்திக் கொண்டு ஐந்து நிமிடம் பேசியிருப்போம். என் தாத்தா வந்து விட்டார். இருவரையும் பார்த்தார். அவரது ரூமுக்குப் போய் விட்டார். இன்று வரை என்னைக் கேட்கவில்லை. காரணம் என் மீதுள்ள நம்பிக்கை. பெருமையாக இருந்தது. என் வீட்டினர் போல நம்பிக்கை வைத்தால் பல பெண்களுக்குப் பிரச்னை இருக்காது. பெரியோர்தான் சிறியவர்கள் தவறு செய்யக் காரணமாகிறார்கள்.

எங்களை இன்னும் சிறு குழந்தைகளாக நினைத்து தொட்டதற்கெல்லாம் கண்டிக்காமல், அளவான சுதந்திரம் தந்து, நம்பிக்கை வைத்தாலே இந்தத் தலைமுறை இடைவெளி குறைந்து விடும்.

- பானுமதி ராமச்சந்திரன்

காய்கறிகள் கொஞ்சம் கொஞ்சமாய் மீந்து விட்டதா? எல்லாவற்றையும் பொடிப் பொடியாக நறுக்கி வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு வதக்கி, கொஞ்சம் தண்ணீர் விட்டு உப்புப் போட்டு வேகவிடுங்கள். உளுத்தம் பருப்பு 2 ஸ்பூன், மிளகாய் வற்றல் 4, துளி பெருங்காயம் எண்ணெய் விட்டு வறுத்துக் கொண்டு, அரை மூடி தேங்காய், கொஞ்சம் புளி இவற்றுடன் மிக்ஸியில் எல்லா வற்றையயும் போட்டு நைசாக அரைத்து விடுங்கள். பேஷான, சுவையான வெஜிடபிள் துவையல் ரெடி. இதைச் சாதத்திலும் போட்டுப் பிசைந்து சாப்பிடலாம். தோசை, இட்லி சப்பாத்திக்கும் தொட்டுக் கொள்ள ருசியோ ருசி!

- ஆர். தங்கம்





எமது வாடிக்கையாளர்களை குழந்தையைப் போன்று கவனித்தால், அவர்கள் அந்த பழைய உணவுகளை வெறுப்பதற்கான காரணங்களை எடுத்துக் கூறுவார்கள். ஏனெனில், அவர்கள் வளரும் குழந்தைகள். மேலும், உறுதியான முதல் அடியெடுத்து வளரப்போகிறார்கள் போனி மீலின் உதவியுடன். போனி மீல், உறுதியுடன் வளரத்துடிக்கும் நான்கு மாதத்திற்கு மேலான குழந்தைகளுக்கு. இது சத்தான இயற்கை உணவுப் பொருட்களைக் கொண்டு சிறந்த தொழில் நுட்ப உதவியுடன் உணவுப் பொருட்களின் ஊட்டச் சத்துக் குறைந்துவிடாமல் இயற்கை மணம் கமழும் விதத்தில் தயாரிக்கப்படுகிறது. போனி மீல், இதன் சுவை உன்னதமானது மட்டுமல்ல தனது வளர்ச்சிக்குத் தேவையானதும் கூட என்று குழந்தைகள் நன்கு அறிவார்கள். எனவே, நீங்கள் போனி மீல் பாக்கெட்டை கையில் எடுக்கையில் உங்கள் குழந்தை மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நிலா நிலா ஓடிவா பாடுவதில்லை. தானாகவே ஓடிவருவது மட்டுமே சாத்தியம்.

Bonny

MEAL



தனது தேவையை அறிந்த விவேகமான குழந்தைகளுக்கு.



"நிலா நிலா ஓடிவா பாட்டு கேட்க வேண்டுமா? குழந்தை மாதிரி பேசாதீங்க."

HF Hindustan Foods Ltd., Goa.

உங்களின் கவனத்திற்கு:- தாய்ப்பாலே குழந்தைகட்கு சிறந்தது. குழந்தைகளின் 4 ம் மாதம் முதல் தாய்ப்பாலோடு தானிய உணவுகளை வழங்குங்கள்.

rues:HF:84:94

அசுரவேகம்

இந்த்ராணிராம்

"அடேடே ராம்மா தல்லீ! எக்கட அல்லுடு ராலேனா?"

(அடேடே வாம்மா தாயீ! எங்க மாப்பிள்ளை வர்லியா?) அன்பாக வரவேற்றுக் கொண்டே கேட்டார் வெங்கட்ராஜுலு நாயுடு.

உள்ளே வந்த மகள் வகுளாவைக் கட்டிக் கொண்டாள் அம்மா கஸ்தூரி.

அப்பாவின் கேள்வியால் வகுளாவின் கண்கள் கலங்கின.

மூக்கு சிவந்து விடைத்தது. உள்ளே இருந்து சிறிய கோபத்தைப் பல்லைக் கடித்து முழுங்கினாள்.

'வந்ததும் வராததுமா அழ வேணாமே' - தீர்மானித்தாள்.

"தாத்தா, பாட்டிக்கு நமஸ்காரம் பண்றோம்!"

தோளிலிருந்த டிராவலிங் பையையும், வாட்டர் பாட்டிலையும் களைந்த பேரக் குழந்தைகள் இருவர் காலிலும் விழுந்து நமஸ்கரித்தனர்.

"அமோகமா இருக்கணும்!"

"எழுந்திரும்மா பிரியதர்ஷினி. எழுந்திருப்பா சஞ்சய்!" எழுப்பித் தாத்தா அணைத்துக் கொண்டார்.

"நீ வாம்மா வகுளா!" அழைத்துப் போன அம்மா ஆதரவாக, வகுளாவின் வலது கையை ஆதரவாக அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"ம்மாடி என்னாச்சிம்மா?" அம்மாவின் குரல் கேட்டதும் வெடித்தாள் வகுளா.

'அழுது முடிக்கட்டும்!' அமைதி காத்தாள்.

மெல்ல விம்மல் குறைந்து தலையுயர்த்தினாள் வகுளா.

"ம்மா... அந்த மனுஷன் ரெண்டு மூணு லட்சம் ரூபா ரொக்கம், இல்லன்னா நூறு சவரன் நகையோடத்தான் வரணும்னு தொரத்திட்டார்மா..." கேவினாள் வகுளா.

"அட பெருமாளே! என்னம்மா இது சோதனை? நல்லா உம் புருஷன் ஏ.சி.ட்டீ ஓ ஆனாலும் ஆனாப்பலே! இப்படியா கலியாணம் பண்ணி பதினாலு வருஷங் கழிச்சும் சீர், பணம் வாங்கியான்னு ஒரு மனுஷன் அலைவான், கஷ்டம்டா..."

தலையிலடித்துக் கொண்டு புலம்பினாள் கஸ்தூரி. வகுளா மனசு ரணமாகி ரத்தங் கசிந்தது.

"முந்தா நா கலியாணத்துக்காகக் கரூர் போயிருந்தோம். அவர் கூட வேலை செய்யற சக ஏ.சி.ட்டீ.ஒக்கு பொண்ணு குடுத்தது கரூர்லேய பெரிய புள்ளி... ஒரே பொண்ணா- அசத்திட்டாங்க."

"திருச்சி தில்லைநகர்ல மூணு க்ரவுண்ட்ல பங்களா, மாப்பிள்ளை போயிட்டு வரதுக்கு மாருதி 800சிசி ஏ.சி. கார், கைல லட்சத்திப் பத்தாயிரத்தியொரு ரூபா பொட்டிப் பணம். பொண்ணுக்கு ஒரு கிலோ தங்கம், பத்துக் கிலோ வெள்ளிப் பாத்ரம்னு பாக்கப் பார்க்க எங்காளுக்கு ரேங்கிக்கிச்சு."

"ஏற்கெனவே கொரங்கு வேற! இதுல கள்ளையுங் குடிச்சி தேளும் கொட்டிட்டா மாதிரித்தாம் போ!" எந்தவிதமான உணர்ச்சியும் காட்டாமல் அம்மா திட்டினாள்.

"கலியாண வீட்டில சோறு கூடத் திங்க விடாம விரட்டு விரட்டுன்னு புடுங்கிக்கிட்டு வந்து ஆபீஸ்ல வேலைன்னு பஸ் ஸ்டாண்ட்லயே எறங்கிக்கிட்டாப்பலே..."

வீட்டுக்கு வந்து சாதம் வச்சி ரசம் பண்ணி, அப்பளம் பொரிச்சி சாப்பிட்டுட்டுப் படுத்திருந்தப்ப எழுப்பினார்...

"எந்திரிடி! குடும்பத்துப் பொம்பளைக்கு என்னடி மத்தியானத் தூக்கம்?" இடுப்பில் கிள்ளினான்.

"ம்ச்ச! என்னங்க? இது பட்டப் பகல்லேயே? பசங்க எழுந்துக்குவாங்க...?"

"அடிங்க... மடில போட்டு சரசம் பண்ண எழுப்பலை! எந்திரிடீ நாயே!"

இடுப்பில் ஒரு எத்து எத்தினான் சீனிவாச மூர்த்தி. மழையில் ஊறிப் போன நியூஸ் பேப்பரைப் போல சொத்தென்று விழுந்தாள்.

"தபார்றீ! உன்னியப் போயிக்

கட்டிக்கிட்டேனே! அதுக்கே நீ உங்க பரம்பரைல எல்லாருமே எனக்குப் பாதபூஜையே பண்ணணும். நான் பெரிய மனுஷன் அதுல்லாம் வேணாம்..."

"என்னிய விட அறிவில, அழகில கொறஞ்ச தடிப் பசங்கள்லாம், காரு, பங்களா, ரொக்கம், கிலோக்கணக்கிலே நகைன்னு பொண்ணு கட்டறான்! நீயும் பாத்தே இல்லை!"


"ம்ம்.. ஒரே பொண்ணுக்கு செஞ்சிருக்காங்க! எங்க நைனாதான் இன்னும் ரெண்டு பொண்ணுங்களும் ஒரு பையனும் பெத்து வச்சிருக்காப்பலே... அவர் அவங்களையும் கரையேத்தணும் பாவா! (மாமா) பெரிய மனசு பண்ணி விட்டுருங்க..." கைகூப்பி கெஞ்சினாள்.

"சும்மா ஏண்டி... வளவளன்னுப் பேசிக்கிட்டு... நாஞ் சொன்ன நகை பணத்தோட வந்தா எங்கூட பொண்டாட்டியாப் பொழைக்கலாம்... இல்லன்னா... வாழாவெட்டியா... ஒப்பன் வீட்லயே இருக்கலாம் ஜாக்ரதை!"

விரல் நீட்டி எச்சரித்தான் சீனிவாசமூர்த்தி கோபமாய்.

"நானும் ஒண்ணுஞ் சும்மா வரலீங்க...? முப்பது பவுன் நகையோட, பாத்திரப் பண்டம்... இருபதாயிர ரூவா ரொக்கம்னு வந்தவ! மறந்துட்டீங்களா! பத்தாததுக்கு ரண்டு லட்ச ரூபாவுக்கு வட்டி மாதிரி சொளையா மாசம் மூவாயிரம் ரூபா சம்பளத்தோட வந்திருக்கேன்... யோசனை பண்ணிப் பாருங்க!" - அவிழ்ந்த கூந்தலை அள்ளி முடிந்து கொண்டாள்.

ரப்பென்று சீனிவாச மூர்த்தியின் இடது புறங்கை அவளின் கன்னத்தில் விளை



யாடிற்று.

"நாயே! சொல்லியாக் காட்டற! எதுத்துக் கிதுத்துப் பேசின? மவனே! ஏறி மெதிச்சிரு வேன். போடி...! போயி காசோட இல்ல நகையோட வந்து சேரு! தெரியுதா! பிளடி பிட்ச்!"

தரையில் எட்டி உதைத்து கோபம் வெளிப்படுத்தினான்.

"இப்பத்தான் தங்கச்சிங்க கலி யாணத்துக்கோசரமும், பாலாஜிப்ரபு மேல் படிப்புக்கோசரமும் பணத்துக் காக... சேலம் வீட்டை விலை பேசிட் டிருக்காங்க. இப்பப் போயி..."

புருஷன் கால்களை கண்ணீரால் நனைத்து வேண்டினாள்.

''சென்டிமென்ட் காட்ட றீங்களோ! போடீ, இல்லன்னா சேலம் வீட்டை உம் பேருக்கு எழுதி வாங் கிட்டு வாடி! எம் பொண்டாட்டி" தலைமுடியைக் கொத்தாகப் பிடித்துத் தூக்கினான்.

"நீங்க என்னைக் கொன்னாலும் நான் போயி கேக்க மாட்டேன். இப்ப நம்ம சேலம் வித்யா நகர் வீடே எங்க நைனா குடுத்த சீதனங்க! ரெண்டு வருஷம் நம்ம குடும்பத் தையே பராமரிச்சி... நம்ம சம்பளத்தை மிச்சம் வச்சி அந்தப் பணத்தோட... அவரும் பி.எஃப். லோன்லாம் போட்டுக் கட் டிக் குடுத்ததை மறந்துட்டீங்களா?"

"ஆமா பெரிசா செஞ்சிட்டாப்பலே?"

"நம்ம வீட்டுக் கிரகப் பிரவேசத்துல நாயனா கால்ல விழுந்து நமஸ்காரம் பண் ணினப்ப நீங்க சொன்னதை மறந்துட்



டீங்களா?"

"அப்படி என்னாடீ சொல்லிட்டேன்?"

"மாமா என்னோட அம்மா அப்பாவை ஒரே ரூபமா உங்கள்ல பாக்கறேன். நீங்க எனக்கு ஃபாதர்-இன்-லாவா அமைஞ்சது என்னோட பூர்வபுண்ணியம்னீங்களே!"

பழசை ஞாபகப்படுத்தினாள் வகுளா. கையசைத்து அதனை அலட்சியப்படுத்தினான் சீனிவாச மூர்த்தி.

"ஹ! இதுல்லாஞ் சபை மரியாதைக்கு சொல்றது! இதப் போயீ... அது சரி என்னான்றே இப்ப...?"

"உங்க நைனா எத விப்பாளோ? அது வீடோ? இல்ல தோட்டமோ இல்ல அக்காத் தங்கச்சிங்களையோ? ஐ டோண்ட் மைண்ட் எனக்கு துட்டு வேணும். ஆமா சொல்லிட்டேன். கெட் லாஸ்ட்!"

தோள் பிடித்துக் கீழே தள்ளி விட்டான். மல்லாக்க கால் பரப்பி வாசலில் சரிந்தாள் வகுளா.

"பொண்ணுங்களை வித்தாவது பணந் தர்றதா? அவனை... அவனை... அனாதைப் பயல் இவ்வளவு ஆடறானா? அனாதைப் பையன்னு சொந்தக்காரங்களே ஒதுக்கினதை மறந்துட்டாப்பலேயா?"

"ஏதோ புத்திசாலி... தட்டிக் குடுத்தா மேல வந்திடுவா. சந்தர்ப்பத்தை உருவாக்குவோம்னு மாசம் ஆயிரத்தி சொச்சம் சம்பாரிச்சப் பொண்ணைக் குடுத்தா... அடிமடியிலேயே கை வைக்கிறானா? படவா!" பொரிந்து தள்ளினாள்.

"எனக்கு ஒண்ணுமே புரியலைம்மா!"

மடியில் தலை புதைத்து அழத் துவங்கினாள் வகுளா.


"நைனாட்ட நான் பேசறேன்! நீ போய்க் குளிம்மா" மகளின் தோளைத் தட்டி சமாதானம் பண்ணினாள்.

சேலம் வேளாண்மைத் துறை இணை இயக்குனராக இருந்த வெங்கட்ராஜுலு காண்ட்டீனில் செக்கச் செவேல் என்று ஒற்றைத் திருமண்ணுடன் இருந்த சீனிவாச மூர்த்தியை சந்தித்தார்.

ஒருவேளை தென்கலை அய்யங்காரோ? - மனசு கேள்வி கேட்டது. எதிர் வீட்டு வாசுதேவன் கமர்ஷியல் டாக்ஸ் ஆஃபீஸ் சூப்ரண்டண்ட் அவரை மெல்ல விசாரித்தார்.

"நல்ல பையன் சுவாமி... ஒரு கெட்ட பழக்கங் கெடையாது. பீடி வெத்தலை பாக்கு, சிகரெட்டு, குடிப் பழக்கம், பொம்பளை சகவாசம் ஏதுங் கெடையாது..."

"சரியான ஐ.எஸ்.ஐ. மாப்பிள்ளை! கூடப் பொறந்தவங்க இல்லை! அப்பன் ஆத்தா



கேரட்டிலுள்ள சத்து முழுவதும் அதன் தோலுக்கு அடியில்தான் இருக்கிறது. அதனால் எப்போதும் தோலைச் சீவாதீர்கள்.

- கலா

இல்லே! சொந்த சித்தப்பாவோட ஆதரவில வளர்ந்தவன். உம்ம பொண்ணு குடுத்து வெச்சது. மாமனா, மாமியா, நாத்தி, கொழுந்தன் பிராப்ளமே நஹி! நஹி!" தொடை தட்டிச் சிரித்தார் வாசு.

"எந்த ஊர்க்காரரு?"

"விழுப்புரம் பக்கத்தில கிராமம். நா வேண்ணா ஜாதகம் வாங்கித் தர்றேன்."

அருமையான மாப்பிள்ளைடி விட்ருவனா?ன்னு முயற்சி செய்து சுபயோக சுப தினத்தில் மகளைக் கட்டிக் கொடுத்தார். பி.ஏ. பி.எட்டான வகுளா வெறும் பி.ஏ. அஞ்சல் வழிக் கல்வி படித்துக் கொண்டிருந்த சீனிவாசமூர்த்திக்கு மனைவியானாள்.

நினைக்க நினைக்க நாயுடுவுக்கு மனசு கனத்துப் போனது. மொட்டை மாடியிலிருந்த இரும்பு ஊஞ்சலை ஆட்டிக் கொண்டிருந்தார் வெங்கட்ராஜுலு. அருகே வெற்றிலை மடித்த மனைவியை அழைத்தார்.

"சுச்சும்மா! இப்ப என்னம்மா பண்றது?"

"வர்ற சனி ஞாயிறுல நடுவிலவளும், சின்னவளும் வர்றாங்க... அதோட பையனையும் வரச் சொல்லித் தகவல் அனுப்பிச்சிருவோம்! எல்லாரையும் கலந்து ஒரு முடிவெடுப்போம். போய்த் தூங்குங்க. யோசிப்போம்."

தாம்பூலத்தை நீட்டினாள். அவர் வாங்கிக் கொண்டார்.

"ரண்ட ரண்ட" (வாங்க... வாங்க) சேவித்த படி வரவேற்ற வெங்கட் ராஜுலு உள்ளே பார்த்து அழைத்தார்.

"அம்மாடீ! சுச்சும்மா! ஒரு ஒச்சி உண்டேரு சூடு! சிக்கிரம் ராம்மா! மன கோவிந்தபாஷ்யங் காரு ஒச்சி உன்னாரு!"

தலைப்பைப் போர்த்திக் கொண்டு உள்ளேயிருந்து தாயும் மகளும் வந்து வணங்கினர்.

"கோவிந்த காரு! இதி நா டாட்டர் வகுளா. ட்ரிச்சி கவர்மெண்ட் ஹையர் செகண்ட்ரி ஸ்கூல்லோ பி.ஜி. அசிஸ்

டெண்டுகா உந்தி! பி.ஏ. இங்கிலீஷ் லிட்ரேச்சர். பி.எட். கூட."

அறிமுகம் முடிந்ததும் வகுளா கைகுவித்தாள்.

"நம்ம கோதா லெக்ஷ்மிக்கு ஆம்பிளைப் பையன் பொறந்து இருக்கு. வர்ற வெள்ளிக்கிழமை தாகலு கல்யாண மகாலில் தொட்டி விடறோம். எல்லோரும் வந்து விருந்து சாப்பிட்டுட்டு வரணும்" என்றார்.

"திருமதி... வகுளா.. எம்.ஏ., எம்.எட்.," என்ற கோவிந்த பாஷ்யம் வெங்கட்ராஜுலுவைப் பார்க்கவும்... அவர் தொடர்ந்தார்.

"ஒய்ஃப் ஆஃப் எம். சீனிவாசமூர்த்தி. ஏ.சி.ட்டி.ஓ. (ரூரல்) திருச்சி செகண்ட் திருச்சி" என்று சொல்லச் சொல்ல எழுதிக் கொண்டார்.

வெள்ளித் தட்டில் மஞ்சள் குங்குமம் வைத்து சின்ன வெள்ளிக் கப்பில் டைமண்ட் கல்கண்டு நிறைத்து மேலே அழைப்பிதழை வைத்து நீட்டினார்.

"அவசியம் கொழந்தைங்களையும் அழச்சிட்டு வந்திடும்மா."

பரஸ்பர வணக்கங்களைத் தொடர்ந்து வந்தவர்கள் கிளம்பிப் போனார்கள். அழைப்பிதழைப் பிரித்து படித்த வகுளா கத்தினாள்.

"என்னம்மா இது புருஷன் பேரு வேறயாயிருக்கு! கோதாலக்ஷ்மிய டாக்டர் ரெங்கராஜன்றவருக்கில்ல கலியாணம் பண்ணித் தந்தாங்க. சேலம் அம்மாப்பேட்டை செங்குந்தர் கலியாண மண்டபத்துல நடந்த கல்யாணத்துக்கு நாங்க வந்திருந்தோமே?" அலறினாள் வகுளா.

"இப்ப என்னடான்னா மோகன கண்ணன் எம்.கே. டெக்ஸ்டைல்ஸ் மதுரைன்னு போட்டுருக்கு? என்னம்மா ஒரேயடியா தலை சுத்துது!"

"மோகன கண்ணன் கோதாலெக்ஷ்மியோட ரெண்டாவது புருஷன்! அவங் கொழந்தைதான் இது!" அம்மா அழைப்பிதழை உள்ளங்கையில் தட்டிக் காட்டினாள்.

"டாக்டர் ரெங்கராஜனை கோதாலெக்ஷ்மியோட வீட்லதான், மேல் படிப்புக்கு லண்டன் அனுப்பிச்சாங்க! ரெங்கராஜுலு லண்டன் லந்து வந்ததும், தனியா நர்சிங்ஹோம் வச்சிக்க மாமனார்ட்ட பத்து லட்சம் கேட்டாப்பலே!"

"அடப்பாவி... அப்புறம்?"

"பணந்தராததாலே அடிச்சி ஒதச்சி, கோதா லெக்ஷ்மியோட இடுப்புல, மார்ல, தொடைல சிகரெட்டால சூடு வெச்சி, டாக்டர் சித்ரவதை பண்ணினான். கஷ்டம் பொறுக்காத கோதை ஆன்ட்டி டவுரி கேஸ் போட்டு டாக்டருக்கு கவர்மெண்ட் வேலை போச்சி! கடைசியா டைவர்ஸ் வாங்கிட்டாங்க..."

நிறுத்தி நிதானமாக பெருமூச்செறிந்த அம்மா வெளியே வெறித்தாள்.

இப்பக் கோதாலெக்ஷ்மிய மதுரைல ஒரு நூல் மில் ஓனருக்குக் கொடுத்தாங்க. அந்தக் கொழந்தைக்குதான் தொட்டில் விழா. அழைப்பு. பாத்தியா காலம் எவ்வளவு மாறிடிச்சி!"

"அம்மா!" அம்மாவின் தோளில் சரிந்து சாய்ந்து அழுதாள்.

"**ம்**ம் பாப்பாத்தி... உனக்கு எத்தினிப் பசங்க?"

"நாலு புள்ளைங்க தாயீ! பெரியவ ஜெய இந்திரா, அடுத்தவன் ராமச்சந்திரன் மூணாவது கவிதா, கடைசியான் ராஜீவ்காந்தி. இதுங்க ஏழாவது, அஞ்சாவது, மூணாவது எல்.கே.ஜி. படிக்குது வகுளாம்மா!"

"உம் புருஷன் என்ன பண்ணறான்?"

"அவன் பஞ்சாயத்துல தண்ணி எடுத்து உடறவன். எப்பப் பாத்தாலும், தண்ணீ, மூணு சீட்டு, பொம்பளை தொடுப்புன்னு அலையறவன்மா! தெனம் நான் வேகாத வெயில்ல களைவெட்டி சம்பாரிக்கற காசையும் புடுங்கிக்குவான்மா... பரதேசிப் பய..."

"அதான்மா அவனை விட்டுட்டு அப்பன்



நான் கோகுலாஷ்டமிக்கு வெல்லச் சீடை செய்த போது சிறிது நீர்த்து உருட்ட முடியாமல் இருந்தது. என்ன செய்வது மாவும் இல்லையே என மனதிற்குள்ளே நினைத்து மிகவும் அப்செட் ஆகி என்ன செய்யலாம் என யோசித்தேன். ஜாமூன் மிக்ஸ் ஒரு பாக்கெட் இருந்தது. அதை அந்த மாவுடன் கலந்து சீடை போட்டேன். மிக மிருதுவான, கலரான வெல்லச் சீடை மிகப் பிரமாதமாக இருந்தது. டேஸ்ட் ஆளை அசத்தி விட்டது.

– திருமதி. வாசன்



ஒரு நிலையான தொழிலில் எந்த நிறுவனம் உறுதிய

உங்கள் பணத்தை ஒரு நிதி நிறுவனத்தில் டெபாசிட் செய்யும் போது நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அதன் மூலம் ஒரு நிலையான வருமானத்தைப் பெற வேண்டும்; பொருளாதார மாற்றங்கள் அந்த வருமானத்தைப் பாதிக்கக் கூடாது... என்பதுதானே! அந்த வகையில், நீங்கள் டெபாசிட் செய்ய மிகவும் ஏற்ற நிறுவனம் ஸ்ரீராம்தான். காரணம்–

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் லாரிகள் இன்றியமையாத அடிப்படைச் சேவையில் ஈடுபட்டிருக்கின்றன. அந்த லாரிகளுக்கு நிதியுதவி அளிக்கும் ஒரு நிலையான தொழிலில் ஸ்ரீராம் ஈடுபட்டுள்ளது. லாரிப் போக்குவரத்து ரொக்க அடிப்படையில் நடைபெறும் தொழில். உரிமையாளருக்கு நிமிடந்தோறும் லாரிகள் வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதால், லாரி உரிமையாளரால் தவணைத் தொகையை சிரமமின்றி ஒழுங்காகச் செலுத்திவிட முடிகிறது. அப்படி அவரால் செலுத்த முடியவில்லையென்றால், அந்த லாரியைக் கையகப்படுத்தி விற்பனை செய்து கடனை எளிதில் வசூலித்து விட முடியும்.

பில் டிஸ்கவுன்டிங் என்னும் கடனுதவி முறையை இதே அளவு நிலையான தொழிலாக கருத முடியாதா?

நிச்சயமாக முடியாது. பில் டிஸ்கவுன்டிங் ஒரு குறுகிய கால வர்த்தகம். கடனுதவி முழுவதையும் 3 மாதங்களுக்கு ஒரு முறை வெவ்வேறு இனங்களின் மீது மாற்ற வேண்டியது அவசியம்: அதுவும், அவ்வப்போது நடப்பில் உள்ள வட்டிவிகிதத்தில், கடன்தொகையைத் திரும்பப் பெற முடியாதபோது, எந்தச் சொத்தையும் கையகப்படுத்துவது எளிதல்ல. எனவே, நிலையான தொழில் என்று பார்க்கும்போது, சமூகத்திற்கு இன்றியமையாத சேவைபுரியும் லாரிகளுக்கு நிதியுதவி அளிப்பதே உயர்வானது.

பணத்தின் அருமை தெரிந்தவர்கள் நாங்கள். அதைவி



்பட்டிருக்கிறதோ, அதுவே.

ஸ்ரீராம் — லாரிகளுக்கு நிதியுதவி அளிப்பதில் முன்னணி நிறுவனம்

ஸ்ரீராமின் பின்பலமாக இருப்பவை — ரூ.700 கோடி மதிப்புள்ள ஸ்ரீராம் நிறுவனங்கள். ரூ.170 கோடிக்கும் கூடுதலான டெபாசிட் ஆதாரம். உங்களுக்குச் சேவைபுரிய நாடு முழுவதும் 65 அலுவலகங்கள். முழு ஈடுபாட்டுடன் உங்கள் தேவைகளை நிறைவேற்றும் ஸ்ரீராமின் பண்பாடு.

இன்று 1,50,000 டெபாசிட்தாரர்கள் ஸ்ரீராமைத் தங்கள் சொந்த நம்பிக்கைக்குரிய நிதி நிறுவனமாக எண்ணுகிறார்கள். அது உங்கள் நிறுவனமாகவும் இருக்க வேண்டாமா?

or statutory details refer to our advt. in The Hindu dated 9/7/93

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
ஸ்ரீராம் சிடி யூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட்

இப்போது டெல்கோ, அசோக் லேலண்ட், சிடி யூனியன் வங்கி ஆகிய நிறுவனங்களின் சக்திமிகு பங்கேற்புடன்.

நிர்வாக அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளெக்ஸ், 4 லேடி தேசிகா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004. போன்: 4991363, 4990960.4993968.

டெபாசிட்டுகள்
திரட்டும்
கேம்பெய்ன்
இப்போது

்கள் அக்கறைகளையும் உணர்ந்தவர்கள்.



மிருதுவாக மெத்தென்று வெல்லச் சீடை வேண்டுமா? மாவை சிவக்க வறுத்து ஆற வையுங்கள். நன்றாக ஆறிய மாவில் சிறிது சிறிதாக தண்ணீர் தெளித்து ஈரப்படுத்துங்கள். பிறகு பாகை எடுத்து மாவில் சேர்த்துப் பதமாய் எடுத்து வைத்து மறுநாள் செய்யுங்கள். பல்லில்லாதவர்கள் கூட சாப்பிடலாம். அடுத்த ஸ்ரீ ஜெயந்தி வரை காக்க வேண்டாம். டிபனுக்கு ஒரு நாள் செய்து பாருங்களேன்.

- ஜி. இந்திரா

வூட்டுக்கே வந்துட்டேன். நானா சம்பாரிச்சு எம் பசங்களை, வளத்திக்கறேனிட்டு வந்துட்டேன்..."

"அப்ப உம் புருஷன் உங்கூட இல்லியா?"

"இல்லை. நான் போடா ஜாட்டன்ட்டு வந்துட்டேன். உடம்பில வலுவிருக்கற மட்டும், ஓழச்சாத்தாம்மா சோறு! என் ஒழைப்பிலேயே தின்னிட்டுத் தெனமும் திட்டு அடி ஒதைன்னா, அந்தப் பொழப்பே வேணாம் னிட்டு வந்திட்டேன்..."

"நானே ஒழச்சி பொங்கித் திங்க... இந்த ஆம்பிள்ளை வேண்டாமே! அறுத்துக் கட்டினா இன்னொருத்திக்குத் தாலி கட்டி கூட்டிட்டு வந்து ராவடி பண்ணுவான். இந்தத் துன்பந் தேவையா?"

"பாப்பாத்தி... நான் என்ன சொல்றன்னா..." இழுத்தான்.

"ம்மா நான் ஏழை, படிக்காதவ, என்னால கோர்ட்டு பஞ்சாயத்துன்னு மானத்தைக் கூறு போட முடியாது. காலுக்கு ஒத்து வர்லியா.. கழட்டி எறிஞ்சாச்சு செருப்பை."

பாப்பாத்தியின் வார்த்தைகள் வருணாவின் இருட்டான மனசில் நம்பிக்கை வெளிச்சம் ஏற்றியது.

"அம்மா! நைனா! எம் பிரச்னைக்கு முடிவு எடுத்துட்டேம்ப்பா!"

"என்னம்மா சொல்றே நீ?" பெற்றோர்கள் அதிர்ந்து போயினர்.

"கோதாலெக்ஷ்மி மாதிரி நாம் பணக்காரங்க இல்ல. அதே நேரம் சமூகத்தோட கீழ்த்தட்டிலருக்கற பாப்பாத்தியோட மெறாட்டு நாயமும் பேசல!"

"சீர்ப்பணம் வேணும் நகை வேணும்னு, டவுரிப் பணம் வேணும்னு மிஸ்டர் சீனிவாச மூர்த்தி எழுதின லெட்டர்ஸ் எல்லாத்தையும் வச்சி ஆன்ட்டி டவுரி செல்லுல கம்ப்ளெயிண்ட் பண்ணப் போறேன்! அந்தாளோட வேலையைப் புடுங்கி... தெருத் தெருவா அலைய விடப் போறேன்..."

"முடிஞ்சா ஒரு கை கொடுங்க! இல்லன்னா நானே பாத்துக்கறேன்! விட்ருங்க!" ■

ஜெயலட்சுமி கிருஷ்ணன்

குரு பெயர்ச்சி எப்படி இருக்கும்?

குருவே ஸர்வ லோகானாம் பிஷஜே பவரோகினாம்
நிதயே ஸர்வ வித்யானாம்
தக்ஷிணாமூர்த்தயே நம:

காலச்சக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது. கிரகசஞ்சாரங்களும் தொடர்கின்றன. மாறிமாறிப் பிறவிகளும் உண்டாகத்தான் செய்கின்றன. இயற்கையின் இவ்விதிமுறையை வென்றவர் எவருமிலர். மனிதகுலமோ நாளுக்கு நாள் புதினங்களைக் கண்டு பிடித்த வண்ணமிருக்கின்றது. ஆனால் இதுவரை விதியையோ, இயற்கை நியதியையோ வென்று விட்டோமா என்று கேட்டால் அதற்கு என்ன பதில் கிடைக்கும்? இப்படிப்பட்ட நிலையில் ஒவ்வொரு ஆண்டும் நவக்கிரக நாயகர்களில் நல்லவராக இருக்கின்ற குரு ஒரு இராசியிலிருந்து அடுத்த இராசிக்குச் செல்வதை குரு பெயர்ச்சி என்ற பெயரில் அழைத்து, அத்தகைய பெயர்ச்சியினால் நன்மையா, தீமையா? என்ற வினாவுக்கு விடை தேடும் வழக்கம் காலம் காலமாக நம்மிடையே இருந்து கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட குரு இந்த ஆண்டு நவம்பர் திங்கள் 10ம் தேதி இரவு 10 மணி அளவில் துலா ராசியிலிருந்து விருச்சிக இராசிக்குச் செல்லுகிறார். இந்த ஆண்டு குரு, தான் இடம் மாறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே தானே வால் நட்சத்திரம் ஒன்றின் தாக்குதலுக்கு ஆளாகி, தன்னையும் காப்பாற்றிக் கொண்டு உலகத்தையும் காப்பாற்றியுள்ளார். இதிலிருந்து குருவின் சக்தி எத்தகையது என்பதையும் அவர் நல்லது செய்கிறாரோ இல்லையோ, தீமையைக் கட்டாயம் தடுத்துக்காப்பார் என்பது புலனாகும். கீழே தரப்படும் விளக்கங்களை எல்லா இராசிக்கும் பொதுவாக எடுத்துக் கொள்வதுடன் பரிகாரங்களையும் படித்தறிந்து தனித்தனியே தத்தம் இராசிக்கு ஏற்பச் செய்வது நல்லது.

நற்பலன் பெறும் இராசிக்காரர்கள் : ரிஷபம், கடகம், துலாம், மகரம், மீனம்.

ஏற்றத்தாழ்வும் மத்திம பலனும் உடைய இராசி கன்னி.

சுப பலன் பெறும் இராசிகள் மேஷம், மிதுனம், சிம்மம், விருச்சிகம், தனுசு, கும்பம்.

ஆயினும் தசாபுக்திகள் சிறப்பாக உள்ளவர்களுக்கு மேற்குறித்த கோட்சாரப் பலனைப் பற்றிய கவலை தேவையில்லை. எனினும் கீழேகுறிக்கப்பட்டுள்ள பரிகாரங் களை உங்கள் இராசிக்கு ஏற்பச் செய்வது நல்லது. நற்பலன் அதிகமாகவும் ஏற்படும்.



பரிகாரம் : ஜோதிடத்தில் கூறியுள்ள மணி, மந்த்ரம், மருந்தும் என்ற முறைகளில் உரிய பரிகாரத்தைச் செய்வது நல்லது.

1. தக்ஷிணாமூர்த்தி, குரு ஆகியவர்களுக்கு அர்ச்சனை, அபிஷேகம் போன்றவை செய்ய லாம். வசதி படைத்தவர்கள் ஆலங்குடி, திருச்செந்தூர் போன்ற இடங்களுக்குச் சென்று வரலாம்.

2. கோயில் திருப்பணிகளுக்கு, மற்றும் ஸ்ரீமந்த்ராலய மகான் போன்றவர்களின் பிருந்தாவனங்கள் அமைக்கப்படும் திருப் பணிக்கு, சமுதாயத் தொண்டினைத் தானாக முன்வந்து ஏற்று நடத்தும் ஸ்தாபனங்களுக்கு உங்களால் இயன்ற அளவிற்கு நிதி உதவி அளிக்கலாம்.

3. மதத்தலைவர்கள், ஆன்மீகத்துறையில் உள்ள பெரியவர்கள், மற்றும் ஸ்ரீமத் ஸ்ரீ சத்ய சாயி பாபா போன்ற அருள் நெறியாளர்கள் ஆகியவர்களை அணுகி ஆசி பெறலாம்.

4. வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து குருவை த்யானிக்கலாம். தக்ஷிணாமூர்த்தி, குரு ஆகியவர்களுக்குரிய ஸ்லோகங்களைச் சொல்லலாம்.

5. உடல் நலக்குறைவை சரியாக்குதற் குரிய மருத்துவர்களை நாடலாம்.

6. கனக புஷ்பராகம், தங்கம் இவற்றை ஆபரணமாகச் செய்து அணியலாம்.

7. எந்தப் பரிகாரமும் உங்கள் சக்திக்கு உட்பட்ட அளவு செய்தாலே போதும். ஆனால் பக்தியும் அடக்கமும், நம்பிக்கையும் தேவை.

டிட்டர்ஜெண்ட் சோப்புக் கட்டிகள் தண்ணீர் பட்டதும் ஊறிக் கொண்டு சோப்பு போடும் பொழுது துணிகளில் அதிகமாய்ஒட்டிக் கொண்டு எவ்வளவு அலசினாலும் சோப்பு போகாது. சோப்பை கர்சீப் வைத்து மூடிக் கொண்டு அதைத் துணியின் மேல் தேய்த் தால் சோப்பும் அதிகம் கரையாது. கடைசி துளி சோப்பு இருக்கும் வரை துணிக்குப் போடலாம்.

- பத்மா ரெங்கசாமி



பொதுவாக உலகத்தில் உள்ள அனை வருமே சிரமம் குறைந்து யுத்தபயம், இயற் கையின் சீற்றம், அரசியல், மத, வகுப்புவாத சச்சரவு ஆகியவை நீங்கி, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்றும் அதற்கான அருளைத் தரும்படியும் குருபகவானை வேண்டிக் கொள்வோமாக. அதற்காக குரு பெயர்ச்சி தினமான நவம்பர் 10, 11 தேதி களில் எல்லோர் வீட்டிலும் 1 குத்து விளக்கு, கிறித்துவர்களானால் மெழுகுவர்த்தி, இஸ்லா மிய சகோதரர்கள் ஊதுவத்தி இவற்றை 10ந் தேதி சூரிய உதயத்திலிருந்து 11ந் தேதி மாலை வரை தொடர்ச்சியாக ஏற்றி வைத்து உலக நலனுக்குப் பிரார்த்திப்பது நல்லது. குத்து விளக்கு இல்லாதவர்கள் மூன்று அகல்கள், ஏற்றினால் கூட போதும். கூட்டுப் பிரார்த் தனைக்கு ஒப்பான இந்தப் பிரார்த்தனை எப்பாலவர்க்கும், எந்நாட்டவர்க்கும், எம் மதத்தினர்க்கும் பொருந்துவதுடன் உலக நல னுக்கும் உகந்ததாக அமையும். அத்துடன் அண்டவெளியில் உள்ள அத்தனை கிரகங் களும் அந்தந்த நாட்டிற்குரிய வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டாலும் அவை அனைத்தும் இயற்கையால் உலகத்துக்குக் கொடுக்கப்பட்ட அண்ட வெளிச் சொத்துக் கள் தானே. எனவே குருபெயர்ச்சி என்பது எல்லோருக்கும் பொதுவானதே.

குரு ப்ரஹ்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ மஹேஸ்வரா:
குருஸாக்ஷாத் பரம்-ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:


என்று பிரார்த்திப்போமாக.

உங்கள் இராசிக்கு, குருபெயர்ச்சியால் ஏற்படும் பலன்கள்.

மேஷ ராசி :

இதுவரை குரு பார்வையைப் பெற்ற உங்கள் இராசி உங்களுக்கு நல்லது செய் திருக்க வேண்டும். சுப நிகழ்ச்சிகளும் நடந் திருக்க வேண்டும். மாறான பலன் ஏற்பட் டிருப்பின் ஜாதக அமைப்புப்படி தசாபுக்தி கள் சரியாக அமைந்திருக்காது எனலாம். இந்த ஆண்டு நேர்கதியில் குரு சஞ்சரிக்கும் போது நற்பலன்களை எதிர்பார்க்க இயலாது. அந்த சமயங்களில் புதுமுயற்சி ஏதும் செய்ய வேண்டாம். குழந்தைகளின் கல்வி நலனில் அக்கறை செலுத்துங்கள். வக்ரகதியில் சஞ்ச ரிக்கும் போது நற்பலன் கூடுதலாக நடக்கும். தொழிலில் இலாபம், வாகன யோகம், வீடு மனை வாங்குகின்ற நிலை ஏற்படும். ஆனால்

சருமத்திற்கு ஊட்டமளிக்கும் போதே உங்கள் முகப்பருக்களுக்கும் சிகிச்சை அளியுங்கள்.



உங்கள் சருமத்தின் மீது சாந்திக் இடத் தொடங்கியதும், இரண்டு அற்புதங்கள் நிகழ் கின்றன:

சாந்திக்கில் அடங்கியுள்ள இதமளிக்கும் மூலிகைச் சத்துக்கள் உங்கள் பருக் களுக்கு சிகிச்சை அளிப்ப தால் அவை விரைவிலேயே மறையத் தொடங்கு கின்றன...

உங்கள் சருமமும் சாந்திக் கின் இயற்கைப் பொருட் களில் உள்ள சிறந்த போஷாக்கை ஏற்று, இதுவரையில்லா ஆரோக்கியத்தோடு பளபளக்கிறது.



இன்னமும் கேளுங்கள்: சரும சுருக்கங்கள், சரும விரிவால் உண்டான கோடுகள், பல மாசுகள், களங்கங்கள் மறையத் தொடங்குகின்றன — போனஸ் ஆக.

ஆம், சாந்திக் உங்கள் மேனியில் அற்புத மாற்றங் களைச் செய்கிறது. இன்றே உபயோகித்து நீங்களே கண்டு உணருங்கள்.

சாந்திக்

இரு-நன்மையளிக்கும் மூலிகை சத்துள்ள முகப்பொலிவு பேக்.

தர்ஷண ட்ரெடிஷனல் ப்ராடக்ட்ஸ், 46, பகல்லா ரோடு, தி.நகர், சென்னை-600 017. போன்: 8254790.

சாந்திக், சென்னை, கோவை, சேலம், மதுரையில் முன்னணி கடைகளில் கிடைக்கிறது. திருச்சி: பிக்-அண்ட்-பேக், செல்லா ஸ்டோர்ஸ். ஏஜெண்டுகள் — நாகர்கோவில்: M.கோபாலன் ஆனன், 130, பாலமோர் ரோடு. திருநெல்வேலி: பழனி ஆண்டவர் ஏஜென்ஸிஸ், 25L, பராசக்தி பில்டிங். பாண்டிச்சேரி: ஸ்ரீ சக்தி கணபதி சிவகுமார் கம்பெனி, 85, மிஷன் தெரு.

சாந்திக் கிடைக்காத ஊர்களில் டீலர்கள் தேவை. • சாந்திக், ஆயுர்வேத மருந்து.

Anugrah 1776/94 Tam


சற்று காலதாமதமாக ஏற்படும். புத்திரோற்பத்திக்கும் காலதாமதமாகலாம். உங்கள் ராசிக்கு யோககாரகன் குரு, எனவே எதிலும் எச்சரிக்கையுடன் செயல்பட்டால் கெடு பலன்கள் நடக்க நியாயமில்லை. பரிகாரம் எனும் தலைப்பில் ஏதாவது ஒன்றைச் செய்வது நல்லது. சனீஸ்வரன் 11ல் நன்மையைத் தரும்.

ரிஷப ராசி :

சற்று ஏறுமாறான பலனை அனுபவித்த இந்த இராசிக்காரர்களுக்கு இரண்டு கிரகங்களின் நன்மையைப் பெறுகின்ற யோக காலம். குறிப்பாக இந்த இராசிக்கு யோககாரகனாகிய சனி 10ல் இருப்பதால் நலிவடைந்த தொழில் மேன்மை நிலையைப் படிப்படியாக அடையும். தட்டிச் சென்ற திருமண காரியம் கைகூடி வரும். பதவி உயர்வு உண்டு. வெளிநாட்டுப் பயணத்தால் இலாபம் ஏற்படும். குழந்தைகளின் கல்வி நலன் நன்கு ஒளிரும். விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். உங்கள் பலம் உங்களுக்குத் தெரியாததால், உங்களில் ஒரு சிலர் துணிந்து செயலில் இறங்க யோசிப்பீர்கள். அத்தகைய நிலை இனி நீடிக்காது. எதிர்பாராத தனலாபம், இழந்ததைப் பெறுதல், மற்றும் மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். நடிப்புத்துறையினர், பொதுத் துறையில் உள்ள மேலாளர்கள், மற்றும் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். நேர்கதியில் சஞ்சரிக்கும் போது நன்மை கூடுதலாகும். வக்ர கதியில் சஞ்சரிக்கும் போது சற்று சிரமத்தை எதிர் நோக்க வேண்டி வரும்.

மிதுன ராசி :

உங்களுக்குப் பலவிதங்களில் பார்வையால் நன்மை செய்து கொண்டிருந்த குரு, இடம் மாறுவதால் உங்கள் வாழ்க்கையிலும் சில மாற்றங்களைத் தருவார். வக்ரகதியில் சஞ்சரித்த காலத்தில் யோகம் உண்டு. கலைஞர்கள், வியாபாரிகள், புது ஒப்பந்தம் போட வேண்டாம். பழையதையே நீடிக்கச் செய்யுங்கள். அலுவலர்கள் இடமாற்றத்திற்குக் கேட்க வேண்டாம். வேண்டாத இடத்திற்குச் சென்று சற்று சிரமப்படுவீர்கள். நோய், சத்ருக்கள், மற்றும் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் உங்களுக்கு மனவருத்தத்தைத் தரும் என்றாலும் பொறுமையுடன் சமாளிப்பீர்கள். வக்ரகதி காலத்தில் வெற்றி உண்டு. இது



தயாரிப்பாளர்களே!....

காப்பி ஃபில்டரில் மேலே ஓட்டை உள்ள பாத்திரத்தைவிடக் கீழே டிகாக்ஷன் இறங்கும் பாத்திரம் பெரிதாகத் தயாரித்தால், 2, 3 தடவை வெந்நீர் விட்டு இறக்கினாலும் நிரம்பிக் கீழே டிகாக்ஷன் வழியாமல் இருக்கும்.

- டி. ஸ்ரீமதி

எத்துறையினர்க்கும் பொருந்தும். நேர்கதியில் சஞ்சரிக்கும் போது ஆரம்பத்தில் எழுதியுள்ளவற்றில் ஏதேனும் பரிகாரம் ஒன்றைச் செய்யலாமே!

கடக ராசி :

நல்லதோர் காலகட்டம் ஆரம்பம். இது வரை இருந்த மனக்குழப்பம், பொருளாதார சிக்கல், தடைபடுகின்ற சுபநிகழ்ச்சிகள், அரசுத்துறையில் ஆகவேண்டிய வேலைகள், எதிர்பார்க்கின்ற உத்தியோகத்துக்கான உத்திரவு ஆகிய அனைத்திலும் வெற்றி உண்டு. குரு வக்ரகதியில் சஞ்சாரம் செய்யும் காலத்தில் மட்டுமே சற்று சிரமங்கள், எதிலும் தடங்கல் என கெடுபலன்கள் ஏற்படலாம். தசாபுக்திகள் சாதகமாக அமைந்துள்ளவர்களுக்கு நல்ல பலனே அதிகமாக நடக்கும். பரிகாரம் எனும் காலத்தில் கொடுத்துள்ளதற்கு ஏற்ப ஏதேனும் பரிகாரம் செய்து கொள்ளவும். பொதுவாக இந்த குரு பெயர்ச்சி உங்களுக்கு நல்லவைகளை அதிகம் தரும் என எதிர்பார்க்கலாம். அஷ்டமத்தில் உள்ள சனியும், இராசிக்குக் குரு பார்வை இருப்பதால் கெடுதல் செய்ய வாய்ப்பில்லை.

சிம்ம ராசி :

பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படலாம். உயர் பதவியில் உள்ளவர்கள், பொதுத்துறையிலும் சரி, அரசுத் துறையிலும் சரி சில சங்கடங்களை எதிர் பார்க்க வேண்டியிருக்கும். ஒரிரு சமயம் வகிக்கும் பதவிக்குக்கூட

எங்கள் வீட்டில் ஜரிகை அங்கவஸ்திரங்கள் உபயோகிக்கப்படாமல் அப்படியே இருந்தது. சிலவற்றை எடுத்து ஃபேப்ரிக் பெயின்ட் உபயோகித்து டிசைன்கள் போட்டேன். சிலவற்றைச் சாயம் தோய்த்தேன். ஸல்வார் கம்மீஸ் கூட அணிய விதவிதமான துப்பட்டாக்கள் ரெடி.

- விஜயலட்சுமி



பங்கம் வருமோ, அல்லது தானாக விலகவேண்டி வருமோ என அஞ்சும்படியான சூழ்நிலை உருவாகும். எனினும் நட்சத்திர நாயகனான கேதுவும், விநாயகரும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். அத்துடன் 3ல் உள்ள ராகு உங்கள் செயல்களில் வெற்றி கிடைக்கும்படி அருள்வார். ராகு கொடுக்க ஆரம்பித்தால் அதைத் தடுப்பவர்களுக்குத்தான் தோல்வி ஏற்படும். பொருளாதார விஷயத்தில் சற்று எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. கொடுக்கப்பட்டுள்ள பரிகாரங்களில் உகந்ததையும், உங்களால் முடிந்ததையும் செய்யுங்கள்.

கன்னி ராசி :

இதுவரை இருந்த நல்லதொரு சூழ்நிலை மாறத் தொடங்கும். ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும். பணியில் உள்ளவர்களுக்கு அவர்கள் எந்தத்துறையில் இருப்பினும் மேலதிகாரிகளின் கெடுபிடி ஏற்படலாம். குரு மூன்றில் இருப்பதால் உங்கள் செயல்களில் உங்களை அறியாமல் தவறு ஏற்படலாம். அதனால் உங்கள் காரியத்தில் தடங்கல் உண்டாகலாம். எனவே எதிலும், எப்போதும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. 6ல் உள்ள சனீஸ்வரன் உங்களுக்கு உதவியாகவும், உறுதியுடனும் பக்கபலமாக இருக்கும்போது கவலைப்படத் தேவையில்லை. முன் ஜாக்கிரதையாக இருப்பது நல்லதல்லவா? வக்ரகதிக்குக் குரு வரும் போது உங்களுக்கு எல்லாம் நன்மையிலே முடியும். குரு நேர்க்கதியில் இருக்கும் போது கொடுத்துள்ள பரிகாரங்களில் முடிந்ததைச் செய்யலாம்.

துலா ராசி :

குருபலம் உள்ள காலகட்டம். எதிலும் வெற்றி எப்படியும் இலாபம் என்ற நிலை. எனவே இந்த ஆண்டு சுப நிகழ்ச்சிக்கு இடமுண்டு. தனலாபம் உண்டு. அதே சமயம் சுபவிரயமும் உண்டு. நீதித்துறையில் நிலுவையில் உள்ள வழக்கில் வெற்றி உங்களுக்கு நிச்சயம் உண்டு. அதே சமயம் சாதனை ஒன்றை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படலாம். மாணவர்களானால் முதலிடம் பெறுவீர்கள். இசைக்கலைஞர்களானால் பரிசும் பாராட்டும் உண்டு. நீங்கள் நடிகரானால் புது ஒப்பந்தமும் ஏற்படும். அதே சமயம் நடித்து முடித்து விட்ட படத்திற்கான நிலுவைத் தொகையுடன் பாராட்டும் பரிசும் கூட கிடைக்கும். எத்துறையிலும் உள்ள பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். குரு வக்ரகதியில் சஞ்சரிக்கும் காலத்தில் எச்சரிக்கையுடன் செயல்படவும். மற்றபடி நல்லவை அதிகமாக, எதிர்பார்த்தபடி நடக்கும் காலகட்டம். நீண்ட காலமாகப் போராடி வந்ததொரு விஷயத்தில் நீங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

விருச்சிக ராசி :

சந்திரன் நீச்சமடைந்துள்ள ராசிக்கு குரு வருவதால் நீச்ச பங்கம் ஏற்படலாம். என்றாலும், ஜென்ம ராசியில் குரு என்பதால் எதிலும் ஒரு தேக்கம், குழப்பம் ஆகியவை ஏற்படும். தெசாபுக்தியைப் பொறுத்தே நன்மைகள் அதிகமாக நடக்கும். வக்ரசஞ்சாரத்தின் போதும் ஏற்றத்தாழ்வுகள் உண்டு. இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு. உங்களைத் தேடி வம்பு வரும். அதைச் சொல்லம்புகளால் தடுக்கப்பார்க்காதீர்கள். மாறாக, அமைதியைக் காப்பது நல்லது. வம்பு வந்த வழியே சென்று விடும். வீம்புக்காகப் போராடாதீர்கள். வெற்றி அவ்வளவு சுலபமாக வந்துவிடாது. உரிய பரிகாரத்தை நம்பிக்கையுடன் செய்யுங்கள். நன்றாக அன்பாகப் பேசுகிறார்களே என எந்த நபரையும் நம்பி விடாதீர்கள். ஏமாற்றத்திற்கும், வாய்ப்பு உள்ளது. கலகலவெனப் பேசுகிறார்களே என நம்பி, நகைச்சுவையாக யாரையும் கேலி செய்துவிடா

தீர்கள். இல்லாவிடில் கலகலப்பாக இருந்த நிலை கலகச் சூழ்நிலைக்குப் போய் முடியும்.

தனுசு ராசி :

விரயத்தில் குரு எனவே பொருளும் விரயம் ஆகலாம். எடுத்துக் கொள்ளும் முயற்சியும் வீணாகலாம். அது தொழில் துறையிலும் ஏற்படலாம். அல்லது குழந்தைகள் விஷயமாக எடுக்கும் எம்முயற்சியிலும் தோல்வி தரலாம். எனவே கவனித்துச் செயலில் இறங்குங்கள். வேண்டாத இடத்திற்கு மாற்றல் வரலாம். எனவே அதைப் பக்குவமாகச் சமாளித்து மாற்றப்பாருங்கள். தசா புக்திகள் நல்லமுறையில் அமைந்தவர்கள் கவலைப்படத் தேவையில்லை. பாதகமான முறையில் தசாபுக்தியும் இருந்தால் கட்டாயம் பரிகாரம் ஒன்றை உரிய முறையில் செய்யுங்கள். இறைப்பணியில் ஈடுபடுவதும் நல்லதே. ஓய்வுபெற்ற பின்னும் மேலும் பணியில் நிலைத்திருக்க முயற்சி செய்ய வேண்டாம். அதனால் பெற்ற பெயருக்கே பங்கம் விளைந்துவிடும். எனவே அமைதியாக இருப்பது நல்லது.

மகர ராசி :

இலாபஸ்தானத்தில் குரு நினைத்தது நடக்கும். நீண்டநாள் போராட்டம் ஒரு முடிவுக்கு வரும். அது உங்களுக்குச் சாதகமாக அமையும். தசாபுக்தி நன்கு அமைந்தவர்களுக்கு இரட்டிப்பு நன்மை. எதிலும் வெற்றி உண்டு. எந்தத் துறையினர்க்கும் ஏற்ற மிகு காலம். கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். வாங்க நினைத்த வீட்டை வாங்கலாம். திடீர்த் திருமணம் ஒன்று வீட்டில் நடக்கும். அதில் உங்கள் பங்கு அதிகமாக இருக்கும். சகோதரியின் திருமணமாகக் கூட இருக்கலாம். வக்ர கதியில் அமைதியுடன் செயல்படவும். மற்றபடி இதுவரை நீடித்த வழக்கில் வெற்றி கிடைக்கும். அதற்கான நிலுவைத் தொகையும் கிடைக்கும்.

கும்ப ராசி :


இராசிநாதன் ஆட்சியில் உள்ளதால் கெடுபலன்கள் ஏற்பட நியாயமில்லை. என்றாலும் குருவுக்குரிய காரகத்துவம் பெற்ற இனங்களில் சஞ்சலம் ஏற்படலாம். கல்வி விஷயத்தில் கவனம் தேவை. குழந்தைகளை அன்புடன் எச்சரிக்கைச் செய்து, கல்வியில் கவனம் செலுத்தும்படி, செய்யுங்கள். புதுத் தொழிலில் ஈடுபட வேண்டாம். எதிலும் புதிய முயற்சிகள் எடுபடாது. உடல் நிலையைக் கவனித்துக் கொள்ளவும். அத்துடன் உறவினர், சகோதரர் உடல் நிலை பற்றிய கவலையும் ஏற்படலாம். தாயாரின் நிலை கூட சற்று கவலை தரலாம். எனவே உரிய பரிகாரம் ஒன்றைச் செய்வது நல்லது. கேதுவால் நன்மையே ஏற்படுவதால் கவலை தேவையில்லை.

மீன ராசி :

ஏற்றதொரு காலம். இராசிக்கு இராசிநாதன் பார்வை, எதிலும் வெற்றி உண்டு. இதுவரை இருந்த இழுபறி எதிலும் இருக்காது. குழந்தைகள் கல்வி நலன் நன்றாக இருக்கும். எதிலும் முதலிடம் பெறுவார்கள். கல்லூரிகளில் எளிதில் இடம் கிடைக்கும். பணவிரயம் குறையும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வக்ரகதியில் கூட பாதிப்பு குறைவு. தசாபுக்தி சரியாக அமையாதவர்கள் ஏதேனும் பரிகாரம் செய்யலாம். உடல் நிலை நன்றாக இருக்கும். நிதிநிலை திருப்தி தரும். புதுத் தொழில்களை ஆரம்பிக்கலாம். எதிர்பார்க்கும் இடத்திற்கு மாற்றலாகும். அதனால் இலாபம் உண்டு. வெளிநாட்டுப் பயணம் ஒன்று ஏற்படும்.


வீட்டில் இருக்கும் ஸூட்கேஸ்களில் ஊருக்குப் போகாத நேரம் தவிர, மற்ற நேரங்களில் எதை எதையோ நிரப்பி வைக்கிறோம். பிறகு சின்னப் பொருள் தேட எல்லா அலமாரி எல்லா ஸூட்கேஸ்களையும் குடைந்து தள்ளி வீட்டை ரணகளப்படுத்தி விடுவோம். ஒரு டைரியில் எந்தப் பொருளை எங்கே வைக்கிறோமோ அதை உடனே குறித்துவிட்டால் பல மணி நேரங்கள் விரயமாவதைத் தவிர்க்கலாம்.

– விஜயலட்சுமி





கண்ணுக்கினிய
கலைவண்ணம்
ஷர்தா சேலைகள்
பண்பாட்டின்
தனிச்சின்னம்.
பெல்காம்
Sharda SAREES [INDIA]
பட்டு பாலியெஸ்டர் சேலைகள்
மற்றும் பாவாடைகள்
எல்லா பிரபல ஜவுளி கடைகளிலும் கிடைக்கும்







இதை அபூர்வான்னு சொல்றதுல ஆச்சரியமென்ன!



- வைட்டமின் 'E' சேர்ந்தது.
- சுத்தமானது உங்கள் சமையலுக்கு ருசி கூட்ட வல்லது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட கடலைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது.
- எளிதில் ஜீரணிக்கக் கூடிய விலையில்.
- கொலஸ்ட்ராலை எதிர்க்க உதவுவது.
- அதிக ஸ்மோக் பாய்ண்ட் கொண்டதால் இதனை மீண்டும் மீண்டும் உபயோகிக்கலாம்.

சரியான அடிப்படையைத் தெரிந்து கொள்ளுங்கள்!



கடலைகளிலிருந்து பெறப்பட்ட அபூர்வா சூப்பர் ரிபைண்ட் கடலை எண்ணெய் புரோட்டீன் மற்றும் ஊட்ட சத்துக்கள் நிறைந்தது. அபூர்வாவில் இருக்கும் 'MUFA' உடலில் கொலஸ்ட்ரால் சேர விடாமல் தடுக்கிறது.

ருசியான, சிக்கனமான எண்ணெய் அபூர்வாவிற்கு மேலும் சிறப்பூட்ட



உங்களுக்கு பிடித்த உணவை அபூர்வா சூப்பர் ரிபைண்ட் கடலை எண்ணெயுடன் சமைத்து ருசியில் வித்தியாசத்தை உணருங்கள். இதற்குமுன் உணராத ருசி.

சுவையான சமையல், சுவை நிறைந்த வாழ்வு

கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட



வைட்டமின் 'E' சேர்க்கப் பட்டுள்ளது. இது சமைத்த உணவை நெடுநேரம் கெடாமல் வைத்திருக்கும். காரல் மற்றும் புகையை கிரகிக்காததால் அபூர்வாவை மீண்டும் மீண்டும் உபயோகிக்கலாம். இப்படிப்பட்ட அபூர்வமான. சூப்பர் ரிபைண்ட் எண்ணெயை அபூர்வா என்று சொல்வதில் ஆச்சரியமே இல்லை!

அபூர்வா

நிலக்கடலைகளின் நல்ல தன்மைகளைக் கொண்ட சரியான சமையல் எண்ணெய்

எஸ் & எஸ் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் எண்ட்டர்ப்ரைசஸ் லிமிடெட்-ன் தரமான தயாரிப்பு
189, அண்ணா சாலை, சென்னை 600 006.

மங்கையர் மலர்

நவம்பர் '94



தீபாவளிச் சிறப்பிதழுடன் இணைப்பு


இன்றைய நாகரீக நங்கையரைப் படைக்கிறது குப்தா புடவைகள்.
Gupta®
Sarees & Dress Materials
□ பீச் சில்க்
□ மார்பிள் ஷிஃபான்
□ மைக்ரோ ஜார்ஜெட்
□ மார்பிள் ச்செக்ஸ்
□ க்ரேப் சில்க் ஸாரி
□ சீகல் ஜார்ஜெட்
□ யுரா கிரி புட்டா
□ மெட்டல் ஷிஃபா
□ ஸ்விஸ் சில்க்
□ நிஷி க்ரேப்
□ C.D. ஜாக்கார்டு



REGISTERED
TRADE MARK
T.S.R. & CO.
MADRAS
கோகுல்
சாண்டால் &
ஸாண்டல்வுட் பவுடர்கள்
டி.எஸ்.ஆர். & கம்பெனி, மதராஸ். ● கோகுல் காஸ்மெடிக்ஸ், பாண்டிச்சேரி
ADWAVE/TSR/4807


Peacock Silks
GRAND
Festive Contest
Draw Your Own Saree Design
&
WIN
Fabulous Prizes
1st Prize
VIDEOCON Washing Machine
2nd Prize
BPL 70W Audio System
3rd Prize
SINGER Juicer Mixer Grinder
10 Consolation Prizes
Peacock Silk Sarees
This Scheme Closes on 03-11-94
This offer is valid in Tamilnadu only
Contact your neare
Peacock Silk Deal
INTRODUCIN
Feather Touch Finish
Stain Proof Protecti
* for Crape Sar
Taranga
Shwetha
PEACOCK SILK
100% Pure Silks
Ensure Peacock Silk Tag on every genuine saree
Ask for design album for other designs
Devatha Fabrics,
555, Avenue Road, Bangalore-2.
Tel: 2262973, Fax; 080 2266591. D.F.




ந்நாளும் மக்கள் சேவையில்
முந்தி நிற்பது சாரதா’ஸ்!
டலோடு மற்றும் உள்ளத்தில்
ஒன்றி நிற்பது சாரதா’ஸ்!!
25
1969-1994
சாரதா’ஸ்
கூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன்பில்டிங்
27, மவுண்ட் ரோடு,
சென்னை-600 002.
போன்: 8521177
32, N.S.B. ரோடு,
திருச்சி-620 002.
போன்: 27077

திடீரென்று உங்களை உடம்புவலி தாக்கினால்... குடும்பப் பொறுப்பு, சிரித்துப் பேசி மகிழ்வது, வேலை, எதுவுமே பாரமாகத் தோன்றும்.

உடம்பு வலியைப் போக்குங்கள் ஜண்டு பாம் தடவுங்கள்.

விரைவில் துடிப்புடன் விளங்குங்கள்.



உடம்புவலி தனியாக வருவதில்லை. கூடவே வேறு சில உபாதைகளையும் அழைத்து வரும் – நடையிலே தளர்ச்சி, நிற்பதிலும் உட்காருவதிலும் சிரமம். போன்றவை. இதில் கவலைப்பட ஏதுமில்லை.

வலியை நீக்கும் ஜண்டு பாமிலே ஆழமாக ஊடுருவி செயல்புரியும் விசேஷ மருந்துப் பொருட்கள் உள்ளன. இவை உடம்புவலி மற்றும் இதர உபாதைகளையும் இழுத்து வெளியேற்றி, உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கின்றன.

வலியை நீக்கும் ஜண்டு பாமை எப்போதும் கைவசம் வைத்திருங்கள். இது ஜலதோஷம் மற்றும் தலைவலி போன்ற உபாதைகளிலிருந்தும் விரைவில் நிவாரணமளிக்கிறது.



ஜண்டு பாம் ஜண்டு பாம் வலியை நீக்கும் பாம்
ஜலதோஷம் தலைவலி நோவுகளையும்
நொடியில் நீக்கிடுமே

புதிய
5 கிராம் டியூப்

30, 10 கிராம் பேக்கிலே.

பாம் ஒன்று
செயல் மூன்று

1. ஜலதோஷம் 2. தலைவலி 3. உடம்பு வலி

AP/ZB/524/94/TAM/6